# தேய்ந்த கனவு

சார்லஸ் டிக்கன்ஸ்

எழுதிய இரு நகரக் கதை

கி. ரா.

மொழிபெயர்த்தது

PRESENTED BY:
V. M. PL. M.
... CHETTIAR
...

2

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்

ஜி. டி. மதராஸ்

காபிரைட்] நவம்பர் 1937 [அணா 8.

The, Model Press, G.T., Madras.—5000

4105

# பிள்ளையார் சுழி.

**பி**ரான்ஸ் தேசத்திலே பதினேழாம் நூற்றாண்டிலே தனவந்தர்களின் கொடுங்கோன்மை தலை விரித்தாடிற்று. அரசன், பெயருக்கு மட்டுமே அரசனாயிருந்தான். ஏழை யெளியவர்கள் தயை தாட்சண்யமின்றி நாய்களுக்கும் கேவலமாக நடத்தப்பட்டார்கள்; குடியானவர்கள் கடைசித் துளி ரத்தம் விழும் வரையில் உறிஞ்சப்பட்டனர். அவர்களுடைய பெண்களுடைய மானம் வினாடித் தயக்கமின்றி பறிக்கப்பட்டது.

நிரந்தர அடிமைத்தனத்தினாலும், நூற்றாண்டுக் கணக்கான செல்வந்தர் கொடுங்கோன்மையினாலும், பல ஆண்டுகளாக மக்களின் உள்ளத்திலே கொதித்துக் கிடந்த செயலற்ற ஆத்திரம் அவ்வளவும் பொத்துக்கொண்டு கிளம்பியது, பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலே. இதுதான் பிரஞ்சு மகாப் புரட்சி.

இந்தப் புரட்சியின் ஒழுங்கற்ற பயங்கர ஆட்சி, பழைய கொடுங்கோன்மையின் இயற்கையான விளைவென்றாலும், இதனுடைய கொடுங்கோன்மை முந்தியதற்கு சற்றும் குறைந்ததல்ல. செல்வவந்தர் ஈவு இரக்கமின்றி பிடித்துக் கொல்லப்பட்டனர்; அரசனுக்கும் அதே முடிவு. குடியரசு என்ற பெயரால் மனுஷ்ய சிந்தனையால் எட்ட முடியாத அக்கிரமங்கள் புரியப்பட்டன. பணக்காரப் பிரபுவின் ரத்தத்துடன் ஏழைக்குடியானவன் ரத்தமும் கலந்தோடியது. டிக்கன்ஸ் சொல்வதுபோல "மனுஷ்ய அஜாக்கிரதையினாலும், துர்நடத்தையினாலும் உற்பத்தியாகும் சரீர வியாதிகள் எப்படி மனிதருக்குள்ளே தாரதம்மியம் பார்ப்பதில்லையோ, அதேபோல, ஈவு இரக்கமற்ற அலட்சியத்தினாலும், பொறுக்க முடியாத கொடுங்கோன்மையினாலும் ஏற்படும் சகிக்கமுடியாத கஷ்டத்தில் உற்பத்தியாகும் பயங்கரமான அநீதியும் மனிதரிடையே ஏற்றத்தாழ்வு பார்ப்பதில்லை."

இந்த அதிபயங்கரமான படுதாவிலே அதிஅற்புதமான ஒரு மனுஷ்யத்வ நாடகத்தைச் சித்திரிக்கிறான் டிக்கன்ஸ்.

உலக இலக்கியத்திலே ரொம்பவும் உன்னதமான சிருஷ்டி களுடன் சேர்ந்தது ஸிட்னி கார்ட்டன் என்ற சிருஷ்டி. அவன் ஒரு குடிகாரன்; சோம்பேறி; வாழ்க்கையில் ஒரு பிடிப்பற்று நிழல்போல நம் முன்னே நடமாடுகிறான். ஆனாலும், மனிதருக்குச் சாத்தியமில்லாத ஒரு மகா பெரிய காரியத்தை அவன் சாதித்து விடுகிறான்.

லூசியின் பேரிலுள்ள அவனது தெய்வீகக் காதலுக் காக அவன் தன்னையே பலியிட்டுக்கொள்கிறான். அதில்தான் அவனுடைய வாழ்க்கையின் கடமையிருப்பதாக உணர்கி றான்.

வாழ்க்கையில் அவனுக்கு ஒரு நோக்கமுமில்லை; ஊதாரி யாகத் திரிகிறான். ஒரே யொருசமயம் அவனுக்கு ஒரு ஆசை பிறக்கிறது. ஆனால் அது பூர்த்தியாகவில்லை. வாழ்க்கை அவனுக்கு ஒரு தேய்ந்த கனவு. அது மட்டுமல்ல; விதி அவனைப் பழிக்கிறது. இவனைப்போலவே பார்வைக்கு முழு வதும் ஒத்திருக்கும் வேறொருவனைச் சிருஷ்டித்து, இவன் கண்முன்னேவிட்டு இவனுக்கு கிட்டாத பாக்கியத்தை யெல்லாம் அவனுடைய கையில் அள்ளிக்கொடுக்கிறது.

ஆனாலும் லூசி தன்னைக் காதலிக்க வேண்டும் என்று ஸிட்னி விரும்புகிறானா? இல்லை; அதை அவனே ஒரு இடத் தில் தெரிவிக்கிறான். அவனுடைய வாழ்க்கையின் லட்சியம் அவனுடைய மகா தியாகத்திலே தான் பூர்த்தியடைகிறது. இதை அவனும் கடைசியில் உணர்ந்து கொள்ளுகிறான். "என்னுடைய வாழ்க்கையிலே இதுவரையில் செய்தவற்றை விட இதுவே சிறந்த செய்கை" என்று அவன் தூக்கு மேடையில் எண்ணியபோது அந்த உணர்வின் முழுவேகமும் அவனுடைய முகத்திலே சோபித்துச் சுடர்விடுகிறது.

மொழி பெயர்ப்பைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் இங்கேயே சொல்லிவிட விரும்புகிறேன். பிரசுராலயத்தார் முதன் முதலில் டிக்கன்ஸ் எழுதிய இருநகரக்கதையை மொழி பெயர்த்துத் தரவேண்டுமென்று கேட்டபோது இந் தக் கதையின் மேலுள்ள என்னுடைய அபார ஆசையினால் உடனே ஒப்புக்கொண்டுவிட்டேன். பிறகு இந்த வேலை யின் முழு சிரமத்தையும் உணர்ந்ததும்தான் தோன்றிற்று,

இதைவிட சொந்தமாக ஒரு கதை எழுதிவிடுவது எளி தென்று. இதற்குக் காரணம்: பிரசுராலயத்தாரின் உயரிய லட்சியத்துக்குக் கீழே தாழ்ந்துவிடக்கூடாதென்ற கவலை. அதோடு அன்னிய நாட்டுக் கதையை அந்த பாஷை தெரி யாத தமிழரும் சிரமமின்றி ரஸிக்கும்படி எழுதவேண்டு மென்பது.

இதை எழுதும்போது,—மூலாசிரியன் முன்னுரையில் சொல்லியிருப்பதுபோலவே, "அந்தக் கதை என்னை முழு வதும் ஆட்கொண்டுவிட்டது" என்று நானும் சொல்லுவது பொருந்தும். ஸிட்னி கார்ட்டனின் ஒவ்வொரு உணர்ச்சியை யும், அவனது ஏக்கப் பெருமூச்சுக்களையும் நான் என் கல்பனை யிலே அனுபவித்தேன் என்று சொல்லுவது மிகையாகாது. மூலத்தை நான் படிக்கையில் என் சுற்றுப்புறத்தையெல்லாம் அடியோடு மறந்துவிட்டேன்; பிரான்ஸ் நாட்டிலும், இங்கி லாந்திலும் இருப்பதாகவே அப்போது உணர்ந்தேன். அந்த மூலத்தின் இயற்கை மணம் முழுவதையும், அப்படியே தமி ழில் கொடுக்க முயற்சித்திருக்கிறேன்.

இதைப் படிக்கும்போது நமக்கு அறிமுகமல்லாத அன் னியப் பழக்க வழக்கள் யாருக்கேனும் கதாரஸனைக்குக் குறுக்கே நிற்குமானால், "மொழி பெயர்ப்பு நன்றாயில்லை" என்று அவர்கள் தீர்மானிக்குமுன், இன்னொரு முறை புஸ்த கம் முழுவதையும் திரும்பவும் படிக்குமாறு கேட்டுக் கொள் ளுகிறேன். அதற்கு உதவியாகவே கதா பாத்திரங்களின் ஜாபிதா ஒன்றும் சேர்த்திருக்கிறேன்.

முதலில் பிரசுராலயத்தார் புத்தகத்துக்கு எனக்கு 200 பக்க அளவுதான் அனுமதித்திருந்தனர். ஆனால் எவ்வளவு முயற்சித்தும் அது 250-க்கு நீண்டுவிட்டது. (மூலம் இன்னும் ரொம்ப நீளமானது.) ஆனாலும் அவர்கள் "பரவா யில்லை, கதை நன்றாயிருக்க வேண்டும்; நமது லட்சியம் சித் திக்கவேண்டும்" என்று தெரிவித்தனர். அதற்காக அவர்க ளுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை
24-10-37 } கி. ரா.

# மூலாசிரியரின் முன்னுரை

என் குழந்தைகளுடனும் நண்பர்களுடனும் வில்கி காலின்ஸ் எழுதிய உறைந்த கடல் (Frozen Deep) என்ற நாடகத்தை நான் நடித்துக் கொண்டிருக்கையில், முதல் முதலில், இந்தக் கதையின் மூலக்கருத்து என் மனதில் உதித்தது. அந்தக் கருத்தை நானே அனுபவித்து, அந்த அனுபவம் எப்படி யிருக்கிறதென்று கற்பனை செய்து காணவேண்டுமென்ற தவிர்க்கமுடியாத ஆசை அப்போது தீவிரமாக எழுந்தது; அந்த அனுபவத்தை அங்கியருள்ளத்தில் பதியும்படி வெளியிட எந்தவிதமான மனோநிலை வேண்டும் என்பதைப்பற்றி என் கற்பனையிலேயே கணக்கெடுத்தேன்.

அந்தக் கருத்து எனக்குள்ளேயே பழகிப்பழகி கடைசியில் இந்தக் கதையின் உருவத்தை அடைந்தது. இதைச் செய்து முடிக்கும் வரையில் இந்தக் கதை என்னைப்பூராவாக ஆட்கொண்டுவிட்டது; இந்தப் பக்கங்களிலே சித்திரிக்கப்பட்டிருக்கும் இன்பதுன்பங்கள் அவ்வளவையும் நானே சொந்தமாக அனுபவித்துவிட்டேன் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும்.

இங்கே புரட்சிக்கு முன்னும், புரட்சி சமயத்திலும் பிரஞ்சு ஜனங்களின் நிலைமையைப்பற்றி சொல்லியிருக்கும் விஷயங்கள் (எவ்வளவு சாமான்யமானவையானாலும்) அவ்வளவும் உண்மையானவை, நம்பத்தக்க ஆதாரங்களைக் கொண்டு சொல்லப்பட்டவையாகும். கார்லைலின் அற்புத (பிரெஞ்சுப் புரட்சி என்ற) நூலின் தத்துவ விசாரணைக்கு உயர்ந்ததாக யாராலும் எழுத முடியாதென்றாலும், அந்த மகா பயங்கரமான காலத்தை சாமான்ய ஜனங்களும் தெளிவாக அறிந்து கொள்வதற்கு ஏதுவான ஒரு நூல் இயற்ற வேண்டுமென்பது என்னுடைய ஆசை.

நவம்பர் 1859.] சார்லஸ் டிக்கன்ஸ்.

4408

## கதையில் சந்திக்கும் முக்கிய பாத்திரங்கள்

---

அலெக்ஸாண்டர் மானெட்

*டாக்டர் ; பிரபுக்கள் வம்சத்தினர் கொடுமையால் பாஸ்டில் சிறையில் அநியாயமாய் அடைக்கப்பட்டவர்.*

லூசி மானெட்

*டாக்டர் மானெட்டின் புதல்வி.*

சாலஸ் டார்னே (சாலஸ் எவரிமான்)

*எவரிமான் பிரபுக்கள் வம்சத்தில் உதித்தவன் ; லூசியைக் காதலித்துக் கல்யாணம் செய்துகொள்ளுகிறுன்.*

ஸிட்னி கார்ட்டன்

*இங்கிலீஷ் வக்கீல், லூசியைக் காதலிக்கிறுன். அவளுக்காகத் தன் உயிரைக் கொடுக்கிறுன்.*

ஜார்விஸ் லாரி

*இங்கிலீஷ் பாங்கர் ; மானெட்டின் குடும்பத்துக்கு விஸ்வாசமுள்ள நண்பர்.*

ஜோரி கிரஞ்சர்

*லாரியின் வேலையாள்.*

மிஸ் பிராஸ்

*லூசியைக் குழந்தை முதல் எடுத்து வளர்த்த தாதி.*

பார்ஸாத் (ஸாலமன்)

*மிஸ் பிராஸின் சகோதரன் ; இங்கிலாந்திலும் பிரான்சிலும் கோர்ட்டு உளவாளாய் இருந்தவன்.*

ஸ்டிவர்

இங்கிலீஷ் வக்கீல்; கார்ட்டனுக்கு 'ஸீனியர்'; இவருக்காக அவன் வழக்குகளை ஜெயிக்க தந்திரம் சொல்லிக் கொடுப்பது வழக்கம்.

எர்னஸ்ட் டிபாஜ்.

ஒயின் கடைக்காரன்; டாக்டர் மானெட்டின் வேலையாளாய் இருந்தவன்; பிரஞ்சுப் புரட்சியில் ஒரு பகுதியில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டவன்.

ஸ்ரீமதி டிபாஜ்

டிபாஜின் மனைவி; புரட்சியில் கொதித்தெழுந்த ஜன சக்தியின் மனித உருவம்; சாலஸ் டார்னேயின் தண்டனைக்கு தூண்டுகோல்.

மகாப் பிரபு

மார்க்விஸ் எவரிமான்; டார்னேயின் சிறிய தந்தை; டாக்டர் மானெட் பாஸ்டில் சிறையில் ஜீவியக் கைதியாக அடைக்கப்பட்டதற்குக் காரண புருஷர்.

ஜாக்

புரட்சி சமயத்தில் டிபாஜைச் சேர்ந்த சதிகாரர்கள் ஒருவரை யொருவர் அழைத்துக்கொண்ட ரகஸ்யப் பெயர்.

4105

# தேய்ந்த கனவு

## முதற் புத்தகம்: புனர் ஜன்மம்.

### அத்தியாயம் 1.

### பின்னணிப் படுதா.

அந்தக் காலம் ரொம்பவும் சிறந்த காலம், அந்தக் காலம் மகா மோசமான காலம்; அது அறிவு வளர்ந்து முதிர்ந்தகாலம், அஞ்ஞான இருள் பரவி மூண்டிருந்த காலம் அது; மத நம்பிக்கை தழைத்தோங்கியிருந்த காலம் அது; நாஸ்திகம் நிறைந்திருந்த காலம் அது; ஆனந்தமும் அழகும் நிறைந்த வஸந்தகாலம் அது, துக்கமும் துயரமும் நிரம்பிய மேகம் மூடின இருண்ட காலமும் அதுதான்; அந்தக் காலத்தில் எல்லாம் இருந்தது, அந்தக் காலத்தில் ஒன்று மில்லை;—அந்தக் காலம் கிட்டத்தட்ட இந்தக் காலத்தைப்போலவேதான் இருந்தது.

இங்கிலாந்தின் சிங்காதனத்தில் நீண்ட தாடையுடைய ராஜாவும், தேய்ந்த களங்கமில்லாத முகம் படைத்த ராணியும் அமர்ந்திருந்தனர்; பிரான்ஸ் தேசத்தின் சிங்காதனத்தில் நீண்ட தாடையுடைய ராஜாவும் அழகிய முகமுள்ள ராணியும் அமர்ந்திருந்தனர். இரண்டு தேசங்களிலும் அதிகார வர்க்கத்திலிருந்த பிரபுக்கள் யாவரும், நாட்டின் நிலைமை மிகவும் அமைதியாக இருப்பதாக மனப்பால் குடித்திருந்தனர்.

இங்கிலாந்தில் நீதி, நியாயம், பொதுஜன பந்தோபஸ்து ஒன்றுமே. கிடையாது. துணிகரமான கொள்ளைகள், பயங் கரக் கொலைகள், இவை தினசரி தலைநகரிலேயே நடக்கும் சர்வ சாதாரணமான சம்பவங்கள்; குடித்தனக்காரர்கள் தங் கள் சாமான்களை வீட்டில் போட்டுவிட்டுத் தைரியமாக வெளி யில் போக முடியாது; பகலில் ஒழுங்காக வியாபாரம் செய்து பிழைப்பவன் இரவில் வழிப்பறிக் கொள்ளைக்காரனாக மாறி விடுவான். தபால் வண்டி அடிக்கடி கொள்ளையடிக்கப்படும்; மேன்மை தங்கிய லண்டன் லார்டு மேயர் ஒரு தடவை கொள்ளையடிக்கப்பட்டுத் தம்முடைய சிப்பந்திகளுக்கெதிரி லேயே அவமானப் படுத்தப்பட்டார். லண்டன் சிறைச்சாலையிலிருந்த கைதிகள் ஜெயில் சிப்பந்திகளை எதிர்த்துத் தாக்கினர்; திருட்டுச் சாமான்களைப் பிடிப்பதற் காக சிப்பாய்கள் மார்க்கெட்டில் நுழைந்தால், ஜனக் கும்பல் அவர்களை எதிர்த்துச் சுட்டது; அவர்கள் ஜனக் கும்பல் களைத் திரும்பிச் சுட்டுத் தள்ளினர்; ஆனால் இந்தமாதிரி யான சம்பவங்கள் சர்வ சகஜமா யிருந்தபடியால் இவற்றைப் பற்றி யாரும் வித்தியாசமாகவே நினைப்பதில்லை. இதற்கிடை யில் தூக்குப் போடுவோனுக்கு வேலை சரியா யிருந்தது. இன்று ஒரு திருட்டுக் கூட்டம்; நாளை ஒரு கொலைகாரன்; இப்படியாக அவனுக்கு ஜோலி சரியா யிருந்தது.

இவையும், இன்னும் இவைபோன்று ஆயிரம் சமாசாரங் களும், அந்த சுப ஸம்வத்ஸரம் ஆயிரத்து எழுநூற்று எழுபத் தைந்தில் நிகழ்ந்தன. இந்த விதமான சம்பவங்களால் சூழப் பட்டு, அந்த நீண்ட தாடையுடைய இருவரும், களங்கமற்ற அழகிய முகம் படைத்த இருவரும் முறையே தங்கள் தங்களுக்கு தெய்வத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தை, ஆடம்பரத்துடனேயே செலுத்தி வந்தனர். இந்தவிதமாக

ஆயிரத்து எழுநூற்றெழுபத்தைந்தாம் வருஷம் அவர்களுடைய பெருமைகளையும், அவற்றுடன் கோடிக் கணக்கான சின்ன ஜந்துக்களையும்—இந்தக் கதையின் ஜந்துக்களையும் சேர்த்து, அவரவர்களின் பாதைகள் வழியே இழுத்துச் சென்றது.

---

## அத்தியாயம் 2.

### தபால் வண்டி

நவம்பர் கடைசியில் ஒரு வெள்ளிக்கிழமை இரவு, இந்தக் கதையில் முதலில் வரும் ஜனங்களை, டோவர் ரஸ்தாவில் சந்திக்கிறோம். மற்றப் பிரயாணிகளைப்போலவே, அவனும் மேலேறிச் செல்லும் ரஸ்தாவில் தபால் வண்டியுடன் கூட நடந்து சென்றான். அப்படி நடப்பதில் ஏதோ ருசியை அறிந்து அவர்கள் நடக்கவில்லை. ரோடில் சகதி; வண்டியின் கனம், மலைமேலே ஏறவேண்டிய சிரமம்; எல்லாவற்றையும் யோசித்துக் குதிரைகள் மூன்று தடவை நின்றுவிட்டன.

இந்தப் பிரயாணியைத்தவிர இன்னும் இருவர் கூட நடந்து சென்றனர். எல்லோரும் மேல்சட்டையை இழுத்துக் காதுவரையில் மூடிக்கொண்டு, காலில் உயரமான ஜோடும் அணிந்துகொண்டிருந்தனர். அந்தநாளில் பிரயாணிகள் ஒருவருக்கொருவர் அந்தரங்கமாக நெருங்கிப் பேசிக்கொள்வதில்லை. யார் கண்டது, சாலையில் போகிறவன் திருடனில்லையென்று? அதே விதமாகத்தான் நினைத்தான் டோவர் மெயிலின் "கார்டு" ஆயிரத்தெழுநூற்றெழுபத்தைந்தாம் வருஷம், நவம்பர் மாதம் வெள்ளிக்கிழமை இரவு, மலைப்பிரதேசத்தில் ஏறிப்போகும்போது. அவனுடைய பார்வை எதிரிலிருந்த துப்பாக்கி, கைத்துப்பாக்கி முதலிய தற்காப்பு ஆயுதங்களின் பேரிலேயே இருந்தது.

டோவர் தபால் வண்டி வழக்கமான சுபாவத்திலிருந்தது; கார்டு பிரயாணிகளைச் சந்தேகித்தான்; பிரயாணிகள் ஏனை யோரையும் கார்டையும் சந்தேகித்தனர்; எல்லோரும் தம் மைத் தவிர மற்றவர்களைச் சந்தேகித்தனர்; வண்டியோட்டி குதிரைகளைத் தவிர பாக்கி எல்லோரையும் சந்தேகித்தான்; அவற்றைப்பற்றிகூட அவன் நிச்சயமாக பிரயாணத்துக்கு லாயக்கேயில்லை யென்று நூறு தடவை சத்தியம் செய்திருப் பான்.

"ஹோ, ஹோ! இதோ ஆச்சு, ஒரு பிடி! மலையேறி யாய்விட்டது. இதுக்கு எவ்வளவு அவஸ்தை;—ஜோ!" என்றான் வண்டிக்காரன்.

"ஹல்லோ!" என்று பதிலளித்தான் கார்டு.

"மணி எவ்வளவு, ஜோ?"

"பதினொண்ணடிச்சு பத்து நிமிஷம்"

"ஏ அப்பா!—இன்னும் மேடேறல்லே! ச்சூ! யே! போ, விடு!"

இந்தக் கடைசிக் கடைக்குரலில் வண்டி மேலே ஏறி விட்டது. கார்டு பிரயாணிகள் ஏறுவதற்காக வண்டியைத் திறக்க கீழே இறங்கினான்.

"ஸ் ஸ்! – ஜோ!" என்று எச்சரிக்கையுடன் கீழே பார்த்துக் கூவினான் வண்டியோட்டி.

"என்ன சொல்றே, டாம்?"

இருவரும் கவனித்தார்கள்.

வேகமாக மேலேறி வரும் ஒரு குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது.

"ஹோ—ஹோ! ஏய்! நில்லு! சுட்டுவிடுவேன்!" என்று பலம் கொண்டமட்டும் கத்தினான் கார்டு.

ஓட்டம் சட்டென்று நின்றது. மூடுபனிக் குள்ளிருந்து மேல் மூக்சு கீழ் மூச்சு வாங்க ஒரு மனிதக் குரல் கேட்டது. "இதுதான் டோவர் மெயிலா ?"

"அதைப்பற்றி உனக்கென்ன ? நீ யார் ?" என்றான் கார்டு பதட்டமாக.

"இதுதான் டோவர் மெயிலா ?"

"உனக்கேன் தெரியணும் ?"

"இதுவானால், எனக்கொரு பிரயாணியைப் பார்க்க வேண்டும்"

"என்ன பிரயாணி ?"

"மிஸ்டர் ஜார்விஸ் லாரி"

நம்முடைய தனிப் பிரயாணி தம்முடைய பெயர்தான் அது என்பதைத் தெரிவித்துக்கொண்டார். கார்டு, வண்டிக்காரன், மற்ற இரு பிரயாணிகள், எல்லோரும் அவரை அவநம்பிக்கையுடன் பார்த்தனர்.

கார்டு அந்தக் குரலை நோக்கிச் சொன்னான். "அங்கேயே நீ நில்லு. இப்போது ஒரு தப்பு பண்ணி விட்டால் அதை நிவர்த்திக்க முடியாது. லாரி என்ற பெயர் படைத்த கனவான் பதில் சொல்லட்டும்."

சற்றுத் தயக்கமான குரலில் அந்தப் பிரயாணி பதிலளித்தார்: "யார் என்னைத் தேடுவது ? ஜெர்ரியா அது ?"

" ஆம். மிஸ்டர் லாரி."

"என்ன சமாசாரம் ?"

" அங்கிருந்து, டி. அண்டு. கோ. விலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது."

"ஐயா, கார்டு, இந்த ஆளை எனக்குத் தெரியும். அவன் கிட்ட வருவதில் தப்பொன்றுமில்லை," என்றார் ஸ்ரீமான் லாரி.

பிரயாணியின் அருகே குதிரைமேல் சவாரி செய்யும் ஒருவனுடைய உருவம் நெருங்கிற்று. அவன் குனிந்து ஒரு மெலிந்த தாளை பிரயாணியிடம் நீட்டினான். குதிரை களைத்து நுரை தள்ளிற்று; அதன் மேலெல்லாம் ஒரே சகதி மயம். "கார்டு!" என்றார் அந்தப் பிரயாணி அழுத்தமான குரலில்.

சர்வஜாக்கிரதையான கார்டு தன் கை துப்பாக்கியின் மேல் படிந்திருக்க, பார்வை அந்தக் குதிரைக் காரன்மேல் விழுந்திருக்க, வெடுக்கென்று பதில் சொன்னான். "ஐயா!"

"பயப்பட ஒன்றுமில்லை. நான் டெல்ஸன் பாங்கைச் சேர்ந்தவன். லண்டனில் டெல்ஸன் பாங்கை உனக்குத் தெரியுமே. பாரிஸுக்கு ஜோலியாகப் போகிறேன். இந்தா, தாக சாந்திக்கு ஒரு கிரௌன். நான் இதைப் படிக்கலாமா?"

"ஆனால் சீக்கிரம்ஆகட்டும், ஐயா" உடனே அவர் அந்தக் காகிதத்தை வண்டியின் விளக்கு வெளிச்சத்தில் பிரித்து, முதலில் தனக்குள்ளும் பிறகு உரக்கவும் படிக்க ஆரம்பித்தார்: "டோவரில் *மேம்மோஸல்லுக்காக காத்திருக்கவும்!" "கார்டு, பார்த்தீரா முடிந்துவிட்டது. ஜெர்ரி, என்னுடைய பதில் திரும்ப உயிர்ப்பித்தாய்விட்டது என்று போய் சொல்லு."

ஜெர்ரி கிளம்பினான். "ரொம்ப விசித்திரமான பதில் தான்" என்று உரக்கக் கூவிக்கொண்டே புறப்பட்டான்.

"இந்தச் செய்தியைப் போய்ச் சொல்லு. அவர்கள் தெரிந்து கொள்ளுவார்கள். குட் நைட்!" என்று சொல்லி விட்டு பிரயாணி வண்டிக் கதவைத்திறந்து உள்ளே ஏறிக் கொண்டார்.

---

* மேம்மோஸல்:—கல்யாணமாகாத பெண்ணைக் குறிக்கும் பிரஞ்சுச்சொல்; ஆங்கிலத்தில் மிஸ் என்பதுக்கு சமமானது.

தபால் வண்டி ஆடி ஆடிக்கொண்டு தன் பிரயாணத்தைத் தொடங்கிற்று. மூடுபனி இன்னும் நெருக்கமாக அதைச் சூழ்ந்தது.

இதற்குள் ஜெர்ரி குதிரையை விட்டுக் கீழே இறங்கினான்; குதிரையை இளைப்பாற விடுவதோடு, தன் முகத்திலும் தொப்பி ஓரத்திலும் சேர்ந்திருக்கும் மண்ணை வழித்தெறிய வேண்டுமென்ற நோக்கத்துடனும். அப்படியே கொஞ்ச நேரம் நின்றிருந்துவிட்டு புறப்பட்டு கீழ்நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

"அப்போ ஓடின 'காலப்பு'க்கு அப்புறம் சமதரையை அடையும் வரையில் உன்னுடைய கால்களை நான் நம்ப மாட்டேன். —'திரும்ப உயிர்ப்பித்தாய்விட்டது' என்ன விநோத மான சேதி - இது உனக்காகாதப்பா. ஜெர்ரி ! எல்லாரும் இப்படி உயிருடன் வந்துவிட்டால்-!" என்று குதிரையைப் பார்த்துப் பேசிக்கொண்டே கிளம்பினான்.

---

## அத்தியாயம் 3.

## முன்னேற்பாடு

தபால் வண்டி சௌக்கியமாக டோவரை யடைந்தவுடன் ராயல் ஜார்ஜ் ஹோட்டலின் பிரதம வேலைக்காரன் அவனுடைய வழக்கப் பிரகாரம் வண்டிக் கதவைத் திறந்தான். ஒருவித ஆடம்பரத்துடன் அவன் அந்தக் காரியத்தை செய்தான். ஏனென்றால், அந்த நாளில் மழைக்காலத்தில் லண்டனிலிருந்து தபால் வண்டி பிரயாணம் என்றால் ஒரு தீரச்செயலாகக் கருதப்பட்டது.

வண்டியில் ஒரேயொரு பிரயாணிதான் வந்தார் ; மற்ற இருவரும் வழியிலேயே இறங்கிவிட்டனர். வண்டியின் உட்

புறம், நனைந்த வைக்கோலும், சகிக்க முடியாத துர்நாற்ற மும், ஒரு பெரிய நாய்க் கூடாகவே யிருந்தது. அதிலிருந்து இறங்கின பிரயாணி, ஸ்ரீமான் லாரி மேலிருந்து வைக்கோல் தூள்கள் உதிர, தட்டையாய்ப்போன தொப்பியும், மண் நிறைந்த கால்களும், ஒரு பெரிய ஜாதி நாயாகவே தோன் றினார்.

"நாளைக்கு ஒரு படகு உண்டல்லவோ கலேக்கு?" என்று அந்த வேலையாளைக் கேட்டார் லாரி.

"ஆமாம் ஸார். காற்று சரியா யிருந்தால்தான். காற்று இரண்டு மணிக்குச் சரியாயிருக்கும். படுக்கையா, ஸார்?"

"இரவுக்குள் படுக்கப்போவதில்லை; ஆனால் ஒரு படுக்கையறை தயாராக வேண்டும். ஒரு பரிகாரி வேண்டும்"

"அப்போ ஆஹாரம், ஸார்? இதோ தயார்."

பழுப்பு வர்ண ஆடையணிந்த இந்த கனவானைத் தவிர காப்பி அறையில் வேறு ஆள் கிடையாது. நெருப்புக்கெதிரே மேஜையண்டையில் அவர் அசைவற்று உட்கார்ந்திருந்ததைப் பார்த்தால் தன்னுடைய படம் எழுதப்படுவதற்காக உட்கார்ந் திருப்பதைப் போலிருந்தது. அவர் ஒரு விசித்திரமான *விக் என்ற முடியைத் தலையில் அணிந்திருந்தார். அவருடைய கன்னங்கள் பளபளப்பாக பூர்ண சௌக்கியத்தைக் காட்டின.

அப்படியே உட்கார்ந்தபடியே ஸ்ரீமான் லாரி தூங்க ஆரம்பித்தார். ஆஹாரம் வந்ததும் விழித்தெழுந்தார். பணி யாளிடம் "இன்று இங்கு வரப்போகும் ஒரு பெண்மணிக்கு அறை தயாரித்து வைக்கவேண்டும். அவள் மிஸ்டர் ஜார்விஸ் லாரியைப் பார்க்கவேண்டும் என்று சொல்வாள்; அல்லது

---

*பழையகாலத்தில் பெரியதனவந்தர்கள், அதிகாரிகள் தலைக்கு அலங்காரமாக மயிர்முடி(டோப்பா) அணிவது மேல் நாட்டு வழக்கம்.

டெல்ஸன் பாங்கிலிருந்து வந்திருக்கும் கனவான் என்று சொல்வாள்; எனக்கு உடனே தெரியப்படுத்த வேண்டும்'' என்றார்.

"அப்படியே. லண்டனிலிருக்கும் டெல்ஸன் பாங்காஸார்?''

"ஆமாம்.''

ஸ்ரீமான் லாரி ஆஹாரத்தை முடித்துக்கொண்டு கடற்கரையோரமாக உலாவச் சென்றார்.

பகல் நீண்டு பிற்பகலாயிற்று. ஸ்ரீமான் லாரி தம் போஜனத்தை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தார். சாப்பாடானதும் ஒரு கிளாஸ் ஒயினை ஊற்றிக் குடித்தார். அவர் குடித்துக் கீழே வைக்கும் சமயம் வெளியில் வண்டிச் சத்தம் கேட்டது. " இதுதான் மெம்மோஸல்!'' என்றார்.

உடனே, சில நிமிஷங்களுக்கெல்லாம் பணியாள் உள்ளே வந்து லண்டனிலிருந்து மிஸ் மானெட் வந்திருப்பதாயும் அவரைப்பார்க்க விரும்புவதாயும் அறிவித்தான்.

"அதற்குள்ளாகவா?''

அவர் உடனே எழுந்து தன்னுடைய டோப்பாவை சரிப்படுத்திக்கொண்டு அவன் பின்னால் சென்றார்.

அந்த அறையில் போன உடனேயே அந்த யுவதியைச் சந்தித்தார். பதினேழுக்கு மேலில்லாத வயது. கையில் தொப்பியை வைத்துக்கொண்டு நின்றிருந்தாள். அழகான சின்ன ரூபம், பொன்னிறமான தலைமயிர், நீல விழிகள்; அவளைப் பார்த்ததும் அவருக்கு ஒரு பழைய ஞாபகம் ஓடி மறைந்தது.

" தயவு செய்து உட்காருங்கள், ஐயா'' என்றாள் இனிய குரலில்.

"வா, அம்மா" என்று சொல்லிக்கொண்டு ஆஸனத்தில் அமர்ந்தார்.

"பாங்கிலிருந்து நேற்று எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் என்னுடைய தகப்பனுருடைய சொத்தைப் பற்றின விஷயமாய் நான் பாரிஸுக்குப் போகவேண்டியது அவசியம் என்றும், அங்கே பாங்கில் சம்பந்தப்பட்ட ஒரு கனவானைச் சந்திக்க வேண்டும் என்றும்—"

"நான் தான்"

"நான் உடனே பாங்குக்கு எழுதினேன்: நான் ஒரு அனுதையாதலால், இது சம்மந்தமாகப் பாரிஸுக்குப் போகும் கனவான் கூடவே என்னையும் அனுப்பிவைத்தால் உபகாரமாயிருக்கும் என்று. அதன் பின்தான் ஒரு ஆள் அனுப்பினுர்கள். அவரை எனக்காக இங்கே காத்திருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காக. அங்கே இதுவும் சொன்னுர்கள். இந்த பிரஸ்தாப விஷயத்தின் சம்பந்தமான விவரங்களை அந்தக் கனவானே தெரிவிப்பார் என்று. என்னுடைய தகப்பனுரை நான் பார்த்ததில்லை. ஆகவே அவர் சம்பந்தப்பட்ட எதுவானுலும் அதைப்பற்றி அறிய ஆவலாயிருப்பது இயற்கை. தயவு செய்து தங்களால் சாத்தியமானுல் என்னுடைய கவலையைத் தணிப்பீர்கள். நான் ரொம்ப நன்றியுடன் இருப்பேன்..."

"வாஸ்தவம்—சொல்லுகிறேன்" என்று தயங்கினுர் ஸ்ரீமான் லாரி. ஆனுல் சொல்லவில்லை. எதிரிலிருந்த யுவதியை உற்று நோக்கினுர்.

கடைசியில் மெதுவாகச் சொன்னுர்: "மிஸ் மானெட், நான் ஒரு வியாபாரி. வியாபார சம்பந்தமான ஒரு பொறுப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நான் பேசுவதை நீ சர்வ சாதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். எங்க

ளுடைய வாடிக்கைக்காரர் ஒருவருடைய கதையை இப்போது சொல்லப் போகிறேன்—"

"கதையா !"

"ஆமாம்; அவர் ஒரு பிரெஞ்சுக் கனவான். இங்கிலீஷ்காரியை மணந்து கொண்டார்."

"பூவே யைச் சேர்ந்தவரா ?"

"ஆமாம், உன் தகப்பனர் *மூஸே மானேட்டைப் போலத்தான். அவரும் டாக்டர். எனக்கு அவரை ரொம்ப நெருக்கமாகத் தெரியும்.—இருபது வருஷத்துக்கு முன்ஞல்..."

"ஐயா, இது என் தகப்பஞருடைய கதையல்லவா !—உங்களே எனக்கு ஞாபகம் வருகிறதே !—நான் ஆதரவற்று அனுதையாய்ப் போனபின் நீங்கள் தான் என்னே இங்கிலாந்துக்குக் கொண்டுவந்தீர்கள்—இல்லேயா ?"

சற்று நேரம் கழித்து ஸ்ரீமான் லாரி பேசலாஞர். "மிஸ். மானெட், அது நான்தான். இப்போது தெரிகிறதா ? எனக்கு வியாபார சம்பந்தத்தைத் தவிர வேறு விதமான உணர்ச்சி கிடையாது. எனக்கு அதற்கெல்லாம் சாவகாசம் கிடையாது. இவ்வளவு காலமாக நீ டெல்ஸன்பாங்க் ஆதரவிலேயேதான் வளர்ந்திருக்கிருய்"

"தயவுசெய்து இன்னும் விவரமாகச் சொல்லவேண்டும்"

"கட்டாயமாய்ச்சொல்லுகிறேன். நீ அதைத் தாங்கிக் கொள்வாயா?

"இந்த இரண்டும்கெட்டான் நிலேமையைத் தவிர எதையும் நான் சகித்துக்கொள்வேன்."

---

* மூஸே இங்கிலீஷ் மிஸ்டருக்குச் சரியான பிரஞ்சுப்பதம்.

"அப்படியானுல் சரி. எல்லாம் வியாபார சம்பந்தம்தான். ஞாபகமிருக்கட்டும். இப்போது, அந்த டாக்டரின் மனைவி நல்ல உத்தமமான பெண்மணி. தனக்குக் குழந்தை பிறந்ததும் அதற்கு புத்தி தெரிந்ததும், அதனுடைய தகப்பனுருடைய உண்மை நிலைமையைச் சொல்லி அந்தத் துக்கத் துக்கு அதை ஆளாக்கக்கூடாது என்று—"

"ஐயா, வளர்க்காமல், உள்ளதைச் சொல்லிவிடுங்களேன்!"

"சரி தைரியம்! வியாபார விஷயம்! இது பூராவும் வியபார விஷயம்தான். உன் தாயார் அவள் சாகும்போது ஒரு விதக் கவலையுமின்றி நீ வளரவேண்டுமென்று விரும்பினுள். உன் பெற்ருேருக்கு அதிகச் சொத்துக் கிடையாது. இது ஒன்றும் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை. அவர் உயிருடன் இருக்கிருர்—ரொம்ப மாறியிருக்கவேண்டும்! அவர் பாரிஸில் ஒரு பழைய வேலையாளின் வீட்டில் தங்கியிருக்கிருர். அங்கே தான் இப்போது போகிருேம்..."

"இருக்காது! அவரையா!"

"இன்னும் ஒரே விஷயம்தான் பாக்கி. அவர் இப்போது புதுப்பெயருடன் இருக்கிருர். இவ்வளவுகாலம் அவர்—இதென்ன! மிஸ் மானெட்!"

அப்படியே உட்கார்ந்தபடியே மூர்ச்சையாகிவிட்டாள். அவளுடைய கண்கள் திறந்தபடியே அசைவற்று நோக்கின. அதைக்கண்டு பயந்துவிட்ட ஸ்ரீமான் லாரி உதவிக்குக் கூவினுர்.

அப்பொழுது விசித்திரமான சிவப்பு ஆடையணிந்த ஒரு திடமான ஸ்திரீ உள்ளே நுழைந்தாள். வேகமாக ஓடி வந்த அவள் அசைவற்றிருந்த யுவதியின் தேகத்தை எடுத்து

தூக்கிக்கொண்டு பின்னல் வந்த ஹோட்டல் வேலைக்காரர்களை நோக்கிக் கூவினுள் ; "ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள் ! ஓடிப்போய் ஏதாவது கொண்டுவாருங்கள்! என்னை எதற்குப் பார்த்து முழிக்கிறீர்கள் ! போங்கள் ! சீக்கிரம் !"

"ஏன் ஐயா, அவளுக்கு சொல்லவேண்டியதை பயமுறுத்தாமல் சொல்ல முடியாதா ? இதுதான் பாங்கு உத்தியோகமோ?" என்ருள் கோபத்துடன், ஸ்ரீ லாரியைப்பார்த்து.

மெதுவாக மிஸ் மானெட் மூர்ச்சை தெளிந்தாள்.

" இப்பொழுது கொஞ்சம் தேவலை என்று நினைக்கிறேன்." என்ருர் லாரி மெதுவாக.

" சரி, சரி, உம்ம தயவு வேண்டாம் அதுக்கு—என் கண்ணே, கண்ணைவிழி."

கொஞ்சம் கழித்து தயக்கத்துடன் கேட்டார் லாரி: " நீயும் அவள்கூட பிரான்ஸுக்கு வருகிருயோ ?"

" நியாயம்தான்! உப்பு ஜலத்தை தாண்டவேண்டுமென்று விதியிருந்தால் இங்கே தீவில் ஏன் வந்து பிறக்கிறேன் ?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது அவ்வளவு எளிதல்ல வென்பதை உணர்ந்து, லாரி அதைப்பற்றி யோசனை செய்து கொண்டே நகர்ந்தார்.

---

# அத்தியாயம் 4.

## ஒயின் கடை

நடுத்தெருவில் ஒரு பெரிய ஒயின் பீப்பாய் கீழே விழுந்து உடைந்து விட்டது. அதனால் அதிலிருந்த ஒயின் பூராவும் தெருவில் ஓடிக்கொண்டிருந்தது. அப்படியே ஒரு ஒயின்—கடைக்கெதிரே தேங்கிக்கிடந்தது. அங்கே பக்கத்திலிருந்த ஜனங்கள் தங்கள் தங்கள் வேலையையோ அல்லது சோம்பேறித்தனத்தையோ விட்டுவிட்டு அந்த இடத்திற்கு ஓடினர். அப்படியே குனிந்து கொண்டு ஓடும் ஒயினை அள்ளி அள்ளிக் குடித்தனர். சிலர் உடைந்த பாத்திரங்களில் அந்தப் பானத்தை அள்ள முயற்சித்தனர். சில ஸ்திரீகள் துணியை அதில் நனைத்து, வற்றிப்போயிருந்த தங்கள் குழந்தைகளின் வாயில் பிழிந்தனர். சற்று நேரத்தில் அங்கே விடர்களும், குழந்தைகளும், ஸ்திரீகளுமாக ஏகக் கும்பல் கூடிவிட்டது.

அந்த ஒயின் சிவப்பு ஒயின். பாரிஸில், ஸேன்ட் அன்டோன் பிரதேசத்தில், அந்த பிரதேச முழுவதையும் சிவப்பு மயமாக்கிவிட்டது. அதில் கை வைத்தோர் எல்லாருடைய கைகளும் சிவப்பாகி விட்டன. உயரமான ஒருவன் தன் கை விரல்களை அதில் தோய்த்து பக்கத்துச் சுவற்றில் ரத்தம் என்று வேடிக்கையாக எழுதினன்.

அந்தக் காலமும் வரவிருந்தது; அந்த ஒயினும் தெருவில் ஆறாக ஓடி அந்தக் கறையும் பல கைகளில் படியும் காலம் வரவிருந்தது.

அந்த ஒயின்—கடை தெருக் கோடியிலிருந்தது. அதனுடைய முதலாளி கடை வாசலில் நின்று இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது வேடிக்கையாக சுவற்றில் எழுதினவனைப் பார்த்ததும் கூப்பிட்டான்:

"காஸ்பர்டு, என்னப்பா செய்யறே அங்கே?"

அந்த கடைக்காரனுக்கு வயது முப்பதிருக்கும். நல்ல திடமான ரூபம். சட்டை முழங்கை வரையில் மடக்கி வைத்துக்கொண்டிருந்தான். அவனுடைய முகத் தோற்றம் திட சித்தத்தையும், பிடிவாதத்தையும் காட்டிற்று.

அவனுடைய மனைவி, ஸ்ரீமதி டிபாஜ் கடையில் பெட்டிக்குப் பின்னல் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கும் கிட்டத் தட்ட, அவன் வயதிருக்கும். நல்ல கட்டையான உருவம். கூர்ந்து நோக்கும் பார்வை. பத்து விரல்களிலும் மோதிரங்கள். மிகவும் நிதானமா யிருந்ததோடு அவள் முகம் திடசித்தத்தைக் காட்டிற்று. அவளுடைய கையில் ஊசியும் நூலும் தையல் வேலைக்குத் தயாராயிருந்தன. தன் கணவன் உள்ளே நுழையும்போது பல் குத்திக்கொண்டிருந்த ஸ்ரீமதி டிபாஜ், புருவத்தை நெறித்து அவனைப் பார்த்தாள்.

அவளுடைய குறிப்பை யறிந்து கொண்ட டிபாஜ் புதிதாக ஏதாவது கிராக்கிவந்திருக்கிறதா என்று கடையில் நாலுபக்கமும் பார்வையைச் சுழற்றி பார்த்தான். ஒரு மூலையில் சற்று வயதான ஒரு கனவானும் ஒரு யுவதியும் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். இன்னும் சிலரும் அங்கே இருந்தனர். இருவர் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். பெட்டிக் கடியில் மூவர் ஒயின் குடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை நெருங்கினதும் டிபாஜ் க்ஷேமம் விசாரித்து சற்று நேரம் பேசினன். பிறகு அவர்களை நோக்கி "ஐயன்மீர், தாங்கள் கேட்ட அறை ஐந்தாவது மெத்தையிலிருக்கிறது. நீங்கள் தான் போயிருக்கிறீர்களே. போய் வாருங்கள்!" என்றான் உரத்த குரலில்.

அவர்களும் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே சென்றார்கள். அப்போது அயந்த வயோதிகக் கனவான்

எழுந்து கடை முதலாளியிடம் நெருங்கி கொஞ்சம் தனித்துப் பேசவேண்டுமென்றார்.

"அப்படியே, ஐயா" என்றான் ஸ்ரீமான் டிபாஜ். இருவரும் கதவுப்பக்கம் சென்றனர். ஒரு நிமிஷத்துக்கெல்லாம் தலையை யசைத்துக்கொண்டே வெளியே போனான் டிபாஜ். அந்தக் கனவானும் யுவதியை அழைத்துக்கொண்டு பின் தொடர்ந்தார்.

ஸ்ரீமான் ஜார்விஸ் லாரியும் மிஸ் மானெட்டும் சற்றுமுன் மூவரும் போன வழிப்பக்கம் ஸ்ரீமான் டிபாஜைத் தொடர்ந்து போனார்கள். அந்த வழி இருண்டு துர்நாற்றம் வீசிற்று. மெத்தைப்படி உடைந்து கிடந்தது. அந்த வழியில் ஏறும் போது டிபாஜ் குனிந்து தன் பழைய எஜமானின் புதல்வியின் கையை மிருதுவாகத்தொட்டு விசுவாசத்துடன் முத்தமிட்டான்.

மெதுவாகக் கேட்டார் ஸ்ரீமான் லாரி: "அவர் தனியாகவா இருக்கிறார்?"

"தனியாக? தெய்வமே! அவருடன் யார் இருக்க முடியும்?"

"அவருடைய இஷ்டத்தின் மேலா?"

"இஷ்டமா! அவசியத்தினால்"

"ரொம்ப மாறிப்போயிருக்கிறாரோ?"

"மாறிப்போயிருக்கிறார்! கடவுளே! நான் என்ன சொல்லட்டும்?"

மேலே ஏற ஏற, லாரியின் மனத்தில் இருள் சூழத் தொடங்கிற்று.

கடைசியில் படிக்கட்டின் உச்சியை அடைந்ததும் டிபாஜ் சட்டைப் பையிலிருந்து ஒரு சாவியை எடுத்துக் கதவைத் திறந்தான்.

"எதற்காகப் பூட்டியிருக்கிறது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் லாரி.

"ஏன்! அவருடைய சௌகர்யத்துக்காகத்தான். எத்தனை வருஷம் அவர் ஜெயிலில் கிடந்தார்! திறந்துவைத்தால் என்ன செய்வாரோ?"

"நிஜமாகவா?"

"ஆமாம் இன்னும் எவ்வளவோ இருக்கிறது!"

இந்த வார்த்தைகள் ரொம்ப மெதுவாகப் பேசப்பட்டனவாதலால் இதில் ஒரு வார்த்தைகூட மிஸ் மானெட் காதில் விழவில்லை. அவளுடைய ஆவல் நிறைந்த முகத்தையும் பரபரப்பையும் கண்ட லாரி அவளுக்குத் தைரியம் சொல்ல வேண்டியதவசியம் என்று நினைத்தார்.

"அம்மா, தைரியம்! வியாபார விஷயம்! அவருடைய நிலைமையை எண்ணு. வியாபாரம்! தைரியம்! நிதானம்!"

மெதுவாகக் கதவு திறந்தது. அவர்களை நுழையச் சொல்லி சைகை செய்தான் டிபாஜ். லாரி அவளுடைய இடுப்பில் கையைக் கொடுத்து அணைத்துக்கொண்டு அவளைத் தாங்கிச் சென்றார்.

அந்த அறை ஓட்டைச்சாமான்களைப் போட்டுவைக்கும் கிடங்கைப் போலிருந்தது. சூர்ய வெளிச்சமே யில்லை; மங்கின வெளிச்சம் பரவியிருந்தது. அங்கே எதிரில் பின்புறம் திரும்பிக்கொண்டு, வெண்மையான நரைத்த தலையுடைய ஒரு வயோதிகர் குனிந்து கொண்டு செருப்புத் தைத்துக் கொண்டிருந்தார்.

அவரையணுகி டிபாஜ், குனிந்துகொண்டு சொன்னான்: "நமஸ்காரம்."

வெள்ளைத்தலை சற்று நிமிர்ந்தது. ஒரு மெல்லிய தளர்ந்த குரல் கேட்டது. "நமஸ்காரம்."

"இன்னும் வேலை செய்கிறீர்களா ?"

சற்றுநேரம் கழித்து மறுபடியும் தலை நிமிர்ந்தது. "ஆமாம்,"

அந்தக் குரலின் தளர்வு பரிதாபகரமாயிருந்தது. வயோதிகத்தினால் ஏற்பட்ட தளர்வில்லை அது. தனிமையினாலும், உபயோகக்குறைவினாலும் ஏற்பட்ட மகாகோரமான தளர்வு அது.

அவருடைய முகம் மெலிந்து வற்றிக் கிடந்தது. தலைமயிர் பஞ்சாய்ப்பறந்தது. தாடி வெண்மையாக நீண்டிருந்தது. ஆனால் அவருடைய இருகண்களும் ஒளியுடன் பிரகாசித்தன.

"இந்தச் செருப்பை முடித்துவிடப் போகிறீர்களா ?" என்றான் டிபாஜ்.

"என்ன சொன்னாய் ?"

"இந்தச் செருப்பை இன்றைக்கே முடித்து விடுவீர்களா ?"

"முடித்துவிடத்தான் வேண்டும்."

மறுபடியும் தலைகுனிந்தது. வேலையைத் தொடங்கினார் கிழவர்.

லாரி முன்னால் நெருங்கினார்.

"இதோ உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்" என்றான் டிபாஜ்.

"என்ன சொன்னாய் ?"

"இதோ உங்களைப்பார்ப்பதற்காக இவர் வந்திருக்கிறார் அது என்ன செருப்பு ? இவர் அதை வாங்கிக்கொள்ளப் போகிறார்."

"என்ன? என்னுடைய பெயரையா கேட்டாய்?"

"ஆமாம்"

"நூற்றைந்து, வட கோட்டை"

"அவ்வளவுதானு?"

"நூற்றைந்து, வட கோட்டை"

"உங்களுக்கு இதுதான் தொழிலா?" என்று கேட்டார் லாரி.

திரும்பிப் பார்த்து விழித்தார் கிழவர். பிறகு கேள்வி வந்த திக்கை நோக்கி, "தொழிலா? நான் சக்கிலியாய்ப் பிறக்கவில்லை. நான் - இ - இங்கேதான் கற்றுக்கொண்டேன்".

பிறகு கேட்டார் லாரி; "மூஸே மானெட், என்னைப் பற்றிக் கொஞ்சம்கூட நினைவில்லையா உங்களுக்கு?"

கையிலிருந்த வேலையைக் கீழே போட்டுவிட்டு அவரையே உற்றுப் பார்த்தார் கிழவர்.

"இந்த மனிதனைப்பற்றிக்கூட உங்களுக்கு நினைவில்லையா? இங்கே பாருங்கள். பழைய ஞாபகம் கொஞ்சம் கூட இல்லை உங்கள் மனத்தில்?" என்று டிபாஜ்மேல் கையைப் போட்டுக் காண்பித்தார்.

ஜீவியக் கைதியான அந்தக் கிழவர் டிபாஜையும், லாரியையும், மாறி மாறிப் பார்த்தார். நிறைவேறப்பெருத ஆசைகளினுலும், நிரந்தர ஏக்கங்களினுலும் பலவருஷங்களாக வாடி, வதங்கி, வற்றிப்போன அந்த முகத்திலே ஞாபகத்தின் அறிகுறிகள் சில விஞடிகள் தோன்றி, அந்த உயிரற்ற முகத்தை பிரகாசிப்பித்தன. ஆனுல் அந்தோ! க்ஷணநேரத்திலே அது மறைந்தது. பழையபடியும் திரை மூடியது. அதே சமயத்தில் அந்த இளம்பெண்ணின் அழகிய முகத்திலே அதே விதமான அறிகுறிகள் தோன்றின. ஆனுல் அவை உடனே மடிந்து

விடவில்லை. அதோடு, அந்த கவலையால் நரைத்து வெளுத்த தலையை தன் மடிமேல் வைத்துக் கொஞ்ச வேண்டும், தன் மார்போடு அணைத்துக் கொள்ளவேண்டுமென்ற ஒரு தடுக்க முடியாத ஆசை அந்த இளம் நெஞ்சிலே உதித்தது. அதன் வேகத்திலே தனது இருகைகளையும் நீட்டிக்கொண்டு வயோதிகரை நெருங்கினாள்.

மெதுவாக அவர் வேலை செய்துகொண்டிருந்த பல கையை நெருங்கிவிட்டாள் அவள். அறையில் ஒரே நிசப்தம். அவர் தன் வேலையில் முனைந்திருந்தார். அவள் அவருக்கு வெகு சமீபத்திலிருந்தாள்.

யதேச்சையாக அவருடைய தலை திரும்பிற்று. அப்படியே அவளை வெறித்துப் பார்த்தார். அவருடைய உதடுகள் அசைந்தன. மெதுவாக வார்த்தைகள் வெளிவந்தன—

“ இதென்ன இது !”

கண்களிலே நீர் ஆறாய்ப் பெருக தன்னிருகைகளையும் அவரை நோக்கி நீட்டி முத்தமிட்டாள்.

“ நீ ஜெயிலர் பெண்ணில்லை ?’;

“ இல்லை ”. அவள் தேம்பினாள்.

“ நீ யார்?”

பதில் சொல்லாமல் அப்படியே அவர் எதிரில் அவள் உட்கார்ந்து கொண்டாள். மெதுவாக அவருடைய தோளைப் பிடித்தாள். அவர் தேகம் நடுங்கிற்று. அப்படியே கையிலிருந்த ஆயுதத்தை மெதுவாகக் கீழே வைத்தார்.

மெதுவாக அவளுடைய தலைமயிரை கையில் அள்ளி உற்றுப்பார்த்தார். உடனே முகத்தில் மாறுதல். வெறிக்கப் பார்த்தார் நிமிர்ந்து; சற்று நேரத்தில் முகத்தில் சாந்தம்.

மெதுவாகத் தன் கழுத்தைத் தடவினர். ஒரு கயிற்றில் சிறு துணி முடிச்சிருந்தது. அதை அவிழ்த்து அதிலிருந்த கொஞ்சம் தலை மயிரை எடுத்தார். அதை அவளுடைய மயிருடன் ஒத்திட்டுப்பார்த்தார். "அதேதான்! அதெப்படி! எப்படி முடியும்!"

அவளுடைய முகத்தை வெளிச்சத்தில் உற்றுப்பார்த்தார்.

"அன்றிரவு நான் வெளியிலே அழைக்கப்பட்டபோது அவள் தலையை என் தோள் மேலே சார்த்தியிருந்தாள்,—நான் போவதைப்பற்றி பயப்பட்டாள். என்னை வட கோட்டைக்கு அவர்கள் அழைத்துச்சென்றபோது இவை என் சட்டையின்மேல் படிந்து கிடந்தன. 'இவற்றை என்னிடம் விட்டு வைப்பீர்களா? இதனால் நான் தப்ப முடியாது—ஆனால் என்னுடைய ஜீவன் தப்பமுடியும்' என்று நான் சொன்னேன். எனக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது."

வார்த்தைகள் அவருடைய வாயிலிருந்து தயங்கித் தயங்கி வந்தன.

"இதெப்படி? நீதானா அது?"

திடீரென்று அவர் முகம் பயங்கரமாக மாறிற்று. அதைக் கண்ட மற்ற இருவரும் திடுக்கிட்டனர். அவள் மிருதுவாகக் கையமர்த்தினாள். "ஐயன்மீர், அசையாதீர்கள்! அப்படியே யிருங்கள்!" என்றாள் ரொம்ப மெதுவான சுரத்தில்.

"இரு! யாருடைய குரல்!" என்று கூவினர் கிழவர். தலையை அசைத்துக்கொண்டு அவளைப் பார்த்தார்.

"இருக்க முடியாது; உனக்கு ரொம்ப சின்ன வயசு; எவ்வளவு தளதளப்பு. இருக்க முடியாது. இந்தக் கைதியைப்

பார். இந்தக் கைகளை அவள் கண்டதில்லை. இந்தக்குரலை அவள் கேட்டதுண்டா? இல்லவே இல்லை. அவள் இருந்தாள் ஒரு காலத்தில் - அவனும் இருந்தான். அது பழைய காலத்தில். உன் பெயரென்ன என் தங்கமே!"

அப்படியே மகள் தந்தையின்மேல் சாய்ந்தாள்.

"எனதையனே! என் சரித்திரத்தை வேறொரு சமயம் சொல்கிறேன். இப்பொழுது என்னை ஆசீர்வதியுங்கள்! அன்புடன் தழுவிக்கொள்ளுங்கள்!"

அவருடைய கை அவளுடைய அழகிய தலையை அன்புடன் தழுவியது.

"என்னுடைய குரலிலே தங்களுக்குப் பழக்கமான ஒரு குரலை, தங்களுடைய காதிலே ஒருகாலத்தில் இன்பசங்கீதமாக ஒலித்த ஒரு குரலைக் கேட்டீர்களானால் அதற்காகத் தாங்கள் துக்கப்பட வேண்டும்! நீங்கள் இளமையின் உற்சாகத்துடன் சுயேச்சையாகத் திரிந்த ஒரு காலத்தில் உங்களுடைய தோளின்மேலே சாய்ந்துகிடந்த ஒரு இன்பமான தலையின் சாயலை என் தலையிலே கண்டீர்களானால் அதற்காக வருந்தி யழ வேண்டும்!"

அப்படியே அவரைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக்கொண்டு அன்புடன் மிருதுவாக அசைத்து அசைத்து ஆட்டினாள்.

"ஆனால் அந்தப் பழைய துக்கமெல்லாம் மறைந்து விட்டது. வறண்டு, இன்பமற்றுக் காய்ந்துபோயிருந்த தங்கள் வாழ்க்கையைச் செழிப்புறச் செய்ய நான் வந்திருக்கிறேன்! இங்கிலாந்திலே சுகமாக நிம்மதியாக வாழப்போகிறோம் என்று நான் சொல்லும்போது உங்கள் பழைய துன்ப மயமான வாழ்க்கையை நினைத்து அழுவீர்கள்! என்

றென்றைக்கும் தங்களை விட்டுப் பிரியாமல், எனதன்பு மற வாமல் இருப்பேன்! சாகும்வரை இருப்பேன்!—என தையன்மீர்! அவருடைய கண்ணீர் என் மேலே வழிந்தோடு கிறது! அவர் உணர்ந்து விட்டார்! இதோ!"

அப்படியே அவர் மேல் சாய்ந்துவிட்டாள் அவள். அந்த உள்ளமுருக்கும் காட்சியைக்கண்ட மற்ற இருவரும் மலைத்துப்போய், அதன் பாரத்தைத் தாங்காமல் கண்ணைப் பொத்திக்கொண்டனர்.

வெகு நேரம் அறையில் நிசப்தம் நிலவியது. தந்தை யும் மகளும் அப்படியே மயக்கத்திலாழ்ந்தவர்போல் இருந் தனர். சற்று நேரத்தில் அவர் தூக்கத்திலாழ்ந்தவர்போல் தரையில் சாய்ந்தார். மகள் அவருடைய தலையை அன்புடன் தடவி ஆஸ்வாசப்படுத்திக்கொண்டிருந்தாள்.

பிறகு சொன்னாள் லாரியைப் பார்த்து, "இப்படியே இவரைச் சிரமமின்றி கொண்டுபோக முடியுமானால் இப்பவே புறப்பட்டு விடுவோம். இங்கிருப்பதே எனக்குப் பிடிக்க வில்லை."

சில மணிசாவகாசம் கழித்து அவர்கள் இங்கிலாந்தை நோக்கிப் பிரயாணமாயினர்.

# இரண்டாம் புத்தகம்: பொன் சரடு

## அத்தியாயம் 5.

### விசாரணை

ஆயிரத்தெழுநூற்றெண்பதாம் வருஷத்தில் கூட டெம்பிள் பாருக்கருகே டெல்சன் பாங்க் ரொம்ப கர்நாடகமான கட்டிடமாக நின்றது. அது ரொம்ப சின்னது. ரொம்ப பழசு, ரொம்ப இருண்டது, ரொம்ப விகாரம்.

அதற்கு வெளியிலே ஒரு போர்ட்டர் நின்றுகொண்டிருப்பான். அவன்தான் அந்த கட்டிடத்தின் உயிர்ச் சின்னம். உள்ளேயோ அல்லது வெளியேயோ ஜோலியாகப் போனது போக பாக்கி நேரங்களில் அவன் அங்கேதான் இருப்பான். அவன் இல்லாத நேரங்களில் அவன் குமாரன் (12 வயது) அவனுடைய பிரதிநிதியாக அந்த இடத்திலிருப்பான். அவனுடைய பெயர் ஜெர்ரி கிரஞ்சர்.

மார்ச் மாதத்தில் ஒரு நாள் காலை எட்டே முக்கால் மணிக்கே தன்னுடைய யதாஸ்தானத்தில் அமர்ந்து உள்ளே நுழையும் உத்தியோகஸ்தர்களுக்குத் தவருமல் சலாம் வைத்துக்கொண்டிருந்தான் அவன்.

அப்போது உள்ளிருந்து "போர்ட்டர்" என்ற சத்தம் வந்தது.

உள்ளே ஓடினன் ஜெர்ரி.

"உனக்கு ஓல்டு பேயிலி எங்கிருக்கிறது தெரியுமா?" என்ருர் ஒரு குமாஸ்தா அவனிடம்.

"தெரியும், ஸார். நன்ருகத் தெரியும்"

"சரி; மிஸ்டர் லாரியை உனக்குத் தெரியுமல்லவா?"

"மிஸ்டர் லாரியை இன்னும் நன்ருகத்தெரியும், ஸார்."

"சரி; அங்கேபோய் சாக்ஷிகள் உள்ளே நுழையும் இடத்துக்குப்போ. இந்தச் சீட்டைக் காவல்காரனிடம் காட்டு. உள்ளே விடுவான்."

"கோர்ட்டுக்குள்ளா, ஸார்?"

"ஆம்; கோர்ட்டுக்குள்ளே."

ஜெர்ரியின் கண்கள் ஒன்றையொன்று நெருங்கி "கேட்டியா இதை?" என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்வதைப் போல் தோன்றின.

"கோர்ட்டிலேயே காத்திருக்கணுமா, ஸார்?"

"சொல்லுகிறேன். அந்தக் காவல்காரன் இந்தச் சீட்டை மிஸ்டர் லாரியிடம் கொடுத்து விடுவான். உடனே நீ அவர் உன்னைப் பார்க்கும்படியாக கையைக் காலை ஆட்டி ஏதாவது சமிக்ஞை செய்யவேண்டும். பிறகு அவர் உன்னைக் கூப்பிடும் வரையில் அங்கேயே இருக்கவேண்டியது."

"அவ்வளவு தானா?"

"ஆமாம்."

அந்தக் குமாஸ்தா காகிதத்தை எடுத்து மேலே பெயரெழுதினார். கிரஞ்சர் கேட்டான்.—

"ஏன் ஸார், அங்கே பொய்க்கையெழுத்து வழக்குகள் தானே விசாரிக்கிறார்கள்?"

"ராஜத்வேஷம்!"

"ஏ அப்பா! மிருகத்தனம்!"

"அதுதான் சட்டம். சட்டமப்பா!" என்றார் அந்த குமாஸ்தா, தன்னுடைய கண்ணாடி வழியே வியப்புடன் பார்த்துக்கொண்டே.

ஜெர்ரி கடிதத்தை யெடுத்துக்கொண்டு வணங்கிவிட்டு வெளியே வந்து தன் மகனிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

சில நிமிஷங்களில் ஜெர்ரி நெருக்கமான கூட்டத்துக்குள் புகுந்து கோர்ட்டுக்குள் நுழைந்தான்.

பக்கத்தில் நின்ற ஒருவனை, " என்ன நடக்கிறது? என்று கேட்டான்.

" ஒன்றுமில்லை "

" என்ன வரப் போகிறது ?"

" ராஜத்வேஷ வழக்கு. "

" அந்த சித்திரவதையா ?"

அந்த மனிதன் சொன்னான்:—

" அவனை யிழுத்து அவனெதிரிலேயே அவனைத் துண்டம் துண்டமாக்கி, அவன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவனுடைய குடலைப் பிடுங்கி, தீ வைத்து எரித்து, பிறகு அவன் தலையை வெட்டிவிடுவார்கள். அதுதான் தண்டனை "

" அவன் குற்றவாளி யென்று தீர்ப்பானால்தானே ?"

" ஓ! நிச்சயமாக அப்படித்தான் தீர்ப்பு. "

அந்த சமயத்தில் லாரியைக் கவனித்தான் ஜெர்ரி. ஒரு மேஜையடியில் பல "டோப்பா" அணிந்த கனவான்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தார் லாரி. அவருக்குப் பக்கத்தில் எதிரியின் வக்கீல், ஒரு கூடை புத்தகங்களை எதிரில் அடுக்கிவைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவருக்கு எதிரில் இன்னொரு டோப்பா அணிந்தபிரமுகர்கைகளைஜேபிக்குள் திணித்துக்கொண்டு எப்போதும் உயர நிமிர்ந்து பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார். எப்படியோ திரும்பிக்கொண்டு கையை அசைத்து லாரியை கவனிக்கும்படி செய்துவிட்டான் ஜெர்ரி. அவரும் அவனை அறிந்துகொண்டு தலையை அசைத்தார்.

நீதிபதி வந்து அமர்ந்துவிட்டார். கைதிக் கூண்டை எல்லாக் கண்களும் நோக்கின. இரண்டு சிப்பந்திகள் எதிரியைக் கொணர்ந்து நிறுத்தினர்.

அங்கிருந்த எல்லாரும்—ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தவரைத்தவிர—எதிரியை உற்றுப் பார்த்தனர்.

எதிரிக்கு இருபத்தைந்து வயதிருக்கும். கட்டுவிடாத தேகமும்கருத்த விழிகளுமாக,பார்வைக்கு நன்றாக இருந்தான். கருத்து நீண்டிருந்த அவனது தலை மயிர் ஒரு நாடாவினால் சுற்றப்பட்டு கழுத்தில் பின்புறம் தொங்கிற்று. அவன் அமரிக்கையாக நீதிபதியை வணங்கிவிட்டு நின்றான்.

நீதிபதி வழக்கமான சம்பிரதாயமான சட்டபாஷையில் வழக்கின் சாராம்சத்தை யெடுத்துச் சொன்னார். எதிரியான சாலஸ் டார்னே 'நமது மாட்சிமைதங்கிய மன்னர்பிரானுக்குத் துரோகம்' செய்திருக்கிறதாகக் குற்றம். அந்தக் குற்றச்சாட்டை அவன் மறுக்கிறான். இவ்வளவுதான் அந்த கரடு முரடான பாஷையிலிருந்து ஜெர்ரி தெரிந்துகொண்டது. அந்த சமயத்தில் சர்க்கார் வக்கீல் பேசலானார். இப்போது ஜெர்ரியின் பார்வை நீதிபதிக்குப் பக்கத்தில் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்திருந்த இருவர்மேல் விழுந்தது. அங்கு கூடியிருந்த மற்றவர்கள் பார்வைகளையும் கவர்ந்தனர் அவ்விருவரும்.

ஒரு யுவதி; இருபது வயதிருக்கும். அவள் பக்கத்தில் சற்று வயதான ஒரு கனவான்; நல்ல வெள்ளியாய் நரைத்த தலைமயிர்; அவருடைய முகத்தில் தோன்றிய திடமும் கூர்மையும் பார்ப்போரிடத்தில் அவரிடம் ஒரு மதிப்பைத் தோற்றுவித்தது. அவர்களிருவரும் தந்தையும் மகளும் என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

மகள் பயத்தாலும், எதிரியிடம் தோன்றிய ஒருவித இரக்கத்தினாலும் தந்தையிடம் நெருங்கி உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முகத்திலே உருவெடுத்த அந்த அனுதாப மானது அங்கு கூடியிருந்தோரிடையும் பரவத் தொடங் கிற்று. "அவர்கள் யார்?" என்று ஒருவருக்கொருவர் மெது வாகக் கேட்டுக்கொண்டனர்.

இதே சந்தேகம் ஜெர்ரிக்கும் தோன்றியது. பக்கத்தி லிருந்து யாரோ பதில் சொன்னார்கள்.

"யாரது?"

"சாக்ஷிகள்."

"எந்தப்பக்கம்?"

"எதிர்ப்புறம்."

நீதிபதி தம் ஆசனத்தில் நிமர்ந்து உட்கார்ந்து எதிரியை உற்றுப் பார்த்தார். சர்க்கார் வக்கீல் தம் கக்ஷியை எடுத்துப் பேச ஆரம்பித்தார்.

ஜூரர்களை நோக்கி அவர் சொல்லலானார்:—"இதோ எதிரில் நிற்கும் எதிரி வயதில் சிறியவனாயினும் ராஜத்வேஷ மான விவகாரங்களில் இளையவனல்ல. பல வருஷங்களாக எதிரி இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே போய் வந்து கொண்டிருக்கிறான். அவனுடைய ஜோலியைப்பற்றி சரி யான காரணம் கூறமுடியவில்லை. ஆனால் இந்த மாதிரியான மர்ம விவகாரங்கள் எத்தனை நாள் தப்பமுடியும்? தெய்வா தீனமாக ரொம்பவும் யோக்கியமும் கண்யமும் வாய்ந்த ஒரு கனவான் இந்த மர்மங்களை யறிந்து, மாட்சிமை தங்கிய மன் னர்பிரான் பேரிலுள்ள விசுவாசத்தினாலும், பொதுஜன க்ஷேமத்தையும் உத்தேசித்து, அவற்றைப் பகிரங்கப்படுத்த முன் வந்திருக்கிறார். இந்த மகாத்மா, எதிரியின் வேலைக்கார னின் மூலம் அவனுடைய அறைகளைப் பரிசோதித்து இந்த

மர்ம விவகாரங்கள் சம்பந்தமான தஸ்தாவேஜுகளையும், கடிதங்களையும் கொணர்ந்திருக்கிறார். அவற்றின் மூலம் எதிரி எப்படி நமது மன்னர் பிரானின் ராணுவ பலத்தின் விவரங்களையறிந்து நமது எதிரி—ராஜ்யத்துக்குத் தகவல் கொடுத்திருக்கிறான் என்பது தெளிவாக ருஜுவாகும். ஆகவே ராஜ விசுவாசம் நிறைந்த ஜூரர்கள்—பொறுப்புவாய்ந்த ஜூரர்கள்—சந்தேகத்துக் கிடமின்றி எதிரி குற்றவாளி யென்று தீர்ப்புச் சொல்வார்கள்."

அதன் பின் அந்த மகாத்மாவான தேசபக்தன் குறுக்கு விசாரணை செய்யப் பட்டான். அவன் பெயர் ஜான் பார்ஸாத் கனவான். அந்தக் கனவான் தன்னுடைய புனிதமான சேவையைச் செய்து விட்டுத் திரும்பும் சமயம், ஒரு கூடை புஸ்தகங்களை எதிரில் அடுக்கிவைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாரே, அவர் அவனைச் சில கேள்விகள் கேட்டார்.

எதிரிலிருந்த டோப்பா அணிந்த கனவான் அப்போதும் மேலே உத்தரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"நீ ஒற்றனாயிருந்ததுண்டா ?"

"சே, சே! என்ன வெட்கக்கேடு !"

"தொழிலென்ன ?"

"சொத்து"

"சொத்து எங்கிருக்கிறது ?"

"நிச்சயமாகச் சொல்ல முடியாது"

"சிறையிலிருந்ததுண்டா ?"

"நிச்சயமாக இல்லை"

"கடன்காரர் சிறையில் ?"

"அதைப்பற்றி யென்ன இப்போ ?"

"கடன்காரர் சிறையில் இருந்ததுண்டா ?"

"உண்டு."

"எத்தனை தடவை ?"

"ஒரு தடவை யிருக்கலாம்."

"ஐந்தாறு தடவை யில்லை ?"

"இருக்கலாம்."

"எப்பொழுதாவது காலால் உதைத்து மாடிப்படி வழியே தள்ளப்பட்டதுண்டா ?"

"இல்லவே இல்லை."

"உதைக்கப்பட்டதுண்டா ?"

"இருக்கலாம்."

"அடிக்கடி ?"

"ஒரே ஒரு தடவைதான், மாடிப் படியின் மேலே யிருக்கும்போது உதை விழுந்தது; என்னுடைய இஷ்டப்படி கீழே உருண்டதுண்டு."

"சூதாட்டத்தில் ஏமாற்றிவிட்டதற்காக அந்த தண்டனையா ?"

"அந்த அயோக்கியப் பயல் அப்படித்தான் ஏதோ சொன்னான். அது பொய்"

"சத்தியமாகவா ?"

"ஆமாம்."

"அந்த எதிரியிடம் உனக்கேற்பட்ட பழக்கம் நீயாக வற்புறுத்தி சம்பாதித்ததுதானே ?"

"இல்லை."

"உனக்கு தேசாபிமானத்தைத் தவிர வேறெவ்வித த்வேஷமும் இல்லையா, எதிரியிடம்?"

"இல்லவேஇல்லை."

பிறகு மகாயோக்யனை வேலையாள் ரோஜர் க்ளை கூண்டிலேறி சாட்சியம் சொன்னான். அவன் எதிரியிடம் வேலைக்

குப் போனதிலிருந்தே எதிரியிடம் அவனுக்கு சந்தேகம் தோன்றியதையும், அதன் பேரில் மேஜையைப் பரீட்சித் ததில் இந்த ஜாபிதாக்கள் அகப்பட்டதையும், பிறகு தன் னுடைய அபார தேசபக்தியால் தூண்டப்பட்டு மர்மத்தை வெளியிட்டதாகவும் விவரமாகச் சொன்னான். முன்னால் வந்த சாக்ஷியை அவனுக்கு ஏழெட்டு வருஷமாகத் தெரியும்.

பின்னர் சர்க்கார் வக்கீல் லாரியை விசாரித்தார்:

"மிஸ்டர் ஜார்விஸ் லாரி, நீர் டெல்ஸனில் குமாஸ் தாவா ?,'

" ஆமாம். "

" ஆயிரத் தெழுநூற்றெழுபத்தைந்தாம் வருஷம் நவம் பர் மாதம் ஒரு வெள்ளிக்கிழமை இரவு நீர் ஜோலியாக டோவருக்கு மெயிலில் பிரயாணம் செய்ததுண்டா ?"

" உண்டு. "

" உம்மைத்தவிர வேறு பிரயாணிகள் இருந்தனரா, வண்டியில் ?"

" இரண்டு பேர். "

" வழியில் அவர்கள் வண்டியை விட்டு இறங்கினார்களா?"

" இறங்கினார்கள், "

" மிஸ்டர் லாரி, எதிரியைப்பாரும். அந்த இரு பிரயா ணிகளில் எதிரி ஒருவனா ?"

" அந்த மாதிரி சொல்ல என்னால் முடியாது. "

" அவர்களில் ஒருவரைப்போல் இவன் இருக்கிறானா ?"

" அவர்கள் நன்றாக மூடிக்கொண்டிருந்தார்கள்; இருண்ட இரவு. அதுகூட என்னால் சொல்ல முடியாது."

" மிஸ்டா லாரி நன்றாக எதிரியைப்பாரும்; அவன் அந்த மாதிரி போர்த்திக்கொண்டிருந்ததாக வைத்துக்கொள்ளும்.

இப்போது இவனுடைய ஆகிருதியிலிருந்து நிச்சயமாக இவன் அவர்களில் ஒருவனாக இருக்கமுடியாதென்று சொல்ல முடியுமா ?"

"முடியாது."

"ஆகையால் அவர்கள் இருவரில் ஒருவனாக இவன் இருந்திருக்கலாம் என்று சொல்லுகிறீர் ?"

"ஆமாம்: ஆனால் அன்று அந்தப் பிரயாணிகள் என்னைப் போலவே திருடர்களைப்பற்றி பயந்து கொண்டிருந்தனர் - எதிரி..."

"சரி; இதற்குமுன் எதிரியைப் பார்த்திருக்கிறீரா ?"

"பார்த்திருக்கிறேன்"

"எப்போது ?"

"அப்போது நான் கலேயிலிருந்து வந்து கொண்டிருக்கும்போது எதிரியும் படகில் கூட வந்தார்."

"தனியாகவா ?"

"ஆமாம்."

"எத்தனை மணிக்கு ?"

"நடுநிசிக்கு."

"சரி;—மிஸ் மானெட் !"

எல்லோருடைய பார்வையையும் கவர்ந்த அந்த யுவதி எழுந்து நின்றாள்.

"மிஸ் மானெட் ! எதிரியைப்பாரும்."

இளமையும் அழகும் ததும்பும் முகத்தில், அளவிட முடியாத அனுதாபம் சுரந்து தோன்றிய அவளை நேருக்கு நேராகப் பார்ப்பது எதிரிக்கு மகா சங்கடத்தைத் தந்தது.

"மிஸ் மானெட், இதற்குமுன் எதிரியைப் பார்த்திருக்கிறீரா ?"

"பார்த்திருக்கிறேன்."

"எங்கே?"

"முந்தின சாக்ஷி தெரிவித்த அதே இரவன்று, அதே படகில்."

"மிஸ் மானெட், அன்று அவனுடன் ஏதாவது நீர் பேசியதுண்டா?"

"உண்டு"

"என்ன அது?"

நிசப்தம் நிறைந்த அந்த சபையிலே தளர்ந்த குரலில் அவள் சொல்லலானாள்:—

"அந்தக் கனவான் படகில் ஏறினபோது—"

"எதிரியையா சொல்லுகிறீர்?" என்றார் நீதிபதி.

"ஆமாம், பிரபுவே"

"அப்போது எதிரி என்று சொல்லும்"

"எதிரி ஏறும் சமயத்தில் என் தகப்பனார் ரொம்ப களைத்துப்போயிருந்தார். அவரைக் காற்றில் படுக்க வைக்க அஞ்சி நான் அறைக்குள்ளேயே படுக்க வைத்துவிட்டு பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். அப்போது எதிரி எனக்கு உதவிசெய்து பிரியமாக நடந்து கொண்டார்."

"எதிரி தனியாகவா வந்தான்?"

"இல்லை; அவருடன் இரண்டு பிரஞ்சுக் கனவான்களுமிருந்தனர்."

"அவர்கள் ஏதாவது கூடிப்பேசினார்களா?"

"ஆம், வந்தவர்களிருவரும் போகவேண்டிய நேரம் வரையில் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்."

" அவர்களிடம் ஏதாவது காகிதங்கள் இருந்தனவா ?"

" இருந்தன; என்றால் அவை எப்படிப்பட்டவை என்று சொல்ல முடியாது. "

" சரி, எதிரி என்ன பேசினான் ?"

" எதிரி என்னிடம் ரொம்ப கண்யமாகவும், தாராளமாக வுந்தான் நடந்துகொண்டார். அவருக்குத் தீங்குவரும்படி யாக ஏதாவது சொல்வேனோ என்னவோ—". அவள் கண்க ளில் நீர் பெருகிற்று.

இந்த சமயத்தில் சர்க்கார் தரப்பு வக்கீல் அந்த யுவதி யின் தகப்பனாரான டாக்டர் மானெட்டை விசாரிப்பது நல் லது என்று தெரிவித்தார்.

"டாக்டர் மானெட், எதிரியைடபாரும். அவனை இதற்கு மூன் பார்த்திருக்கிறீரா ?"

" ஒரே ஒரு தடவை. என்னுடைய வீட்டுக்கு லண்ட னில் சுமார் மூன்று வருஷங்களுக்கு முன் அவர் வந்திருந் தார்."

" அவன்தான் உம்முடன் அன்றிரவு படகில் வந்தவ னென்று அறிந்து கொண்டீரா ? அல்லது உம்முடைய மக ளுடன் அவன் பேசியதையாவது சொல்ல முடியுமா ?"

" இரண்டும் முடியாது "

" அதற்கு விசேஷமான காரணம் ஏதாவது உண்டா?"

" உண்டு "

" விசாரணையின்றி, குற்றச் சாட்டின்றி நீண்டகால சிறைவாசம் அனுபவிக்கும்படியான துர்ப்பாக்கியம் உமக்கு ஏற்பட்டதுண்டா ?"

" ஆமாம் "

"அப்பொழுதுதான் விடுதலையடைந்தீரா?"

"அப்படித்தான் சொன்னார்கள். எனக்கு ஒன்றும் ஞாபகமில்லை"

வக்கீல் உட்கார்ந்தார்.

வழக்கில் ஒரு முக்கியமான பாகம். ஐந்து வருஷத்துக்கு முன்னால் எதிரி டோவர் மெயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் நடுவில் இறங்கி, சுமார் பனிரெண்டு மைல் தூரம் வேறு வழியாகச் சென்று ஒரு ஊரில் போய் தகவல் சேகரித்திருக்கிறான். இதுதான் குற்றச்சாட்டுக்கு ருஜு. அந்த ஊரில் அந்த சமயத்தில் அவனைப் பார்த்ததாக ஒரு சாக்ஷி சொன்னான். அவனைக் குறுக்கு விசாரணை செய்த எதிரி வக்கீலுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்தசமயம் இவ்வளவு நேரம் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த கனவான் ஒரு துண்டுக் கடிதத்தில் ஏதோ எழுதி அவரிடம் நீட்டினார். இதைப் படித்த வக்கீல் எதிரியை உற்றுப் பார்த்தார். பிறகு சாக்ஷியைக் கேட்டார்:—

"அது எதிரிதானென்று நிச்சயமாகச் சொல்கிறீரா?"

"ஆமாம்."

"எதிரியைப் போலவே இருக்கும் வேறு யாரையாவது நீர் பார்த்திருக்கிறீரா?"

"அப்படிப் பார்த்ததில்லை."

"இதோ எனக்கெதிரில் இருக்கும் எனது நண்பரை (அந்த காகிதத்தைக் கொடுத்தவரைச் சுட்டிக்காட்டி) நன்றாகப் பாரும். இதோ எதிரியையும் பாரும். என்ன சொல்லுகிறீர்? இருவரும் ஒரே மாதிரியில்லை?"

சற்று அலட்சியமாகவும்,அசுத்தமாகவும் இருந்த தென்பதைத் தவிர இந்த நண்பரின் தோற்றம் எதிரியைப் போலவே இருந்தது. அதைக் கண்டு சாக்ஷிமட்டுமல்ல, அங்கிருந்தோர் யாவருமே பிரமிப்படைந்தனர். நீதிபதி நண்பரை தமது டோப்பாவை எடுத்துவிடும்படி சொல்ல இன்னும் ஒற்றுமை தெளிவாயிருந்தது. நீதிபதி வக்கீலைக் கேட்டார், "மிஸ்டர் கார்டனையே (அதுதான் அந்த நண்பருடைய பெயர்) ராஜத் வேஷக் குற்றத்துக்கு விசாரிக்கப் போகிறீரா"வென்று. அவர் இல்லை யென்று தெரிவித்தார். ஆனால் இதன்மூலம் அந்த சாக்ஷியின் வாக்குமூலம் ஆதாரமற்றது என்று ருஜூப்பித்தார்.

பிறகு எதிரி வக்கீல் தமது பக்கத்து சாக்ஷிகளை விசாரித்தார். அதன்பின்னர் ஜூரர்கள் ஆலோசிக்க ஆரம்பித்தனர்.

கோர்ட்டில் மிகுந்த பரபரப்பு; எதிரிவக்கீல் படபடப்புடன் பேசிக்கொண்டு அங்கு மிங்கும் பார்த்தார். கூடியிருந்த ஜனங்கள் சலசலவென்று பேசி சப்தித்தனர். நீதிபதிகூட தம் ஆஸனத்தை விட்டு எழுந்து உலாவத் தொடங்கினார். இவ்வளவு பரபரப்புக்கிடையே கார்ட்டன் தன்னுடைய பழைய ஸ்தானத்திலேயே அமர்ந்து சலனமற்று பழையபடியே உத்தரத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தான்; அவனுடைய கிழிந்த 'கௌனு'ம், தலையில் ஒட்டவைத்து வைத்தமாதிரி யிருந்த டோப்பாவும், கைகளை ஜேபியில் அலட்சியமாகப் போட்டுக்கொண்டு காலையில் எப்படி யிருந்தானோ அந்தமாதிரியே அவன் உட்கார்ந்து மேலே பார்த்துக் கொண்டிருந்தான்.

இருந்த போதிலும் அவ்வளவு அலட்சியமாக இல்லை அவன். ஏனெனில் திடீரென்று மிஸ் மானெட்டின் தலை சாய்ந்து அவளுடைய தந்தையின்மேல் அவள் விழுந்ததை

அவன் தான் முதலில் கவனித்தான்: "ஏ, கான்ஸ்டேபிள், அதோ அந்தப்பெண்ணைப்பார். போய் உதவி செய்" என்று கூவினன் உடனே.

இந்த சமயத்தில் ஜூரர்கள் தங்கள் தீர்மானத்தை ஆலோசிப்பதற்காக உள்ளே சென்றனர். உடனே கூட்டம் மெதுவாகக் கலைந்தது. அப்போது டாக்டர் மானெட்டையும், அவருடைய மகளையும் வெளியே கொண்டுபோய் சௌகரியமாய் விட்டுவிட்டு உள்ளே நுழைந்தார் லாரி. கார்ட்டன் அவரை நெருங்கிக் கேட்டான்.

"அந்தப் பெண் எப்படி யிருக்கிருள்?"

"ரொம்ப அலந்து போயிருக்கிருள். அவ்ளுடைய தகப்பனுர் சமாதானம் பண்ணிக்கொண்டிருக்கிருர்."

"நான் இதை எதிரியிடம் தெரிவிக்கிறேன். உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் கைதியிடம் பேசுவது நல்லதில்லை."

லாரியின் முகம் சிவந்தது. கார்ட்டன் வெளியே சென்ருன்.

"மிஸ்டர் டார்னே!"

கைதி முன்னுல் வந்தான்.

"அந்த சாக்ஷி, மிஸ் மானெட்டைப்பற்றி அறிய ஆவலுள்ளவராயிருப்பீர். இனி அவள் சரியாய் விடுவாள். கவலைப்பட இடமில்லை."

"என் மூலமாக அவளுக்கு இந்தமாதிரி சிரமமேற்பட்டதற்காக வருந்துகிறேன். எனக்காக நீங்கள் இதை தயவு செய்து அவளிடம் சொல்ல முடியுமா?"

"ஓ, முடியும்—நீர் வேண்டுமென்று கேட்டால்"

கார்ட்டனுடைய குரல் மகா அலட்சியமாக இருந்தது. அந்தக் கூண்டின்மேல் சாய்ந்துகொண்டபடி அவன் நின்றான்.

"ஆம்; தயவு செய்யுங்கள். அதற்காக என் வந்தனம்".

"என்ன எதிர்பார்க்கிறீர், மிஸ்டர் டார்னே?". இன்னும் அதே அலட்சியம்.

"கடைசி முடிவு."

"அது ரொம்ப புத்திசாலித்தனமானதுதான்; நடக்கக் கூடியதும்தான்—ஆனால் அவர்கள் உள்ளே போனதில் உமக்கு சாதகமேற்படுமென்று நினைக்கிறேன்."

ஒன்றரைமணி சாவகாசம் மெதுவாகத் தத்தித்தத்திக் கழிந்தது. தூதுவன் ஜெர்ரி ஒரு பெஞ்சியில் சாய்ந்து கண்ணயர்ந்தான். பிறகு ஏகக்கும்பல் சத்தம் போட்டுக்கொண்டு வருவதைக் கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

"ஜெர்ரி! ஜெர்ரி!"

"இதோ, ஸார். இங்கே வழியில் என்ன கும்பல்! வர முடியவில்லை!"

லாரி கூட்டத்தில் ஒரு காகிதத்தை அவனிடம் நீட்டினார்.

"சீக்கிரம்! வாங்கிக் கொண்டாயா?"

"வாங்கிக் கொண்டேன், ஸார்"

அந்தக் காகிதத்தில் அவசரமாக எழுதப்பட்டிருந்தது:— "விடுதலை"

"மறுபடியும் 'உயிர்ப்பித்தாய் விட்டது' என்ற செய்தியை அனுப்பியிருந்தால் இப்போது எனக்கு அர்த்தம் புரியும்" என்று தனக்குள்ளாகவே முணுமுணுத்துக் கொண்டே திரும்பினான் ஜெர்ரி.

## அத்தியாயம் 6.

### குள்ளநரி

கோர்ட்டுக் கட்டிடத்தில் நாள் முழுவதும் அடைத்துக் கிடந்த கும்பல் கலைந்துவிட்டது. டாக்டர் மானெட், லூசி மானெட் - அவருடைய புத்திரி, லாரி, மிஸ்டர் ஸ்டிவர் (எதிரிதரப்பு வக்கீல்) எல்லோரும் விடுதலையடைந்த சாலஸ் டார்னேயைச் சுற்றி உபசாரம் சொல்லிக் கொண்டு நின்றனர்.

நிமிர்ந்த பார்வையும், முதிர்ந்த அறிவின் ஒளி வீசும் முகமும், கம்பீரமாக நின்ற டாக்டர் மானெட்டைப் பார்த்தவர்கள், பாரிஸில் கிடங்குக்குள்ளே செருப்புத் தைத்துக் கொண்டிருந்த கிழவனென்று சொல்லமுடியாது: ஆனால் இப்போது அவரைப் பார்ப்பவர்கள் மறுபடியும் ஒரு தடவை திரும்பிப் பார்க்காமலிருக்க முடியாது. அவ்வித அபூர்வ சோபையுடன் திகழ்ந்தது அந்த முகம். ஆனாலும் அவர் முகத்திலே ஒரோர் சமயம் ஒரு இருண்ட மேகம் வந்து கவிழ்ந்து கொள்ளும். அவருடைய பழைய கஷ்ட வாழ்க்கையின் நினைவு வந்துவிட்டால், யாராவது லேசாக அந்த நாட்களைப் பற்றிக் குறிப்பிட்டு அந்த பயங்கர ஞாபகத்தைத் தூண்டிவிட்டால், அவருடைய ஜீவனின் அடியிலே யிருந்து அந்த மேகத் திரை கிளம்பிவந்து முகத்திலே பரவும்.

ஆனால் இந்த சோக நினைவை விரட்டிவிடும் மந்திர சக்தி மகளிடமிருந்தது. அவருடைய சோக வாழ்க்கைக்கு அப்பாலிருந்த கடந்த காலத்தையும், அந்த வாழ்க்கை முடிந்து இன்போதயம் தோன்றியுள்ள நிகழ் காலத்தையும் ஒன்ருய்ப் பிணைக்கும் பொன் சரடு போன்றிருந்தாள் அவள்; அவளுடைய குரலோசை, அவளுடைய முகத்திலே ஒளி

விடும் சந்தோஷப் பிரகாசம், அவளுடைய மலர்க் கையின் மிருது ஸ்பர்சம், ஒரு அபூர்வ மந்திரசக்தியைப்போல் வேலை செய்தது அவரிடம் எப்போதும். டார்னே நன்றியறிதலுடன் அவளுடைய கையைப் பிடித்து முத்தமிட்டான். பிறகு ஸ்டிவர் பக்கம் திரும்பி அவரை வாழ்த்தினன். ஸ்டிவருக்கு முப்பது வயதிருக்கும். பார்வைக்கு இருபது வயது அதிக மாகவே தோன்றும். நன்ருகத் தடித்துச் சிவந்த மேனி; உரத்த குரல்; தன்னை எந்தக் கூட்டத்திலும் புகுத்திக் கொள்ளக்கூடிய சக்தியுடையவர். இடித்துப் புகுந்துகொண்டு- வழியில் லாரியை நசுக்கிவிட்டார்—முன்னுக்கு வந்து டார் னேயைப் பார்த்துச் சொன்னர் "மிஸ்டர் டார்னே, உம்மை கௌரவத்துடன்விடுதலை செய்வித்ததைப்பற்றி நான் திருப்தி யடைகிறேன். இருந்தாலும் ரொம்ப மோசமான கேஸ்— ஆனல் அப்படியொன்றும் தோற்றுப்போயிருக்க முடியாது."

"நான் ஆயுள் பூராவும் உங்கள் உதவியை மறக்க முடி யாது" என்ருன், அவருடைய மாஜி கக்ஷிக்காரன், அவரு டைய கையைக் குலுக்கிக்கொண்டே.

"ஏதோ என்னல் முடிந்ததைப் பூராவும் செய்து விட் டேன்."

அப்போது பழையபடி முண்டிக்கொண்டு வந்த லாரி சொன்னர்: "இந்தக் கூட்டத்தைக் கலைத்துவிட்டு எல்லோ ரையும் வீட்டுக்கனுப்பவேண்டும் என்று டாக்டர் மானெட் டைக் கேட்டுக்கொள்ளுகிறேன். மிஸ் லூசிக்கு உடம்பு சரியாயில்லை. மிஸ்டர் டார்னே ரொம்பக் களைத்திருக் கிருர்."

டாக்டர் டார்னேயைக் குறிப்பாகப் பார்த்தார். அவ ருடைய முகம் சுருங்கிற்று. அவருடைய எண்ணங்கள் ஓடத் தலைப்பட்டன.

"அப்பா" என்ருள் லூசி மெதுவாக அவரைத்தொட்டு. அவர் நிமிர்ந்து பார்த்தார்.

"அப்பா வீட்டுக்குப் போவோமா?"

நீண்ட பெருமூச்சுடன் "போவோம்" என்ருர் கிழவர்.

தந்தையும் மகளும் வெளியே சென்று ஒரு கோச்சு வண்டியில் ஏறிப்புறப்பட்டனர்.

ஸ்டிவரும் சென்றுவிட்டார். இவ்வளவு நேரம் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் சுவரின் நிழலில் சாய்ந்து கொண்டிருந்த ஒருவன் மௌனமாக வெளியில் சென்று அந்த வண்டி போவதைப் பார்த்தான். இப்போது டார்னேயும் லாரியும் நின்றிருந்த இடத்தை அவன் அடைந்தான்.

"என்ன மிஸ்டர் லாரி! இனிமேல் கண்யமுள்ளவர்கள் டார்னேயுடன் பேசலாமல்லவா?" என்ருன்.

அன்றைய நடவடிக்கையில் கார்ட்டனுடைய பங்கைப் பற்றி யொருவரும் எடுத்துச் சொல்லவில்லை.

"மிஸ்டர் டார்னே, கண்யமுள்ள வர்த்தகக் கனவான் களில் மனதில் நடக்கும் போராட்டம் ரொம்ப வேடிக்கை யானது" என்று மிஸ்டர் லாரியைக் கண்களால் காட்டிப் பேசினன் கார்ட்டன்.

லாரியின் முகம் சிவந்தது. "ஐயா, இதற்கு முன் அதைப்பற்றி சொல்லியாய் விட்டதே, நிறுத்திக் கொள்ள லாமே. மேலும், உம்மைவிட வயதில் மூத்தவன் என்ற முறையில் சொல்லுகிறேன், அது உம்முடைய வேலையில்லை."

"வேலை! எனக்கு வேலையே கிடையாது."

"வெட்கக்கேடு."

"நான்கூட அப்படித்தான் நினைக்கிறேன்."

"உமக்கு வேலையிருந்தால் அதைக் கவனித்திருக்கமாட் டீரா?"

"அட தெய்வமே!—கவனித்தே யிருக்கமாட்டேன்!"

அவனுடைய அலட்சியத்தைக் கண்டு கோபமடைந்த லாரி "ஐயா, வேலை யென்பது நல்லது. அதனால் ஏற்படும் இடைஞ்சல்களை டார்னே நன்றாய் அறிவார்—சரி நான் போய் வருகிறேன் !" என்று சொல்லிக்கொண்டே கிளம்பினார்.

கார்ட்டன் சிரித்துக்கொண்டே டார்னேயைப் பார்த்துச் சொன்னான்: "என்னையும் உன்னையும் ஒன்றாய்ச் சேர்த்திருக்கும் இந்த விதி ரொம்ப வேடிக்கை—"

"நான் இந்த உலகத்தைச் சேர்ந்துவிட்டேன் என்று எனக்கு இன்னும் தோன்றவில்லை" என்றான் சாலஸ் டார்னே.

"அதில் ஆச்சரியமில்லை. நீ அநேகமாக அடுத்த லோகத்துக்குப் போகும் வழியில் தானே யிருந்தாய்."

"ரொம்ப களைப்பாயிருக்கிறது."

"பின் ஏன் சாப்பிடக்கூடாது.? அந்த மூளைகள் உன்னை எந்த லோகத்தில் சேர்ப்பது என்று மண்டையை உடைத்துக்கொண்டிருந்தபோது நான் போய் சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டேன். நான் வழிகாட்டுகிறேன், ஹோட்டலுக்கு."

பக்கத்திலுள்ள ஹோட்டலுக்கு அவனை அழைத்துக் கொண்டு போனான் கார்ட்டன். அங்கே டார்னே நல்ல சாப்பாட்டில் முனைந்திருந்தபோது, கார்ட்டன் எதிரில் உட்கார்ந்து ஒரு புட்டி ஒயினைக் காலி செய்வதில் ஈடுபட்டிருந்தான்.

"டார்னே, மறுபடியும் இந்த லோகத்துக்கு வந்துவிட்டதாகத் தோன்றுகிறதா?"

"எனக்கு ஒரே குழப்பமாயிருந்தது ; இப்போதுதான் தெளிவடைந்து கொண்டிருக்கிறேன்."

"அது நல்லது தான்—"

ஒரு பெரிய கிளாஸை நிரப்பிக்கொண்டே மேலும் சொன்னான் கார்ட்டன்: "என்னுடைய ஆசை நான் இந்த லோகத்திலிருப்பதை மறக்க வேணுமென்பதுதான். இந்த ஒயினைத் தவிர, இதில் வேறே சுகமில்லை. நானும் நீயும் ஒன்றிலும் ஒத்து இல்லை யென்று நினைக்கிறேன்."

அப்போதிருந்த நிலைமையில் டார்னேக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

"உன்னுடைய சாப்பாடு முடிந்ததா? யாரையாவது வாழ்த்திக் குடிப்போமே?"

"யாரை?"

"ஏன், உன்னுடைய நாக்கு நுனியில் அந்தப் பெயர் இருக்கிறது. நான் சொல்லவா?"

"அப்போ, மிஸ் மானெட்!"

"ஆம்; மிஸ் மானெட்!"

அவன் குடிக்கும்போது அவனை உற்றுப் பார்த்துக் கொண்டே கார்ட்டன், காலி கிளாஸை சுவரை நோக்கி அடித்தான். அது நொறுங்கித் தூளாயிற்று. மறுபடியும் மணியை அடித்து வேறொன்று தருவித்தான். அதை நிரப் பிக் கொண்டே "கூடப்போய் கோச்சில் வழியனுப்ப லாயக் கான அழகிய யுவதி" என்றான்.

டார்னே பேசவில்லை. சற்றுநேரம் கழித்து கார்ட்டன் கேட்டான்: "உன்னை ஒரு கேள்வி கேட்கவேண்டும்."

"தாராளமாக. நீ செய்த உதவிக்கு இதென்ன?"

"உன்னை எனக்குப் பிடிக்கிறது என்று நீ நினைக்கிறாயா?"

"கார்ட்டன், வாஸ்தவமாகவே நான் அதைப்பற்றி யோசித்ததில்லை."

"இப்போது யோசி."

"உன்னுடைய செய்கையிலிருந்து அப்படித்தானென்று தோன்றுகிறது; ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை."

"நானும் நினைக்கவில்லை! உன்னுடைய புத்திசாலித் தனத்தை மெச்ச ஆரம்பிக்கிறேன்" என்றான் கார்ட்டன்.

எழுந்துகொண்டே சொன்னான் டார்னே. "இருந்த போதிலும் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே போவதை அது தடுக்க முடியாதென்று நினைக்கிறேன்."

"முழுப் பணத்தையுமா கொடுக்கப்போகிறாய்?"

"ஆமாம்."

"அப்போ, பையா, இன்னொரு கிளாஸ் அதேமாதிரி ஒயின் கொண்டுவா. பத்து மணிக்கு என்னை எழுப்பு."

பணத்தைக் கொடுத்துவிட்டு டார்னே வெளியே போகப் புறப்பட்டான். கார்ட்டனும் எழுந்து அலட்சியமாகப் பார்த்துக்கொண்டே, "ஒரு வார்த்தை: நான் குடித்திருப்பதாக நினைக்கிறாயா?" என்று கேட்டான்.

"நீ குடித்துக்கொண்டிருந்தாய் என்று நினைக்கிறேன்."

"நினைக்கிறதா? குடித்ததை நீ பார்க்கவில்லையா?"

"அப்போ, நான் பார்த்தேன்"

"அப்போ ஏன், என்பதையும் நீ அறியவேண்டும். நான் ஏமாந்தவன். நான் ஒருவனையும் லக்ஷியம் பண்ணுவதில்லை. ஒரு பயலும் என்னை லக்ஷியம் பண்ணுவதில்லை".

"வருந்துகிறேன். உன்னுடைய சாமர்த்தியத்தை நன்றாக உபயோகித்திருக்கலாம்."

"இருக்கலாம், இல்லாமலுமிருக்கலாம். உன்னுடைய சாந்த முகத்தை ரொம்ப ஆனந்தத்தில் ஆழ்த்திவிடாதே. ஆபத்து. குட்நைட்!"

தனியானவுடன் அந்த விசித்திர பிரகிருதி ஒரு வர்த்தியைக் கையில் பிடித்துக் கொண்டு, கண்ணாடியை நெருங்கி

தன்னையே காலோடு தலை உற்றுப்பார்த்துக் கொண்டான். பிறகு தானே பேசிக்கொண்டான், "அந்த மனுஷ்யனை உனக்குப் பிடிக்கிறதா? உன்னைப் போலிருக்கும் ஒருவனை உனக்கு ஏன் பிடிக்கவேண்டும்? ஆ, என்ன மாறுதல் உன் ரூபத்தில்! நீ எந்தமாதிரி இருந்திருக்கலாம் என்று காட்டுவது போலிருக்கிறான் அவன். அவனுடன் இடம் மாற்றிக் கொள். எங்கே, அப்போது அந்த அழகிய முகம் உனக்காக வாடியிருக்குமா? அல்லது அந்த நீல விழிகள் உன்னை அப்படியே நோக்கி யிருக்குமா? விடு, விடு; நீ அந்தப்பயலை வெறுக்கிறாய். அதுதான் உண்மை."

அப்படியே ஒயின் கிளாஸை வாயில் கவிழ்த்துக் கொண்டு மேஜையின்மேல் கையை வைத்துத் தலையைத் தாங்கிக்கொண்டு தூங்க ஆரம்பித்தான். அவனுடைய தலை மயிர் மேஜையின்மேல் பரந்து கிடந்தது. எரிந்து ஒழுகின வர்த்தியின் மெழுகு அவன்மேலே வழிந்தது.

ஸிட்னி கார்ட்டன், மனிதர்களுக்குள்ளே மகா சோம்பேறி, மகா உதவாக்கரை—ஸ்டிவருக்கு நெருங்கின தோழன். ஒரு மாதத்திலே அவர்கள் சேர்ந்து குடிப்பது ஒரு ராஜ்யத்தின் கப்பல்படை முழுவதும் மிதப்பதற்குப் போதிய ஆழமுள்ள சமுத்திரமாக ஆகும். ஸ்டிவருடைய கேஸ் விசாரணையென்றால் அங்கே தவறாமல் கார்ட்டனைப் பார்க்கலாம்; பைக்குள்ளே கையைவிட்டுக் கொண்டு, அண்ணாந்து உத்தரத்தைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருப்பான். எப்போதும் அவர்களிருவரும் சேர்ந்தே யிருப்பார்கள். கார்ட்டன் ஒரு சிங்கமாக ஆகமுடியாவிட்டாலும் அவன் ஒரு சிறந்த குள்ளநரி யென்று எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள்.

எப்போதும் அவன் இரவில் ஸ்டிவர் அறைக்குப்போய் விடுவான். பக்கத்தில் ஒரு ஜாடி ஒயின். தலையில் ஒரு

ஈரத்துணியைக் கட்டிக்கொண்டு கேஸ் கட்டுகளை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுவான். எவ்வளவு சிக்கலான வழக்கானாலும் இரண்டு மணிக்குள் தீர்ந்துவிடும். கொஞ்சம்கூட சளைக்காமல் வேலை செய்வான். கண்கள் வேலையில் லயித்திருக்கும்போதே கை தானாகவே கிளாஸை எடுத்து நிரப்பி விடும்.

இவ்விதம் நரி உயிரைவிட்டுத் தயாரித்த ஆகாரத்தை சிங்கம் கடைசியாக முகர்ந்து பார்க்கும்.

வழக்கம்போல அன்றையதினமும் குள்ளநரி சிங்கத்தின் குகைக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பும்போது விடியற்காலமாய்விட்டது. குளிர்ந்த காற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. மேகம் இருண்டிருந்தது. தூரத்திலே நதி மங்கலாகக் கருத்துத் தெரிந்தது. உலகமே உயிரற்றுப் பாலைவனமாய்ப் போனதுபோல் தோன்றிற்று.

உள்ளிருந்து வியர்த்தமான அவனது வாழ்க்கை உந்தித் தள்ள, ஒரு பாலைவனத்தின் நடுவே அவன் நின்றான். எதிரே அவன் பாதையில், தூரத்திலே, ஒரு உன்னத ஸ்தானம், அதையடையவேண்டிய கடின முயற்சி, அவற்றின் கானல் நீரைப்போன்ற சாயை மின்னியழைக்கிறது. இந்த ஸ்வப்ன லோகத்திலே அழகிய யுவதிகள் காற்றிலே தொங்கின ஆஸனங்களிலமர்ந்து இவனை வியப்புடன் நோக்கினர்; வாழ்க்கைத் தோட்டத்திலே கவர்ச்சி மிகுந்த பழங்கள் பழுத்துக் குலுங்கின; நம்பிக்கை யென்னும் நதி ஜலம் "கல கல" வென்று பளிச்சிட்டு ஓடிற்று. ஒரு விநாடி. எல்லாம் மறைந்தது. பலவீட்டுக் குப்பல்களுக்கு நடுவே ஒன்றுக்குள் நுழைந்தான். இவனுடைய ஸ்பரிசத்தை அறியாத அந்தப்படுக்கையிலே சாய்ந்தான். கணக்கின்றிக் கொட்டின கண்ணீரில் ஊறிப்போயிருந்த தலையணையில் தலையைப் புதைத்தான்.

# அத்தியாயம் 7

## நூற்றுக்கணக்கானபேர்

டாக்டர் மானெட்டின் நிம்மதியான வாசஸ்தலம் ஒரு சந்தடியற்ற சந்தின் மூலையிலிருந்தது. இதைப் போல் சத்தமற்ற ஒதுக்குப்புறமான சந்து லண்டனிலேயே வேறு கிடையாது.

டாக்டர் மானெட் இங்கேதான் தம் தொழிலையும் நடத்தினார்: அவருடைய அனுபவ முதிர்ச்சியும், விசேஷ ஞான வளர்ச்சியும் அவருக்கு வேண்டியதைச் சம்பாதிக்கப் போதுமானதா யிருந்தது.

அன்று, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், அந்த சாந்தமான வீட்டின் கதவை இடிக்கும்போது இவ்வளவும் லாரியின் நினைவிலிருந்தது.

"டாக்டர் மானெட் இருக்கிறாரா?"

"எதிர்பார்க்கப்படுகிறது" என்று வந்தது பதில்.

"மிஸ் லூசி?".

"எதிர்பார்க்கப்படுகிறது."

"சரி. அவர்கள் வரட்டும். மேலே போயிருக்கிறேன்" என்றார் லாரி.

அந்தத் தளத்தில் மூன்று அறைகள் இருந்தன. முதல் அறை லூசியுடையது. அதில் அவளுடைய பட்சிகள், புஷ்பங்கள், புத்தகங்கள் எல்லாம் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. அடுத்தது டாக்டரின் உத்தியோக அறை. மூன்றாவது, பழசு, டாக்டரின் படுக்கை யறை - அங்கே ஒரு மூலையிலே செருப்புத் தைக்கும் ஆயுதங்களும் பெஞ்சியும் கிடந்தன.

அதைக் கண்டதும் லாரி "இதென்ன, தமது கஷ்ட காலததை மறக்காமலிருக்கவா இவற்றை வைத்திருக்கிறார்? ஆச்சரியமாயிருக்கிறதே!" என்றார் தனக்குள்.

"அதிலென்ன ஆச்சரியம்?" என்ற வெடுக்கென்ற குரலைக் கேட்டுத் திரும்பினார்.

பக்கத்திலே மிஸ் பிராஸ், அவர் டோவர் ஹோட்டலில் கண்ட சிவந்த திடமான ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள்.

"அப்படித்தான் தோன்றியது!" என்றார் அவர்.

"பூ! தோன்றிற்று!" என்றாள் மிஸ் பிராஸ். பிறகு "என்ன சௌக்யமா?" என்று விசாரித்தாள்.

இருவரும் உள்ளே சென்றதும் லாரி சொன்னார்: "நாம் தனியா யிருப்பதாலும், நாமிருவரும் விவகாரம் தெரிந்தவர்களாதலாலும் ஒரு கேள்வி கேட்கிறேன்—டாக்டர் லூசியோடு பேசும்போது அந்த செருப்புத் தைத்த நாட்களைப்பற்றிப் பேசுவதேயில்லையா?"

"கிடையாது."

"அந்த பெஞ்சியையும் ஆயுதங்களையும் மட்டும் வைத்துக் கொண்டிருக்கிறாரா?"

"அதோ! அவர் தனக்குள்ளாகக் கூட அதைப்பற்றி நினைப்பதில்லை என்று சொன்னேனா?" என்றாள் மிஸ் பிராஸ்.

"அதைப்பற்றி ரொம்ப நினைக்கிறாரோ?"

"ஆமாம்."

"நீ இதைப்பற்றி—" என்று ஆரம்பித்தவர் அவள் பேசத்தொடங்கியதும் அப்படியே நிறுத்திவிட்டார்.

"சிலசமயம் நடு நசியில் எழுந்திருப்பார். அங்கே அறைக்குள்ளேயே குறுக்கும் நெடுக்குமாக நடமாடும் சத்தம் கேட்கும். அவள் சட்டென்று எழுந்து போவாள். பிறகு இருவரும் சற்று நேரம் அப்படி நடமாடின பிறகு அவர் அடங்கி விடுவார்."

அப்போது அந்த இடத்திலே காலடி ஓசை கேட்டது.

"இதோ வந்துவிட்டார்கள்! கொஞ்சநேரத்தில் நூற்றுக் கணக்கான பேர் இங்கே வருவார்கள்" என்றுள் மிஸ் பிராஸ்.

அந்த இடத்திலே அடிக்கடி தெருவில்நடமாடுவோரின் காலடி ஓசை கேட்கும். சிலசமயம் சட்டென்று ஓசை நின்று விடும். மறுபடியும் வேறுவிதமான காலடி ஓசை எழும். இருந்த போதிலும் இப்போது தந்தையும் மகளும் வந்துவிட்டார்கள்.

அன்று பகல் ரொம்ப கடுமையாயிருந்தது. அதனுல் மத்தியானம் ஒயினை தோட்டத்து மரத்தடியிலேயே போய் சாப்பிட வேண்டுமென்று லூசி சொன்னுள். அப்படியே எல்லோரும் காற்று வாங்கிக்கொண்டு மரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

ஆனுலும் நூற்றுக்கணக்கான பேர் அங்கே வரவில்லை. டார்னே வந்தான். ஆனுல் அவன் ஒருவன்தான். டாக்டர் மானெட்டும் லூசியும் அவனைப் பிரியமாக வரவேற்ருர்கள். ஆனுல் மிஸ் பிராஸுக்கு உடனே ஒரு தலைவலி வந்துவிட்ட தால் வீட்டுக்குள் போய்விட்டாள். அடிக்கடி அவளுக்கு இந்தக் கோளாறு நேர்வதுண்டு.

"டாக்டர் மானெட், நீங்கள் லண்டனிலுள்ள பழைய கட்டிடங்களைப் பார்வையிடப் போகிறேனென்றீர்களே?" என்று பேச்சை ஆரம்பித்தான் டார்னே.

"ஆமாம் டவரை (சிறைச்சாலை)த்தான் போய்ப் பார்த் தோம் - அங்கே ஒன்றுமில்லை பார்க்க."

"நான் கூட டவரைப் பார்த்திருக்கிறேன். ஆனுல் அது வேறொரு சந்தர்ப்பத்தில். அவர்கள் என்னைச் சுற்றிப்பார்க்க அனுமதிக்கவில்லை" என்று சொல்லும்போது அவன் முகம்

சிவந்தது. "அங்கே ஒரு விநோதமான சமாசாரம் கேள்விப் பட்டேன்."

"என்ன அது?" என்று லூசி கேட்டாள்.

"அதுவா, சிறைச் சாலையில் ஒரு பகுதியை ரிப்பேர் செய்வதற்காக வேலை செய்தார்களாம். அங்கே ஒரு சுவரோரத்து மூலையில் அடியில் ஒரு கல்லின்மேல் சில எழுத்துக்கள் எழுதியிருந்தனவாம். சகஜமாக கைதிகள் தங்கள் பெயர்களை எழுதி வைப்பது வழக்கம். ஆனால் இந்தக் கைதி தோ-ண்-டு என்று எழுதியிருந்தானும். அங்கே அடியில் தோண்டிப் பார்த்தனராம். அதிலே ஒரு கருகிப்போன காகிதச் சுருள் கிடந்ததாம். அந்தக் கைதி அதில் என்ன எழுதி வைத்திருந்தான் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் ஏதோ எழுதி வைத்திருந்தான் என்பது மட்டும் நிச்சயம். அதை மறைக்க..."

"அப்பா! உங்கள் உடம்பு சரியாயில்லை!" என்று கூவினாள் லூசி.

அவர் அப்படியே திடுக்கிட்டு விட்டார். அவருடைய கை தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டது. அவருடைய முகத்தையும் தோற்றத்தையும் கண்ட எல்லோரும் பயந்து விட்டனர்.

"ஒன்றுமில்லை, அம்மா, மழை கனத்து விழுகிறது. அதனால் பயந்து விட்டேன். உள்ளே போவோம்"

மறுவினாடியே அவர் சமாளித்துக்கொண்டார். வாஸ்தவத்திலேயே மழை தூற ஆரம்பித்தது. அவரைப் பார்த்த லாரி அவருடைய முகத்திலே ஒரு மாறுதலை - கோர்ட்டுக்கு வெளியில் அன்று டார்னேயை அவர் பார்த்தபோது தோன்

றின மாறுதலைக் கண்டார்; அல்லது, கண்டதாக நினைத்துக் கொண்டார்.

சிற்றுண்டி வேளை; மிஸ் பிராஸ் தலைவலியுடன் டீ தயார் செய்தாள். ஆனால் இன்னும் நூறுபேரைக் காணவில்லை. கார்ட்டன் உள்ளே நுழைந்தான். அவனுடன் எண்ணிக்கை இரண்டுதான் ஆயிற்று.

இரவு ரொம்ப இறுக்கமாக இருந்தது. காற்று துளிக்கூட அசையவில்லை. அவர்கள் எல்லோரும் ஜன்னலண்டை உட்கார்ந்திருந்தனர். லூசி அவளுடைய தகப்பனுருக்குப் பக்கத்தில்; அவளுக்குப் பக்கத்தில் டார்னே. கார்ட்டன் ஒரு ஜன்னலின்மேல் சாய்ந்துகொண்டு நின்றான்.

"இன்னும் கனமாகத் தூறிக்கொண்டேயிருக்கிறது" என்றார் டாக்டர் மானெட்.

"ஆமாம், நிச்சயமாக வருகிறது மழை" என்றான் கார்ட்டன்.

அவர்கள் மெதுவாகப் பேசினார்கள். புயல் வருவதற்குள் ஓடிவிட வேண்டுமென்று அவசரம் அவசரமாகப் போகும் ஜனங்களின் காலடியோசை கேட்டது. அந்த விசேஷமான பிரதேசத்திலே காலடியோசை குழப்பமாகக் கேட்டது. ஆனால் ஒரு ஓசையாவது உள்பக்கம் திரும்பவில்லை.

"இவ்வளவு கும்பல்! இருந்தாலும் இங்கே நாம் தனியாயிருக்கிறோம்" என்றான் டார்னே. கொஞ்சநேரம் கழித்து லூசிகேட்டாள்: "மிஸ்டர் டார்னே, இது ரொம்ப பயங்கரமாயில்லை? சிலசமயம் மாலைவேளைகளில் நான் இங்கே உட்கார்ந்து இந்த ஓசைகளைக் கேட்பதுண்டு. அப்போது ஒரு பீதி, ஒரு நடுக்கம்—"

"அதென்ன? எல்லோரும் சேர்ந்து நடுங்குவோமே?"

"உங்களுக்கு அது பிரமாதமாகத் தோன்றுது. இதெல்லாம் அவரவர்களுக்குத் தானாகவே தோன்றுகிறதென்று நினைக்கிறேன். சில சமயங்களில் இவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது, இந்தக் காலடியோசை யெல்லாம் நமது வாழ்க்கையிலே வந்து புகுவோரின் காலடியோசையாயிருக்குமோ என்று நான் நினைப்பதுண்டு."

"அப்படியானால் ஒரு காலத்தில் நமது வாழ்க்கையில் ஒரு பெரிய கும்பல் வந்து கலக்கும்" என்றான் ஸிட்னி கார்ட்டன், அவனுடைய வழக்கமான அலட்சியக் குரலில்.

ஓசை ஓயவேயில்லை. வரவர அவற்றின் படபடப்பும் அவசரமும் அதிகரித்துத் தொனித்தன.

"மிஸ் மானெட், இந்தக் காலடிகள் நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் குறுக்கிடுமோ, அல்லது அவற்றை நாம் ஆளுக்குக்கொஞ்சமாக பகிர்ந்துகொள்ள வேண்டுமோ?"

"மிஸ்டர் டார்னே, நான்தான் இது ரொம்ப அசட்டுத் தனம் என்று சொன்னேனே. நீங்கள் கேட்டதால் சொல்லுகிறேன். அந்த சமயங்களில் நான் தனியாய் இருந்ததால் அவை என்னுடையவும் என் தகப்பனாருடையவும் வாழ்க்கையில் புகுமென்று நான் நினைத்தேன்".

கார்ட்டன் சொன்னான்: "நான் அவற்றை என்னுடைய வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ளுகிறேன்-நான் வேறொன்றும் கேட்கவில்லை-மிஸ்மானெட், ஒரு பெரிய கும்பல் நம்மை மிதித்துக்கொண்டு வரப் போகிறது-அதோ மின்னல் வெளிச்சத்திலே அதை நான் பார்க்கிறேன்." அதே சமயத்தில் திடீரென்று ஒரு மின்வெட்டு பளிச்சிட்டு ஜன்னலின்மேல் சாய்ந்துகொண்டிருந்த அவன் உருவத்தைத் தெளிவாக்கியது.

உடன் வந்த இடியின் கர்ஜனையைக் கேட்டதும், "இதோ அந்த சத்தம் கேட்கிறது! இதோ முன்னால், பயங்கரமாக, மிருகத் தனமாக ஓடிவருகிறார்கள்!" என்றான் அவன.

அந்த மழையின் வேகத்தையும் சத்தத்தையும் தான் அவன் குறிப்பிட்டான். இடியும் மின்னலும் வரப்போகும் பயங்கரமான புயலை அறிவுறுத்தின. நடுநிசி வரையில் புயலும் மழையும் ஓயவில்லை.

அந்த நிசப்தத்திலே ஸேயின்ட் பால் பெரிய கடிகாரம் ஒன்றடித்த சத்தம் கணீரென்று கேட்டது.

கையில் லாந்தலுடன் ஜொர்ரி பின்னால் தொடர லாரி வீட்டுக்குப் புறப்பட்டார்.

"போய் வருகிறேன், மிஸ்டர் கார்ட்டன்; மிஸ்டர் டார்னே, இந்தமாதிரி எல்லோரும் இப்படி சேர்ந்திருக்கும் நாளை இனிப் பார்க்கப் போகிறோமா?" என்றார் அவர்.

ஒரு வேளை முடியலாம். அதோடு பிரவாகம்போல் அவர்களை அடித்துக்கொண்டுபோக வெறியுடன் ஓடிவரும் கும்பலையும் பார்க்க முடியலாம்.

# அத்தியாயம் 8.

## படாடோபம்

மகாப்பிரபு, ராஜ சபையிலே செல்வாக்கு நிறைந்த பிரபுக்களில் ஒருவர். அன்று தமது வழக்கமான ஆடம்பர விருந்தை நடத்திக்கொண்டிருந்தார், பாரிஸ் ஹோட்டல் ஒன்றில். பல்வேறு விதமான ஆடை யலங்காரங்கள் அங்கே பளபள வென்று மின்னின. செயற்கைச் சிங்கார மெருகுகள் மூலம் பளபளப்படைந்த பல்வேறு தேக காந்திகள்; சுகந்தமான பரிமள வாசனைகள்; எல்லாம் ஒரு தேவலோகம் போலிருந்தது.

பெருமையுடன் தலையைக் குனிந்தும், ஆடம்பரத்துடன் வந்தவர்களை வரவேற்றும் மகாப்பிரபு கூட்டத்திலே உலாவினார்.

காட்சி முடிந்தது: ஒரு புயலைப்போன்ற பட பட வென்ற சத்தம் அறையை நிறைத்தது. கீழே மணிகள் ஓசை செய்தன. விருந்தினர் எல்லோரும் வீட்டுக்குப்போகப் பிரிந்தனர்.

எல்லோரும் போனதும் மகாப்பிரபு மட்டும் கைக் கடியில் தொப்பியை இடுக்கிக்கொண்டு, பொடி டப்பியைக் கையில் பிடித்துக்கொண்டு கண்ணாடிக் கெதிரே நின்றார். அவருக்கு வயது அறுபதிருக்கும். அழகாக ஆடையுடுத்திருந்தார். அவருடைய முகம் உணர்ச்சிச் சலனமற்று கல் போலிருந்தது. அவருடைய செல்வச் செருக்கையும், அகம்பாவத்தையும் அவருடைய நடை நொடி பாவனை தெளிவாகத் தெரிவித்தது.

அவர் கீழே இறங்கிச்சென்று தமது வண்டியில் ஏறிக் கொண்டார். வண்டி கிளம்பிற்று. அதனுடைய வேகத்திலே

வழியில் நின்ற ஜனங்கள் சிதறி யோடினர். ஒரு பகைவனைத் தாக்கப் பாயும் சிப்பாயைப்போல் பாய்ந்து ஓட்டினுன் வண்டிக்காரன். ஸ்திரீகள் கீச்சிட்டுக் கூவிக்கொண்டு விலகி யோடினர்.

கடைசியில் ஒரு தெரு மூலையில் ஒரு குழாயடியில் நொடியில் விழுந்து வண்டி நின்றது. இதே சமயம் பின்புறமிருந்து ஒரே கூக்குரலாகப் பல குரல்கள் கேட்டன. குதிரைகள் அந்த சத்தத்தில் நின்றன.

பீதி யடைந்த வேலைக்காரன் கீழே இறங்கினுன். பல கைகள் குதிரைகளின் லகானை இழுத்துப் பிடித்துக் கொண்டன.

"என்னப்பா, அது?" என்று சாவதானமாகக் கேட்டார் பிரபு.

ஒரு நெட்டையான மனிதன் குதிரைக் காலடியிலிருந்து ஒரு சிறு மூட்டையை வாரியெடுத்துக் குழாயண்டை கொண்டுவந்து போட்டு, அதன்பக்கத்தில் குனிந்துகொண்டு ஊளையிட ஆரம்பித்தான்.

"மன்னிக்கவேண்டும், எஜமான். ஒரு குழந்தை" என்முன் ஒருவன்.

"ஏன் இப்படி கோரமாக ஊளையிடுகிருன்? அது அவன் குழந்தையா ?"

"மன்னிக்கவேண்டும் மகாப்பிரபு—ஆமாம்."

அந்தக் குழாய் பத்து கஜம் தள்ளியிருந்தது. அந்த நெட்டை மனிதன் சட்டென்று எழுந்து வண்டியை நோக்கி ஓடி வந்தான். மகாப்பிரபு தம்முடைய உடைவாளில் கையை வைத்தார்.

தன்னிரு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு, அவரை அசையாமல் பார்த்து ஆவேசத்துடன் கூவினான் அவன்: "கொலை! மாண்டு போச்சு!"

ஜனங்கள் பிரபுவைச் சூழ்ந்து கொண்டார்கள். பிரபு வளைக்குள்ளேயிருந்து ஓடி வந்துவிட்ட எலிகளைப் பார்ப்பது போல் அலட்சியமாக அவர்களைப் பார்த்தார்.

தம்முடைய பணப் பையை எடுத்தார்.

"உங்களுடைய குழந்தைகளை நீங்கள் பத்திரமாகப் பார்த்துக்கொள்ள முடியவில்லையா! வேடிக்கையாயிருக்கிறது. என்னுடைய குதிரைகளுக்கு என்ன கெடுதல் பண்ணிவிட்டீர்களோ? இந்தா! இதைக் கொடு அவனிடம்!"

ஒரு தங்க நாணயத்தை வீசி எறிந்தார்.

அதை ஜனங்கள் உற்றுப் பார்த்தனர். நெட்டை மனிதன் மகாகோரமான பேய்க் குரலில் கூவினான். "மாண்டு போச்சு!"

அப்போது இன்னொரு மனிதன் அங்கே வந்ததும் ஜனங்கள் விலகி நின்றனர். அவனைக் கண்டதும் நெட்டை மனிதனும் தன் கூக்குரலை நிறுத்தினான். ஆனால் அந்தக் குழந்தையை சுட்டிக்காட்டி அழ ஆரம்பித்தான்.

கடைசியாக வந்தவன் சொன்னான்: "எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும். காஸ்பார்ட், தைரியமாயிரு. உயிரோடிருப்பதற்கு அது செத்ததே மேல். அது ஒரு மணியாவது சந்தோஷத்துடன் வாழ முடியுமா?"

"நீ ஒரு வேதாந்தி. உன் பெயரென்ன அப்பா?" என்றார் பிரபு, புன்சிரிப்புடன்.

"என் பெயர் டிபாஜ்".

"என்ன தொழில்?"

"மகாப் பிரபுவே, ஓயின் வியாபாரம்."

"அதைப் பொறுக்கிக்கொள், வேதாந்தி" என்று இன்னொரு நாணயத்தை வீசி எறிந்துவிட்டு வண்டியில் சாய்ந்தார் பிரபு. ஒரு சாமான்யமான சாமானை உடைத்துவிட்டு அதற்காகக் காசு கொடுப்பதுபோல் அலட்சியமாகக் கொடுத்துவிட்டு, ஆத்ம திருப்தியுடன் அவர் திரும்பும் சமயம், அவருடைய முகத்திலே ஒரு நாணயம் பறந்து வந்து விழுந்தது.

"ஏய்! நிறுத்து! யார் எறிந்தது அதை?" என்றார் பிரபு.

டிபாஜ் நின்ற இடத்தில் அவர் பார்த்தார். அங்கே அந்தத் தகப்பனார் கதறிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் கருத்துத் தடித்த ஒரு ஸ்திரீ சவுக்கம் பின்னிக் கொண்டு நின்றாள்.

"நாய்களா! உங்கள் மேலேயே விட்டு ஓட்டுவேனே! அந்த அயோக்கிய ராஸ்கல் இங்கே பக்கத்திலிருந்தால் அவனை நசுக்கிப் பிழிந்திருப்பேன்."

இந்த மனிதனுடைய சக்தியும் கொடூர சுபாவமும் அங்கு கூடியிருந்தோருக்கு நன்றாய்த் தெரியுமாதலால் ஒருவன் கூட மூச்சுவிடவில்லை. ஆனால் பின்னிக்கொண்டிருந்த ஸ்திரீ நிதானமாகத் தலையைத் தூக்கி அவரை உற்றுப் பார்த்தாள். பிரபு வெறுப்புடன் கும்பலை நோக்கிவிட்டு, ஆஸனத்தில் சாய்ந்து "புறப்படு!" என்று உத்தரவு கொடுத்தார்.

**நா**ன்கு குதிரைகள் பூட்டிய பிரபுவின் வண்டி ஒரு செங்குத்தான மலைமீது திணறித் திணறி ஏறியது. அஸ்தமிக்கப் போகும் செந்நிறமான சூரிய ஒளி அவருடைய முகத்தில் வீசிற்று.

வண்டி மலையின் மறுபக்கத்தில் கீழே இறங்கினவுடன் சூரியனும் அடிவானத்தில் இறங்கிவிட்டான்.

மலைச்சரிவிலே ஒரு சின்ன கிராமம். ஒரு மாதா கோயில், ஒரு குன்றின்மேல் கோட்டை; ஒரு காடு, வேட்டையாட; இவை யெல்லாம் அந்தி வெளிச்சத்திலே மங்கலாகத் தோன்றின. அவற்றை யெல்லாம், ஊரை நெருங்குகிறோம் என்ற திருப்தியுடன் பார்த்தார் பிரபு.

அந்த கிராமத்திலே ஒரே எளிய தெரு. கள்ளுக்கடை; எளிய குதிரை லாயம்; எல்லாம் ஏழ்மை மயம். அதிலே ஏழை கிராமவாசிகளும் இருந்தனர்.

ஒரு தூதுவன் முன்னாடியே மகாப்பிரபுவின் வருகையை அறிவித்துச் செல்ல, ஏகப்பட்ட சத்தத்துடன் வண்டி லாயத்துக்கருகே வந்து நின்றது. குழாயடியில் கீரை கழுவிக்கொண்டிருந்த குடியானவர்கள் தங்கள் வேலையை நிறுத்திவிட்டு வண்டியைச் சூழ்ந்துகொண்டு பிரபுவுக்குப் பணிந்து மரியாதை செய்தனர்.

எதிரே குனிந்து நின்ற முகங்களைப் பிரபு பார்த்தார். அப்போது ஒரு குள்ளமான ரோடு மேஸ்திரி கும்பலில் சேர்ந்துகொண்டான்.

"அந்தப் பயலை இங்கே கொண்டு வா!" என்றார் பிரபு தூதனிடம்.

அந்தப் பயல் கொண்டுவரப் பட்டான். மற்ற பயல்களும் என்ன என்று அறிய ஆவலுடன் கிட்ட வந்தனர்.

"உன்னை ரஸ்தாவில் பார்த்தேனல்லவா?"

"மகாப் பிரபுவே, ஆமாம்."

"மலையில் ஏறும்போது—இரண்டு தடவை பார்த்தேனல்லவா?"

"ஆமாம், எஜமான்."

"நீ அப்படிக் குறிப்பாய் எதைப் பார்த்தாய்?"

"துரை, இல்லிங்க. அந்த மனிதனைப் பார்த்தேன்." வண்டிக் கடியில் சுட்டிக் காண்பித்தான்.

"கழுதை, எந்த மனிதன்?"

"மன்னிக்கவேண்டும் பிரபு, அவன் கீழே சங்கிலியைப் பிடித்துக் கொண்டு தொங்கினான்."

"யார்?"

"பிரபுவே, அந்த மனிதன்."

"அயோக்கிய நாய்கள்! அவன் யாரவன்! உனக்குத் தெரியாதா அவனை? இந்த ஊர்க்காரன்தானே?"

"இல்லிங்க எசமான்! என்னுயுளில் அவனைப் பார்த்தது கிடையாதுங்க."

"தலை கீழாவா தொங்கினான்?"

"ஆமாங்க எசமான்!—இந்த மாதிரி!"

அவன் உடனே வண்டிக்கடியில் குனிந்து சங்கிலியைப் பிடித்துக் கொண்டு தலைகீழாகத் தொங்கிக் காண்பித்தான்.

"அவன் எப்படியிருந்தான்?"

"பிரபுவே, அவன் உயரமாக வெளுத்திருந்தான். மேலெல்லாம் புழுதி, ஒரு பிசாசு மாதிரி யிருந்தான்."

மகாப்பிரபு சற்றுக் கோபம் கலந்த அலட்சியப் பார்வை யுடன் சொன்னார்: "ரொம்ப நல்ல காரியம் செய்தாய்! ஒரு திருட்டுப் பயல் கூடவே வரும்போது வாயைப் பொத்திக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தாயோ!—காபில்!"

காபில்தான் அந்த ஊரில் பிரபுவுக் குள்பட்ட கிராமாதி காரி. மரியாதையுடன் அவன் முன்னால் வந்தான்.

"காபில், அந்த ஆசாமி இன்றிரவு உன் கிராமத்தில் தங்கினானால், அவனைக் கவனித்து விசாரி. ஜாக்கிரதை!"

"எஜமான், உத்தரவு."

"ஏய், அவன் ஓடிவிட்டானு—எங்கே அந்தக் கழுதை?"

"மலையில் ஏறும்போது, எஜமான், அவன் குதித்து விட்டான்."

"அதைக் கவனி, காபில்—விடு வண்டியை!"

வேகமாகப் புறப்பட்ட வண்டி செங்குத்தான மலைப் பிரதேசத்தை யடைந்ததும் மெதுவாக நகர்ந்தது.

சற்று நேரத்தில் பிர்ம்மாண்டமான ஒரு மாளிகையை அடைந்து வண்டி நின்றது. பெரிய கோட்டைக் கதவு திறக் கப்பட்டது.

"இங்கிலாந்திலிருந்து மூஸே சாலஸ் வந்து விட் டாரா?" என்று கேட்டார் பிரபு கீழே இறங்கியதும்.

"எஜமான், இன்னும் இல்லை!"

முன்னே பெரிய விளக்கு வழிகாட்ட, பிரபு அகண்ட மெத்தைப் படிகளின் வழியே ஏறிச் சென்றார். அந்த விளக் கின் வெளிச்சத்தினுல் தூக்கம் கலைந்த ஒரு ஆந்தை தூரத்து மரத்திலிருந்து அலறிற்று. அவருக்குப் பின்னுல் சாத்தப் பட்ட பிர்ம்மாண்டமான வாசல் கதவு பெருத்த சப்தம் போட்டது. பயங்கர ஈட்டிகளும் கொடூர வாள்களும் நிறைந்த அறையின் வழியே நடந்தார் பிரபு; அந்த ஆயுதங் களின் கொடூரத்துக்கு ஆளாகி எத்தனையோ குடியானவர்கள் ஒருவரும் தொடமுடியாதபடி எம தேவனைச் சரண் புகுந்தி ருக்கிறார்கள்.

பிரபு தமது அறையை அடைந்தார். அங்கே மேஜை யின்பேரில் இரண்டு பேருக்கு சாப்பாடு தயாராக வைத் திருந்தது.

"அவன் வரவில்லையே" என்றார் பிரபு. அந்த மேஜை யைப் பார்த்துக்கொண்டே. மறுபடி,

"ஒரு வேளை இன்றைக்கு வரமாட்டான். இருந்தாலும் சாப்பாடு அப்படியே இருக்கட்டும்" என்றார்.

பிரபு சாப்பாட்டுக்கு உட்கார்ந்தார். அவருடைய நாற் காலி வெளி ஜன்னலுக்கு எதிராக இருந்தது. அப்போது ஒயினைக் குடிக்க கிளாஸை எடுத்தவர் அப்படியே கீழே சடக் கென்று வைத்து விட்டார்.

"என்ன அது?" என்று ஜன்னல் திரையைப் பார்த்துக் கொண்டே கேட்டார்.

"என்ன, எஜமான் ?"

"திரைக்கு வெளியே. அதை விலக்கு—

"என்ன ?"

"எஜமான், ஒண்ணுமில்லை. மரங்கள்தான் அப்படித் தெரிந்திருக்கும்"

"சரி, அதை மூடு" என்றார், அமைதியாக பிரபு.

சாப்பாட்டில் ஈடுபட்ட பிரபு மறுபடியும் கிளாஸைக் கீழேவைத்தார். இந்தத் தடவை ஒரு வண்டி வந்த ஓசை. வண்டி மாளிகைக்கு நேராக வந்ததும் நின்றது.

"போய், யாரென்று பார்."

வந்தது பிரபுவின் சகோதரர் புத்திரன்தான். முதல் ஏற்பாட்டின்படி அவன் பிரபுவின் கூடவே வந்திருக்க வேண்டியது. ஆனால் வழியில் விலகிவிட்டு வந்ததால் அவன் பின்னடைந்து விட்டான். இவர் முன்னடி வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு வேகமாகவே வந்திருக்கிறான்.

அவனை மேலே வந்து சாப்பிட அழைக்கும்படி பிரபு உத்தரவிட்டார். சில நிமிஷங்களில் அவனும் வந்தான். இங்கிலாந்தில் சாலஸ் டார்னே என்று அவனுக்குப் பெயர்.

பிரபு அவனை அந்தஸ்துடன் வரவேற்ருர். ஆனல் அவனுடன் கை குலுக்கவில்லை.

நாற்காலியில் உட்கார்ந்ததும் அவன் "நீங்கள் பாரிஸிலிருந்து நேற்று புறப்பட்டீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம், நீ?"

"நேராக வருகிறேன்."

"லண்டனிலிருந்தா?"

"ஆமாம்."

"உனக்கு வர ரொம்ப தாமதமாகியிருக்கிறது" என்ருர் பிரபு புன்சிரிப்புடன்.

"இல்லை; நேராக வருகிறேன்."

"இல்லை! வரும் வழியில் தாமதமில்லை. புறப்படவே தாமதமாகிவிட்டதென்று சொன்னேன்"

"நான்—ரொம்ப ஜோலிகள் இருந்தன" என்ருன் சற்றுத் தயங்கி.

"நியாயம்" என்ருர் மரியாதை தெரிந்த பிரபு.

வேலைக்காரன் பக்கத்திலிருந்த வரையில் அவர்கள் வேறொன்றும் பேசவில்லை. காப்பியை ஊற்றிவிட்டு அவன் போனதும் புத்திரன் பேச்சை ஆரம்பித்தான்.

"நான் எந்தக் காரியத்துக்காகப் போனேனே அதன் காரணமாகவே திரும்பியிருக்கிறேன். ஆனல் அந்த வேலை என்னை எதிர்பாராத ஆபத்திலே கொண்டு மாட்டிவிட்டது. ஆனல் அந்தப் புனிதமான லட்சியத்துக்காக என் உயிரையும் நான் மதிக்கவில்லை."

பிரபு ரொம்ப நாஸுக்காக ஒரு 'சிமிட்டா' பொடியைக் கையில் எடுத்துக்கொண்டு தலையை அசைத்தார்.

குமாரன் வறண்ட குரலில் பேசினன்: "நாம் பழைய நாளிலுமாகட்டும், இந்தக் காலத்திலுமாகட்டும், நமது குடும்ப கௌரவத்தை வலுக்கட்டாயமாக உயர்த்தி வந்திருக்கிறோம். அதனால் பிரான்ஸ் தேசத்திலேயே நம்மைவிட வெறுப்புக்காளான வேறொரு பெயர் கிடையாதென்று நினைக்கிறேன்."

"அது நல்லதுதான். சின்ன சாதியின் வெறுப்புதான் அவர்கள் நம்மைப் போலொத்தவர்களுக்குக் கட்டும் கப்பம்."

பழைய குரலிலேயே சொன்னான் பிள்ளை: "நமது ஜமீனில்தான், சுற்றுப்பக்கத்தில், எந்த முகத்தைப் பார்த்தாலும் அதில் அதிகாரபயத்தின் சாயையையும், அடிமைத் தனத்தின் கூழைத்தனத்தையும் தவிர வேறொன்றையும் நான் காணேன்."

சாந்தமாகச் சொன்னார் பிரபு: "கொடுங்கோன்மைதான் நித்தியமான வேதாந்தம். அப்பனே, பயத்தின் சாயைதான் அந்த நாய்களை ஒழுங்குபடுத்துகிறது. சவுக்கடியின் ருசிதான் அந்தக் கழுதைகளை முன்னுக்குக் கொண்டுவர முடியும்."

"இந்தப் பெரிய தத்துவம் எனக்கு வேண்டாம். நான் இங்கே இருக்கவில்லை. தியாகம் செய்து விட இங்கே என்ன இருக்கிறது? துன்பமும் துயரமும் வழிந்தோடும் சுடுகாட்டைத் தவிர வேறு என்ன இருக்கிறது, இங்கே?

"ஆஹா" என்று பிரபு ஆடம்பரமான அந்த அறையை நிதானமாகக் கண்களை சுழட்டிப் பார்த்தார்.

"இதெல்லாம் எனதாக என்றாவது வருமானல், அப்போது இதன்மேல் இவ்வளவு காலமாக ஏறியிருக்கும் சாப

மூட்டையை நிவர்த்திக்க சக்தி வாய்ந்த ஒருவரிடம் ஒப்பு விக்கப்படும்.—ஆனால் இது எனக்கில்லை; இந்தக் கேடு கெட்ட சொத்தெல்லாம்!"

"சரி, போதும். நாளைக் காலையில் பார்க்கிறேன். நன்றாகத் தூங்கு!—யாரது! விளக்குக் காட்டு!" என்றார் பிரபு. வேலைக்காரன் வந்ததும் அவரும் தமது படுக்கை அறையை அடைந்தார்.

பொழுது விடிந்து சூரியன் மேலேறத் தொடங்கிவிட்டான். கிராமத்தில் சலன மேற்பட்டது. கதவுகளும், ஜன்னல்களும், பல சுர சத்தங்களுடன் திறந்தன. காலைக் காற்றின் குளிரினால் நடுங்கிக்கொண்டு ஜனங்கள் வெளியே வந்தனர். அவரவர்கள், குழாய்க்குப் போவோரும், வயல் காடுகளுக்குப் போவோரும் தங்கள் தங்கள் வேலையைத் தொடங்கினர். துரும்பாய் இளைத்திருந்த சிலர் எலும்புக் கூடாய் இருந்த மாடுகளை பச்சை தெரிந்த இடத்துக்கு ஓட்டிக்கொண்டு போயினர். மாதா கோயிலில் சிலுவைக் கெதிரே ஒன்றிரண்டு குனிந்த உருவங்கள் தெரிந்தன.

இந்த சில்லரை விவகாரங்களெல்லாம் அந்த ஊரில தினசரி வாழ்க்கையின் ஆரம்பம். ஆனால், அந்த மாளிகையில் கேட்ட காதைச் செவிடுபடச் செய்யும் கனத்த மணியோசை சர்வசாமான்யமானதில்லை; அல்லது, இவ்வளவு பரபரப்புடன் ஆட்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடுவதும், குதிரையேறி அவசரம் அவசரமாகப் பறப்பதும் தினசரி வாழ்க்கையைச் சேர்ந்தவையா?

மலையுச்சியிலே, காக்கைகூடத் திரும்பிப்பாராத சாத மூட்டை (அதிக கனமில்லை) தரையில் உருள, தனது வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த குள்ள மேஸ்திரிக்கு இந்தச்

சேதியை எந்தக் காற்று போய்ச் சொல்லிற்று? பறவைகள் இங்கிருந்து போகும் மார்க்கத்தில் விதை தெளிப்பது போல், இந்தப் பரபரப்பைக் கொஞ்சம் கீழே நழுவ விட்டனவா? அது வாஸ்தவமோ இல்லையோ, அந்த அதிகாலையில், மேஸ்திரி தன்னுடைய உயிருக்கே அஞ்சி ஓடுகிறவனைப்போல் குடல் தெரிக்க குழாயை நோக்கி ஓடினான்.

கிராமவாசிகளெல்லாரும் அங்கு கூடியிருந்தனர். "குசு குசு" வென்று அவர்கள் மெதுவாகப் பேசிக் கொண்டார்கள். இதெல்லாம் எதைக் காட்டிற்று?

இதெல்லாம், அங்கே மாளிகையிலே ஒரு கல்லுருவம் புதிதாகச் சேர்க்கப்பட்டிருப்பதைக் காட்டிற்று.

அந்த உருவத்தின் முகத்தில் சலனமில்லை; ஒரு கோபக் குறி. அதுதான் பிரபுவின் உருவம். படுக்கையில் கிடந்தது. அதனுடைய மார்பிலே ஒரு கத்தி சொருகப்பட்டிருந்தது. அதனுடைய பிடியைச் சுற்றி ஒரு காகிதம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அதில் கீழ்க்கண்ட வார்த்தைகள் காணப்பட்டன :—

"எமலோகத்திற்கு—அனுப்பியது ஜாக்"

---

# அத்தியாயம் 9.

## இரு காட்சிகள்

பன்னிரண்டு மாதங்கள் கழிந்தன. சாலஸ் டார்னே இங்கிலாந்திலேயே தங்கி, ஒரு பிரஞ்சு உபாத்தியாயராக அமர்ந்து தளராத முயற்சியாலும், ஓயாத உழைப்பினுலும் தனக்குவேண்டியதைச் சம்பாதித்துக்கொண்டு வந்தான்.

கோர்ட்டில் அவளைக் கண்டது முதல் அவன் அவள் மேல் அபாரக் காதல் கொண்டான். அவளுடைய இனிய குரல் அவனுக்கு இதுவரையில் கண்டறியாத இன்பத்தைத் தந்தது; அவளுடைய ரூபத்தைப்போல் அழகான உருவத்தை அவன் இதுவரையில் பார்த்ததில்லை. ஆனுல் இந்த விஷயத்தைப் பற்றி அவளிடம் பிரஸ்தாபித்ததேயில்லை.

ஒருநாள் மாலை அவன் டாக்டர் மானெட்டின் நிம்மதியான வீட்டை நாடிச் சென்ருன்; அவரிடம் தன் மனதிலுள்ளதைச் சொல்லவேண்டுமென்ற நோக்கத்துடன். அன்று சாயந்திரம் மிஸ் பிராஸுடன் லூஸி வெளியில் போயிருப்பாளென்று அவனுக்குத் தெரியும்.

டாக்டர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ படித்துக்கொண்டிருந்தார்.

"சாலஸ் டார்னே! வா. மூணு, நாலு நாளாகவே உன்னைக் காணுமே என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்."

"மிஸ்மானெட்—?"

"சௌக்கியமாயிருக்கிருள்—ஏதோ வீட்டுக் காரியமாக வெளியே போயிருக்கிருள், இதோ வந்து விடுவாள்."

"டாக்டர் மானெட், அவள் வீட்டிலில்லை என்பது எனக்குத் தெரியும். உங்களிடம் அவளில்லாதபோது பேசுவதற்காகவே இப்போது நான் வந்தேன்."

அவர் மௌனமாயிருந்தார்.

"டாக்டர் மானெட், உங்கள் புத்திரியை நான் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். என் உயிருக்கு மேலாக மதிக்கிறேன். நீங்களும் ஒருகாலத்தில் காதலித்திருப்பீர்கள்; இல்லையா!"

"எவ்வளவு அந்தரங்கமாகவும், தைரியமாகவும் பேசுகிறாய், நீ. அதைக் கேட்டு நான் திருப்தி யடைகிறேன். லூசி உன்னைக் காதலிக்கிறாள் என்று நினைப்பதற்கு ஏதாவது இடமிருக்கிறதா?"

"எனக்குத் தெரியவில்லை."

"என்னிடம் ஏதாவது யோசனை கேட்கிறாயா?"

"நான் கேட்கவில்லை. ஆனால் உங்களால் முடியுமானால் ஏதாவது வழி காட்டுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

"என்னிடம் ஏதாவது வாக்குறுதி கேட்கிறாயா?"

"ஆமாம்."

"என்ன அது?"

"எப்பொழுதாவது என்னைப்போல் உங்களிடம் இதைப் பற்றி இதே மாதிரி அவள் பேசுவாளானால் நீங்கள் என்னுடைய நிலைமையைப்பற்றிச் சொல்லவேண்டியது; நீங்கள் என்னை உண்மையாக நம்புவதானால்—இன்னும் ஒன்றுகூட இருக்கிறது."

"என்வரையில் ஏதும் ஆட்சேபணையில்லை. எப்பொழுதாவது அவள் உன்னைக்காதலிப்பதாகச் சொல்வாளானால் அவளை உனக்குக் கொடுத்து விடுகிறேன்—"

அவருடைய கையை ஆர்வத்துடன் எடுத்துக் குலுக்கி ஞன் சாலஸ்.

"அவள்தான் எனக்கு எல்லாம்; அவளுடைய சந்தோஷம்தான் என் வாழ்வு.—சரி! போதும்!"

அப்படியே மௌனத்தில் ஆழ்ந்துவிட்டார் அவர். சற்று நேரம் கழித்து மறுபடியும் கேட்டார்:

"நீ வேறு ஏதோ சொன்னாயே?"

"நான் அதை அவசியம் சொல்லவேண்டும். என்னுடைய இப்போதைய பெயர் என் சொந்தப் பெயரில்லை. என்னுடைய உண்மையான பெயரையும் நான் ஏன் இங்கிலாந்திலிருக்கிறேன் என்பதையும் உங்களுக்குச் சொல்லவேண்டும்."

"வேண்டாம்!" என்ருர் டாக்டர்.

"உங்களிடமிருந்து ஒன்றையும் நான் ஒளிக்க விரும்பவில்லை."

ஒரு விஞடி டாக்டர் தன்னிரு கைகளையும் காதில் வைத்துப் பொத்திக்கொண்டார். மறு விஞடி அவை டார்னேயின் வாயை மூடின.

"நிறுத்து!—நான் கேட்கும்போது சொல்லலாம். இப்போது வேண்டாம். ஒரு வேளை உன்னுடைய ஆசையும் பலிதமாகி, லூசியும் உன்னை கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்து விட்டால், உன் விவாகத்தன்று சொல்லலாம். அது வரையில் வேண்டாம். சரிதானு?"

"சரி"

"எங்கே உன் கையைக்கொடு. அவள் வந்துவிடுவாள். அதற்குள் நீ போய்விடு! நீ தீர்க்காயுளாயிருக்க கடவுள் ஆசீர்வதிப்பாராக!"

சாலஸ் டார்னே அங்கிருந்து புறப்பட்டபோது இருட்டிவிட்டது. லூசி வீட்டுக்கு வரும்போது இன்னும் நேரமாகிவிட்டது. அவருடைய அறைக்குள் அவசரமாக நுழைந்தாள். ஆனால் நாற்காலி காலியாயிருந்ததைக் கண்டதும் ஆச்சரிய மடைந்தாள்.

"அப்பா!" என்று கூப்பிட்டாள்.

பதிலில்லை. ஆனால் அவருடைய படுக்கையறையிலிருந்து மெதுவான ஆணியடிக்கும் ஓசை கேட்டது. மெதுவாக அங்கேபோய் எட்டிப்பார்த்தவள் பீதியால் அலறிக்கொண்டு ஓடிவந்து விட்டாள்: "ஐயோ, என்ன செய்வேன்! என்ன செய்வேன்!"

ஒரு வினாடிதான். உடனே சமாளித்துக்கொண்டாள். மெதுவாகக் கதவைத் தட்டிக்கொண்டே கூப்பிட்டாள். இவளுடைய குரலைக்கேட்டதும் ஓசை ஓய்ந்தது. அவர் வெளியே வந்து அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டார். வெகு நேரம் இருவரும் சேர்ந்தாப்போல் உலாவினார்கள்.

அன்றிரவு அவர் தூங்கிக்கொண்டிருக்கும்போது அவள் எழுந்துவந்து பார்த்தாள். அவர் நன்றாகத் தூங்கினார். அவருக்குப் பக்கத்திலே செருப்புத் தைக்கும் ஆயுதங்கள் வழக்கம்போலக் கிடந்தன.

அதே இரவு—விடியற் காலையில் ஸ்டிவர் தம்முடைய குள்ள நரியைப் பார்த்துச் சொன்னார்: "ஸிட்னி, இன்னொரு கிளாஸ் ஒயின் எடு. உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லவேண்டும்."

அன்றிரவும் அதற்கு முந்திய இரவும், அதற்கும் முந்தியும்—ஒருவாரமாக ஸிட்னிக்குக் கடுமையான வேலை.

கோர்ட்டு விடுமுறைக்குள் ஸ்டிவரின் வழக்குகளை யெல்லாம் முடித்துவிட வேண்டுமென்று வேலை செய்தான்.

இதனால் இன்னும் அதிகப்படியான ஒயின் செலவு. அதிகப்படியான ஈரத்துணி தலையில். கடைசியில் வேலை முடிந்ததும் துணியை எடுத்து வீசி எறிந்தான்.

ஸோபாவில் சாய்ந்துகொண்டு "அதை நிரப்பிவிட்டாயா?" என்று கேட்டார் ஸ்டிவர்.

"இதோ ஊற்றுகிறேனே."

"இதோ பார்! நான் இப்போது சொல்லப் போவதைக் கேட்டால் நீ ஆச்சரியப்படுவாய். நான் கலியாணம் பண்ணிக் கொள்ளப்போகிறேன்."

"நீயா?"

"ஆமாம்—பணத்திற்காக வல்ல. என்ன சொல்லுகிறாய்?"

"நான் அதிகம் சொல்லத் தயாராயில்லை. அந்தப் புண்ணியவதி யார்?"

"எங்கே உனக்குத் தெரியுமா, சொல்லு."

"எனக்குத் தெரிந்தவளா?"

"யோசனை பண்ணு பார்க்கலாம்."

"விடியற்காலம் ஐந்து மணிக்கு, என்னுடைய மூளை இப்படிக் குழம்பிக் கொதிக்கும்போது நான் யோசனை பண்ணப்போவதில்லை. நான் யோசிக்கவேண்டுமானால் எனக்கு இப்போது நீ சாப்பாடு போடவேண்டும்."

தம்முடைய பெரிய ரகஸ்யத்தைத் தெரிவிப்பதற்கு வேண்டிய ஆடம்பரத்துடன் சொன்னார், ஸ்டிவர்: "நான் சொல்லப்போவதைக் கேட்டுத் திடுக்கிடாதே. நீ அந்த

யுவதியைப்பற்றி ஒரு தடவை என்னிடம் சொல்லியிருக்கிருய். அதனுல் தான் இத்தனை முன்னுரையும்."

"நானு?"

"ஆமாம், இதே இடத்தில்தான்"

ஸிட்னி கார்ட்டன் கிளாஸிலிருந்த பானத்தைப் பார்த்தான். பிறகு நண்பனைப் பார்த்தான்.

"மிஸ் மானெட்தான் அந்த யுவதி."

ஸிட்னி கார்ட்டன் தன் நண்பனைப் பார்த்துக்கொண்டே பானத்தை மளமளவென்று குடித்தான்.

"இப்போது எல்லாம் தெரிந்துவிட்டது உனக்கு. ஸிட்னி, எனக்குப் பணம் வேண்டாம். அவள் நல்ல அழகு. நான் ஏன் சந்தோஷப்படக்கூடாது? நான் உன்னத ஸ்திதிக்கு வந்து கொண்டிருக்கிறேன். அவளுக்கும் நல்ல அதிர்ஷ்டம் தான். இந்த அதிர்ஷ்டத்துக்கு அவள் அருகதையானவள் தான். நீ ஆச்சரியப்படுகிருயா?"

கார்ட்டன் இன்னும் குடித்துக்கொண்டே "நான் ஏன் ஆச்சரியப்படவேண்டும்?" என்று கேட்டான்.

"நீ ஒப்புக்கொள்ளுகிருயா?"

"நான் ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது?"

தொடர்ந்தார்ப்போல் சொல்லலானுர் ஸ்டிவர்:— "இப்பொழுது உனக்கு யோசனை சொல்லுகிறேன். நீயும் இதைக் கவனிக்கவேண்டும். கல்யாணம் பண்ணிக்கொள். உன்னைக் கவனிக்க ஒரு ஆள் வேண்டும். நீயோ இங்கிதம் தெரியாதவன். கொஞ்சம் சொத்துள்ள ஒரு ஸ்திரீயைப் பார்த்துப் பிடி—ஒரு ஹோட்டல் காரி, இன்னும் இந்த மாதிரி யாராவது—அவளைக் கல்யாணம் செய்துகொள். இல்லாவிட்டால்

கடைசி காலத்தில் கஷ்டப்படுவாய். இதுதான் உனக்கேற்றது. என்ன, ஸிட்னி?"

"நான் அதைப்பற்றி யோசிக்கிறேன்" என்றான் ஸிட்னி.

இவ்விதம் தயாளசிந்தையுடன் டாக்டருடைய புத்திரிக்கு பெருத்த அதிர்ஷ்டத்தை அளிப்பதாகத் தீர்மானித்துவிட்ட ஸ்டிவர் அந்த அதிர்ஷ்டத்தை அவளுக்கு உடனே அறிவிக்க வேண்டுமென்று நினைத்தார். முதலில் பூர்வாங்க ஏற்பாடுகளையெல்லாம் முடித்துவிட்டால் சௌகரியமா யிருக்குமென்பதைப்பற்றித் தனக்குள்ளாகவே வெகு நேரம் வாதப் பிரதி வாதம் செய்தபின் ஒரு முடிவுக்கு வந்தார்.

தம்முடைய கேஸின் பலத்தைப்பற்றி அவருக்குத் துளிக்கூட சந்தேகமேயில்லை. மானஸீகமாகவே ஜூரர்களிடத்தில் இதைப்பற்றி வாதித்தார். இது வெட்ட வெளிச்சமான சாதாரண கேஸ்தான். தீர்ப்பை வெகு தெளிவாகப் பார்த்தார் அவர்.

ஆகவே விடுமுறையின் ஆரம்பத்தில் மனதில் முழு நம்பிக்கையுடன் டாக்டர் மானெட் வீட்டை நோக்கி அவர் புறப்பட்டார்.

வழியில் டெல்ஸன் பாங்கைக் கடக்கவேண்டியிருந்தது. லாரி டாக்டர் வீட்டின் நெருங்கிய நண்பர் என்பது அவருக்குத் தெரியுமாதலால், அவரிடம் தம் மனதிலுள்ளதைத் தெரிவிக்கவேண்டுமென்று நினைத்தார் ஸ்டிவர். ஆகவே கதவைத் தள்ளித் திறந்துகொண்டு லாரி உட்கார்ந்திருந்த அறைக்குள் நுழைந்தார்.

"ஹலோ! சௌக்கியமா?" என்றார் ஸ்டிவர்.

"தங்களுக்கு என்ன வேண்டும், மிஸ்டர் ஸ்டிவர்?" என்றார் லாரி, தமது வியாபார முறையில்.

"ஓ, ஒன்றுமில்லை, மிஸ்டர் லாரி, சொந்தக் காரியமாக வந்தேன். ஒரு வார்த்தை சொல்லவேண்டும் உங்களிடம்".

"அப்படியா!" என்று லாரி தமது தலையைக் குனிந்து கேட்டார்.

மேஜையின்மேல் சாய்ந்துகொண்டு ஸ்டிவர் ரகஸ்யமாகச் சொன்னார் :—"மிஸ்டர் லாரி, நான் மிஸ் மானெட்டைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளும்படி கேட்கப்போகிறேன்."

"அப்படியா! என்ன?" என்று லாரி முகவாய்க் கட்டையைத் தடவிக்கொண்டே அவரை உற்றுப் பார்த்தார்.

"என்ன ஐயா, சொன்னீர்? என்ன சொல்லுகிறீர்?" என்றார் ஸ்டிவர் எழுந்துகொண்டே.

"ஒண்ணுமில்லை—அங்கேயா போய்க்கொண்டிருக்கிறீர்கள்?"

"நேராக!" என்று கையால் மேஜையின்மேல் ஓங்கிக் குத்தினார்.

"நானாயிருந்தால் போகமாட்டேன்."

"ஏன்? நீங்கள் வியாபாரத்தில் அனுபவமுள்ளவர். காரணம் இல்லாமல் சொல்ல மாட்டீர். ஏன் போகமாட்டீர்?"

"ஏனென்றால், இந்த மாதிரியான வேலையில் எனக்கு வெற்றிகிடைக்குமென்று நம்ப கொஞ்சமாவது காரணமில்லாமல் நான் போக மாட்டேன்"

"அப்பா!—" என்று கூவினார் ஸ்டிவர்.

லாரி தூரத்திலேயிருந்த அந்த வீட்டை நோக்கினார். கோபமடைந்த ஸ்டிவரை நோக்கினார்.

ஸ்டிவர் ஒரு ரூல் கழியை எடுத்து வாயில் வைத்துக் கடித்துக்கொண்டே நின்றார். பிறகு சொன்னார்:—

"இது ரொம்ப புதிது மிஸ்டர் லாரி. அங்கே போய்க் கேட்கவேண்டாம் என்று நிச்சயமாகச் சொல்லுகிறீரா? நான், கிங்ஸ் பெஞ்சைச் சேர்ந்த ஸ்டிவர் கேட்கப்படாதா?"

"என்னை யோசனை கேட்கிறீரா ?"

"ஆமாம்."

"அப்போ நான் சொல்லுகிறேன், நீங்கள் போகவேண்டாம் என்பது தான் என் யோசனை."

சிரித்துக்கொண்டே ஸ்டிவர், "எனக்குத் தோன்றுகிறதெல்லாம் பெரிய அற்புதம்! ஹ்ஹா!" என்றார்.

லாரி சொன்னார் "நான் சொல்வதைக் கேளும்; இதைப் பற்றி வியாபார முறையில் நான் ஒன்றும் சொல்ல முடியாது ஆனால் அந்தக் குடும்பத்தோடு ரொம்பப் பழகியவன் என்ற வகையில் சொல்லுகிறேன். இவ்வளவு தான். ஆனால் இந்த ரகஸ்யத்தை நானாகக் கேட்கவில்லை. நீர்தான் என்னிடம் வந்து சொன்னீர். இப்போக்கூட நான் சொன்னது சரியில்லையா ?"

"மன்னிக்கவேண்டும் !" என்றார் ஸடிவர்.

"மன்னித்து விட்டேன். வந்தனம். ஆனால் ஒண்ணு; மிஸ்டர் ஸ்டிவர், உங்களுக்கே அந்த உண்மையைத் தெரிந்துகொள்ளும்போது வருத்தமாயிருக்கும். டாக்டர் மானெட்டுக்கு உண்மையைச் சொல்லும்போது வருத்தமாயிருக்கும். மிஸ் மானெட்டுக்கு உங்களிடம் தன் மனதிலுள்ளதைச் சொல்லும்போது வருத்தமாயிருக்கும். அந்தக் குடும்பத்தோடு எப்படி நான் நெருங்கிப் பழகுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். உங்களுக்கு இஷ்டமானால் என்னுடைய

யோசனையைக் கொஞ்சம் மாற்றுகிறேன். அதனால் நான் சொன்னபடி எல்லோருக்கும் எவ்வளவோ மனக்கஷ்டம் மிச்சமாகும். நீங்கள் அதைப்பார்த்துக்கொண்டு உசிதம் போல் செய்யலாம். என்ன சொல்லுகிறீர்?"

"எவ்வளவு காலம் ஆகும்?"

"ஓ! கொஞ்சநேரத்தில் முடிந்துவிடும். இன்று சாயந்திரமே அந்தப் பக்கம்போய் விட்டு உங்களை அறையில் வந்து பார்க்கிறேன்."

"அப்போ, சரி. எனக்கு அவ்வளவு அவசரமில்லை. பொறுக்க முடியும். அங்கே நான் போகவில்லை. இன்றிரவு உம்மை எதிர்பார்க்கிறேன். நான் வருகிறேன்"

அன்றிரவு பத்துமணிக்கு லாரி அவருடைய அறையில் நுழைந்தபோது ஸ்டிவர் சுற்றிலும் பெரிய பெரிய புஸ்தகங்களை அடுக்கிக்கொண்டு அவற்றின் நடுவே உட்கார்ந்திருந்தார். எல்லாம் தம்முடைய அலட்சிய பாவத்தைத் தெரிவிக்க அவர் செய்த வழிகள்: லாரியைக் கண்டதும் முதலில் ஆச்சரியப்படுவது போலக் கூட பாவனை செய்தார்.

அரை மணி நேரம் வரையில் சிரமப்பட்டு விட்டு லாரி கடைசியில் "நான் டாக்டரிடம் போய் விட்டுவந்தேன்" என்றார்.

"டாக்டர்! ஓ—ஞாபகம் வருகிறது!" என்றார் ஸ்டிவர்.

"இன்று காலையில் நான் சொன்னது ஊர்ஜிதமாகிறது. என்னுடைய புத்திமதி சரியானதுதான்" என்றார் லாரி.

ரொம்பவும் சரளமாகச் சொன்னார் ஸ்டிவர்: "நல்லது; நான் அந்தக்கிழவரை நினைத்தும், உம்மை நினைத்தும் வருத்தப்படுகிறேன். இதைப்பற்றி இனிமேல் நாம் பேச வேண்டாம்."

“எனக்குப் புரியவில்லையே”

“வேண்டாம்: சரி, அதை விடுங்கள், விடுங்கள்” என்றார் ஸ்டிவர் ரொம்ப அழகாகத் தலையை அசைத்துக் கொண்டே.

“ஏன் வேண்டாம்.?” லாரி விடவில்லை.

“அதுதான். மூளை யில்லாத இடத்தில் மூளையிருக்கிறதென்று நம்பியது, நல்ல பாக்கியமடைய ஆசையில்லாத இடத்தில் ஆசையிருப்பதாக எண்ணிக்கொண்டது எல்லாம் என் தவறு தானே. ஒன்றும் நஷ்டமில்லை. இதே போலவே யுவதிகள் பால்யத்தில் தப்புச் செய்து விட்டு, பின்னுடி ஏழ்மையில் கஷ்டப்பட்டிருக்கின்றனர். அவ்வளவுதான், விட்டு விடுங்கள்! இந்தச் சின்னப் பெண்களுக்கே மண்டை கர்வம்! உங்களுடைய சிரமத்துக்கு நன்றியுடையவனுயிருக்கிறேன். குட்நைட்!”

லாரி வியப்புடன் வெளியேறினுர். ஸ்டிவர் தன் சோபாவில் படுத்துக்கொண்டு உயரப்பார்த்துக்கொண்டு கிடந்தார்.

# அத்தியாயம் : 10

## இங்கித மறியாதவன்.

ஸிட்னி கார்ட்டன் வேறு எங்கேயாவது பிரகாசமாக இருந்தாலும் நிச்சயமாக டாக்டர் மானெட்டின் வீட்டில் அவன் பிரகாசிப்பதேயில்லை. அங்கே அவன் அடிக்கடி போயிருக்கிறான். ஆனால் எப்போதும் அதேமாதிரி தான்; ஒரு சோக ரூபமாக, கலகலப்பின்றி சோம்பேறிபோல் உட்கார்ந்திருப்பான். அவன் இஷ்டப்பட்டால் நன்றாகப் பேசுவான்; ஆனால் அவனுடைய சுபாவமான அலட்சியம், உள்ளிருந்த ஒளியை வெளிவரவொட்டாமல் செய்தது.

ஆனாலும் அந்த வீட்டையும், அதைச் சுற்றியுள்ள தெருக்களையும் அவன் அதிகமாக மதித்தான். ஒயினால்கூட களிப்பிக்கமுடியாத பல இரவுகளில் அவன் அந்தத் தெருக்களைச் சுற்றியிருக்கிறான்; பல தடவைகள், அதிகாலையில் அடிவானத்திலிருந்து எட்டிப்பார்க்கும் முதல் சூரிய கிரணம், தனிமையில் நின்றுகொண்டிருக்கும் அவனுடைய உருவத்தைக் கண்டிருக்கிறது; அந்த இளம் பிரகாசத்திலே பக்கத்திலேயுள்ள உயர்ந்த கட்டிடங்கள் எல்லாம் மங்கலாக உருவெடுக்கும்போது, சாந்தமான, நிம்மதியான இடத்தில் நிற்கும்போது இவனுடைய மனத்திரையிலும் அழிந்துபோன ஆசைக் கனவுகளின் சாயை விழுவதுபோலிருக்கும். சமீப காலத்தில், டெம்பிள் கோர்ட்டில் இவனுடைய படுக்கை இவனுடைய ஸ்பரிச பாக்யத்தை அறவே அடைந்ததில்லை.

ஆகஸ்டு மாதத்தில் ஒரு நாள் ஸிட்னியின் கால்கள் அந்தத் தெருவிலே பதிந்தன. ஆனால் இப்போது முன்போல் அலட்சியமாக சோர்ந்துபோயில்லாமல், ஒரு லட்சியத்துடன் விறுவிறுப்பாக நடந்தன.

டாக்டர் வீட்டை யடைந்ததும் மேலே போனான்.

லூசி தனியாக இருந்தாள். அவனைக் கண்டாலே அவளுக்கு எப்போதும் ஏதோ குழப்பமாக இருக்கும். அவனுடைய முகத்தைப் பார்த்ததும் இன்று அதிலே ஒரு மாறுதலைக் கண்டாள் அவள்.

"மிஸ்டர் கார்ட்டன், உங்களுக்கு உடம்பு சரியாயில்லையா?"

"இல்லை, மிஸ் மானெட், நான் வாழும் வாழ்க்கையில் சரீர செளக்கியத்துக்கு இடமில்லை. நான் ஒரு ஊதாரி தானே?"

"இந்த—மன்னிக்கவேண்டும்—இந்த வாழ்க்கை மாற்ற முடியாததா?"

"கடவுளுக்குத் தெரியும்!"

"ஏன் மாற்றக்கூடாது?"

மிருதுவாக அவனைப் பார்த்தாள். அவனுடைய கண்களிலே கண்ணீரைக்காண ஆச்சரிய மடைந்தாள். அவன் பேசும்போது அவனுடைய குரலிலும் கண்ணீர் ஒலித்தது—

"அது இனிமேல் முடியாது. நான் இனிமேல் முன்னுக்கு வரப்போகிறதேயில்லை. இன்னும் கீழே போய்க் கொண்டே யிருப்பேன்."

அவன் முழங் கையை மேஜையின்மேல் ஊன்றிக் கொண்டு சாய்ந்து முகத்தைக் கையால் மறைத்துக் கொண்டிருந்தான். அந்த நிசப்தத்திலே மேஜை நடுங்கிற்று.

இந்த மாதிரி அவனை அவள் பார்த்ததே கிடையாது. அவள் மனது கஷ்டப்பட்டது. அவனுக்கும் அது தெரியும்; ஆகையால் தலையை நிமிராமலே சொன்னான்:

"மிஸ் மானெட், என்னை மன்னிக்கவேண்டும். நான் சொல்ல வந்ததைச் சொல்லவில்லை. நீ கேட்கிருயா?"

"உங்களுக்கு பிரயோஜன முண்டானுல், உங்களை அது சந்தோஷிப்பிக்குமானுல் திருப்தியாகக் கேட்கிறேன்."

அவன் நிமிர்ந்து கொண்டு நிதானமாகச் சொன்னுன்.

"நான் சொல்வதைக் கேட்டு பயந்து விடாதே. நான் சிறுவயதிலேயே இறந்தவனை ஒத்திருக்கின்றேன்."

"மிஸ்டர் கார்ட்டன், ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் இனிமேல் நன்ருக இருக்கமுடியும் என்று நான் நம்புகிறேன்."

அவள் முகம் தேய்ந்திருந்தது. தேகம் நடுங்கிற்று. அவளிடத்திலே தன்னுடைய துயரம் மிகுந்த கதையை ஒப்படைக்க அவன் வந்திருந்தான்.

"மிஸ் மானெட்,—நாடோடியாய், வாழ்க்கையை வியர்த்தமாக்கி, குடிகாரனுய், பார்ப்போர் இரக்கத்துக்காளாகி உன்னெதிரில் இதோ நிற்கும் இந்த மனிதனிடத்திலே நீ அன்பு கொள்வது, அவனைக் காதலிப்பது சாத்தியமானுல், அவன் ஆனந்தமடைவான். வாஸ்தவம்—ஆனுல் உன்னை மீளாத் துயரத்துக் காளாக்குவான்; உன் வாழ்க்கையே பட்டு அழிந்து போகும்படி சூன்யமாக்கி விடுவான். நிச்சயமாக, என்னிடத்திலே உனக்கு அவ்வித உணர்ச்சி ஏற்படவில்லையென்பது எனக்குத் தெரியும்; நான் அதைக் கோர வில்லை; அந்த மாதிரி ஏற்பட்டுவிடக்கூடாது என்றுதான் நான் விரும்புகிறேன்."

"அதின்றி உங்களைக் காப்பாற்ற முடியாதா? நல்ல வழியில் உங்களைத் திருப்பமுடியாதா?" அவள் கண்களில் நீர் நிரம்பிற்று. மேலும் சொன்னுள்: "இந்த மாதிரி அந்தரங்க

மாக நீங்கள் வேறு யாரிடத்திலும் சொல்லமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். அந்த அந்தரங்கத்திற்கு நான் பிரதி செய்வது சாத்தியமேயில்லையா?"

அவன் தலையை அசைத்தான்.

"முடியாது. லூசி, சாத்தியமில்லை. இன்னும் கொஞ்சம் கேள். என்னுடைய ஜீவனின் எட்ட முடியாத கனவு நீ. ரொம்ப மோசமான சமயங்களில் கூட, நீயும் உன் தகப்பனும் சேர்ந்திருக்கும் காட்சியின் நினைவானது என் மனத்திலே, நான், என்றென்றைக்கும் உயிர் பெறமுடியாதபடி அழிந்துபோய்விட்டவை என்று தீர்மானித்திருந்த இன்பச்சாயைகளை எழுப்புகின்றது. உன்னை நான் பார்த்தது முதல் நான் கண்டறியாதபடி என் ஆத்மா என்னை நிந்திக்கிறது; மடிந்துபோய்விட்டதாக நான் நினைத்திருந்த பழைய குரல்கள் என் காதிலே ஒலித்து, ஊக்கி என்னை முன்னேறத் தூண்டுகின்றன. ஆனால் சொப்பனம், எல்லாம் சொப்பனம்! முற்றுப் பெறமுடியாத கனவுகள்! ஆனால் அவற்றைத் தூண்டியது நீதான் என்பதை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்."

"அவற்றில் கொஞ்சம்கூட பலிக்காதா? மிஸ்டர் கார்ட்டன், கொஞ்சம் முயற்சி செய்யப்படாதா!"

"லூசி, பிரயோசனமில்லை. வெறும் பலவீனத்தினால் இவ்வளவும் சொன்னேன். வெறும் சாம்பலை நீ தூண்டி நெருப்பாக்கினாய். ஆனால் அந்த நெருப்பினால் யாருக்கும் பிரயோசனமில்லை."

"மிஸ்டர் கார்ட்டன், உங்களை இன்னும் துக்கத்திலாழ்த்தியது நான்தான்—"

"சே, சே, அப்படிச் சொல்லாதே. உன்னால் முடிந்தால் என்னை உருப்படியாக்கமாட்டாயா? ஆனால் உன்னால் நான் கீழே போகமாட்டேன் என்பது நிச்சயம்."

"நான் வேறொன்றும் செய்யமுடியாதா?"

"அதைப்பற்றித்தான் இப்போது சொல்லுகிறேன். இன்றையதினம் உன்னிடத்திலே என்னுடைய நெஞ்சைத் திறந்து பேசினேன் என்ற நினைவை மட்டும் நான் என்னுடைய பாக்கி நாளில் கூடவே வைத்துக்கொண்டிருந்தால் எனக்கு அதுவே போதும்."

"உங்களால் நன்றாக வாழமுடியும் என்று நான் மனதார நினைக்கிறேன்!"

"அது பிரயோசனமில்லை, அம்மா. எனக்குத் தெரியாதா! இன்னும் உன் மனசுக்குக் கஷ்டம் கொடுக்க விரும்பவில்லை. நிர்மலமான உன் மனதிலே, என்னுடைய மனதைத் திறந்து என் கதையை ஒப்படைத்திருக்கிறேன் என்பதே எனக்குப் போதும். அது அப்படியே வேறு ஒருவரும் அறியாமலிருக்க வேண்டுமென்பதே என் பிரார்த்தனை."

"அதனால் உங்களுக்குச் சிறிது சமாதானம் உண்டாகுமானால், அப்படியே இருக்கும்"

"உனக்கு எவ்வளவு நெருங்கினவர்களாயிருந்தாலும் சரி, வெளியிடக்கூடாது?

மெதுவாக அவள் சொன்னாள்:—

"மிஸ்டர் கார்ட்டன், அந்த ரஹஸ்யம் உங்களுடையது, எனதல்ல; அதை நான் கௌரவிப்பேன்."

"நீ தீர்க்காயுளாயிருக்கவேண்டும்!"

கதவுப்பக்கம் எழுந்து போனவன் திரும்பினான்.

"ஆனால் இதைப்பற்றி நான் ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டேன். நீ பயப்படவேண்டாம். நான் இறந்தது

போலவேதான் இனி. என்னுடைய கடைசிக் காலத்திலே இந்த ஒரு நினைவு, நான் என்னுடைய குற்றங் குறைகளை உன்னுடைய பரிசுத்தமான ஹிருதயத்திலே ஒப்படைத்தேன் என்ற நினைவு மகாபுனிதமானதாகப் பூஜிக்கப்படும். ஆனால் இதனுடைய பாரம் உனது இளகிய நெஞ்சை அழுத்தாம லிருக்கவேண்டுமென்று கடவுளை மனமாரப் பிரார்த்திக்கிறேன்!"

அவன் எப்போதும்போலில்லாமல் ரொம்ப வித்தியாசமாயிருந்தான். அவனுடைய வாழ்க்கையை எப்படி உதறி எறிந்துவிட்டான், தினசரி எவ்விதமான உணர்ச்சிகளை நெஞ்சிற்குள்ளே அமுக்கி அழுத்தி வைத்திருக்கிறான் என்பதை யறிந்ததும், அவள் மனம் கசங்கி, அழத் தொடங்கினாள்.

"வருத்தப்படாதே, அம்மா. இவ்வளவு அனுதாபத்துக்கு நான் அருகதை யுள்ளவன் அல்ல; இன்னும் சில மணிகளில் துர்வழக்கப்பேய்களுக்கு அடிமையாகி தெருவிலே அலையும் கேவல ஜந்துக்களுடன் ஒன்றாய் விடுவேன். தைரியமாயிரு! ஆனால் எனக்குள்ளாக உன்னிடத்தில் என்றென்றும் இப்படியேதான் இருப்பேன்—இன்னொன்று; நான் இதோ போய்விடுகிறேன்—உனக்கும் எனக்கு மிடையே கடக்கமுடியாத தூரமிருக்கிறது. உனக்காகவும், உனக்கு அந்தரங்கமான எவருக்காகவும் நான் எதையும் செய்யத் தயார். என்னுடைய வரண்ட வாழ்க்கையிலே தியாகம் செய்ய சந்தர்ப்பமோ சக்தியோ இருக்குமானால், உனக்காக எந்தத் தியாகத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். இன்னும் காலமிருக்கிறது. சமீபத்திலேயே வரலாம். உனக்கு இன்பமான பந்தங்கள் ஏற்படும். ஓ, மிஸ் மானெட், ஒரு தகப்பனாரின் ஆனந்த முகத்தின் சாயை உன் முகத்திலே வீசும்போது, உன்னு

டைய அழகின் சிறு பிரதிபிம்பத்தை உன் காலடியிலே காணும்போது—உன்னுடைய உயிரைச் சேர்ந்த ஒரு ஜீவனைக் காக்க தன்னுடைய உயிரையே கொடுக்க ஒரு மனிதன் காத்துக்கொண்டிருக்கிறான் என்பதை மட்டும் நினைவு வைத்துக்கொள்."

"போய் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு அவன் எழுந்தான்.

# அத்தியாயம் 11.

## பின்னல் வேலை

டிபாஜின் ஒயின் கடையில் அன்று வழக்கத்தைவிட அதிகாலையிலேயே வியாபாரம் ஆரம்பித்துவிட்டது. ஆறு மணிக்கே கும்பல் நிறைந்திருந்தது.

மூன்று நாட்களாகவே சேர்ந்தாப்போல் அதிகாலையி லேயே கடை திறந்திருந்தது. அங்கே கும்பல் அதிகமிருந்த போதிலும் வியாபாரம் ஒன்றும் ஜாஸ்தியில்லை. எல்லாம் "குசுகுசு" வென்று பேசிக்கொண்டும், அங்குமிங்கும் நட மாடிக்கொண்டு மிருந்தார்களே ஒழிய காசு கொடுப்போர் அதிகமில்லை.

கும்பல் அதிகமிருந்த போதிலும் கடை முதலாளியை அங்கே காணவில்லை. ஆனால் அவனை அங்கு வந்தோர் யாரும் தேடவுமில்லை: அவன் இல்லாததைப்பற்றி ஆச்சரியப்படவு மில்லை.

பகல் நீண்டு பிற்பகலாயிற்று. தெருவழியாக இரண்டு மனிதர்கள் நடந்து வந்தனர். ஒருவன் டிபாஜ்; இன்னொரு வன் குல்லாய் அணிந்த ஒரு ரோடுமேஸ்திரி. இருவரும் தேகம் முழுவதும் புழுதி படிந்து, தாகத்தால் தொண்டை உலர்ந்து கடைக்குள்ளே நுழைந்தனர். இவர்கள் வரும் போதே இவர்களுடைய வறட்சி தெருக்களிலே உஷ்ணத்தைக் கிளப்பி ஒரு பரபரப்பை உண்டாக்கி விட்டதுபோல் தோன்றிற்று. பல முகங்கள் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து இவர்கள் வருவதை எட்டிப்பார்த்தன. ஆனால் இவர்களுடன் எவரும் பேசவில்லை.

"வாருங்கள், ஐயன்மீர்!" என்றான் டிபாஜ். "இன்று காற்றே இல்லை!" என்றான் மறுபடியும்.

அப்போது அங்கு கூடியிருந்த எல்லோரும் ஒருவருக்கொருவர் திரும்பிப் பார்த்துவிட்டுத் தலையைக் கீழேபோட்டுக் கொண்டனர். ஒருவன் மட்டும் எழுந்து வெளியே போனுன்.

டிபாஜ் அங்கே உட்கார்ந்திருந்த தன் மனைவியைப் பார்த்துச் சொன்னுன் :—

"இந்த அன்பன், மேஸ்திரியுடன் நான் ரொம்ப தூரம் நடந்து வந்திருக்கிறேன். இவன் பெயர் ஜாக். இவனுக்கு ஏதாவது தாக சாந்திக்குக் கொடு. நல்ல பையன்!"

இரண்டாவது மனிதனொருவன் எழுந்து வெளியே போனுன். ஸ்ரீமதி டிபாஜ் ஊற்றி வைத்த ஒயினை யெடுத்து அந்த ரோடு மேஸ்திரி குடித்தான். பிறகு தன்னுடைய சட்டைப்பையில் கிடந்த ஒரு ரொட்டித் துண்டையெடுத்துக் கடித்தான். மூன்ருவது மனிதன் ஒருவன் எழுந்து வெளியே போனுன்.

டிபாஜும் கொஞ்சம் ஒயின் எடுத்துத் தாகசாந்தி செய்துகொண்டான். அதைக் குடித்துவிட்டு, ரொட்டியைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த மேஸ்திரியைப் பார்த்துக் கொண்டே நின்ருன். ஸ்ரீமதி டிபாஜ் தன்னுடைய பின்னல் வேலையைத் தொடங்கினுள்.

சற்று நேரம் கழித்து "ஆகாரம் ஆச்சா?" என்று கேட்டான் டிபாஜ்.

"ஆச்சு."

"அப்போ, எழுந்திரு! நீ பார்க்கவேணு மென்று சொன்ன அறைக்குப் போவோம். நல்ல சுகமான இடம்!"

கடையை விட்டு வெளியே வந்தனர் இருவரும். ஒரு குறுகலான மாடிப்படி வழியாக ஏறி ஒரு கிடங்கு போல்

தோன்றின அறையை அடைந்தனர். அதே அறையில் தான் ஒரு காலத்தில் நரைத்த தலையுடன் ஒரு வயோதிகர் செருப்புத் தைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

இப்பொழுது, கொஞ்ச நேரத்துக்கு முன் தனித்தனியாக ஒயின் கடையை விட்டுவந்தார்களே அவர்கள் மூவரும் அங்கே இருந்தார்கள்.

டிபாஜ் கதவைச் சாத்திவிட்டு, மெதுவான குரலில் சொன்னான்:

"ஜாக் ஒண்ணு, ஜாக் ரெண்டு, ஜாக் மூணு! நான் சந்தித்துப் பேசின ஆசாமி இதுதான். அவன் எல்லாவற்றையும் சொல்லுவான். பேசப்பா, ஜாக் அஞ்சு!"

அந்த ரோடு மேஸ்திரி குல்லாவை யெடுத்துக் கையில் வைத்துக்கொண்டு கேட்டான். "எங்கிருந்து ஆரம்பிப்பது?" என்று.

"ஆரம்பத்திலிருந்தே ஆரம்பி" என்றான் டிபாஜ்.

"ஒரு வருஷத்துக்கு முன்னால், ஐயன்மீர், அவனைப் பார்த்தேன். மகாப் பிரபுவின் வண்டிக்கடியில் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு தொங்கினான். அன்று சாயந்திரமும் அவனைப் பார்த்தேன். அப்போது எனக்குத் தெரியாது. பிரபு என்னைக் கேட்டபோது, உயரமாக இருப்பான் என்று சொல்லிவிட்டேன்."

"குள்ளமாய் இருப்பான் என்று சொல்வதற்கென்ன?" என்று கேட்டான் இரண்டாவது ஜாக்.

"எனக்கென்ன தெரியும்? அப்போது காரியம் நடக்கவில்லை. அவன் என்னிடம் தெரிவிக்கவுமில்லை. அப்பவும் குழாயடியில் என்னை பிரபு கேட்டபோது நான் வாய்திறக்கவில்லை."

"அவன் சொல்வது சரிதான்!—சரி, நீ சொல்லு!" என்றான் டிபாஜ்.

"நல்லது!" என்று மீண்டும் ஆரம்பித்தான் மேஸ்திரி, சற்று மதிப்பான குரலில். "அப்புறம் அந்த ஆளைக் காண வில்லை. அவனைத் தேடினார்கள்—எத்தனை மாதம்? ஒன்பது, பத்து, பதினொரு மாதங்கள்!"

"பரவாயில்லை. அவனை நன்றாகத்தான் ஒளித்துவைத் திருந்தது. கடைசியில் துரதிர்ஷ்ட வசமாக கண்டுபிடித்து விட்டார்கள்—அப்புறம்?" என்று முடுக்கினான் டிபாஜ்.

"மறுபடியும் ஒரு நாள் சாயங்காலம் மலையடிவாரத்தில் நான் வேலை செய்துகொண்டிருக்கிறேன். அப்போது வீட் டுக்குப் போகலாம் என்று சாமானைப் பொறுக்கிக் கட்டிக் கொண்டு திரும்பினேன். அங்கே ஆறு சிப்பாய்களைப் பார்த்தேன். அவர்களுக்கு நடுவில் ஒரு நெட்டை மனிதன், அவன் கைகள் கட்டப்பட்டிருந்தன. நான் வழியை விட்டு விலகி நின்றேன். ஐயன்மீர், அந்த ஆறு பேருக்கு நடுவே, உயரமாக கையில் விலங்குடன் அவன் வந்தான். சாயங்காலம் மங்கலான வெளிச்சத்திலே நான் பார்த்தேன். எனக்குக் கிட்ட வரும்போது அந்த மனிதனை நான் அடையாளம் தெரிந்துகொண்டேன். என்னையும் அவன் தெரிந்துகொண் டான்."

அவன் அப்படியே தான் நேரில் கண்டதை கண்ட படியே சொன்னான்.

"ஆனால் நாங்கள் இருவரும் ஒருத்தரை யொருத்தர் தெரிந்துகொண்டதை வெளிக்குக் காட்டவில்லை. அவன் கைகள் கட்டப்பட்டதனால் வீங்கியிருந்தன. காலை நொண்டி நொண்டி நடந்தான். சிப்பாய்கள் துப்பாக்கி முனையில் அவ

லேக் குத்தி வேகமாக நடக்கச் செய்தார்கள். நானும் கூடவே போனேன்.

"மலைச்சரிவில் இறங்கும்போது அவன் கால் தடுமாறி கீழே விழுகிறான். அவர்கள் சிரித்துக்கொண்டே அவனைத் தூக்கி ஓட்டுகிறார்கள். அவன் முகத்தில் ரத்தம் கசிந்து ஒரே தூசியாக இருக்கிறது. கிராமத்துக்குள் அவனைக் கொண்டுவருகிறார்கள். எல்லோரும் அவனை ஓடிவந்து பார்க்கிறார்கள். அவனைக் கடைசியில் ஜெயிலுக்குக் கொண்டு போய் உள்ளே போட்டுவிடுகிறார்கள். ஜெயில் அவனை முழுங்கிவிடுகிறது—இந்த மாதிரி!"

இந்த இடத்தில் அந்த மேஸ்திரி தன் வாயை அகலத் திறந்து படக்கென்று, பற்கள் ஒன்றோடொன்று "நெற நெற" வென்று மோத, மூடிக்காட்டினான். டிபாஜ் "அப்புறம்!" என்றதும் மெதுவான குரலில் மறுபடியும் தன் கதையைத் தொடங்கினான் :—

"கிராமத்தார் எல்லோரும் குழாயடியில் வந்து 'குசுகுசு' வென்று பேசிக்கொள்கிறார்கள். பிறகு தூங்கப் போய் விடுகிறார்கள். மறுநாள் காலையில் நான் வேலைக்குப் போகும் போது என்னுடைய ரொட்டியைக் கடித்துக்கொண்டே ஜெயில் பக்கமாகப் போகிறேன். அங்கே சிறைக்குள்ளே யிருந்து கம்பிகளின் வழியாக அவன் பார்க்கிறான். அவன் முகத்தில் ராத்திரி யிருந்தபடியே ரத்தமும் தூசியும். பாவம்!"

டிபாஜும் மற்ற மூவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்கள் முகத்தில் கோபமும் ஆத்திரமும் ஜொலித்தன. அவர்களுடைய பார்வை ஒருவகை அதிகாரத்தையும் காட்டின. கொடூரமான நெஞ்சு படைத்த ஒருவகை நீதிபதிகள் போலத் தோன்றினர் அவர்கள். அவர்களை மாறி மாறிப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான் மேஸ்திரி.

"மேலே சொல்லு" என்றான் டிபாஜ்.

"அங்கேயே அந்த இரும்புக் கூண்டுக்குள்ளேயே அவன் சில நாளைக்குக் கிடந்தான். கிராமம் முழுவதும் அவனைப் பரிதாபத்துடன் தூரத்தில் இருந்தே பார்த்துக் கொண்டிருந்தது. வேறு என்ன செய்யமுடியும்? தினசரி குழாயடியில் கூடினால் "முணுமுணு" வென்று இதுதான் பேச்சு; எட்டித்தெரியும் ஜெயிலை நிமிர்ந்து பார்க்கவேண்டியது; இதுதான் வேலை.

"அங்கே என்ன என்னவோ சொல்லிக்கொண்டார்கள். பிரபுவை அவன் கொன்ற குற்றத்திற்காக அவனைக் கொன்று விடுவார்களென்றும், சிலர் அவனை ஏற்கனவே சிறைக்குள்ளேயே கொன்றுவிட்டதாயும், இந்தமாதிரி பல தினுசாகப் பேசிக்கொண்டார்கள். இன்னொருத்தன் அவனுடைய வலது கையை தீ வைத்து எரித்துவிடுவார்களென்று சொன்னான். இன்னும் சிலர் அவனை நாலு குதிரைகளிடம் போட்டு சித்திரவதை செய்துவிடுவார்களென்று சொன்னார்கள். முன்பு ராஜாவைக் கொன்றவனை அப்படித்தான் செய்தார்களாம். எனக்கென்ன தெரியும்?"

"அப்போ, கேளு!" என்று படபடப்புடன் ஆரம்பித்தான் மூன்றாவது ஜாக்.

"அவனுடைய பெயர் டேமியன்ஸ், பாரிஸில் நடுத்தெருவில் பட்டப்பகலில் நடந்தது. அதைப்பற்றி யாரும் கவனிக்கவில்லை. அவனுடைய இரு கால்களும் ஒரு கையும் போய்விட்டது! அப்படித்தான்—ஏன், உனக்கு எத்தனை வயதாகிறது?"

"முப்பத்தைந்து"

"உனக்குப் பத்து வயதா யிருக்கும்போது இது நடந்தது."

"போதும்! மேலே சொல்லு, நீ!" என்றான் டிபாஜ்.

"ஒரு நாள், ஞாயிற்றுக்கிழமை ராத்திரியில், ஊரடங்கின பின் சிப்பாய்கள் தடதடவென்று வருகிறார்கள். வந்து குழாய்க்குப் பக்கத்தில் ஒரு தூக்கு மரத்தை நிறுத்துகிறார்கள். ராவோடு ராவாக குழிதோண்டி நிறுத்திவிட்டார்கள். காலையில் பார்த்தால் தூக்குமரம் நிற்கிறது! கிராமம் முழுவதும் அங்கே கூடிவிட்டது. ஒரு பிள்ளைகூட அன்று வேலைக்குப் போகவில்லை. நடுப்பகலில், டமாரத்தின் சத்தம். அவன் முன்போலவே கட்டப்பட்டிருக்கிறான். அவனுடைய வாயில் ஒரு துணி அடைக்கப்பட்டிருக்கிறது. தூக்குமரத்தின் மேலே ஒரு பளபளப்பான கத்தி. அதற்கு மேலே, நாற்பது அடி உயரத்திலே அவன் தொங்கினான்!..."

அவனுடைய முகத்திலே வியர்வை வழிந்தது. அதைக் குல்லாவினால் துடைத்துக் கொண்டான். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஐயோ, அது மகா பயங்கரம்! அந்தக் குழாயில் எப்படி ஜலம் பிடிப்பது! அப்படியே தொங்கிற்று! அதன் பக்கத்தில் யார் போவார்கள்?"

மூன்றாவது ஜாக் பசியடைந்த ஒரு கொடிய மிருகத்தைப்போல் வெறிக்கப் பார்த்தான். அவனுடைய கைகள் படபடவென்று துடித்தன.

"அதன் பிறகு நான் எனக்கு உத்தரவு கிடைத்தபடி புறப்பட்டு விட்டேன். இதோ இங்கே வந்து விட்டேன்!"

கொஞ்சநேர நிசப்தத்துக்குப்பின் ஒன்றாவது ஜாக் சொன்னான்:

"நல்லது! நீ உள்ளதைச் சொல்லிவிட்டாய். கொஞ்சம் வெளியில் காத்திருக்கிறாயா?"

அவனை வெளியில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தான் டிபாஜ்.

"ஜாக், என்ன சொல்லுகிறாய்? பதிவு செய்யவேண்டியதுதானே!" என்று கேட்டான் ஒண்ணும் நெம்பர்.

"அழியவேண்டியது என்று பதிந்துவிட வேண்டியது" என்றான் டிபாஜ்.

"சபாஷ்!" என்று கூவினான், அந்த காட்டு மிருகம் போலிருந்தவன்.

"மாளிகையோடு வம்சம் பூராவும்?" என்று கேட்டான் நெ. ஒண்ணு.

"ஆமாம், மாளிகை, வம்சம் பூராவும்; ஒரு பிஞ்சில்லாமல் நசிய வேண்டும்!"

இரண்டாவது ஜாக் கேட்டான்:

"இந்தக் கணக்குகள் பதிந்து வைத்திருக்கிறோமே அது பிசகாமல் இருக்குமா? அதாவது அவளுக்கு எல்லாம் பிசகாமல் ஞாபகம் இருக்குமா?" என்று.

டிபாஜ் எழுந்து நின்று பதில் சொன்னான்." ஜாக், என்னுடைய மனைவிக்கு ஒரு உதவியுமில்லாமலே இதெல்லாம் நன்றாக நினைவிலிருக்கும். அதுவும் அவளுடைய பின்னல் வேலையில், அவளுடைய சொந்த பாஷையில் பின்னிக்கொண்டு விட்டாளானால் துளிக்கூடப் பிசகாது."

எல்லோரும் அதை ஒத்துக் கொண்டார்கள். பிறகு மூன்றாவது ஜாக் கேட்டான். "இந்த ஆளை திரும்ப அனுப்பிடவேண்டியது தானே? அவனை இங்கே வைத்திருப்பது ஆபத்தில்லை?" என்று.

"அவனை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் கவலைப் படவேண்டாம்" என்று டிபாஜ் சொன்னபின் கூட்டம் கலைந்தது.

டிபாஜும் அவனுடைய மனைவியும் எங்கேயோ வெளியில் போய்விட்டு திரும்பி வந்துகொண்டிருந்தனர். அப்போது ஸ்ரீமதி டிபாஜ் புருஷனைப் பார்த்துக் கேட்டாள்.

"அந்தப் போலீஸ்காரன் ஜான், என்ன சொன்னான்?" என்று.

"இன்றைக்கு ஒன்றுமில்லை; ஆனால் இன்னொரு ஒற்றனை நம்ம பிரதேசத்துக்கு அனுப்பியிருக்கிறார்களாம். இன்னும் எவ்வளவோ பேர் இருக்கலாம். ஆனால் இந்த ஒரு ஆசாமியை மட்டும் அவனுக்குத் தெரியும்."

"ஓஹோ! அவன் பெயரையும் பதிவு செய்து கொள்ள வேண்டியதுதானே. அவன் பெயரென்னவாம்?" என்று கேட்டாள் ஸ்ரீமதி டிபாஜ் ரொம்ப நிதானமாக.

"அவன் இங்கிலீஷ்காரன்"

"அதுவும் நல்லதுதான். அவன் பெயர்?"

"பார்ஸாத்"

"பார்ஸாத்" என்றாள் ஸ்ரீமதியும். "நல்லது. முதல் பெயர்?"

"ஜான்"

"ஜான் பார்ஸாத். சரி. அவனுடைய உருவம், அடையாளம் ஏதாவது தெரியுமா?"

"வயது நாற்பது; உயரம்: அஞ்சடி நாலங்குலம். சற்றுக்கறுப்பு; மெலிந்து இளைத்த முகம்; முன்னால் வளைந்த மூக்கு; சற்று கடூரமான பார்வை."

"ஏ, அப்பா; சித்திரம் போடலாமே! நாளைக்குப் பதிவு ஆகிவிடும்" என்றாள் அவள் சிரித்துக்கொண்டே.

மறுநாள் பிற்பகலில் ஸ்ரீமதி கடையில் தன்னுடைய ஸ்தானத்திலமர்ந்து மும்முரமாக நூல் பின்னிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஒரு ரோஜா புஷ்பம் அவளுக்குப் பக்கத்தில் கிடந்தது; அவள் அதை அடிக்கடி திரும்பிப் பார்த்தாள். கடையில் அதிகக் கூட்டமில்லை. அங்கங்கே சில பேர் நின்றுகொண்டோ உட்கார்ந்து கொண்டோ குடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது உள்ளே நுழைந்த ஒரு உருவத்தின் நிழல் ஸ்ரீமதி டிபாஜின்மேல் விழுந்தது. அதைக்கொண்டே அவள் அந்த ஆசாமி புதிதென்று உணர்ந்துகொண்டாள். அவள் தன் ஊசி வேலையை நிறுத்திக்கொண்டு கீழே கிடந்த புஷ்பத்தை எடுத்துத் தனது தலைக் குல்லாயின்மேல் சொருகிக்கொண்டாள்.

அது விநோதமா யிருந்தது. ஸ்ரீமதி டிபாஜ் ரோஜாப் பூவைக் கையில் எடுத்த க்ஷணத்திலே எல்லோரும் சட்டென்று பேச்சை நிறுத்தினர். உடனே ஒவ்வொருவராக எழுந்து வெளியே நழுவ ஆரம்பித்தனர்.

"வந்தனம், அம்மணி" என்றான் புதிதாக வந்தவன்.

"வந்தனம், மூஸே."

அந்த வார்த்தைகளை உரக்கச்சொன்ன அவள் தனக்குள்ளாகவே, பின்னல் வேலையைத் தொடங்கிக்கொண்டே, சொன்னாள். "ஆ! வந்தனம், வயது சுமார் நாற்பது; உயரம் அஞ்சடி நாலங்குலம்; கருப்பு; முன்னால் வளைந்த மூக்கு; கடூரமான பார்வை!"

"எனக்கு ஒரு கிளாஸ் பழைய பிராந்தியும், குளிர்ந்த ஜலமும் கொடுக்கிறீர்களா, அம்மா?"

ஸ்ரீமதி டிபாஜ் மரியாதையாக எழுந்து கேட்டதைக் கொடுத்தாள்.

"ரொம்ப நன்றாயிருக்கிறதே!"

அந்த பிராந்தியைப்பற்றி யாரும் புகழ்ந்தது அதுதான் முதல் தடவை. அதனுடைய விஷயம் அவளுக்குத் தெரியாதா? இருந்தாலும் மரியாதைக்கு அவனுக்கு உபசாரம் சொல்லிவிட்டு தன் வேலையில் ஈடுபட்டாள். வந்தவன் அவளுடைய கை விரல்களை ஒரு விநாடி பார்த்துவிட்டு, சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தான்.

"நீங்கள் நன்றாகப் பின்னுகிறீர்களே."

"எனக்குப் பழக்கம்."

"மோஸ்தரும் அழகாயிருக்கிறது!"

"அப்படியா?" என்றாள் ஸ்ரீமதி புன்சிரிப்புடன்.

"நிச்சயமாக. அது எதற்காக என்றுகேட்கலாமோ?"

"சும்மா, பொழுது போக்கு."

"உபயோகத்துக்கில்லையா?"

"எப்படிச் சொல்லுவது? ஒரு காலத்தில் உபயோகப் படும்." தன் தலையை தளுக்காக அசைத்து "நன்றாக செய்தால் உபயோகப்படும்!" என்றாள் மறுபடியும்.

அவள் தலையை அசைத்தது அழகாக இருந்தாலும், தலையில் ரோஜாப்பூவைக் குத்திக்கொண்டிருப்பது புதிதாக இருந்தது. அந்த சமயத்தில் தனித்தனியாக இரண்டுபேர் உள்ளே நுழைந்தார்கள். தாகசாந்திக்கு குடிக்கப் போனவர்

கள் அந்த ரோஜாப்பூ அலங்காரத்தைப் பார்த்ததும், சட்டென்று திரும்பி யாரையோ தேடுபவர்கள் போல் பாசாங்கு செய்து நாலு பக்கமும் பார்த்துவிட்டு வெளியே போய்விட்டார்கள். அவர்கள் மட்டுமல்ல; முதலில் இருந்தவர்களில் ஒருவர் கூட அங்கில்லை. எல்லோரும் மெதுவாக வெளியே நழுவி விட்டார்கள். அந்த ஒற்றன் அதையெல்லாம் கவனித்துக் கொண்டுதானிருந்தான். ஆனால் அதெல்லாம் ரொம்ப சாதாரணமாக நடந்தமாதிரி யிருந்ததால் இவனால் ஒன்றும் தோஷம் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவனைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே "ஜான். இன்னும் கொஞ்சம் இரு. பார்ஸாத் என்பதையும் பின்னிவிடுகிறேன்." என்று நினைத்துக்கொண்டாள்.

"உங்களுக்குப் புருஷன் இருக்கிறாரா, அம்மா?"

"இருக்கிறார்."

"குழந்தைகள்?"

"இல்லை."

"வியாபாரம் நன்றாயில்லையோ?"

"ரொம்ப மோசம்: ஜனங்கள் ரொம்ப ஏழைகளாய்விட்டனர்."

"அய்யோ பாவம்! ரொம்பத் தாழ்த்தப்பட்டுக்கூட இருக்கின்றனர். நீங்கள் சொல்லுவதைப்போல்."

"நீங்கள் சொல்வதுபோலே" என்று வெடுக்கென்று சொன்னாள் ஸ்ரீமதி, இன்னும் எதையோ தைத்துக் கொண்டே.

"மன்னிக்கவேணும்; நான்தான் அப்படி சொன்னேன். ஆனால் நீங்கள் நினைக்கிறீர்கள் அப்படி, இல்லையா?"

"நானா நினைக்கிறேன்?" என்றாள் உரத்த குரலில். "எனக்கும் என் புருஷனுக்கும் இங்கே நினைப்பதற்கு நிறைய விஷயமிருக்கிறது. எப்படி பிழைப்பு நடத்துகிற தென்பதைப் பற்றி நினைக்கவே போது போதவில்லை. பிற ருக்காக நான் நினைக்கவா?"

அங்கே ஏதாவது துப்புக் கிடைக்குமா என்றறிய வந் திருந்த ஒற்றன் தன்னுடைய தோல்வி முகத்திலே தெரி யாதபடி சாமர்த்தியமாய் மறைத்துக்கொண்டான். அந்தப் பெட்டியின் மேல் சாய்ந்துகொண்டு, சாவதானமாகப் பேசிக் கொண்டு நின்றிருந்தான்.

"ரொம்பக் கெட்ட காலம் அம்மா. இந்த காஸ்பர்டைக் கொன்றுவிட்டார்கள் பாவம்!" அவன் குரலிலே அளவுமீறி அனுதாபம் ஒலித்தது.

அலட்சியமாகவும் மெதுவாகவும் பதில் சொன்னாள் ஸ்ரீமதி. "செய்த காரியத்துக்குப் பலனை அனுபவித்தான். அதிலென்ன?"

"நான்—நினைக்கிறேன்—" என்று ஆரம்பித்தான் ஒற் றன். அவன் குரல் ரொம்ப அந்தரங்கமாகத் தொனித்தது. "இவனைப் பற்றி இந்தப் பக்கத்தில் ஜனங்களிடம் அனுதாப மும் ஆத்திரமும் இருக்கிறதல்லவா? நமக்குள்ளே சொன் னேன்."

"அப்படி இருக்கிறதா?"

"அப்போ இல்லையா, என்ன?"

"இதோ என் புருஷன்!" என்றாள் ஸ்ரீமதி டிபாஜ்.

ஒயின் கடைக்காரன் உள்ளே நுழைந்ததும் ஒற்றன் அவனுக்கு மரியாதையாக ஒரு சலாம் வைத்துவிட்டுப்

புன்னகையுடன் "வாருங்கள், ஜாக்!" என்றான். டிபாஜ் சட்டென்று நின்று அவனை உற்றுப்பார்த்தான்.

"குட்—டே ஜாக்!" என்றான் ஒற்றன் மறுபடியும்.

"மூஸ்ஸே, நீங்கள் ஏதோ தப்பாக நினைத்துவிட்டீர்கள். என் பெயர் அதல்ல; என் பெயர் எர்னஸ்ட் டிபாஜ்" என்றான் டிபாஜ்.

"எல்லாம் ஒன்றுதானே; குட்டே" என்றான் ஒற்றன் தோற்றுவிட்டபோதிலும்.

"குட்—டே!"

"நான் இப்போதுதான் நீங்கள் வரும்போது அம்மாளிடம் சொல்லிக்கொண்டிருந்தேன்; இந்தப் பக்கத்தில் அந்த காஸ்பார்டு தண்டனை விஷயத்தில் ரொம்ப அனுதாபம் இருக்கிறதென்று."

தன் தலையை அசைத்துக்கொண்டே டிபாஜ் "என்னிடம் யாரும் அப்படிச் சொல்லவில்லையே?" என்றான்.

இதைச் சொல்லிவிட்டு அவனுடைய மனைவி உட்கார்ந்துகொண்டிருந்த நாற்காலியின் பின்புறம்போய் நின்றுகொண்டு அந்த ஆளை, அவர்களுடைய வெறுப்புக்கும் கோபத்துக்கும் ஆளான அவனை கவனித்துப் பார்த்தான்.

தன்னுடைய தொழிலில் அனுபவசாலியான ஒற்றன் கொஞ்சம்கூட மாறுதலின்றி, அலட்சியமாக ஒயினைக் குடித்துவிட்டு, இன்னொரு கிளாஸை நிரப்பிக்கொண்டு சாவதானமாகப் பருகினான். அவனுக்குப் பானத்தை ஊற்றிக் கொடுத்துவிட்டு ஸ்ரீமதி டிபாஜ் மெதுவாக ஒரு பாட்டை முனகிக்கொண்டே பின்னல் வேலையில் முனைந்தாள்.

"இந்தப் பக்கங்களில் என்னைவிட உங்களுக்கு ஜாஸ்தி அனுபவம் இருக்கிறதாகத் தோன்றுகிறது" என்றான் டிபாஜ்.

"இல்லவே இல்லை. இன்னும் நன்றாகப் பரிச்சயம் செய்துகொள்ள வேண்டுமென்றுதான் ஆசை; இந்த ஏழை ஜனங்களிடம் அவ்வளவு அனுதாபம் எனக்கு."

"ஓஹோ!"

"மூஸே, உங்களிடம் பேசும் பாக்கியம் எனக்கு இன்று கிடைத்தபோது, உங்கள் பெயர் சம்பந்தப்பட்ட ஒரு ஸ்வாரஸ்யமான சம்பவம் என் ஞாபகத்துக்கு வருகிறது."

"அப்படியா?" என்றான் டிபாஜ் அலட்சியமாக.

"ஆமாம். டாக்டர் மானெட் விடுதலை யடைந்ததும், அவருடைய வீட்டைச் சேர்ந்த நீங்கள்தானே அவரை அழைத்து வந்தீர்கள். எனக்குத் தெரியும் அது. உங்களிடம் தான் அவர் ஒப்புவிக்கப் பட்டார். இல்லையா?"

"வாஸ்தவம்தான்" என்றான் டிபாஜ். இந்தமாதிரி சுருக்கமாகப் பதில் சொல்லவேண்டுமென்று இங்கிதமாக அவனுடைய மனைவி ஜாடையால் அவனுக்குத் தெரிவித்தாள்.

மேலும் சொன்னான் ஒற்றன்:—"அவருடைய மகள் உங்களிடம் வந்துதானே அவரை அழைத்துக்கொண்டு போனது. அவளுடன் கூட வேறொரு கனவானும் வந்திருந்தார். அவர் பெயர்—ஆமாம், லாரி—இங்கிலாந்தில் டெல்ஸன் பாங்கைச் சேர்ந்தவர்—"

"ஆமாம், வாஸ்தவம்தான்."

மறுபடியும் ஒற்றன் "ரொம்ப ஸ்வாரஸ்யமில்லையா!—எனக்கு டாக்டர் மானெட்டையும் அவருடைய மகளையும் இங்கிலாந்தில் நன்றாய்த் தெரியும்" என்றான்.

"அப்படியா ?"

"இப்போது ஒன்றும் அவர்களிடமிருந்து கேள்விப்படுவதில்லையோ ?" என்று கேட்டான்.

"கிடையாது."

தன் வேலையை நிறுத்திவிட்டுக் குறுக்கிட்டுப்பேசினுள் ஸ்ரீமதி டிபாஜ். "எங்களுக்கு அவர்களிடமிருந்து கடிதம் வந்து ரொம்ப நாளாய் விட்டது. அவர்கள் சௌக்கியமாய்ப்போய்ச் சேர்ந்தபின் இரண்டொன்று வந்திருக்கும். அவர்களுடைய பாதையிலே அவர்கள் போகிறுர்கள்—எங்களுடைய வழியிலே நாங்கள் போகிறோம்."

"வாஸ்தவம். அவளுக்குக் கல்யாணம் ஆகப்போகிறது" என்றுன் ஒற்றன்.

"ஆகப்போகிறதா? அவள் அப்போதே ரொம்ப அழகாயிருந்தாளே. உங்கள் இங்கிலீஷ்காரர்களுக்கெல்லாம் உணர்ச்சியே கிடையாது" என்றுள் ஸ்ரீமதி.

"ஓ, நான் இங்கிலீஷ் காரனென்று உங்களுக்குத் தெரியுமா ?"

"உங்கள் பேச்சில் தெரிகிறதே."

அவள் தன்னைத் தெரிந்துகொண்டது அவன் மனதை உறுத்தினபோதிலும் சமாளித்துக்கொண்டு ஒரு சிரிப்புச் சிரித்தான். பிறகு சொன்னுன்:—

"மிஸ் மானெட்டுக்குக் கல்யாணம்; ஆனுல் மாப்பிள்ளை இங்கிலீஷ்காரனல்ல. ஒரு பிரஞ்சுக்காரன்.—காஸ்பர்டை நினைத்தால் பரிதாபமா யிருக்கிறது—பாவம்! யாருக்காக காஸ்பர்டை தூக்கி லிட்டார்களோ அந்த பிரபுவின் சகோதரன் புத்திரனையே அவள் கல்யாணம் பண்ணிக்கொள்ளப்

போகிருள். வேடிக்கையில்லையா, இது? ஆனல் அவன் இங்கிலாந்தில் சாலஸ் டார்னே என்ற மாறு பெயருடன் இருக்கிருன்."

ஸ்ரீமதி டிபாஜ் நிதானம் தவராமல் பின்னிஞள். ஆனல் இந்த விசேஷச் செய்தி அவளுடைய கணவனிடம் பிரதிபலித்தது. அவன் ஒரு தீக்குச்சியைக் கொளுத்தினன். சுக்காணை வாயில் வைத்துக்கொண்டு பற்ற வைத்தான். எதைச் செய்தாலென்ன, கை நடுங்காமலிருக்கவேண்டாமா? இந்த வித்தியாசத்தை இந்தப் பிரதிபலிப்பைக் கவனிக்காது போனல் அந்த ஒற்றன் ஒரு ஒற்றனுக முடியுமா?

இந்த ஒரு பாணத்தையாவது வெற்றியுடன் தொடுத்தோமே என்றதிருப்தியுடன் பார்ஸாத் பணத்தைக்கொடுத்துவிட்டுக் கடையை விட்டு வெளியேறினன். அவன் வெளியே போய்க் கொஞ்ச நேரம் வரையில்கூட அவன் திரும்பி வந்தாலும் வரலாம் என்ற சந்தேகத்தில் புருஷனும் மனைவியும் பழைய மாதிரியே உட்கார்ந்திருந்தனர்.

மெதுவான குரலில் புகையை விட்டுக்கொண்டே கேட்டான் டிபாஜ் "அது வாஸ்தவமா யிருக்குமா, அவன் டாக்டர் மகளைப்பற்றிச் சொன்னது?"

"அவன் சொன்னது பொய்யா யிருக்கலாம். ஆனல் அது அசாத்தியமானதல்ல" என்ருள் மனைவி புருவத்தை சற்று உயர்த்திக்கொண்டே.

"அப்படியானல்—" என்று ஆரம்பித்தவன் நிறுத்திவிட்டான்.

"அப்படியானல்?"

"அது வரும்போது—அந்த வெற்றிக் காலத்தில் நாம் இருப்போமனால், அவளுடைய புருஷன் பிரான்சுக்குள் வராதிருக்கவேண்டும்."

"அவளுடைய புருஷனுடைய விதி அவனை அவனுக்குரிய முடிவுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்."

"இது வேடிக்கையா யில்லையா—இப்போது அவளுடைய தகப்பனரிடத்திலும் அவளிடத்திலும் நமக்குள்ள அனுதாபத்தில், உன் கையாலேயே அவளுடைய புருஷனுடைய பெயரையும் இப்போது வந்தானே இந்தப் பயலுடன் சேர்த்துப் பதிந்துகொள்ள வேண்டியிருப்பது, வேடிக்கை யில்லையா?"

"அது வரும்போது இன்னும் இதைவிட விசித்திரமெல்லாம் நடக்கப் போகிறது. அவர்கள் இருவருடைய பெயர்களும் இதோ இருக்கின்றன. அவரவர்கள் யோக்யதைக்குத் தக்கபடி சன்மானம் கிடைக்கும்."

இதைச் சொல்லி முடித்ததும் அவள் தன்னுடைய பின்னல் வேலையை நிறுத்திவிட்டு, தலைப்பாகையை அலங்கரித்திருந்த ரோஜாப்பூவை யெடுத்துக் கீழே வைத்தாள். அந்தப் பிரதேசமே எப்போது அவள் பூவை எடுப்பாளென்று காத்துக்கொண்டிருந்ததோ, அல்லது, அவள் எடுத்து விட்டதை தானகவே தெரிந்துகொண்டு விட்டதோ உடனே கடைக்குள் கும்பல் கூட ஆரம்பித்து விட்டது.

மாலை நேரத்தில், கை பின்னல் வேலையில் ஈடுபட்டிருக்க ஸ்ரீமதி டிபாஜ் தெருத் தெருவாக சுற்றிக்கொண்டிருந்தாள். இவளைப்போல் இன்னும் அநேகம்பேர் அங்கே

இருந்தனர். எல்லா ஸ்திரீகளும் பின்னுவதுண்டு. அவர்கள் ஒன்றுக்கும் உபயோகமில்லாத வஸ்துக்களை யெல்லாம் பின்னிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய விரல்கள் சுறுசுறுப்பாக வேலை செய்தபோது அவர்களுடைய கண்களும், மனங்களும் சுறு சுறுப்பாகவே யிருக்கும்.

தூரத்திலே யிருந்து தன் மனைவியை பெருமையுடன் பார்த்துக்கொண்டிருந்தான் டிபாஜ். "ரொம்பப் பெரியவள், நல்ல தைரியமானவள், ரொம்ப உயர்ந்தவள்" என்று தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்டான்.

சூரியன் அஸ்தமித்து இருள் பரவத் தொடங்கிற்று. தூரத்திலே மாதா கோயில்களில் அடிக்கும் "கணார் கணார்" என்ற மணியோசை கேட்டது. அரண்மனையிலே போர்வீரர்கள் கொட்டும் டமாரத்தின் ஓசை காற்றில் மிதந்து வந்து கேட்டது. அந்தஸ்திரீகள் பின்னிக் கொண்டே யிருந்தனர்; ஓயாமல் பின்னிக்கொண்டே உட்கார்ந்திருந்தனர். அவர்களையும் இருள் சூழ்ந்தது. இன்னும் ஒரு காலத்தில், சமீப காலத்திலேயே மற்றொரு விதமான காரிருள் சூழவிருந்தது. இப்போது கோபுர உச்சியிலிருந்து ஒலிக்கும் இதே மணிகளின் ஓசை பயங்கரபீரங்கிகளின் கர்ஜனையாக மாறிவிடும் காலம் வரவிருந்தது.

# அத்தியாயம் 12.

## அன்றிரவு

அன்று மாலையிலே டாக்டரும் அவருடைய மகளும் வீட்டுக்குப் பக்கத்தில் மரத்தடியில் உட்கார்ந்திருந்தனர். சூரியன் அஸ்தமித்துவிட்டது. குளுமையான தன் கதிர்களை வீசிக்கொண்டு சந்திரன் உதயமாயிற்று. மரத்தின் இலைகளின் வழியே சலிக்கப்பட்டதுபோல் பிரகாசித்த ஒளி அவர்களுடைய முகத்திலே வீசிற்று. அன்று மாலை ரொம்ப சௌந்தர்யத்துடன் இருந்தது.

மறுநாள் லூசிக்குக் கல்யாணம். இந்தக் கடைசி நாளை தன் தந்தையுடன் கழிக்கவேண்டுமென்று அவள் தீர்மானித்தாள். அவர்கள் தனியாக மரத்தடியில் உட்கார்ந்திருந்தனர்.

"அப்பா, உங்களுக்கு ஆனந்தமாயில்லை?"

"ரொம்ப ஆனந்தம், அம்மா."

அவர்கள் இருவரும் அங்கே வெகு நேர மிருந்தபோதிலும் ஜாஸ்தி பேசவில்லை. அங்கே போதுமான வெளிச்சமிருந்தபோது கூட அவள் வழக்கப்படி ஒன்றும் புஸ்தகம் படிக்கவில்லை; வேறு எவ்வித வேலையும் செய்யவுமில்லை. இதற்கு முன் எத்தனையோ தடவைகள் அவர்கள் இருவரும் அங்கே அந்த மாதிரி உட்கார்ந்திருந்தது உண்டு; அப்போதெல்லாம் லூசி அவருக்கு ஏதாவது கதை வாசித்துக்கொண்டிருப்பாள்; அல்லது தனக்குள்ளாவது வாசித்துக் கொள்வாள். ஆனால் இன்று எல்லா நாளையும் போலவா?

"அப்பா இன்றைக்கு எனக்கு மனம் நிரம்பியிருக்கிறது. என்னுடைய அதிர்ஷ்டம்தானே சாலஸ் இவ்வளவு

அன்புடன் இருக்கிறார்! இந்த பாக்கியம் எல்லாருக்கும் கிடைக்குமா! ஆனால் இதன் மூலம், இந்தக் கல்யாணத்தினால் உங்களை விட்டு நான் பிரியும்படி நேருமானால், அதை என்னால் தாங்க முடியாது. ஆனால் இப்போதுகூட—"

அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

அந்த மங்கின துயரமான நிலவிலே அவள் ஆர்வத்துடன் தன் தந்தையின் கையை எடுத்து முத்தமிட்டாள்.

"அப்பா! இன்று கடைசித் தடவையாகக் கேட்கிறேன். எனக்குப் புதிதாக ஏற்படப்போகும் பந்தங்களினால், என்னுடைய புதிய கடமைகளினால், நம்முடைய அன்பிற்கு பங்கம் ஏற்படாதென்று நிச்சயமாக உங்களுக்குத் தெரிகிறதா? எனக்கு நன்றாகத் தெரிகிறது. உங்களுக்குத் தெரியுமா?"

அவளுடைய தந்தை உள்ளிருந்து எழுந்த உவகையுடன், சற்றும் தளராத திடமான குரலில் பதில் சொன்னார். "நிச்சயமாக எனுக்குத் தெரியும், தங்கமே! அதுமாத்திரமில்லை. அம்மா, உன்னுடைய கல்யாணத்தினால் என்னுடைய வாழ்க்கை இன்னும் அதிகப் பிரகாசமடையும்! எனக்கு அதைப்பற்றி சந்தேகமே இல்லை."

"அது வாஸ்தவமானால்—"

"வாஸ்தவந்தான், அம்மா. கொஞ்சம் யோசனை பண்ணிப் பார். நீ நன்றா யிருக்கவேண்டும்; சந்தோஷமாக வாழவேண்டும் என்பதுதானே என்னுடைய கவலையெல்லாம்—!"

"அப்பா, நான் சாலைஸை பார்க்காமலே யிருந்திருந்தால் இந்த சந்தேகத்துக்கே இடமிருந்திருக்காது. உங்களுடனேயே ஆனந்தமா யிருந்திருப்பேன்."

அவளுடைய வார்த்தையைக் கேட்டதும் புன் சிரிப்புடன் அவர் பதில் சொன்னார்:—

"அம்மா, நீ அவனைப் பார்த்து விட்டாய். அவன் சாலஸ். சாலஸா யில்லாமல் போனால் இன்னும் வேறு யாராவது. அல்லது நீ சொல்கிறபடி வேறு ஒருவரிடமுமே உன் மனது சென்றிருக்காது என்று நீ சொல்வது உண்மையானால், என்னுடைய வாழ்க்கையின் சோக நிழல் என்னையும் தாண்டி உன் மேலும் படர்ந்திருக்கும்".

அவருடைய வார்த்தைகள் அவளுடைய நெஞ்சிலே நூதன உணர்ச்சிகளை எழுப்பின. அதற்குப்பின் வெகு காலம் வரையில் அவள் அந்த வார்த்தைகளை மறக்கவில்லை.

டாக்டர் மானெட் மேலும் சொல்லலானார்:—"அதோ அந்த சந்திரனைப் பார்! ஜன்னல் வழியாக சிறைச்சாலையிலிருந்து நான் இதைப் பார்த்திருக்கிறேன்.

"ஆனால் அப்போது அந்த வெளிச்சத்தை யென்னால் தாங்கமுடியாது. ஜெயிலுக்குள்ளே நான் அடைபட்டு சுவற்றில் என் தலையை நான் மோதிக்கொண்டிருந்த காலத்தில் இதே சந்திரனை உற்றுப் பார்க்கும்போது எனக்குத் தாங்க முடியாத வேதனை யுண்டாகும். உடல் சோர்ந்து மனம் தளர்ந்து அர்த்தமில்லாமல் நான் அந்த சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறேன். அப்போதெல்லாம் என் மனதில் ஒன்றுமே தோன்றாது. இந்த சந்திரவட்டத்துக்குள் குறுக்கும் நெடுக்குமாக எத்தனை கோடுகள் போடலாம் என்று என் மனம் கற்பனை பண்ணும்."

ஒருவித ஆவேசத்துடன், ஒரு அபூர்வ ருசியுடன் அவர் அந்த நாட்களைப்பற்றிப் பேசினார். ஆனால் அவருடைய

முகத்தைப் பார்த்து, அதிலே தோன்றின களிப்பையும் நிதானத்தையும் உணர்ந்த அவள் பயப்பட வேண்டியதில்லையென்று அறிந்து தைரியமடைந்தாள்.

"எனக்குப் பிறக்க விருந்த குழந்தையை நினைத்து ஆயிரம் தடவைகள் நான் பெருமூச்சு விட்டிருக்கிறேன். 'அது உயிருடன் இருக்குமோ என்னவோ; அது ஒரு ஆண் குழந்தையாயிருந்து தன் தந்தையின் கஷ்டத்தை நிவர்த்திக்க, அவரைக் கொடிய தண்டனைக்குள்ளாக்கியவர்களைப் பழிவாங்க வருமோ' என்றெல்லாம் எண்ணியிருக்கிறேன்."

அவள் அவரிடம் நெருங்கி அவருடைய கையை எடுத்துத் தடவிக் கொடுத்தாள்.

"ஆசி இன்று மனம் ஆனந்தத்தாலும், திருப்தியாலும் பரிபூர்ணமாக நிரம்பியிருக்கிறது. ஒன்றுமில்லாதபடி உன்மேல் அன்பு சுரக்கிறது. அதனால்தான் அந்த பழைய நாட்களைப்பற்றி நினைக்கிறேன். என்னுடைய சந்தோஷத்தில் கடவுளை வாழ்த்துகிறேன்."

அப்படியே அவளை அன்புடன் தழுவிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அவள் சகல சௌபாக்கியங்களுடனும் வாழவேண்டுமென்று ஈசுவரனைப் பிரார்த்தித்தார். கொஞ்சநேரம் கழித்து அவர்கள் வீட்டுக்குள்ளே எழுந்து போனார்கள்.

கல்யாணத்துக்கு லாரியைத் தவிர வேறுயாரும் அழைக்கப்படவில்லை. கல்யாணத்துக்குப் பின்னும் அவர்கள் அதே இடத்தில் வசிப்பதாகவே ஏற்பாடாகியிருந்தது. அதற்காகவே அந்த வீட்டின் மேல் மெத்தையில் காலியாயிருந்த அறைகளையும் எடுத்துக்கொண்டார்கள்.

அன்றிரவு சாப்பிடும்போது ட்ராக்டர் மானெட் உற்சாகமாய் இருந்தார். மிஸ் பிராஸைச் சேர்த்து, மூன்றுபேருமாக சாப்பிட்டனர்.

சாப்பாடு முடிந்ததும் அவர் லூசியை ஆசீர்வதித்து விட்டு படுக்கச் சென்றார். அன்று விடியற்காலை மூன்று மணிக்கு, நிசப்தத்திலே லூசி கீழே வந்தாள். அவருடைய அறைக்குள் சந்தடி செய்யாமல் நுழைந்தாள். அவளுடைய மனத்திலே காரணமில்லாத பயம் தோன்றிற்று.

ஆனால் எல்லாம் சரியாய் இருந்தது. அவருடைய பஞ்சு போன்ற வெண்மையான தலை மயிர் தலையணையின்மேல் பரந்து கிடந்தது. அவர் நிம்மதியாகத் தூங்கினார். அவருடைய பரிசுத்தமான முகத்தை அவள் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்திலே உற்றுப் பார்த்தாள்.

அந்த அழகிய முகத்திலே, வருஷக்கணக்காக சிறையிலே தவித்து, அந்தக் கஷ்டத்திலே ஊறின கண்ணீர் ஓடி, ஓடி வடுக்களை யுண்டாக்கியிருந்தது. ஆனாலும் அவற்றைத் தனது கலங்கா மன வுறுதியினாலும், தைரியத்தினாலும் வெளிக் காட்டவொட்டாமல் செய்திருந்தார் அவர். அவருடைய முன் ஜாக்கிரதையும் திடசித்தமும் அந்த தூங்கும் முகத்திலேகூடத் தெளிவாய்த் தெரிந்தது.

அவள் மிருதுவாக பயத்துடன் தன் கையை அவருடைய மார்பின்மேல் வைத்தாள். பிறகு என்றும், அவரிடம் கொஞ்சமும் அன்பு மாறாமலிருக்கவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்தாள்.

# அத்தியாயம் 13.

## எதிரலை

விவாக தினம்: டாக்டருடைய அறைக்கு வெளியில் எல்லோரும் காத்துக்கொண்டு நின்றனர். டாக்டர் அறைக்குள்ளே சாலஸ் டார்னேயுடன் தனித்துப் பேசிக்கொண்டிருந்தார். எல்லோரும் மாதாகோயிலுக்குப் புறப்படத் தயாராயிருந்தார்கள். மணப்பெண், லாரி, மிஸ் பிராஸ்-(மிஸ் பிராஸுக்கு ஒரே ஒரு குறை ரொம்பநாளாய்: அதாவது அவளுடைய சகோதரன் சாலமன் என்று ஒருவன் இருந்தானும். அவன்தான் லூசியைக் கல்யாணம் செய்துகொள்ள யோக்கியதை உள்ளவன் என்று. ஆனாலும் இந்த சமயத்தில் அதை மறந்துவிட்டு சந்தோஷத்தில் கலந்துகொண்டாள்.)

மணப்பெண்ணின் அழகைப்பார்த்துப் பார்த்து திருப்தியடையாத லாரி, எட்டி நின்றுகொண்டும், வெகு சமீபத்தில் வந்தும் உற்சாகத்துடன் பார்த்துக்கொண்டே சொன்னார். "லூசி! உன்னை இதற்காகத்தான் சின்னக் குழந்தையாய் இருக்கும்போது பிரான்சிலிருந்து தூக்கிக்கொண்டு வந்தேனே! ஆனால் இது எப்படி எனக்குத் தெரியும்!"

"உமக்கு எப்படித் தெரிந்திருக்கும்? அசட்டுத்தனமாகப் பேசுகிறீரே!" என்றாள் வெடுக்கென்று மிஸ் பிராஸ்.

"அப்படியா! போனால் போகிறது, நீ அழாதே" என்றார் லாரி.

"நான் அழவில்லை. நீர் தான் அழுவது".

"நானா, அம்மா?"

விசேஷ நாட்களில் லாரி குஷியாய் இருப்பார்.

"நீர்தான் அழுதது. சற்றுமுன் நான் பார்த்தேன். நீங்கள் கல்யாணத்துக்கு அவர்களுக்குக் கொடுக்க தட்டு வாங்கிக்கொண்டுவந்திருக்கும் அழகைப்பார்த்தால் யாருக்கும் அழுகைதான் வரும்."

லாரி சொன்னார்: "ரொம்ப சந்தோஷம்.—அம்மா! இந்தமாதிரி சமயங்களில்தான் நாமும் ஏன் கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கக் கூடாது என்று தோன்றுகிறது. அம்மாடி! ஒரு மிஸஸ் லாரி (லாரியின் மனைவி)யும் இருந்திருந்தால்—வேடிக்கைதான்!"

"ஒருநாளும் வேடிக்கையில்லை!". மறுபடியும் மிஸ் பிராஸ்தான் அப்படிச் சொன்னது.

"மிஸஸ் லாரியே ஏற்பட்டிருக்க முடியாதென்று சொல்லுகிறாயா, நீ?"

"பூ! நீர் தொட்டிலில் கிடந்தபோதே பிர்ம்மசாரிதானே!"

"அதுவும் இருக்கலாம்" என்றார் லாரி தன் டோபாவை நிமிர்த்தி வைத்துக்கொண்டு.

"உம்மைத் தொட்டிலில் போடு முன்னரே நீர் ஒரு பிர்ம்மசாரிதான் என்று தீர்மானம் செய்துவிட்டு, அதன் பின்தான் போட்டார்கள்."

"அப்போது என்னைக் கேட்காமல் செய்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். என்ன கொடுமை, பார்த்தாயா?—சரி; அம்மா, ஊசி இதோ சத்தம் கேட்கிறது. புறப்படுவோம்."

டாக்டருடைய அறைக் கதவு திறந்தது. சாலஸ் டார்னேயும் அவரும் வெளியே வந்தார்கள். அவருடைய முகம்

வெளுத்திருந்தது ; சோபை யற்று மழுங்கிப் போயிருந்தது. ஆனால் அவருடைய நடத்தையிலும், பார்வையிலும், துளி கூட நிதானம் குறையவில்லை.

அவர் தம்முடைய மகளை கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வெளியில் காத்திருந்த வண்டிக்குப் போனார். பாக்கியிருந்தோர் வேறொரு வண்டியில் ஏறிக்கொண்டனர். பக்கத்திலே யிருந்த, ஜன சந்தடியற்ற ஒரு மாதா கோயிலை அடைந்தனர். அங்கே ஆடம்பரமில்லாமல் சாலஸ் டார்னேக்கும் லூசி மானெட்டுக்கும் விவாகம் இனிது நடந்தேறிற்று.

அவர்கள் எல்லோருடைய முகத்திலும் புன்னகை பிரகாசித்தது. லாரி மணப்பெண்ணுக்கு வெகுமதியாக பளபளவென்று மின்னும் வைரக்கற்களை அளித்தார். எல்லோரும் வீட்டுக்குத் திரும்பி சேர்ந்தாப்போல் வந்து ஆகாரம் அருந்தினர். சற்று நேரத்திற்குப் பின் புதுத் தம்பதிகள் உல்லாசமாய் கொஞ்ச காலம் கழிப்பதற்காக எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினார்கள்.

தந்தையிடமிருந்து பிரிந்து போவது ரொம்பக் கஷ்டமாய்த் தான் இருந்தது. ஆனாலும் அவர் அவளை உற்சாகப்படுத்திக்கொண்டே மெதுவாக சொன்னார் "சாலஸ்! அவளையழைத்துக் கொள்! அவள் இனி உனக்குச் சொந்தமாகிவிட்டாள்!"

வேகமாகப் புறப்பட்ட வண்டியின் ஜன்னல் வழியாக அதன் உள்ளிருந்து தயக்கத்துடன் தூக்கி ஆட்டின அவளுடைய கை தெரிந்தது.

வீட்டுக்குள்ளே திரும்பினவுடன் டாக்டரிடத்திலே ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருப்பதை லாரி கண்டார்;

பிரியும்போது அவரை நோக்கி சைகை செய்த அந்த இனிய கையானது அப்படியே அவருடைய தலேயிலே விழுந்து விட்டது போலிருந்தது.

அவருடைய அப்போதைய நிலேமையில் ஒருவித உள்ளக் கிளர்ச்சி ஏற்படுவது நியாயம்தான்; ஆயுளில் பெரும் பகுதியை துக்கத்திலேயே கழித்தவரன்ருே? ஆனாலும் அவருடைய முகத்திலே தோன்றிய அந்த பழைய மறதியின் அடையாளத்தைக் கண்டதும்தான் லாரி பீதி யடைந்தார். அப்படி மெய்மறந்த தனமாய் தள்ளாடிக்கொண்டே அவர் மேலே ஏறி தம் அறையை அடைந்தார்.

அப்போது லாரி மிஸ் பிராஸிடம் ரகஸ்யமாகச் சொன்னார்: "இந்த சமயத்தில் அவரைக் கலேத்து அவருடன் பேசாமலிருப்பது நல்லது. எனக்குக் கொஞ்சம் வேலே யிருக்கிறது. நான் ஓடிப்போய்விட்டு இதோ வந்து விடுகிறேன். பிறகு அவரை வெளியில் ஊர் சுற்ற அழைத்துக் கொண்டு போவோம். அங்கே எங்கேயாவது ஒரு வேளே சாப்பிட்டுவிட்டுத் திரும்பினோமானால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்."

ஆனால் பாங்குக்குப் போன லாரிக்கு வேலே சீக்கிரம் முடியவில்லே. இரண்டுமணி சாவகாசம் ஆய்விட்டது. வந்ததும் அவர் நேராக டாக்டருடைய அறைக்குப் போனார். ஒரு சின்ன சத்தத்தைக்கேட்டார் உள்ளுக்குள்ளே.

"அட கடவுளே! இதென்ன இது!" என்றார் திடுக்கிட்டுப்போய்.

பயத்தால் கலங்கிப்போன முகத்துடன் மிஸ்பிராஸ் அவரண்டை வந்து கையைப் பிசைந்துக்கொண்டே சொன்

ளுள்! "அய்யோ! எல்லாம் போச்சு! எல்லாம் போச்சு! என்ன பதில் சொல்வேன். அவரை எனக்குத் தெரியவில்லை. செருப்புத் தைத்துக் கொண்டிருக்கிறார்!"

லாரி தாம் அவரைச் சரிப்படுத்திவிடுவதாகச் சொல்லி விட்டு, உள்ளே நுழைந்தார். வெளிப் பக்கத்து ஜன்னலோர மாக வெளிச்சத்தில் பலகையைப் போட்டுக்கொண்டு ரொம்ப மும்முரமாக செருப்புத் தைத்துக்கொண்டிருந்தார்.

"டாக்டர் மானெட்! நண்பரே!"

தன் வேலை கலைந்துவிட்டதில் சற்றுக் கோபத்துடன் டாக்டர் தலையை நிமிர்ந்து அவரைப் பார்த்தார். பிறகு மறு படியும் குனிந்துகொண்டார்.

அவர் தன்னுடைய மேல் சட்டையை எடுத்து வைத்தி ருந்தார். முழங்கை வரையில் சட்டையை மடக்கி வைத்துக் கொண்டு ரொம்ப தீவிரமாக வேலையில் ஈடுபட்டிருந்தார். அவருடைய முகத்தில்கூட அந்த பழைய விகாரத் தோற்றம் வந்துவிட்டது.

"டாக்டர் மானெட்! என்னைப் பாரும்!"

அவர் பழைய மாதிரியிலேயே அர்த்தமில்லாமல் திரும் பிப் பார்த்தார்.

"என்னைத் தெரியவில்லை? நண்பரே, யோசித்துப் பாருங்கள், இதுவா உங்களுக்குத் தொழில்?"

அவர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பார்க்கச்சொன் ஞல் நிமிர்ந்து பார்ப்பார். அவ்வளவுதான். வாயைத் திறந்து ஒரு வார்தலைகூடப் பேசவில்லை. ஆனால் ஓயாமல், சலியா மல் வேலை செய்துகொண்டேயிருந்தார். எதைக் கேட்டா லும், பதில் வந்தால்தானே. ஆனால் சில சமயங்களில் தாஞக

தலையை நிமிர்ந்து பார்ப்பார். தம் மனதுக்குள்ளாகவே ஏதோ குழப்பமாய்த் தோன்றுவதை யோசனை பண்ணு வதுபோல் தோன்றும். இதைப் பார்த்ததும்தான் லாரிக்குத் துளி நம்பிக்கை பிறந்தது.

முக்கியமாக இரண்டு விஷயங்களை உடனே கவனிக்க வேண்டியதவசியம் என்று தோன்றிற்று லாரிக்கு. ஒன்று, இந்த சமாசாரத்தை லூசிக்குத் தெரிவித்துவிடக் கூடாது. இதேமாதிரி, அவருடைய நண்பர்கள் யாருக்கும்கூட இதைத் தெரியப்படுத்திவிடக் கூடாது. அதனால் அவர் உடனே மிஸ் பிராஸையும் கலந்துகொண்டு, "டாக்டருக்கு உடம்பு சுக மில்லை. அதனால் யாரையும் பார்க்க மாட்டார்" என்று வருவோருக்கு சொல்லிவிடும்படி ஏற்பாடு செய்தார். லூசிக் கும், டாக்டர் ஒரு அவசர 'கேஸ்' சம்பந்தமாக வெளி யூருக்குப்போயிருப்பதால், அவர் கடிதம் எழுத முடியவில்லை என்று ஒரு கடிதம் எழுதிவிட்டார்.

டாக்டர் மானெட், தமக்குக் கொடுத்ததைச் சாப்பிட் டார். ஆனால் வேலை ஓயவில்லை. அஸ்தமித்து ஒரு நாழிகை வரையில் ஓயாமல் வேலை செய்துகொண்டே யிருந்தார். அவர் ஆயுதங்களையெல்லாம்—இருட்டில் வேலை செய்ய முடி யாததினால்—கீழே வைத்துவிட்டதும் லாரி கேட்டார்.—

"வெளியே வருகிறீர்களா?"

பழையபடியே தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தார்.

"வெளியேயா?"

"ஆமாம் இரண்டுபேரும் உலாவிவிட்டு வரலாம். ஏன்?"

அவர் ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவருடைய அசட்டுக்களையால் மூடப்பட்டிருந்த அந்த முகத்தில், ஒரு சிறிது சலனமேற்பட்டதை லாரியின் (வர்த்தகத்தில் தேர்ந்த) கண்கள் பார்த்துவிட்டன.

அன்றிரவு அவரும் மிஸ் பிராஸும் மாறி மாறி அடுத்த அறையிலிருந்து அவரைக் கவனித்துக்கொண்டு தூங்காமல் உட்கார்ந்திருந்தனர். ரொம்பநேரம் அவர் அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவினார். பிறகு படுக்கப்போனார். ஆனால் அதிகாலையில் வெகு சீக்கிரமாக எழுந்திருந்து சுறு சுறுப்புடன் வேலையில் ஈடுபட்டார்.

இரண்டாவது நாள் லாரி வழக்கம்போல் அவருக்கு சலாம் வைத்துவிட்டு, அவருடன் அவருக்கு சமீப காலத்தில் பழக்கமான விஷயங்களைப்பற்றிப் பேசினார். அவர் பதில் சொல்லவில்லை. ஆனால் அவர் அவற்றையெல்லாம் கேட்டார் என்பது நிச்சயம், கேட்டவற்றைப்பற்றி சிறிது யோசனையும் பண்ணினார் என்பதும் தெரிந்தது.

அன்றும் அஸ்தமித்ததும் முதல்நாள் மாதிரி லாரி கேட்டார்; "வெளியே போவோமா?".

பழையபடியே அதே பதில்: "வெளியேயா?"

"நம்மிருவரும் உலாவப்போவோம்: ஏன்?"

இன்று லாரி உடனே வெளியே போய்விடுகிறவர்போல் பாசாங்கு செய்து, ஒரு மணி நேரம் வரையில் அடுத்த அறையிலேயே இருந்துவிட்டுத் திரும்பி வந்தார். அவர் போன பின் டாக்டர் வேலையை நிறுத்திவிட்டு எழுந்து ஜன்னலண்டை வந்து உட்கார்ந்து வெளியில் உற்றுப் பார்த்துக்

கொண்டேயிருந்தார். ஆனால் லாரி திரும்பினவுடன் பழைய ஸ்தானத்தில்போய் உட்கார்ந்து வேலையைத் தொடங்கிவிட்டார்.

நாட்கள் கழியலாயின. லாரியின் நம்பிக்கை தளர்ந்தது: அவருடைய மனமும் சோர ஆரம்பித்தது. மூன்றாவது நாள் ஆயிற்று; நான்காவது, ஐந்தாவதும் ஆச்சு. ஆறு நாள், ஏழு நாள், எட்டு நாள், ஒன்பது நாள், ஆகிவிட்டன.

தினசரி கண் விழித்துக் களைத்த லாரி, உட்கார்ந்து கொண்டிருக்கும்போதே தூங்கி விழுந்தார். பத்தாவது நாள் காலையில் அவர் திடுக்கிட்டு விழித்துக்கொண்டார். அவர்மேலே வெய்யில் அடித்தது. ராத்திரி அப்படியே தூங்கிவிட்டார்.

அவர் கண்ணைத் துடைத்துக்கொண்டு சோம்பல் முறித்தார். அப்போதும் அவருக்கு இன்னும் தான் தூங்குகிறோமோ என்ற சந்தேகம் உதித்தது. ஏனென்றால் பக்கத்தில் டாக்டர் அறையைப் போய் உற்றுப் பார்த்தவர், அங்கே என்ன கண்டார்! பழைய சக்கிலியின் ஆயுதங்களைக் காணோம். ஜன்னலுக் கருகில் டாக்டர் புஸ்தகம் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவருடைய முகம் சோர்ந்திருந்த போதிலும் சாந்தமாயும், சுறுசுறுப்பாகவும் தோன்றிற்று.

இதைப் பார்த்ததும் லாரிக்கு பெருத்த சந்தேகம் வந்துவிட்டது. இந்த ஒன்பது நாளும் நடந்ததெல்லாம் சொப்பனமா? ஆனால் அவர் எப்படி அங்கே வந்தார், அதிகாலையில்?

அதே சமயத்தில் மிஸ் பிராஸ் இவரிடம் வந்து இதைப் பற்றி ரகஸ்யமாக சொன்னாள். இனிமேல் சந்தேகமேது?

—லாரி அவளுக்கு யோசனை சொன்னார். அதாவது ஆகாரம் முடியும்வரையில் அவருடன், ஒன்றுமே நடக்காதது போல் நடந்துகொள்ளவேண்டும். அதன்பிறகு அவர் பார்த்துக் கொள்வார். அந்த யோசனையை மிஸ் பிராஸ் ஏற்றுக் கொள் ளவே, அந்த திட்டம் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டது.

சரியான சமயத்தில், ஆகாரத்துக்கு லாரி திரும்பிவந்து விட்டார்.

டாக்டர் வழக்கம் போலவே வந்து உட்கார்ந்தார். லாரி ஆகாரம் முடிந்ததும் கேட்டார்:

"டாக்டர் மானெட், உங்களிடத்தில் ஒரு யோசனை கேட்கவேண்டுமென்றிருக்குறேன். அது ரொம்ப வேடிக்கை யான ஒரு 'கேஸ்'. எனக்கு ரொம்ப அறிமுகமான இடம்: ரொம்ப விசித்திரமானது. உங்களுக்கு நன்றாய், ஒரு வேளை தெரியலாம்."

கடந்த ஒன்பது நாளாய் வேலை செய்ததினால் கடின மடைந்திருந்த தம் கைகளை டாக்டர் உற்று உற்றுப் பார்த்தார். அவருடைய முகம் கலங்கி யிருந்தது.

அவருடைய கையை மெதுவாகத் தொட்டுப் பிடித்துக் கொண்டே சொன்னார் லாரி: "அவர் எனக்கு ரொம்ப நெருங் கின நண்பர். நீங்கள்தான் யோசனைபண்ணி உதவ வேண் டும். அவருக்கு ஒரு மகளிருக்கிறாள். அவளைப் பார்த்தால் தான் பாவமா யிருக்கிறது"

"ஏதாவது திடீரென்று ஏற்பட்ட மன அதிர்ச்சியா யிருக்கலா மென்று"—என்றார் டாக்டர் மெதுவான குரலில்.

"ஆமாம்!"

"அப்போது எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுங்கள்."

தாம் சொல்வதை அவர் நன்முக கிரஹித்துக் கொண்டு விட்டார் என்பதை லாரி உணர்ந்துகொண்டார். பின்பு சொன்னூர்:—

"டாக்டர், இவருக்கு ரொம்ப நாளாக ஏற்பட்ட மன அதிர்ச்சி அது ; ரொம்பக் கடினமான அதிர்ச்சி. ஆனுல் இந்த அதிர்ச்சியிலிருந்து ரொம்ப மெதுவாகத் தான் அவர் தெளிவடைந்தார். எப்படித் தெளிவடைந்தார் என்பது அவருக்கே தெரியாது. ஆனுல் நன்முக நிச்சயமாகத் தெளிவடைந்து விட்டார். அதன்பின் அவர் ஒரு சாதாரணமான மனிதனைவிட அதிக சுறு சுறுப்புடன் வேலை செய்யும் சக்தியைக் கூடப் பெற்று விட்டார். பாவம், திடீரென்று— லேசாக அந்த அதிர்ச்சி மறுபடியும் தாக்கி விட்டது."

"இப்போது எவ்வளவு காலம் இருந்தது ?"

"ஒன்பது நாள்—இரவும் பகலும்."

"அந்த சமயத்தில் அவர் என்ன செய்தார்? ஒரு வேளை பழைய நாளில் அந்த சமயங்களில் அவர் செய்துகொண்டிருந்து பழகின வேலைகளையே தொடங்கினுரோ ?" என்று கேட்டார் டாக்டர் தம்முடைய கைகளை மீண்டும் பார்த்துக் கொண்டே.

"அதேதான்"

"இதற்கு முன்பு அந்த வேலையை செய்து கொண்டிருக்கும்போது அவரை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ?"

"ஒரே ஒரு தடவை பார்த்திருக்கிறேன்."

"இந்த சமயத்திலும் அவர் அதே மாதிரிதான் இருந்தாரோ?"

"அப்படியேதான் இருந்தார் என்று நினைக்கிறேன்."

"அவருக்கு மகள் இருப்பதாகச் சொன்னீர்களே—அந்தப் பெண்ணுக்கு இப்போதைய விஷயம் தெரியுமோ?"

"தெரியாது. அவளுக்குத் தெரிவிக்கக் கூடாதென்றே மறைத்திருக்கிறேன்."

அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு ஆர்வத்துடன் சொன்னார் டாக்டர்:

"நல்ல காரியம் செய்தீர்கள்! நீங்கள் செய்ததுதான் சரி!"

பிறகு ரொம்ப அந்தரங்கத்துடன் லாரி கேட்டார், "டாக்டர் மானெட், கொஞ்சம் சொல்லுங்கள்: நான் ஒரு வியாபாரி. இந்த விஷயங்களில் எனக்கு அனுபவம் கிடையாது—இந்த அதிர்ச்சி எப்படி உண்டாகிறது? இனியும் இந்த மாதிரி வருமா? அதைத் தடுக்க முடியுமா? அதற்கு என்ன செய்யவேண்டும்? தயவு செய்து இதையெல்லாம் எனக்கு சொல்லவேண்டும். உங்களைத் தவிர எனக்கு வேறு யாருமில்லை, இந்த விஷயத்தில் உதவி செய்ய."

கொஞ்சநேரம் வரையில் டாக்டர் மானெட் யோசனை செய்துகொண்டே உட்கார்ந்திருந்தார்.

பிறகு கொஞ்சம் பிரயாசையுடன் சொன்னார்: "நண்பரே இந்த அதிர்ச்சியை அவரே எதிர்பார்த்திருக்கலாம் என்று தோன்றுகிறது."

"இப்போது எதனால் இது வருகிறது?"

டாக்டர் சொல்லலானார் :—" எனக்குத் தோன்றுவதெல்லாம் இதுதான் : ஒரு மகத்தான கஷ்டத்திலிருக்கும்போது இந்த நோய் முதலில் ஏற்பட்டிருக்கவேண்டும். அந்த சமயத்தில் எந்தமாதிரியான எண்ணங்கள் மனதில் இருந்தனவோ, அந்தமாதிரியான எண்ணங்களோ, அல்லது அவற்றிற்குச் சம்பந்தமுள்ள சம்பவங்களோ உண்டாகும்போது இந்த வியாதி தோன்றுகிறது."

"இனிமேல் என்ன பண்ணுவது" என்றார் லாரி ஜாடையாக.

"இனிமேல் பயமில்லை என்றுதான் தோன்றுகிறது. ஏதோ ஒரு வரப்போகும் சம்பவத்தை நினைத்து அவர் கஷ்டப்பட்டுக்கொண்டே யிருந்திருக்கவேண்டும். ஆனால் அந்த நோயை எதிர்க்க அவரால் முடியவில்லை. மறுபடியும் தெளிந்துவிட்டார் என்று சொல்வதினால் இனிமேல் பயமே யில்லை."

" நல்ல வேளை ! இனிக் கவலையில்லை !" என்றார் லாரி.

" கவலையில்லை !" என்றார் டாக்டரும் விசுவாசத்துடன்.

# அத்தியாயம் : 14.

## ஒரு வேண்டுகோள்

புது தம்பதிகள் வீடு திரும்பியதும் அவர்களை முதல் முதலில் ஸிட்னி கார்ட்டன்தான் வரவேற்றான். அவர்கள் வந்து சில மணி சாவகாசத்துக்குள் அவன் வந்துவிட்டான். அவனுடைய தோற்றத்திலே, நடத்தையிலே ஒரு மாறுதலு மில்லை.

கொஞ்ச நேரம் கழித்து சாலஸ் டார்னேயை அவன் ஜன்னலோரமாக தனியாக அழைத்துக்கொண்டு போய் சொன்னான் :—

"டார்னே, நாம் இருவரும் சினேகமா யிருக்கவேண்டு மென்று நான் விரும்புகிறேன்."

"எப்போதும் சிநேகமாய்த்தா னிருக்கிறோம்."

"வெறுமனே வார்த்தைக்கு வார்த்தை சிங்காரமாக அப்படிச் சொல்வதும் நல்லதுதான். நான் அந்தமாதிரி சொல்ல வில்லை."

"என்ன சொல்லுகிறாய் என்று புரியவில்லை" என்றான் டார்னே.

"முன்பு ஒரு சமயம்—ஞாபக மிருக்கிறதா? நான் ரொம்ப ஜாஸ்தியாகக் குடித்திருந்தேனே?"

"ஞாபகமிருக்கிறது. என்னைக்கூட கட்டாயப்படுத்தி நீ ஒரு குடிகாரன் என்று சொல்லச்செய்தாயே?"

"அதுதான். அந்தப் பாவங்களெல்லாம் விட்டுப் போய்விடாது.—ஆனால் அப்போது உன்னை எனக்குப் பிடிப்ப

தில்லை என்று சொன்னேனே, ஞாபகமிருக்கிறதா? அதை மறந்துவிடு."

"அப்போதே மறந்துவிட்டேன் அதை"

"மறுபடியும் வெறும் பேச்சுக்குச் சொல்லுகிறாயே! ஆனால் எனக்கு எளிதில் மறக்க முடியவில்லை. அதனால் அப்படி லேசாக மறந்து விட்டேன் என்று சொன்னால் போதாது."

"அப்படியானால் என்னை மன்னிக்கவேண்டும். வாஸ்தவமாகவே நான் சொல்லுகிறேன். நான் அன்றைக்கே அதைப்பற்றி மறந்துவிட்டேன். அன்றையதினம் நீ எனக்குச் செய்த உதவிக்கு! இதைத்தான், இந்த அல்ப விஷயத்தைத்தான் நினைத்துக்கொண்டிருக்கவேண்டுமா?"

"அந்த உதவியைப்பற்றி நீ சொன்னதனால் நானும் சொல்லுகிறேன். அந்த சமயத்தில் நான் உனக்காக அதைச் செய்யவில்லை; தொழில் முறையில் செய்தது. ஆனால் செய்யும்போது—ஞாபகமிருக்கட்டும்!"

"நீ லேசாகச் சொல்லுகிறாய். நான் அப்படி மதிக்க முடியாது!"

"இல்லவே இல்லை! டார்னே, என்னை நம்பு!—அது கிடக்கு. நான் முதலில் சொன்னேனே, நாம் இரண்டுபேரும் சிநேகமாய் இருக்கவேண்டுமென்று—ஆனால் ஒன்று, மற்ற மனிதர்களைப்போல் உயர்ந்த லட்சியங்களோ காரியங்களோ எனக்கு சாத்தியமில்லை. நான் ஒன்றுக்கும் உதவாதவன், ஒரு காலத்திலும் ஒரு நல்ல காரியமும் செய்ய முடியாது."

"எப்போதுமே செய்ய முடியாதென்று நான் நினைக்கவில்லை."

"ஆனால் நான் சொல்வதை நீ நம்பத்தான் வேண்டும். போகட்டும், நான் ஊதாரி யென்பது உனக்குத் தெரியும். ஒரேயொரு வேண்டுகோள். இவ்வளவு மோசமான, கண்ணியமில்லாத நான் இங்கே அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பதை நீ அனுமதிக்கவேண்டும். அப்படி ஜாஸ்தியொன்றுமில்லை. ஒரு வருஷத்துக்குள் நாலு தடவை வருவேன். ஆனால் இங்கே இஷ்டம்போல் வர எனக்கு பாத்தியதை இருக்கிறது என்ற திருப்தி எனக்கேற்படும்."

"எங்கே பார்க்கலாம், எத்தனை தடவைதான் உன்னால் வர முடியும்!"

"நான் திருப்தியடைந்துவிட்டேன், டார்னே உன் உதவியை மறக்கமாட்டேன்" என்று அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு நன்றியுடன் குலுக்கிவிட்டு விடைபெற்றுச் சென்றான் கார்ட்டன்.

இதன் பின்னர் ஒரு நாள் மாலை டாக்டர், மிஸ் பிராஸ், லாரி, டார்னே எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது கார்ட்டனைப் பற்றி பேச்சு வந்தது. அப்போது சால ஸ்டார்னே "அவன் ஒரு ஊதாரி; உபயோகமில்லாதவன்" என்று ஜாடையாகச் சொன்னான். அவன் கடுமையாகவோ, ஒரு கெட்ட எண்ணத்துடனோ சொல்லவில்லை. சாதாரணமாக அவனைப் பார்ப்பவர்கள் யாரும் சொல்ல கூடியதைத் தான் சொன்னான்.

ஆனால் அப்போது இந்த வார்த்தைகள் தன்னுடைய இளம் மனைவியின் மனதிலே அவ்வளவு ஆழ்ந்து பதியுமென்பது அவனுக்குத் தெரியாது. அன்றிரவு அவர்கள் தனியாயிருக்கையில் அவள் ஒரு மாதிரியாய் கலகலப்பில்லாமல் இருப்பதை அவன் கவனித்தான். உடனே கேட்டான்: "லூசி ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய் இன்று?" என்று.

"ஆமாம், ஒரு விசேஷமான காரணமிருக்கிறது, அதற்கு"

"லூசி, அதென்ன அது?

"நீங்கள் என்னை ஏன் என்று கேட்காமலிருந்தால் சொல்லுவேன்."

"உனக்காக, கண்ணே, எதைத்தான் நான் செய்ய மாட்டேன்?"

அவளுடைய முகத்திலே வந்து தொங்கின கேசச் சுருள்களை அன்புடன் ஒரு கையால் எடுத்து விட்டான். இன்னொரு கை அவளைச் சுற்றி அணைத்திருந்தது.

"இன்று சாயங்காலம் நீங்கள் கார்ட்டனைப்பற்றி அலட்சியமாகச் சொன்னீர்களல்லவா? பாவம், அவனிடம் நாம் இன்னும் கொஞ்சம் அனுதாபம் காட்ட வேண்டும்."

"அப்படியா? ஏன்?"

"அதைத் தான் நீங்கள் என்னைக் கேட்கக் கூடாது. ஆனால் காட்ட வேண்டுமென்பது நிச்சயம்."

"உனக்கு காரணம் தெரிந்தால் அதுவே போதுமானது. நான் என்ன செய்யவேண்டும்?"

"அவனிடத்தில் கூடிய வரையில் பிரியமா யிருக்க வேண்டும். அவனிடம் எத்தனையோ குற்றங் குறைகள் இருக்கின்றன. ஆனால் அவன் இல்லாத சமயத்திலே அவற்றைப்பற்றி அதிகப்படுத்திப் பேசப்படாது. அவனுக்கும் ஒரு நய ஹிருதயம், இளகின நெஞ்சு இருக்கிறதென்பதை நீங்கள் நம்பவேண்டும். அதிலே ரத்தம் கசிவதை, அந்த நெஞ்சு உடைந்து போனதை நான் என் கண்ணால் பார்த்திருக்கிறேன்."

ஆச்சரியத்துடன் டார்னே சொன்னான்: "இந்த மாதிரி அவனைப் பற்றி நான் நினைத்துப் பார்த்ததேயில்லை."

"நான் சொன்னது வாஸ்தவம். அவன் இனிமேல் உருப்படியாக மாட்டான். அவனுடைய நிலைமை இனி உயர முடியாது. ஆனால் அவனால் நல்ல காரியம் செய்ய முடியும்; பெரிய பெரிய காரியங்கள்கூட செய்ய முடியுமென்று நம்புகிறேன்."

வாழ்க்கையை விருதாவாக்கி, வீசி யெறிந்துவிட்ட அந்த மனிதனிடத்திலே இவ்வளவு நம்பிக்கை வைத்த அவளுடைய பரிசுத்த ஹிருதயம், அவளுடைய முகத்திலே பிரதிபலித்து, அதற்கு ஒரு புது சோபையைத் தந்தது. அப்போது அவள் முகத்தைப் பார்த்த அவளுடைய கணவன் அந்த அபூர்வ அழகிலே லயித்து செயலற்று உட்கார்ந்து விட்டான்.

அவனை நெருங்கி அவனுடைய மார்பிலே சாய்ந்து கொண்டு, அன்பு ததும்பும் கண்களுடன் அவனைப் பார்த்தாள்: "என் துரையே! நாம் எவ்வளவு சந்தோஷமாய்

இருக்கிறோம்! அந்த சந்தோஷத்திலே எவ்வளவு உறுதி, தைரியம் பிறக்கிறது நமக்கு! அவனைப் பாருங்கள்! அந்த துயர வாழ்க்கையிலே எப்படி உழலுகிறான்!" என்றான்.

"இதை நான் எப்போதும் மறக்க மாட்டேன்! நிச்சயமாய் மறக்க மாட்டேன்!"

அவளை அப்படியே வாரி யெடுத்து ஆர்வத்துடன் அணைத்துக் கொண்டான்.

# அத்தியாயம்: 15.

## காலடியோசைகள்

டாக்டர் மானெட் வசித்த அந்த பிரதேசமானது காலடி ஓசைகளுக்குப் பெயர் போனது என்று ஏற்கனவே சொல்லி யிருக்கிறோம். சாந்தமான அந்த வீட்டின் அமைதியிலே காலத்தின் போக்கை, அதனுடைய காலடி யோசையின் எதிரொலியைக் கவனித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள் லூசி.

வருஷங்கள் கடந்தன. லூசி ஒரு சின்னக் குழந்தையின் காலடி யோசையைக் கேட்டாள். அந்தக் குழந்தை பிறப்பதற்கு முன்னால் இளம் மனைவியின் நெஞ்சிலே பல விதமான பயங்கள் தோன்றின காலமுண்டு. அவள் உயிருடன் இருப்பாளா? அந்தக் குழந்தையின் மழலை வார்த்தைகளை அவள் கேட்பாளா? அல்லது ஏற்கனவே சந்தோஷமும் மனத் திருப்தியும் நிறைந்திருந்த அந்த வீட்டை இன்னும் பிரகாசிப்பிக்கத் தோன்றப்போகும் அந்த ஜீவன் நீடித்து இருக்குமா?—இந்த மாதிரியான காரணமற்ற பீதிகள் அவளுடைய நெஞ்சை நிறைத்த காலங்களுண்டு.

ஆனால் அந்தக் காலமெல்லாம் தாண்டியாய் விட்டதும் சின்ன லூசிக்கு ஆறுவயதாய் விட்டது.

ஸிட்னி கார்ட்டனின் காலடி யோசை அடிக்கடி அங்கே கேட்பதில்லை. அவன் எப்போதாவது ஒரு தடவை வருவான்; பழைய மாதிரியே, கலகலப் பின்றி உட்கார்ந்திருப்பான். பிறகு தானாகவே போய் விடுவான். ஆனால் அங்கே வரும்போது மாத்திரம் அவன் தன்னுடைய இடைவிடாக் கண்பனை ஒயிலை விலக்கி விடுவான்.

இந்த இடைக்காலத்திலே இன்னொரு விதமான காலடி யோசையும் தூரத்திலே கிளம்பி உருவெடுத்து வந்திருக் கிறது. அது இப்போது வலுவடைந்து ஒரு பெரும் புயலாக மாறிவிட்டது. பிரான்ஸ் தேசத்திலே கொந்தளித்துப் பொங் கும் கடல்போலக் கிளம்பிவிட்ட அந்தப் புயலின் பயங்கர ஓசையை எல்லோரும் கேட்டனர்.

ஆயிரத்தெழுநூற்றென்பதாம் வருஷம் ஜூலை மாதத் தில் ஒரு நாள் இரவு லாரி பாங்கிலிருந்து வெகு நேரம் கழித்து டாக்டரின் வீட்டுக்கு வந்தார். அங்கே ஜன்ன லோரமாக லூசியும் அவளுடைய கணவனும் உட்கார்ந்திருந் தனர். அவர்களுக்குப் பக்கத்தில் இவரும் உட்கார்ந்து கொண்டார். அன்று ரொம்பப் புழுக்கமாக இருந்தது. அவர் களுக்கு இதேமாதிரி முன்னொரு சமயம் உட்காந்திருந்தது அப்போது ஞாபகம் வந்தது.

தம்முடைய டோபாவைத் தள்ளி விட்டுக்கொண்டே லாரி சொன்னர்.

"நான் பாங்கியிலேயே இரவு முழுவதையும் கழிக்க வேண்டியிருக்குமோ என்றுகூட நினைத்தேன். இன்று முழு வதும் அவ்வளவு வேலை; கொஞ்சங்கூட ஓய்வில்லை! அங்கே பாரிஸில் ஏக களேபரமாய் இருக்கிறது. அங்கே உள்ளவர் கள் எல்லாம் தங்கள் தங்கள் சொத்தை எடுத்துக்கொண்டு, இங்கிலாந்துக்கே அனுப்புகின்றனர்."

"ரொம்ப மோசமாய இருக்கிறது" என்றான் டார்னே.

"மோசமா? அதற்கு காரணம் என்ன என்றே தெரிய வில்லை. ஜனங்களுக்கு புத்தி கட்டையாய்ப் போய்விட்டது.

எங்களைப்போன்ற வயதானவர்களுக்கு இதெல்லாம் அர்த்த மாவதேயில்லை.”

“அங்கே வானம் எப்படி இருண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?”

“தெரிகிறது, தெரிகிறது” என்று ஒப்புக்கொண்டார் லாரி. பிறகு “மானெட் எங்கே?” என்று கேட்டார்.

“இதோ!” என்றார் டாக்டர், அப்போதுதான் உள்ளே நுழைந்துகொண்டே.

“உங்களைக் காண சந்தோஷமடைகிறேன். இன்று பூராவும் இந்த அவசர வேலையில் கிடந்து திணறிவிட்டேன். நீங்கள் வெளியே போகப்போகிறீர்களா?”

“இல்லை; உங்களோடு சீட்டு விளையாடப்போகிறேன்—வருகிறீர்களா?” என்றார் டாக்டர்.

“என்னால் இன்று முடியாது. லூசி எனக்குக் கொஞ்சம் டீ கொடுக்கமாட்டாயா?—எங்கே—”

“இதோ இருக்கிறதே! உங்களுக்காகத்தான் வைத்திருக்கிறது.”

“தாங்ஸ்; ஏன் அம்மா, குழந்தை தூங்கிவிட்டதா?”

“அயர்ந்து தூங்குகிறது.”

“சரி; ரொம்ப நல்லது! ஆனால் இந்த இடத்திலே எல்லாம், என்றைக்கும் நன்றாயிருக்கும், ஈசுவர கிருபையிலே: இன்றைக்குப் பூராவும் மூச்சுவிட ஒழியவில்லை; என்னால் எங்கே முடிகிறது? வயசுப் பிள்ளையா?—எங்கே, அம்மா, வந்து இப்படி நீயும் உட்கார். உன்னுடைய கல்பனையிலே தோன்றின அந்த காலடியோசைகளைக் கேட்போம்.”

"கல்பனையில்லை; என்னவோ தோன்றிற்று—"

அவளுடைய மிருதுவான கையைத் தடவிக் கொண்டே லாரி சொன்னார்: "அந்த ஓசைகள் எவ்வளவு சப்தத்துடன் வலுவாகக் கேட்கின்றன. இல்லையா? இதோ பார்!"

இந்த சின்னக் குடும்பத்தினர் இருண்ட ஜன்னலுக்கருகே அமைதியாக உட்கார்ந்திருந்த இதே சமயத்தில் தூரத்திலே செயின் அன்டோன் பிரதேசத்தில் பயங்கரமான வெறி பிடித்த காலடிகள் பதிந்தன; ஒரு தடவை பதிந்து விட்டால் மறுபடியும் அவற்றை அழிக்க முடியாதபடி ரத்தத்திலே தோய்க்கப்பட்ட காலடிகள் பதிந்தன.

அன்று காலையிலிருந்தே அந்தப் பிரதேசத்தில் ஆயுதமணிந்த பல சிப்பாய்களின் உருவங்கள் நடமாடின. ஒரு பெரிய கர்ஜனை எழுந்தது. மரங்களடர்ந்த ஒரு பெரிய காடே கிளம்பிவிந்துவிட்டதுபோன்று மெலிந்த மனிதக் கூட்டம், கையிலே கிடைத்ததை ஆயுதமாகத் தாங்கி ஆவேசத்துடன் கிளம்பி வந்தது.

கொதிக்கும் ஜலத்தைப்போல் கிளம்பின இந்த பயங்கரக் கும்பலுக்கு உற்பத்திஸ்தானம் டிபாஜின் ஒயின் கடையில் இருந்தது. இந்த வெறியைக் கிளப்பி விட்டுக் கொண்டு பிரதான புருஷனாக விளங்கினான் டிபாஜ். அவனுடைய தேகம் வியர்வை வழிந்து வெடி மருந்து நிறைந்திருந்தது. அவரவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுப்பதும், உத்தரவுகள் போடுவதும், சோர்ந்தோருக்கு ஆவேச மூட்டுவதுமாக, அந்தக் குழப்பத்தின் மத்தியிலிருந்தான் அவன்.

"ஜாக் மூணு! என்னுடன் கூடவே இரு நீ! எங்கே அவர்களிருவரும்? நீங்கள் தனித்தனியாக தேசபக்தர்கள்

தலைமையில் கிளம்புங்கள். என் மனைவி எங்கே?" என்று கூவினான் அவன்.

"இதோ இருக்கிறேன்!" என்றாள் ஸ்ரீமதி நிதானமாக. இன்று அவள் பின்னல் வேலை செய்யவில்லை. அவளுடைய வலது கையில் தையல் ஆயுதங்களுக்குப் பதிலாக ஒரு சின்னக் கோடாரி இருந்தது. அவளுடைய இடுப்பில் ஒரு கைத் துப்பாக்கியும் கத்தியும் தொங்கின.

"நீ எங்கே போகிறாய்?"

"இப்போது உங்கள் கூடத்தான் வருகிறேன். ஆனால் இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த ஸ்திரீகளின் தலைமையில் போகப் போகிறேன்."

"அப்போது வா! நண்பர்களே, தேசபக்தர்களே! கிளம்புங்கள்! * பாஸ்டிலை நோக்கிப் போவோம்!"

பிரான்ஸ் தேசத்திலேயுள்ள மூச்சுக் காற்று முழுவதும் ஒன்றாய்த் திரண்டு அந்த வெறுக்கத்தக்க ஒரு வார்த்தையை உச்சரித்ததுபோல் கர்ஜித்துக்கொண்டு, அந்த ஜன சமுத்திரம் சீறி எழுந்தது. அலையோடு அலை மோதிற்று; அந்த சிறைச்சாலையை நோக்கிப் பாய்ந்தது ஆவேசத்துடன். கனத்த மணிகள் அலறின; துப்பாக்கி குண்டுகள் காதைச் செவிடாக்கி கர்ஜித்தன.

ஆழமான அகழிகள்; அவற்றைத் தாண்டும் பாலங்கள்; உயர்ந்த கோபுரங்கள்: எல்லாம் உடைந்து நொறுங்கின. அந்த அலைமோதலுக்கு நடுவே அங்குமிங்கும் மோதுண்டு,

*பாஸ்டில்.—பிரஞ்சு ராஜாங்கக் கொடுமையின் உதாரணமான கொடிய சிறை. பிரஞ்சுப்புரட்சி சமயத்தில் அது அழிக்கப்பட்டு விட்டது.

ஒரு போர் வீரனைப்போல் இரண்டு மணி சாவகாசம் தீவிர மாக வேலை செய்தான் டிபாஜ்.

ஆழ்ந்த அகழி; உயர்ந்த கோபுரம், எல்லாம் அழிந்து தகர்ந்தன: "ஒழியுங்கள்! நண்பர்களே ஒழியுங்கள்! எல்லாம் சுட்டுத்தள்ளுங்கள்! ஜாக் ஒண்ணு! ஜாக் ரெண்டு! ஜாக்-ஆயிரம்! ஐயாயிரம்! எல்லாரும் வாருங்கள்!"

"பெண்களெல்லாம் இங்கே வாருங்கள்! நாமும் கொல்ல முடியும்! அங்கே போவோம்!" என்று கூவினாள் ஸ்ரீமதி டிபாஜ். அவளைச்சேர ஓடிவந்தனர் ஆயிரக்கணக்கான ஸ்திரீ கள், பலவிதமான ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு. அவர்கள் முகத்திலே பசியின் கொடுமையும், பழிவாங்கத் தீவிர தாக மும் ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

பீரங்கிகளும், துப்பாக்கிகளும் ஓயாமல் அலறின; ஒரே புகை மண்டலம் எழும்பி ஆகாயத்தை மறைத்தது. இன் னும் அந்த அகழ், அதன் பாலம், பெரிய கோபுரங்கள் இருந்தன. கண்களைப் பறிக்கும் பளபளப்புடன் மின்னின ஆயுதங்கள்; கொழுந்துவிட்டெரியும் தீப்பந்தங்கள்; எல்லாத் திக்குகளிலும் வளைத்துக்கொண்டனர். கீழே சாய்ந்து விழு வோரின் கீச்சுக்குரல் காதைத்துளைத்தது. அந்த பயங்கரக் குழப்பத்திலே, அதன் மத்தியிலே துப்பாக்கியின் கீழே தன்னுடைய ஸ்தானத்தைவிட்டு அசையவேயில்லை டிபாஜ்; அவனுடைய தேகமெல்லால் கொதிப்படைந்திருந்தது.

கோட்டைக்கு உள்ளிருந்து ஒரு வெள்ளைக்கொடி—சமா தானத்துக்கு அடையாளம் — அந்த புகை மண்டலத்தின் வழியே லேசாகத் தெரிந்தது. கீழே பாலம் தாழ்ந்தது. அந்த ஜன சமுத்திரம் சற்று விரிந்தது. டிபாஜ் அந்த பாலத் தின் வழியே பாஸ்டில்லுக்குள் நுழைந்தான்!

அந்த நெருக்கடியிலே அவனுடைய கால்கள் கீழே படவில்லை. அந்த மனித அலைகளின் மேலே அவன் தூக்கிச் செல்லப்பட்டான். கொஞ்சம் சிரமப்பட்டு அவன் தன்னைச் சுற்றி ஒரு முறை பார்த்தான். ஜாக்-மூன்று அவனுடைய பக்கத்திலே யிருந்தான். சற்று தூரத்தில் ஸ்ரீமதி டிபாஜ் கையில் உருவின கத்தியுடன் சில ஸ்திரீகளின் தலைமையில் நின்று கொண்டிருந்தாள். எங்கு பார்த்தாலும், ஒரே ஆர்ப்பாட்டம்; சந்தோஷ ஆரவாரம்; பித்துப் பிடித்ததைப் போன்ற ஒரு வெறி.

"கைதிகள் !"

"புஸ்தகங்கள் !"

"ரகஸ்ய அறைகள் !"

"ஆயுதங்கள் !"

"கைதிகள் !"

இந்த ஆயிரக் கணக்கான, ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத குழப்பமான குரல்களில், "கைதிகள் !" என்ற சத்தம்தான் அதிகமாகக் கேட்டது. முன்னடி நுழைந்த கும்பல்கள் சிறை அதிகாரிகளைப் பயமுறுத்தி, அதட்டித் தூக்கிச் சென்றன. அப்போது டிபாஜ் ஒரு வயதான அதிகாரியைத் தொட்டு, தனியாக அழைத்துக் கொண்டுபோனான்.

"வட கோட்டை எங்கிருக்கிறது? எனக்குக் காண்பி! சீக்கிரம் !" என்றான்.

" நிச்சயமாகக் காட்டுகிறேன். என்கூட வாருங்கள். ஆனால் அங்கே யாருமில்லையே" என்றான் அந்த மனிதன்.

"நூற்றைந்து, வடகோட்டை என்றால் என்ன அர்த்தம்? சீக்கிரம் !" என்று கேட்டான் டிபாஜ்.

"அர்த்தமா, மூஸே?"

"அந்த எண் ஒரு கைதியைக் குறிக்கிறதா? அல்லது ஒரு இடத்தையா?—இல்லை, உன்னுடைய மண்டையை உடைக்கவேண்டுமா?"

"மூஸே, அது ஒரு அறை"

"அதைக் காட்டு!"

"இப்படி வாருங்கள்"

சூரிய ஒளியே பட்டிராத பயங்கர அறைகளின் வழியே, கோரமான குகைகளாகவும, கூண்டுகளாகவும் இருந்த ரகஸ்யச் சிறைகளின் வழியே நடந்து, டிபாஜ், அவனுடைய தோழன், அதிகாரி, எல்லோரும் கோட்டையின் உச்சியை அடைந்தனர். அந்த உச்சியிலே, அந்தத் தனி இடத்திலே நான்கு பக்கமும் கனத்த சுவர்கள் நின்றன. அங்கே, ஊரையே நிர்த்தூளிசெய்யும் வெளியே நடக்கும் பெரும்புயலின் சத்தம் துளிகூட காதில் விழவில்லை.

அந்த அதிகாரி ஒரு சின்ன அறையின் பூட்டைத் திறந்தான். கதவைத் திறந்துகொண்டே சொன்னான்:

"நூற்றைந்து, வடகோட்டை!"

அவற்றின்மேல் உயர ஒரு காடுமுரடான ஜன்னல் இருந்தது. கொஞ்சதூரத்தில் ஒரு சின்ன புகைபோக்கியிருந்தது. அதன்மேல் குறுக்கும் நெடுக்குமாகக் கம்பிகள் போடப்பட்டிருந்தன. கீழே மரக்கட்டை எரித்த சாம்பல் சிதறிக்கிடந்தது. ஒரு மேஜை, ஒரு சின்ன பெஞ்சி, ஒரு வைக்கோல் படுக்கை.

"எங்கே அந்த தீவட்டியை சுவரோரமாகப் பிடித்துக்காட்டு என்ருன்.

டிபாஜ் அந்த ஜெயில் அதிகாரியிடம்.

வெளிச்சத்திலே ரொம்பக் கவனமாகப் பார்த்தான்.

"இரு !—ஜாக் ! இதோபார்!"

"ஏ. எம்.!" என்று கூவினன் ஜாக், சுவற்றைப்பார்த்து விட்டு.

"அலெக்ஸாந்தர் மானெட். இதோ 'ஒரு எளிய வைத்தியன்' என்றும் அவர் தான் எழுதியிருக்கிருர்" என்று அந்த கருமையான எழுத்துக்களைப் படித்துக்கொண்டே சொன்ஞன்: இதோ இந்த தேதிக் குறிப்பும் அவர்தான் எழுதியிருக்கிருர். உன்கையிலென்ன ? கட்டப்பாறையா ? கொண்டு வா அதை !"

தன் கையிலிருந்த துப்பாக்கியை தோழனிடம் கொர்டுத்துவிட்டு அவன் கையிலிருந்த கட்டப்பாறையை வாங்கிக்கொண்டான். அந்த மேஜையையும், ஆஸனத்தையும் அந்த ஆயுதத்தால் ஒரு அடிபோட்டு நொறுக்கிஞன்.

"எங்கே விளக்கை சரியாய்ப்பிடி !

"ஜாக், அதோ அந்தக்குப்பைகளை சரியாய்க்கவனி. இந்தா ! இந்தக் கத்தியைக்கொண்டு படுக்கையின் வைக்கோலைப்பிரி. ஏய் !"

ஒருதடவை அந்த அதிகாரியை முறைத்துப்பார்த்து விட்டு கட்டப்பாரையைக்கொண்டு புகைபோக்கியை விலாவில் கொடுத்து இடிக்கத் தொடங்கிஞன். அதை மூடியிருந்த இரும்புக் கம்பிகள் விலகின. அதன் வழியே தன்னுடைய கையை விட்டுத் தேடிஞன்.

"வைக்கோலில் ஒன்றுமில்லையா, ஜாக் ?"

"ஒன்றுமில்லை"

"இதையெல்லாம் ஒன்று சேர்த்து இங்கேயே குவி. ஏய் ! இதற்குத் தீ வை, நீ !"

அந்த சிப்பந்தி அப்படி அதற்குத் தீவைத்துக் கொளுத்தினான்; ஜ்வாலை கொழுந்து விட்டு எரிந்தது.

பிறகு டிபாஜ் கோஷ்டியுடன் வந்த வழியே திரும்பி, கீழே இறங்கி, இவனைக் காணுமல் வெளியே கொதிக்கொண் டிருந்த கடலுக்குள்ளே கலந்து கொண்டான்.

பாஸ்டில் சிறைகளுக்குள்ளிருந்து ஜனங்களை சுட்டுத்தள் ளின அந்தக் கவர்னரைக் கும்பல் பிடித்துக் கட்டிவைத்திரு தது. கொதிக்கும் உள்ளங்களுடன் கூடின கொந்தளிக்கும் மனித சமுத்திரத்தின் மத்தியிலே இந்த கவர்னர் நின்றான். அவனுக்குப் பக்கத்தில் நின்றாள் ஸ்ரீமதி டிபாஜ். "இதோ என் புருஷன் !" என்று கூவினாள் அவனைக் கண்டதும். அந் தக் கவர்னரின் பக்கத்தைவிட்டு அவள் அசையவேயில்லை. முகத்திலே துளிச்சலனமின்றி அந்த மனிதன் சித்திரவதை செய்யப்படுவதை ஒரு அசுரத்திருப்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். வெறிபிடித்த கும்பலால் பின்புற மிருந்து தாக்கப்பட்ட அவன் வழியிலேயே சாய்ந்தான். அப்போதும் அவள் அவன் பக்கத்திலேதான் இருந்தாள். அந்த உயிரற்ற உடலின்மேல் வெறியுடன் காலை வைத்து மிதித்துக்கொண்டு அதன் சலனமற்ற தலையை தன்னுடைய கொடிய கத்தி யால் சீவினாள்.

இது ஒன்றில்லை; அந்தப் பிரதேசத்திலே கணக்கற்ற தலைகள் உருண்டோடின ; அவை யெல்லாம், கொடுங்கோல

ருக்கு ஒரு எச்சரிக்கையாக லாந்தக் கம்பங்களிலே தூக்கித் தொங்கவிடப்பட்டன. தெருவிலே ஆருய் ஓடின ரத்தத்திலே காலடிகள் ஆழம்பதிய, இந்த பயங்கர சமுத்திரத் ஜலம் பொங்கிப் பாய்ந்தது. ஒன்ருேடொன்று முட்டி மோதும் இந்த அலைகள் ஒரு ரூபமற்று, ஆழங் காணமுடியாதபடி கொதித்தன. அவைகளின் மோதலிலே பழிவாங்கத் துடிக்கும் பயங்கரக்குரல்கள் எதிரொலித்தன ; நீண்டகாலக்கொடுமையை அனுபவித்து, அந்தக் கஷ்டமென்னும் உலையிலே காய்ச்சி யடிக்கப்பட்ட இரக்கமற்ற முகங்கள் தோன்றின.

ஏழு கைதிகள் விடுதலை யடைந்தனர்; அந்தக் கோட்டைகள் கைப்பற்றப்பட்டுவிட்டன ; சில கடிதங்களும் இதர சில்லரை சாமான்களும், வெகுநாளைக்கு முன்பு கைதிகள் விட்டுச் சென்றவை அகப்பட்டன ; இந்த மாதிரியான செய்தியைத்தான், ஆயிரத்தெழுநூற்றெண்பத் தொன்பதாம் வருஷத்திலே, பாரிஸ் தெருவுகளிலே மிதித்துச் சென்ற காலடிகளின் ஓசை காற்ருேடு தாங்கி வந்து தெரிவித்தது. லூசி நினைத்ததைப்போல், இந்தக் காலடிகள் அவளுடைய வாழ்க்கையிலே வந்து புகாமலிருக்க ஈசுவரன் தான் அருள வேண்டும் !

## அத்தியாயம்: 16.

### தீ பரவுகிறது

அந்தக் கிராமத்திலே, குழாயடியில் ஜனங்கள் கூடியிருந்த இடத்திலே ஒரு மாறுதலேற்பட்டுவிட்டது. அந்தக் குன்றின் மேலேயிருந்த சிறைச்சாலை முன்போல் இல்லை. அதை காவல் காக்க சிப்பாய்களிருந்தனர்; ஆனால் அதிகப் பேர் இல்லை.

எங்கு பார்த்தாலும் பூமி வறண்டு கிடந்தது. அந்த ஜனங்களைப்போலவே, ஒவ்வொரு பசும்புல்லும், தனிச்செடியும் வாடி வதங்கி வற்றிக்கிடந்தது. எல்லாம் ஒரே வறட்சி மயம்; வீடுவாசல், ஆடு, மாடு, ஜனங்கள் குழந்தைகள் அவர்களைத் தாங்கின நிலம் எல்லாம் நசுக்குண்டு மிதித்கப்பட்டுக் காய்ந்து கிடந்தது.

இந்த மாறுதலைப்பற்றி நாம் குறிப்பிடவில்லை: அந்த கிராமத்தில் மட்டுமில்லை, அதைப்போல் இன்னும் ஆயிரம் கிராமங்களிலும் இந்த மாறுதல் ஏற்பட்டிருந்தது. பல வருஷங்களாகவே மகாப்பிரபு இந்தக் கிராமங்களை நெருக்கிப் பிழிந்து சாறை உறிஞ்சிவிட்டார். ஆகையால் இது ஒறு மாறுதலில்லை. ஆனால் அந்த கீழ் ஜாதி மக்களிடையே, முகத்திலே ஒரு மாறுதல் தோன்றியிருந்தது.

ஒருநாள் ரோடு மேஸ்திரி கொஞ்சம்கூடக் கவலையின்றி குனிந்துகொண்டு தன் வேலையில் முனைந்திருந்தபோது அவனிடம் ஒரு ஆள் வந்தான். அவன் உயரமாயிருந்தான். காலில் மரக்கட்டை ஜோடுகள் அணிந்திருந்தான்; உடம்பெல்லாம் மயிரடர்ந்து பார்ப்பதற்கு அசங்கியமாயிருந்தான். அவன் தேகமெல்லாம் ஒரே புழுதி மயமாயிருந்தது.

அந்த மனிதன் இவனை உற்றுப் பார்த்தான். பிறகு கிராமத்தையும் மலைமேலிருந்த சிறையையும் உற்றுப் பார்த்தான். பிறகு மெதுவாகச் சொன்னான்.

"ஜாக், எப்படியிருக்கிறது எல்லாம்?"

"எல்லாம் சரியாயிருக்கிறது, ஜாக்."

அவர்களிருவரும் தரையில் உட்கார்ந்து கொண்டனர். பிறகு அந்த மனிதன் "சாப்பாடு இல்லையா?" என்று கேட்டான்.

"இல்லை, சொல்ப ஆகாரம்தான்" என்றான் மேஸ்திரி.

வந்தவன் தன் சுங்கானை எடுத்து அதை பற்றவைத்து வாயில் வைத்துக்கொண்டான். பிறகு அதைக் கையில் எடுத்து அதற்குள் ஏதோ ஒரு பொடியைப் போட்டான். அது உடனே "குப்பெ"ன்று ஜ்வாலையாக எழுந்தது. அதைப் பார்த்ததும் மேஸ்திரி கேட்டான்:—

"அப்போ தொட்டுவிடலாமா? இன்று இரவேயா?"

"ஆம்; இன்றிரவு" என்று சொல்லி விட்டு வந்தவன் சுங்கானை வாயில் வைத்துக்கொண்டான்.

"எங்கே?"

"இங்கே."

"சரி; அதோ அந்த குன்றுக்கு அப்புறம் கொஞ்ச தூரம் போய், அங்கேதான்."

"சரி, உன் வேலை எப்போது முடியும்?"

"அஸ்தமன சமயத்தில்."

"என்னை நீ போகும்போது எழுப்பி விடு. நான் தூங்கப் போகிறேன், இரண்டு நாளாய் துளி தூக்கமில்லை."

வழிப்போக்கன் அப்படியே கற்களின்மேல் தலையை வைத்துக்கொண்டு சாய்ந்தான். சில நிமிஷங்களில் அயர்ந்து தூங்கிவிட்டான்.

அந்த மனிதன் தூங்கிக்கொண்டேயிருந்தான். அவன் மேலே பனிக்கட்டிகள் விழுந்தன; பிறகு சூரிய வெளிச்சம் அவன்மேலே பிரகாசித்தது. அவ்வளவுக்கும் அவன் அசைய வில்லை. அவன் தூங்கிக்கொண்டேயிருந்தான். சூரியன் அஸ்தமித்தது. ரோடு மேஸ்திரி தன் வேலை முடிந்து ஆயுதங்களை மூட்டை கட்டிக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினான். புறப்படும் போது அந்த மனிதனை எழுப்பினான்.

"சரி; அந்த மலைக்கு அப்பால் தானே?" என்றான் எழுந்ததும் அவன்.

"ஆமாம்"

"நல்லது!"

ரோடு மேஸ்திரி வீட்டுக்குப் புறப்பட்டான். அன்றிவு ஆகாரம் முடிந்ததும் அந்த கிராமம் முழுவதும் வழக்கம் போலப் படுக்கப்போகவில்லை. வீட்டுக்கு வெளியே வந்து காத்துக்கொண்டு நின்றது. தொத்துநோயால் பீடிக்கப்பட்டது போல் எல்லோரும் குழாயடியில் வந்து சேர்ந்தனர்; இன்னொரு தொத்துநோயைப்போல எல்லாரும் ஆகாயத்தில் ஒரே திசையை நோக்கினர். அந்த ஊரின் அதிகாரியான காபில்லுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவனும் வீட்டு மெத்தையின்மேல் ஏறி அதே திக்கை உற்றுநோக்கினான்.

இரவு சூழ்ந்தது, பெருங் காற்றொன்று அடித்து மரங்களை ஆட்டி வைத்தது; அதன் அதிர்ச்சியிலே அந்தப் பிர்ம்மாண்டமான மாளிகையே விழுந்து விடும்போல் தோன்

றிற்றி. மழையும் சேர்ந்தது; ஆயிரம்பேர் சேர்ந்து கதவை யிடிப்பதுபோல் அந்த பெருத்த கதவுகளின்மேல் வந்து மோதியடித்தது. அதே சமயத்தில், அந்தப் புயல் மத்தி யிலே, மாளிகைத் தோட்டத்திலே நான்கு உருவங்கள் தோன்றிப் புகுந்தன: அவை நான்கு திக்குகளிலும் பிரிந் தன.

சற்று நேரத்தில் இருண்டிருந்த மாளிகை விநோதமாகப் பிரகாசமடைந்தது. முன் பகுதியிலே ஒரு சிறு விளக்குப் போல உருவெடுத்த தீ ஒரு பெரும் ஜ்வாலையாக மாறி அந்த மாளிகையை விழுங்கத் தொடங்கிற்று.

மாளிகைக்குள்ளே ஒரு பரபரப்பு. பல குரல்களின் குழப்பமான சத்தம்; பல போர்வீரர்கள் குதிரைகளின் மேலேறிப் பரபரப்புடன் "நெருப்பு! நெருப்பு" என்று கதறிக்கொண்டே பாய்ந்தோடினர். ஆனால் யாரும் உதவிக்கு வரவில்லை.

மாளிகை எரிந்தது; சமீபத்திலே யிருந்த மரங்களெல் லாம் கருகிச் சாம்பலாயின. எல்லாம் ஒரே புகைமயமா யிருந் தது. அந்த நான்கு உருவங்களும் தங்கள் வேலையைச் செய்து விட்டுக் கிளம்பின. மாதாகோயிலின் மணி சந்தோஷ ஆரவாரத்துடன் காது செவிடுபட ஒலித்தது.

---

# அத்தியாயம் : 17.

## காந்த சக்தி

இவ்விதம் சமுத்திரம் கொதித்துக் கொந்தளித்து அலை மோதிக்கொண்டே யிருந்தது: அதனுடைய ஆவேசத்துக்கு ஒரு எல்லையில்லைபோல் தோன்றியது. மூன்று வருஷங்கள் கழிந்தன. ராஜசபை அடியோடு மறைந்து விட்டது. ராஜ நாயகம் நசுக்கப்பட்டு "நிறுத்தி வைக்கப்பட்டது."

இந்தச் செய்திகளெல்லாம் லண்டனிலே கிடைக்கு மிடம் டெல்ஸன் பாங்குதான். பழைய வியாபார முறையில் பிரஞ்சு செல்வவந்தர்களெல்லாம் இங்கேதான் கூடுவது வழக்கம். அங்கே புரட்சி புயல் தோன்றியதுமே பிரபுக்கள் தங்க ளிடம் இருந்ததைச் சுருட்டி பாங்குக்கு அனுப்பி விட்டனர். ஆகையால் பிரான்சிலிருந்து செய்தி இங்கேதான் சீக்கிரம் வந்தது: அங்கிருந்து யாராவது வந்தாலும் முதலில் இங்கே தான் வந்து இறங்குவார்கள். இந்த விஷயம் ஜனங்களுக்கும் தெரிந்திருந்ததால் உடனுக்குடனே செய்தியறிய ஜனங்கள் இங்கேயே கூடுவது வழக்கமாய் விட்டது.

ஒருநாள் பிற்பகல் லாரி வழக்கம்போல் தமது மேஜை யடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். சாலஸ் டார்னே அதன் மேல் சாய்ந்துகொண்டு தணிவான குரலில் பேசிக் கொண் டிருந்தான்.

"நானே போகலாம் என்று தோன்றுகிறது" என்றான் சாலஸ் டார்னே.

"வாஸ்தவம்தான்! நீ சின்ன வயசுதான்: நல்ல யோசனை சொல்லுகிறாய். நீயே போகிறாயா? நீ, பிரஞ்சுக் காரனான நீ? நல்ல யோசனைதான்" என்றார் லாரி.

"மிஸ்டர் லாரி, நான் பிரஞ்சுகாரனாய் இருப்பதால் தான் அப்படித் தோன்றுகிறது. எனக்கு அந்த ஏழை ஜனங்களிடத்தில் அனுதாபம் இருப்பதினால்தான்; அவர்களுக்காகவே ஒரு நன்மையைச் செய்திருப்பதால்தான், இப்போது அவர்களை என் பேச்சைக் கொஞ்சம் கேட்க வைக்கலாம். நேற்று ராத்திரி நீங்கள் போனபிறகு லூசியிடம் பேசிக்கொண்டிருந்தபோது—"

"லூசியிடம் பேசிக்கொண்டிருந்தபோது! இந்த சமயத்தில் அங்கே போகிறேன், அந்த ஆபத்தான தேசத்துக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு லூசி பெயரைச்சொல்ல உனக்கு வெட்கமாயில்லையா !"

"இருந்தபோதிலும் நான் போகவில்லை. நீங்கள் சொன்னதனால் போகலாமென்று நினைத்தேன்" என்றான் டார்னே புன்சிரிப்புடன்.

லாரி தூரத்திலே டாக்டரின் வீட்டை நோக்கிக் கொண்டே சொன்னார்: "என் அப்பனே, சாலஸ், நான் போகப்போகிறேன். அங்கே எங்கள் காரியாலயத்தில் என்ன அமர்க்களமாக இருக்கிறதோ. அங்கே ஏதாவது தஸ்தாவேஜிகள் நாசமாய்விட்டால் எங்கள் வியாபாரம் என்ன ஆகும்? இப்போதுதான் அங்கே என்ன நிலைமையிலிருக்கிறது என்று யாருக்குத் தெரியும்? பாரிஸ் முழுவதுமே தீ வைத்துக் கொளுத்தினால் யார் கேட்கமுடியும்? நான் போய்த்தான் ஆகவேண்டும்!"

"இன்று ராத்திரியே போகிறீர்களா?"

"இனிமேல் தாமதிக்க முடியாது."

"கூட யாரும் வருகிறார்களா?"

"ஜெர்ரியைத்தான் அழைத்துக்கொண்டுபோகப் போகி றேன். இத்தனை வருஷமாக என் கூடவே பழகியவன் அவன். அவனுக்கு மூளையில்லாத போதிலும் நாய்போல எஜமான னைக் காவல் காப்பான்."

"உங்களுடைய உற்சாகத்தை நான் போற்றுகிறேன்."

"சட், சட்!—இதை முடித்துக்கொண்டுவந்ததும், நான் ஒரு வேளை டெல்ஸனைவிட்டு விலகி ஓய்வு எடுத்துக்கொள்ள லாம்."

இந்த சம்பாஷணை மேஜையடியிலேயே நடந்தது. சாலஸ் டார்னே விடைபெற்றுக்கொண்டு போகலாம் என்று நினைத் துத் திரும்பியபோது, இந்த சம்பவம், அவனை அவனுடைய விதியுடன் சேர்த்துப் பிணைக்கும் சம்பவம் நடந்தது.

ஒரு குமாஸ்தா லாரியின் மேஜைமேல் ஒரு உடைக்கப் படாத கவரை வைத்துவிட்டு, "அந்தக் கவரின் விலாசதாரை கண்டுபிடிக்க முடிந்ததா?" என்று கேட்டார். அந்தக் கவ ரின்மேலிருந்த விலாசத்தைத் தற்செயலாகக் கண்ட டார்னே திடுக்கிட்டான்: ஏனென்றால் அது அவனுடைய சொந்தப் பெயரேதான். "ரோம்ப அவசரம்: மெஸ்ஸோர், மகாப்பிரபு எவிரிமான். பிரான்ஸ்-இங்கிலாந்து டெல்ஸன் பாங்கி மூலம்" என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

விவாக தினத்தன்று காலையில், இவனுடைய உண்மைப் பெயரை அறிந்து கொண்டதும் டாக்டர் மானெட் அதை ரகசியமாகவே வைத்திருக்கவேண்டும் என்று சொன்னதால், வேறு யாருக்கும் அந்த ரகசியம் தெரியாது.

தன்னைக்கேட்ட குமாஸ்தாவுக்கு லாரி "இதைப்பற்றி ரொம்பப்பேரைக் கேட்டுவிட்டேன் இந்த விலாசதார் கிடைக்கவேயில்லை." என்றார்.

அங்கே கூடியிருந்தோர் அந்த விலாசதாரைப்பற்றி ஆளுக்கொரு வார்த்தை சொன்னார்கள். ஆனால் யாரும் வேண்டிய தகவலைத் தரமுடியவில்லை.

"இந்தப் பயலா !—இவன் என்னவோ புதுக்கொள்கையாம்—அதற்காக தன் சொத்து சுதந்திரங்களை விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டான். இவனுக்கு இப்போது சரியான பாடம் கற்பிப்பார்கள்" என்றார் அதைப்பார்த்த ஒரு மாஜி பிரஞ்சுப் பிரபு.

"அப்படியா ! அந்த அழகான பெயரைப் பார்ப்போம். எங்கே—அட முட்டாள் பயலே !" என்றார் அங்கே அப்போதுதான் நுழைந்த ஸ்டிவர்.

இதுவரையில் ரொம்ப சிரமப்பட்டு தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டிருந்த டார்னே சொன்னான் : "எனக்கு அந்தப் பயலைத் தெரியும்."

"நீ இந்தக் கடிதத்தைக் கொண்டுபோகிறாயா ? அதை கொடுக்க வேண்டிய இடம் உனக்குத் தெரியுமா ?" என்றார் லாரி அவனைப் பார்த்து.

"தெரியும்"

"இது எப்படி இங்கே வந்து இருந்ததென்றும், இதன் விலாசதார் இருப்பிடம் தெரியாததால் தாமதமாகி விட்டதென்றும் சொல்வாயா ?"

"அப்படியே சொல்லுகிறேன். இப்படியே பாரிஸுக்குப் புறப்படுகிறீர்களா ?"

"ஆமாம், எட்டுமணிக்கு."

"உங்களைப் புறப்படும்போது வந்து பார்க்கிறேன்."

நெஞ்சில் ஒரு பெரும்பாரம் அழுத்த, ஒரு ஜனசந்தடியற்ற தனியிடத்தை அடைந்து டார்னே அந்தக் கடிதத்தை உடைத்துப் படித்தான் :—

" அப்பே சிறை " பாரிஸ்

" ஜூன் 21, 1792."

"மூஸே மகாப்பிரபு அவர்களுக்கு,

'கிராமத்தாரின் கையிலகப்பட்டு நான் சித்திரவதை யனுபவித்தபின் என்னை நடத்தியே பாரிஸுக்குக் கொணர்ந்திருக்கிறார்கள். என்னுடைய வீடு தீ வைத்துக் கொளுத்தப்பட்டு விட்டது.

"மகாபிரபுவே, நான் பொது ஜனத் துரோகம் செய்ததுதான் என் குற்றமாம். அவர்களுக்கு விரோதமாக ஒரு ஆசாமியை வெளியேற உதவி செய்தேனும். நான் என்ன சொல்லியும் பயனில்லை. நான் வரிகூட வசூலிப்பதில்லை, எல்லாவற்றையும் பொது ஜனங்களுங்கே ஒப்புவித்துவிட்டேன் என்று எவ்வளவு சொன்னாலும் கேட்பதில்லை. ஊரைவிட்டு ஓடின ஆசாமி எங்கே என்று என்னைக்கேட்கிறார்கள்.

"மகாப்பிரபுவே ! அவர் எங்கே ? இதே குரலில் நான் கூவியழுகிறேன். தூக்கத்திலேயும் இதே கூவல்தான் ! என்னைக் காப்பாற்ற, எனக்கு உயிர்ப்பிச்சை அளிக்க அவர் வரமாட்டாரா ? மகாப்பிரபுவே ! கடல் கடந்து உங்களைக் கூவியழைக்கிறேன். ஒரு வேளை, இந்த அனாதையின் அபயக்குரல் உங்கள் காதிலே படுமென்று நம்பி இதை டெல்ஸன் பாங்கு வழியாக அனுப்புகிறேன்.

"இந்த பயங்கரமான சிறையிலிருந்து, என்னுடைய முடிவை நோக்கி ஒவ்வொரு நிமிஷமும் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்த சமயத்தில் உங்களைக் கூவி, தண்டனிட்டு அழைக்கிறேன்.

தங்கள்

துன்பத்திலகப்பட்ட ஊழியன்,

காபில்"

டார்னேயின் நெஞ்சிலே உருவகப்படாமல் தேங்கியிருந்த உபத்திரவ உணர்ச்சியெல்லாம் பொங்கி யெழுந்தது. அந்தக் குடும்பத்துக்கு ஊழியம் செய்ததைத் தவிர வேறொரு குற்றமும் செய்திராத அந்த நம்பிக்கையான ஊழியனின் பரிதாபகரமான நிலைமை கோர ரூபத்துடன் அவன் கண் முன்னே எழுந்தது.

பலகாலமாகச் செய்து வந்த பாபமூட்டைகள் தலைமேலேறிய அந்தக் குடும்பத்தைவிட்டு வெளியேறினபோது, அவன் செய்ய வேண்டியதை முறைப்படி செய்து முடிக்கவில்லை யென்று அவனுக்குத் தெரியும். அந்த சொத்துக்களை, பட்ட, கௌரவங்களை அவன் துச்சமென நினைத்து உதறித் தள்ளிவிட்டான். ஆனால் அந்தக் காரியத்தை அவன் முறையாகச்செய்யவில்லை. லூசியின் மேலிருந்த பிரேமையினால் மறுபடியும் அங்கே போய் ஆகவேண்டிய காரியங்களை அவன் கவனிக்க முடியவில்லை.

ஆனால் அவன் யாரையும் இம்சிக்கவில்லை; ஒருவரையும் சிறையிலடைக்கவில்லை; கட்டாயப்படுத்தி வரி வசூலிக்கவில்லை. தனக்கு அந்த உரிமையே வேண்டியதில்லையென்று தானாகவே வெறுத்துத் தள்ளிவிட்டான். உலகத்திலே மற்ற மனிதர்களோடு தானும் ஒருவனாகச் சேர்ந்து, தன் கையால் உழைத்துச் சாப்பிடத் தொடங்கிவிட்டான். மற்ற சாமான்ய மனிதர்களுக்கில்லாத தனி உரிமை ஏதும் தனக்கு வேண்டுமென்று அவன் விரும்பவில்லை. காபிலிடம் ஜமீன் முழுவதையும் ஒப்புவித்துவிட்டு, ஜனங்களை யாதொரு விதத்திலும் தொந்தரவு செய்யக்கூடாது என்று உத்தரவும் எழுதித்தந்துவிட்டான்.

ஆகையினால் உடனே பிரான்ஸுக்குப் போகவேண்டுமென்று அவன் நினைத்த தீர்மானம் வலுவடைந்து வந்தது.

கடைசியில் போவதென்று முடிவுசெய்து விட்டான். இந்த விஷயம் லூசிக்கும் அவளுடைய தகப்பனுருக்கும் புறப்படும் வரையில் தெரியக் கூடாதென்றும் தீர்மானித்துக் கொண்டான்.

அன்று மாலை ஏற்கனவே அவரிடம் சொல்லியிருந்தபடி லாரியைப் பார்க்க டெல்ஸன் பாங்கை அடைந்தான். அவரிடம் கூட இவனுடைய தீர்மானத்தைப்பற்றித் தெரிவிப்பதில்லை என்று நிச்சயித்துக் கொண்டான்.

பாங்கு வாசலில் ஒரு குதிரை வண்டி தயாராக நின்றது. ஜெர்ரியும் பிரயாணத்துக்கு ஆயத்தமாக நின்ருன்.

சாலஸ் டார்னே "நான் கடிதத்தைக் கொடுத்து விட்டேன். ஆனுல் பதில் கடிதம் ஒன்றும் இல்லை. ஒரேயொரு வார்த்தைமட்டும் சொல்லவேண்டும்" என்ருன் லாரியைப் பார்த்து.

"நான் அதைச் சொல்லிவிடுகிறேன்—ஏதும் அபாயமில்லாவிட்டால்" என்ருர் லாரி.

"ஒன்றுமில்லை. அப்பே சிறையிலிருக்கும் ஒரு கைதிக்கு செய்தி சொல்ல வேண்டும்."

"அவன் பெயரென்ன ?" என்ருர் லாரி குறிப்புப் புத்தகத்தைத் தயாராக கையில் பிரித்து வைத்துக்கொண்டு.

"காபில்"

"அவனுக்கு என்ன செய்தி ?"

"கடிதம் கிடைத்துவிட்டது; ஆசாமி வந்து விடுவார், இவ்வளவுதான்."

"சரி"

பெரிய பெரிய சட்டைகளை எடுத்து அணிந்துகொண்டார் லாரி. அவர்புறப்படும் சமயத்தில் "லூசிக்கும், குழந்தை லூசிக்கும் என் அன்பைக் கொடு. அவர்களை ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள். நான் போய் வருகிறேன்" என்று சொல்லி அவன் கையைக் குலுக்கிவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டார். வண்டி கிளம்பிற்று.

அன்றிரவு—அன்று ஆகஸ்டுமாதம், பதினுன்காம் தேதி, வெகு நேரம் வரையில் விழித்துக்கொண்டு இரண்டு கடிதங்கள் எழுதினுன். ஒன்று, லூசிக்கு: அவளுக்குத் தான் அவசரமாகப் போகவேண்டிய காரணத்தையும், அங்கே தனக்கு ஆபத்து ஒன்றும் நேரிடாதென்பதையும் அதில் நன்ருக விளக்கியிருந்தான். இன்னென்று டாக்டருக்கு: அதில் குழந்தையையும் லூசியையும் பார்த்துக்கொள்ளும்படியும், புறப்பட்டதன் காரணத்தைப்பற்றியும் விஸ்தாரமாக எழுதியிருந்தான். இரு கடிதங்களிலும் தான்போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுதுவதாக உறுதி கூறியிருந்தான்.

அன்றையதினம் அவனுக்கு ரொம்ப கஷ்டமாயிருந்தது. அவனுக்கு கல்யாணம் ஆனது முதல், அவர்களிடையே அவன் வந்து இருந்தது முதல், அவர்களிருவருக்கும் தெரியாமல் அவன் ஒருரகஸியமும் வைத்துக் கொண்டதில்லை. கொஞ்சம்கூட சந்தேகப்படாத அவர்களை வஞ்சிப்பது ரொம்ப சிரமமாயிருந்தது அவனுக்கு. சந்தோஷப் பொலிவு முகத்தில் ததும்ப திருப்தியுடன் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்த அவனுடைய மனைவியைப் பார்த்ததும், இதைச் சொல்லி அந்த அமைதியைக் குலைக்க அவன் மனம் கூசிற்று. அவனுடைய தீர்மானம் இன்னும் வலுவடைந்தது. அன்று மாலை அவளையும், குழந்தையையும் ஆர்வத்துடன் அணைத்துக் கொண்டான். தனக்கு அவசரமான ஒரு ஜோலியிருப்ப

தாகவும் சீக்கிரம் திரும்பிவிடுவதாகவும் சாக்கு சொல்லி விட்டுப் பிரிந்தான். கும்பல் நிறைந்த கனத்த மூடுபனிக்குள்ளே, அவனுடைய மனத்தின் கனம் நெஞ்சிலே அழுத்த அவன் மறைந்தான்.

கண்ணுக்குத் தெரியாத சூட்சும சக்திகள் அவனை வசீகரித்து இழுத்தன. காற்றின் வேகமும். கொந்தளித்துத் திரும்பும் அலையின் கதியும் அந்த சக்திகளுக்குத் துணை புரிந்து அவனை உந்தித்தள்ளிச் சென்றன.

---

# மூன்றும் புத்தகம்:

# புயல் செல்லும் பாதை

## அத்தியாயம் 18.

### ரகஸ்யச் சிறை

அந்தக் காலத்தில் இங்கிலாந்திலிருந்து பாரிஸ்நகருக்குப் போவதாக இருந்தால் ரொம்ப காலதாமதமாகும். பிரான்ஸ் அரசன் சிம்மாசனத்திலிருந்து அரசாட்சி புரியும் நாளிலேயே அந்தப் பிரயாணம் சிரமம். நல்ல ரஸ்தாக்களில்லை; குதிரைகள் சரியானபடி கிடைக்காது. ஆனால் தேசத்தின் மாறுபட்ட நிலைமையில் இன்னும் வேறு விதமான சிரமங்கள் உண்டாகி யிருந்தன. ஒவ்வொரு நகர எல்லையிலும், கிராமச்சாவடியிலும் தேச பக்தப் பிரஜைகள் நியமிக்கப்பட்டிருந்தனர். தயாராகத் துப்பாக்கியுடன் அவர்கள் காத்திருப்பார்கள். ஊருக்குள் வருவோரையும் வெளியே போவோரையும் அவர்கள் தடைசெய்து பரீக்ஷித்து, ஆயிரம் கேள்விகளைக் கேட்டபின் தான் அனுமதிப்பார்கள். அவர்களுடைய் காகிதங்களையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து அவர்களால் சமத்வம், சுதந்தரம், சகோதரத்வம் ஆகியவற்றை உத்தாரணம் செய்ய உதயமாகி யிருக்கும் குடியரசுக்கு ஆபத்தொன்றுமில்லையென்று நிச்சயமாய் அறிந்தபின் தான் விடுவார்கள்.

சாலஸ் டார்னே கொஞ்சதூரம் பிரயாணம் செய்த உடனேயே தனக்கு அந்த நாட்டிலே ஆபத்தின்றிப் போக முடியாது என்பதை உணர்ந்து கொண்டான். இருந்தாலும் என்ன வருவதானாலும் அவன் போய்த் தானாகவேண்டும்.

பல இடங்களில் அவனைத் தடைசெய்து நிறுத்தினர். கடைசியில் பல நாட்களாகியும் அவன் பாரிஸுக்கு வெகு தூரத்திலேயே யிருந்தான். ஒரு சின்ன கிராமத்தில் சிறிய விடுதியில் அவன் படுத்துத் தூங்கிக்கொண் டிருக்கும்போது நடுநிசியில் எழுப்பப்பட்டான்.

ஒரு அதிகாரியும் அவனுடன் மூன்று சிவப்புக் குல்லாய்களணிந்த தேசபக்தக் காவலர்களும் நின்றனர்.

" ஐயா உம்மை காவலுடன் பாரிஸுக்கு அனுப்பப் போகிறேன் " என்றான் அதிகாரி.

" *பிரஜையே, நான் கோருவது வேறொன்று மில்லை. ஆனால் காவல் அவசியமில்லை."

" சரி, சரி, வாயை மூடு!" என்று உறுமினான் ஒரு செந்தலை.

" அவர் சொல்வதும் சரிதான், நீர் ஒரு செல்வவந்தன். உமக்கு காவல் அவசியம் வேண்டும்" என்றான் அந்த அதிகாரி.

" நான் செய்வதென்ன இருக்கிறது? உங்களிஷ்டம் " என்றான் சாலஸ்.

டார்னே அவர்கள்கூட காவல்கூடத்திற்குச் சென்றான். அங்கே இன்னும் பல சொந்தலைகள் குடித்துக்கொண்டும், சிரித்துக்கொண்டும் இருந்தனர். விடியற்காலம் மூன்று மணிக்கு ஈரத்தில் நனைந்திருந்த ரஸ்தாவிலே சாலஸ் காவல் காரர்களுடன் அழைத்துச் செல்லப்பட்டான்.

அவனுக்கு இருபக்கத்திலும் இரு செந்தலைகள் உருவின துப்பாக்கியுடன் குதிரை யேறிச் சென்றனர். நடுவிலிருந்த அவன் நிராயுதபாணியாய் சவாரி செய்தான்.

---

*பிரெஞ்சு புரட்சி சமயத்தில் ஒருவரையொருவர் அழைத்துக் கொண்ட சமத்வ மரியாதைப் பதம்.

பூவே நகரத்தை யடைந்ததும் தான் பொதுவாக தேச நிலைமை எவ்வளவுமோசமாக இருக்கிறதென்பது அவனுக்குத் தெரிந்தது. குதிரை மாற்றும் லாயத்தில் அவன் இறங்கியதும், ஆவல்நிறைந்த ஒரு கேலிக் கும்பல் அவனையே உற்றுப்பார்த்துக்கொண்டு கூவிற்று: "*ஓடுகாலி ஒழிக! ஓடுகாலி ஒழிக!"

அதைக் கண்ட அவன் குதிரையை விட்டு இறங்காமல் சொல்லலானான்:—"நண்பர்களே! நானா ஓடுகாலி? இதோ என்னுடைய இஷ்டப்படியே நான் திரும்பிவந்திருக்கிறேன்."

"நீ ஒரு ஓடுகாலிப்பயல்! உன்னை இதனால் நசுக்க வேண்டும்!" என்று ஒரு கொல்லன் கையிலிருந்த சுத்தியை ஆட்டிக்கொண்டு கூவினான்.

அதற்குள் அந்த லாயத்தின் அதிகாரி குறுக்கே வந்து "பரவாயில்லை! அவனை விடு! பாரிஸில் அவனைச் சரியானபடி விசாரிப்பார்கள்" என்று அந்தக் கொல்லனை சமாதானம் செய்தான்.

"விசாரிக்கவா! விசாரித்து தேசத் துரோகியை தூக்கில் போடவேண்டும்!" என்று கத்தினான் கொல்லன்.

அந்தக் குழப்பமான குரல்களுக்கு மேலே சாலஸ் சொன்னான்:—

"நண்பர்களே! உங்களுக்குத் தெரியாது! நான் தேசத் துரோகியில்லை."

"பொய், பொய்! அவனைக் கொல்ல வேண்டும்!"

---

* தேசத்திலே புரட்சி யேற்பட்ட சமயத்தில் செல்வவந்தர்களும் பிரபுக்களும் தம் உயிருக்கஞ்சி தேசத்தை விட்டு ஓடி விட்டனர். அதனால் ஜனங்களுக்கு அவர்களிடத்தே ஒரு வெறுப்பும் வஞ்ச உணர்ச்சியும் மிதமிஞ்சி நின்றது.

அந்த சமயத்தில் லாயத்தின் எஜமான் நல்ல வேளையாக குதிரையைத் திருப்பி உள்ளே இட்டுக்கொண்டு போய்விட்டான். இல்லாவிட்டால் அந்தக் கும்பல் அவன் மேல் பாய்ந்திருக்கும்.

அன்று அங்கேயே தங்கிவிட்டு அவர்கள் மறுபடியும் இரவில் பிரயாணத்தைத் தொடங்கினர். மறுநாள் காலையில் பாரிஸ் நகரத்தை யடைந்தனர். வெளி வாசலில் கடுமையான காவல் போடப்பட்டிருந்தது.

ஒரு சிப்பாய் அவர்களைக் கண்டதும் முன்னால் வந்து "இந்தக் கைதியின் காகிதங்கள் எங்கே?" என்று கேட்டான் அதிகாரமாக.

கைதி என்ற சொல்லைக்கேட்டதும் சாலஸின் மனம் புண்பட்டது. அந்த அதிகாரியிடம் தான் ஒரு பிரஞ்சுப் பிரயாணி என்றும், தன்னிச்சைப்படி பிரயாணம் செய்வதாயும், தன்னிஷ்டப்படியே காவலாளர்களை அழைத்துவந்ததாயும் தெரிவித்தான்.

ஆனால் அவன் சொன்னதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் "எங்கே யப்பா காகிதங்கள்?" என்று கேட்டான் அவன். கூடவந்த காவற்காரன் தன் குல்லாய்க்குள்ளிருந்து காகிதங்களை யெடுத்துக் கொடுத்தான்.

அதை வாங்கிப்பார்த்த அதிகாரி சற்று ஆச்சரியத்துடன் டார்னேயைப் பார்த்தான். பிறகு ஒன்றும் பேசாமல் உள்ளே நுழைந்தான்

அரைமணிநேரம் கழித்து அந்த சிப்பாய் கூட வந்த காவற்காரர்களிடம் ஒரு ரசீதைக்கொடுத்து விட்டு சாலஸை உள்ளே அழைத்துக்கொண்டுபோனான். மற்ற காவலர் இருவரும் வந்த வழியே குதிரையுடன் திரும்பினர்.

சாலஸ் சிப்பாயியின் கூட உள்ளே நுழைந்தான். அங்கே ஒரே ஒயின் நாற்றமும் புகையிலை நாற்றமும் வீசிற்று. பல 'தேசபக்தர்கள்' படுத்துக் கொண்டோ, தூங்கிக்கொண்டோ, குடித்துக் கொண்டோ, பேசிக் கொண்டோ காலங் கழித்துக் கொண்டிருந்தனர். அவர்களெல்லோரும் தூக்கத்திற்கும் விழிப்புக்கும், குடிமயக்கத்துக்கும் சுயப்பிரக்ஞைக்கும் இடையே உள்ள பல விதமான நிலைமைகளில் ஸ்திரமின்றி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதைப்போலவே, அந்த அறையின் விளக்கும் ஸ்திரமின்றி மங்கலாகப் பிரகாசித்தது. ஒரு சாய்வான மேஜையின்மேல் பல கணக்குப் புத்தகங்கள் கிடந்தன. அவற்றின் தலைமையில் ஒரு கரடு முரடான ரூபம் படைத்த அதிகாரி அமர்ந்திருந்தான்.

டார்னேயை அழைத்துவந்த ஆசாமியை நோக்கி அவன் கேட்டான்:—" பிரஜை டிபாஜ், இதுதான் ஓடுகாலி எவரிமான்றா?"

" இவன்தான். "

" எவரிமான், உன் வயதென்ன?"

" முப்பத்தேழு. "

" கலியாணம் ஆகிவிட்டதா?"

' ஆகிவிட்டது. "

" எங்கே?"

" இங்கிலாந்தில். "

" சரி. உன் மனைவி எங்கே?"

" இங்கிலாந்தில். "

"ரொம்பசரி. எவரிமான், உன்னை லா போர்ஸ் சிறைக்கு அனுப்புகிறேன்."

"அய்யோ! என்ன குற்றம், செய்தேன்? எந்த சட்டப்படி?" என்று கூவினான் சாலஸ்.

"எவரிமான், நீ போனபிறகு இங்கே புதிய சட்டங்களும், புதிய குற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன" என்று சொல்லிவிட்டு அவன் எழுத ஆரம்பித்தான்.

"நான் என்னுடைய இஷ்டப்படியே இந்த காபிலின் வேண்டுகோளுக்காக வந்தேன். அதை நிறைவேற்றமட்டும் எனக்கு அனுமதி கொடுக்கவேண்டும். அதைக் கேட்க எனக்கு உரிமையில்லையா?"

"ஓடுகாலிகளுக்கு உரிமை ஏது?" என்றான் அதிகாரி. எழுதி முடித்ததும் அவன் அதைத் திருப்பிப் பார்த்துவிட்டு, முத்திரையிட்டு டிபாஜின் கையில் கொடுத்து "ரகஸ்யமாக" என்று சொன்னான்.

காகிதத்தைக் கையில் வாங்கிக்கொண்ட டிபாஜ் தன்கூட வரும்படி சாலஸுக்கு சைகைசெய்தான். கைதி பின்தொடர்ந்தான். இரண்டு ஆயுதமணிந்த சிப்பாய்கள் அவர்களுடன் புறப்பட்டனர்.

வெளியில் வரும்போது "நீதானா, அந்த டாக்டர் மானெட்—பாஸ்டில் கைதியாயிருந்தாரே, அவருடைய—மகளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டது?" என்று கேட்டான் டிபாஜ்.

"ஆமாம்" என்று ஆச்சரியத்துடன் டிபாஜைப் பார்த்தான் டார்னே.

"என் பெயர் டிபாஜ். இங்கே ஒரு ஒயின்கடை வைத்திருக்கிறேன். நீ கூட என்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம்."

'ஓ! உன்னுடைய கடைக்குத் தானே என் மனைவி வந்தாள், தன் தகப்பனாரை அழைத்துக்கொண்டுபோக."

அவன் "மனைவி" என்று சொன்னதும் டிபாஜ் மனத்திலே பளிச்சென்று ஒரு வேகம் தோன்றிற்று. உடனே கேட்டான். "நீ இங்கே எதற்காக வந்தாய்? பிரான்சுக்கு ஏன் வந்தாய்?"

"கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் சொன்னேனே. நீ கேட்கவில்லையா?"

"கேட்டு பிரயோசனம்?" என்று புருவத்தை நெரித்துக் கொண்டு யோசித்தான் டிபாஜ.

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை இங்கே. எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கிறது. எனக்கு ஒரு சின்ன உதவி செய்வாயா?"

"முடியாது."

"ஒரே யொரு கேள்விக்குப் பதில் சொல்லுவாயா?"

"கேள்வியைப் பொருத்திருக்கிறது."

"என்னைக் கொண்டுபோகிறார்களே, அந்த சிறையிலிருக்கும்போது வெளியுலகத்துடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள முடியுமா கடிதமூலம்?"

"தானே தெரிகிறது."

"என்னுடைய கட்சியை எடுத்துப்பேச ஒரு சந்தர்ப்பம் கொடுக்காமல் உள்ளே என்னை புதைத்துவிடுவார்களா?"

"எல்லாம் தெரியும். அப்படியானுல்தான் என்ன? இதற்கு முன்னுல் வேறு ஜனங்கள் இதேமாதிரி ஆயுள்பரியந்தம் அடைக்கப்பட்டுக் கிடந்திருக்கிறூர்களே."

"என் மூலம் ஒரு காலத்திலும் இல்லை, பிரஜை டிபாஜ்."

டிபாஜ் பதில் சொல்லாமல் உறுதியாக், நடந்து சென்றுன். அவனுடைய மௌனத்தைக் கண்டு பீதியடைந்த டார்னே அவசரம் அவசரமாகச் சொன்னுன்.

"பிரஜை டிபாஜ், அது ரொம்ப முக்கியமான விஷயம். (எவ்வளவு முக்கியம் என்று உனக்கே தெரியும்) அங்கே டெல்ஸன்பாங்கைச் சேர்ந்த மிஸ்டர் லாரி வந்திருக்கிறூர். அவரிடம் நான் லாபோர்ஸ் ஜெயிலில் அடைபட்டிருக்கிறேன் என்ற செய்தியை, வெறும் செய்தியை மட்டும் தெரிவிக்க வேண்டும். இதற்கு நீ உதவி செய்யமாட்டாயா?"

"நான் ஒன்றும் செய்ய முடியாது. என்னுடைய கடமை தேசத்திற்கு நன்மை செய்வதுதான். நான் உன்னுடைய ஜன்ம விரோதி. உனக்காக ஒன்றும் செய்யமாட்டேன்."

இனிமேலும் வாதாடுவதில் பயனில்லை என்று உணர்ந்து கொண்ட டார்னே பேசாமல் பின் தொடர்ந்தான். அவர்கள் தெருவில் போய்க்கொண்டிருக்கையில் இந்தமாதிரியாக பிரபுக்கள் சிறைக்குப் போவது எவ்வளவு சர்வ சகஜமான சம்பவமாய்விட்டது என்பதைக் கண்டான் டார்னே. இவர்களை யாரும் கவனிக்கவில்லை. ஒரு இருண்ட தெருக் கோடியில் ஒரு பிரசங்கி ஆவேசத்துடன் அரசனும் அரச குடும்பத்தினரும் ஜனங்களுக்கு எவ்வளவு தீமை புரிந்துவிட்டனர் என்று வர்ணித்துக்கொண் டிருந்தான். அரசன் சிறையிலிருக்கிறுன் என்பதையும், மற்ற நாட்டு ராஜ தூதர்கள் பாரிசை விட்டுப்

போய்விட்டனர் என்பதையும் அவனுடைய பேச்சிலிருந்து தான் டார்னே தெரிந்துகொண்டான். வரும் வழியில் அவன் ஒன்றுமே கேள்விப்படவில்லை.

இங்கிலாந்தை விட்டுப் புறப்படும்போது தனக்கு எந்த விதமான ஆபத்துக்கள் நேருமென்று அவன் எதிர்பார்த்தானே அவற்றைவிட மிகவும் மோசமான ஆபத்துக்களிடையே சிக்கிவிட்டதை இப்போது அவன் உணர்ந்துகொண்டான். வரும் காலத்தில் இன்னும் எத்தனை விதமான அபாயங்கள் இருக்கின்றன என்பது அவனுக்குத் தெரியாது. அந்த அறியாமையிலேயே துளி நம்பிக்கையும் இருந்தது அவனுக்கு. மகா கொடூரமான கொலைகள்; இரவு பகல் இடைவிடாமல் ஓடப்போகும் இரத்த வெள்ளம்; அவற்றைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. புதிதாக உதயமாகியிருக்கும் *லா—கில்லட்டின்என்ற தேவதையைப்பற்றி அவனுக்கு என்ன தெரியும்? அந்த வரப்போகும் மகா பயங்கரச் செயல்கள் அவற்றைப் புரியப்போகும் ஜனங்களின் மனத்திலேயே அப்போது தோன்றியிருக்க முடியாது. அப்படியிருக்க, மிக நளினமான அவனுடைய இளகிய மனத்திலே எப்படி அவை தோன்றியிருக்க முடியும்?

நியாயமற்ற தண்டனை; தன் மனைவி குழந்தையிடமிருந்து பிரிந்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம்; இதற்குமேல் அவன் வேறொன்றையும் எதிர் பார்க்கவில்லை. இவ்வித எண்ணத்துடனேயே அவன் லாபோர்ஸ் சிறைக்கூடத்துக்குள்ளே நுழைந்தான்.

வீங்கியிருந்ததைப்போன்ற முகத்துடன் ஒரு ஜெயிலர் "ஓடுகாலி எவரிமான்"னை உள்ளே இட்டுச் சென்றான்.

---

* புரட்சி சமயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொலை செய்யும் கருவி.

அந்த சிறை ரொம்ப பழமையானது. ஒரே துர்க் கந்தம் வீசிற்று. பல அறைகளையும், இருண்ட கூடங்களையும் தாண்டி, பூமிக் கடியிலுள்ள ஒரு விசாலமான கிடங்கை யடைந்ததும் ஜெயிலர் நின்றான். அங்கே ஆண்களும்-பெண் களுமாக அநேக கைதிகள் இருந்தனர். பெண்கள் நீண்ட மேஜையடியில் உட்கார்ந்து படித்துக்கொண்டும், எழுதிக் கொண்டும் தையல் வேலை செய்துகொண்டும் இருந்தனர். ஆண்கள் நாற்காலியைப் பிடித்து நின்றுகொண்டும், அங்கு மிங்கும் உலாவிக்கொண்டும் இருந்தனர்.

அந்த கும்பலிலிருந்து ரொம்ப கண்யமான தோற்றத் துடன் இருந்த ஒருவர் முன்னால் வந்து பின்வருமாறு சொன் னார்: "இங்கு துன்பத்திலாழ்ந்து கூடியிருக்கும் சகோதரர்கள் சார்பாக உமக்கு துக்கம் தெரிவித்துக்கொண்டு இங்கே வர வேற்கிறேன். உம்முடைய பெயரையும் விவரத்தையும் கேட்கலாமோ? வேறு இடத்தில் அந்தமாதிரி கேட்பது மரி யாதையல்ல."

சாலஸ் டார்னே மெதுவாகத் தன் ஊர் பெயர் விவரத் தைத் தெரிவித்தான்.

அந்தக் கனவான், வெளியே போய்க்கொண்டிருந்த ஜெயிலரைப் பார்த்துக்கொண்டே கேட்டார்: "ஆனால் நீங் கள் ரகஸ்யக் கைதியில்லை யென்று நினைக்கிறேன்."

" அந்த வார்த்தைக்கு எனக்கு அர்த்தம் தெரியாது. ஆனால் அப்படித்தான் சொன்னார்கள்."

"ஆ! என்ன துர்ப்பாக்கியம்! நாங்கள் உங்களுக்காக வருந்துகிறோம். தைரியமா யிருங்கள். நம்மில் ரொம்பப் பேர் அப்படித்தான் முதலில் போனார்கள். ஆனால் சீக்கிரத் தில் விடுவிக்கப்பட்டுவிட்டார்கள்" என்று சொல்லிவிட்டுத்

திரும்பி அங்கே கூடியிருந்தோரை நோக்கி "ரகஸ்யத்தில்' என்று தெரிவிக்க வருந்துகிறேன்" என்றார்.

ஜெயிலருடன் கூட டார்னே வெளியே போகும்போது பல அனுதாபக் குரல்கள் அவனுக்குத் தைரிய மூட்டின.

வாசற்படியண்டை ஒரு கருங்கல் படிக்கட்டு மேலே போயிற்று. சுமார் நாற்பது படிகள் ஏறினதும் ஜெயிலர் ஒரு சின்னக் கதவைத் திறந்தான். ஒரு சின்னத் தனி அறை. அங்கே குளிர் அதிகமாயிருந்தது. இருட்டு அதிகமில்லை.

"இதுதான் உன் ஸ்தானம்" என்றான் ஜெயிலர்.

"என்னை ஏன் தனி அறையில் போட வேணும்?"

"எனக்கு எப்படித் தெரியும்!"

"எனக்கு பேனா, மை, காகிதம் வேண்டுமானால் வாங்க முடியுமா?"

"எனக்குத் தெரியாது. இங்கே வருகிறவர்களிடம் கேள். இப்போது சாப்பாடு வேண்டுமானால் கிடைக்கும்."

அந்த அறையில் ஒரு சின்ன மேஜை, நாற்காலி, ஒரு வைக்கோல் படுக்கை எல்லாம் இருந்தன. அவற்றையெல்லாம் பார்வையிட்டு விட்டு வெளியே போனான் ஜெயிலர். ஜெயிலர் போனதும் பைத்தியம் பிடித்ததுபோல் இருந்தது டார்னேக்கு.

"செத்துப்போனவன் போலிருக்கிறேன் இப்போது நான்" என்று தனக்குள்ளாகவே நினைத்துக் கொண்டான் அவன்.

"அஞ்சு தப்படிக்கு நாலரை; அஞ்சுதப்படிக்கு நாலரை." கைதி அறையை குறுக்கும் நெடுக்குமாக அளந்து கொண்டே நடந்தான். வெளியே நகரத்தின் ஓசைகள் துணி

யால் மூடப்பட்ட மேளத்தின் ஓசையைப்போல் மேலே எழுந்து கேட்டது.

" அவர் செருப்புத் தைத்தார் ; அவர் செருப்புத் தைத் தார்." கைதி மீண்டும் மீண்டும் அறையை அளந்து கொண்டே வேகமாக நடந்தான்.

" அவர் செருப்புத் தைத்தார், செருப்புத் தைத்தார்... அஞ்சுக்கு நாலரை, அஞ்சுக்கு நாலரை......." அவனுடைய மனத்தின் ஆழத்திலேயிருந்து இந்த மாதிரியான சிதைவுற்ற எண்ணத் திவலைகள் மேலெழுந்து தோன்றித் தோன்றித் துன்புறுத்தின; அவன் விடாமல் பிடிவாதமாக காலடியை எண்ணிக்கொண்டே வேகமாக, வேகமாக நடந்தான்.

---

# அத்தியாயம் 19

## சாயை

**பா**ரிஸில் ஸேன்ட் ஜோர்மன் பிரதேசத்தில் தெருவை விட்டு ஒதுங்கி யிருந்தது டெல்ஸன் பாங்க். அதைச் சுற்றிலும் ஒரு உயரமான சுவரும் அதற்கு ஒருவலுவான வாசற்படியும் இருந்தன. அது ஒரு பிரபுவுக்குச் சொந்தமான இடத்தில் இருந்தது. அந்தப் பிரபு இந்த நெருக்கடி வரும் வரையில் அங்கே தான் வசித்தார்.

பாங்கில் வியாபாரம் செய்துகொண்டிருந்த தனவந்தர்கள் சிறைக்குள்ளிருக்கும்போது, எவ்வளவு பணம், எத்தனை நகைகள் உள்ளே தூங்கும்? அந்த வரவு செலவு கணக்குகளை யார் பார்ப்பது ? எப்போது பார்ப்பது ?—போன்ற பிரச்னைகளுக்கு அன்றிரவு யார்தான் பதில் சொல்ல முடியும்? எவ்வளவுதான் யோசித்தாலும் லாரியால் மட்டும் அவற்றிற்கெல்லாம் பதில்சொல்லிவிட முடியுமா ? அடுப்பண்டை குளிர் காய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தார் லாரி. அவருடைய முகத்திலே பெரும்பீதியின் சாயை விழுந்திருந்தது.

தூரத்திலே தெருக்களிலே யிருந்து வழக்கமான நகரத்தின் கூச்சல் எட்டி வந்தது; அந்த கூச்சலோடு ஒரு பயங்கரத் தொனியும் அவ்வப்போது கலந்து கேட்கும்.

அப்போது வெளியே வாசற்படியிலுள்ள மணி ஒலித்தது. வாசல் நன்றாக காவல் காக்கப்பட்டு வந்தது. ஆதரியமாக எழுந்து வெளியே போகக் கிளம்பினார் லாரி. அப்போது அவருடைய அறையின் கதவு படீரென்று திறந்தது. உள்ளே நுழைந்த இரு உருவங்களைக் கண்டதும் திகைத்து ஸ்தம்பித்துவிட்டார்.

லூசியும் அவள் தந்தையும்! கெஞ்சும் பாவனையில் கைகளை முன்னால் நீட்டிக்கொண்டு பரிதாபகரமான கோலத்தில் உள்ளே நுழைந்தாள் லூசி.

படபடப்புடன் கேட்டார் லாரி: "இதென்ன இது! லூசி! மானெட்! என்ன நடந்துவிட்டது? இங்கே ஏன் வந்தீர்கள்? என்ன அது?"

அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டு மூச்சுத் திணற விழிகள் பிதுங்க "அய்யோ! என் புருஷன்!" என்று அவர்மேல் சாய்ந்தாள் அவள்.

"லூசி, உன் புருஷனா?"

"சாலஸ்"

"சாலஸ் என்ன?"

"இங்கே!"

"இங்கே, பாரிஸிலா?"

"ஆமாம்: மூன்று நான்கு நாளாக. எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. யாருக்கோ உதவி செய்ய இங்கே வந்தாராம். வழியில் பிடித்து ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்களாம்."

லாரி அப்படியே கத்திவிட்டார் அதைக் கேட்டதும். அதே சமயத்தில் வெளியில் மணியை ஓயாமல் அடிக்கும் சத்தமும், ஏகக் கூட்டம் உள்ளே நுழையும் கூச்சலும் கேட்டன.

"அது என்ன சப்தம்?" என்று டாக்டர் ஜன்னல் பக்கம் திரும்பிக் கேட்டார்.

"பார்க்காதீர்கள்! வெளியே எட்டிப் பார்க்கக்கூடாது!" என்று கூவினார் லாரி.

டாக்டர் திரும்பி நிதானமாக புன்சிரிப்புடன் சொன்னார்:—

"நண்பரே, இந்த நகரத்தில் என்னுடைய உயிர் மந்திர சக்தி பெற்றிருக்கிறது. நான் ஒரு பாஸ்டில் கைதியாயிருந்திருக்கிறேன். இந்த பாரிஸ் நகரத்திலே—இல்லை பிரான்ஸ் தேசத்திலேயே—என்னைத் தெரிந்துகொண்டதும், எனக்கு ஹிம்சை புரியும் நோக்கத்துடன் கிட்ட அணுகும் தேசபக்தனே யிருக்கமாட்டான். என்னுடைய பழைய கஷ்ட வாழ்க்கை எனக்கொரு சக்தியை அளித்திருக்கிறது. அதன் மூலம் தான் நாங்கள் சிரமமின்றி எல்லைக் காவல்களைக் கடந்து இங்கு வந்தடைந்தோம்; அதன்மூலமேதான் சாலஸைப் பற்றிய தகவல்களை யறிந்தோம். எனக்கு இது தெரியும்; சாலஸைக் காப்பாற்றிவிட முடியும் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும்—அதென்ன சத்தம்?

"பார்க்காதீர்கள்?" என்று கூறினார் லாரி பீதியுடன். "நீ கூடத்தான் அம்மா! பார்க்காதே!" அவளுடைய கையை இறுகப் பற்றிக்கொண்டார். "இப்படி பயப்படாதே அம்மா, சாலஸுக்கு ஒன்றும் வந்துவிடாது. எந்த ஜெயிலில் இருக்கிறான்?"

"லாபோர்ஸ்!"

"லாபோர்ஸ்! அம்மா லூசி, உன்னுடைய தைரியத்தையும் பொறுமையையும் இப்போதுதான் நீ காட்ட வேண்டும். ஆகையால் நான் சொல்கிறபடி கேட்கவேண்டும். இன்று இந்த சமயத்தில் நீ செய்யக்கூடியது ஒன்றுமே யில்லை. ஆகையால் நீ பேசாமல் சொன்னதைக் கேட்கவேண்டும். இங்கேயே பின்னுடி போய் பேசாமல் படுத்துக்கொண்டு தூங்க வேண்டும். நாங்கள் இரண்டுபேரும் தனியே யிருக்க வேண்டும். இப்போது எவ்வளவு ஆபத்தான நிலைமை என்பதை நீ உணரவேண்டும்."

"நான் நீங்கள் சொன்னதைக் கேட்கிறேன்."

லாரி அவளை அவசரம் அவசரமாக அழைத்துக் கொண்டுபோய் தமது அறைக்குள் விட்டுவிட்டு வெளியே பூட்டிக்கொண்டு வந்துவிட்டார். டாக்டருக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு கொஞ்சமாக ஜன்னலைத் திறந்து டாக்டருடன் கூட எப்படிப் பார்த்தார்.

கீழே வெளி முற்றத்திலே ஆண்களும் பெண்களும் நாற்பது ஐம்பது பேர் கும்பலாக நின்றனர். வெளியில் காவல் காத்தவர்கள் அவர்களை உள்ளே விட்டுவிட்டனர் அவர்கள் உள்ளே நுழைந்து அங்கேயிருந்த யந்திரக் கல்லைச் சுழற்றி தங்கள் ஆயுதங்களைத் தீட்டிக்கொண்டுபோக வந்திருக்கின்றனர்.

என்ன கொடூரமான வேலை!

அந்த யந்திரக் கல்லுக்கு இரண்டு கைப் பிடிகள். அந்த இரண்டையும் பிடித்து இரண்டு மனிதர்கள் சுழற்ற ஆரம்பித்தனர். அவர்களுடைய முகங்கள், தலை மயிர் முகத்திலே புரள பார்க்கப் பயங்கரமாய் காட்டு மிராண்டி களைப் போலிருந்தன. ஒரே ரத்தக் கறையும் வியர்வையும் கலந்து அவர்கள் தோற்றம் கோரமாயிருந்தது. ஓயாமல் கல் லைச் சுழற்றினர் அந்தக் கொலைகாரர்கள். அங்கே போட்டி போட்டுக்கொண்டு, சுழலும் கல்லை நெருங்கின ரூபங்களும் பயங்கரமாய் இருந்தன. ரத்தக்கறை படாத ஒரு உருவம் கூட அங்கே கிடையாது. இடுப்பு வரையில் கந்தல்களை இழுத் துத் கட்டிக்கொண்ட மனிதர்கள். அந்தக் கந்தல்கள் ரத்தத் தில் தோய்ந்திருந்தன. பலவகை கத்திகள், அரிவாள் கள், பிச்சுவாக்கள். எல்லாம் தீட்டப்படுவதற்காகக் கொண்டு வரப்பட்டன; எல்லாம் ரத்த மயம். தீட்டப்பட்ட ஆயுதங் களைப் பிடித்துக்கொண்டு ஆவேசத்துடன் அந்த ஜனங்கள்

தெருக்களில் குதித்தோடினர்; அவர்கள் கண்களிலும் அதே சிவப்பு வர்ணம் அனலைப்போல் கொழுந்து விட்டது.

இதையெல்லாம் அந்த விளுடியில் பார்த்துக்கொண்டனர் டாக்டரும் லாரியும். அவர்கள் ஜன்னலுக்குள்ளே தங்கள் தலையை இழுத்துக்கொண்டதும் டாக்டர் ஆச்சரியத்துடன் ஒன்றும் புரியாமல் லாரியின் முகத்தைப் பார்த்தார்.

“அவர்கள் கைதிகளைக் கொலை செய்கிறார்கள். நீங்கள் சொல்வது—உங்களுக்கு இங்கே சக்தி யுண்டு என்பது நிச்சயமானால் அந்தப் பிசாசுகளிடத்தில் உங்களை அறிமுகப் படுத்திக்கொண்டு லாபோர்ஸ் ஜெயிலுக்கு உடனே போக வேண்டும். ஏற்கனவே தாமதமாகிவிட்டது. இனியும் தாமதித்தால் ஆபத்து” என்றார் லாரி தணிவான குரலில்.

டாக்டர் மானெட் நன்றியுடன் அவருடைய கையைப் பிடித்துக் குலுக்கி விட்டு அப்படியே தொப்பியைக்கூட அணிந்துகொள்ளாமல் கீழே இறங்கி ஓடினார்.

அவருடைய வெண்மையான தலை மயிரும், அவருடைய திடமான தோற்றமும் வெகு சீக்கிரத்தில் அவரைக் கும்பலின் மத்தியில் கொண்டுபோய்ச் சேர்த்தது. கொஞ்சநேரத்துக்கு ஒரு பரபரப்பு, குசுகுசு வென்ற முணு முணுப்பு; சற்று நேரத்தில் சுமார் இருபது பேர் அவரைச் சூழ்ந்து மரியாதை பண்ணுவதை லாரி கண்டார். உடனே “பாஸ்டில் கைதி நீடுழி வாழ்க! லாபோர்ஸ் கைதிக்கு விடுதலை வேண்டும்!” என்று ஆயிரம் குரல்கள் கிளம்பின.

உடனே லாரி ஜன்னலை மூடிவிட்டு லூசியை அணுகி விஷயத்தைத் தெரிவித்து அவளை உற்சாகப்படுத்தினார். மிஸ் பிராஸ் குழந்தையை வைத்துக்கொண்டிருந்தாள்.

அப்படியே லூசி மயக்கம் போன்ற தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாள். மிஸ் பிராஸும் குழந்தையைப் படுக்கையில் போட்டுவிட்டுத் தலையணையின்மேல் சாய்ந்து விட்டாள்.

மறுநாள் காலையில் லாரியின் வர்த்தக மூளையில் இந்த எண்ணம் உதயமாயிற்று: அதாவது, தம்முடைய பாங்குக் கட்டிடத்துக்குள்ளே ஒரு 'ஓடுகாலி கைதி'யின் மனைவியை வைத்துக்கொண்டிருப்பதனால் பாங்குக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடும் என்பது. தம்முடைய சொந்தச் சொத்தை, தம்முடைய உயிரையே லூசிக்காகவும் அவளுடைய குழந்தைக்காகவும் ஒரு விநாடியில் அவர் அர்ப்பணம் செய்துவிடுவார் ஆனால் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் வியாபார நம்பிக்கையைக் காக்கவேண்டியது அவருடைய கடமையல்லவா?

முதலில் அவருக்குத் தோன்றின இடம் டிபாஜின் ஒயின் கடைதான். ஆனால் அந்த ஒயின் கடை இருந்த பிரதேசம் ரொம்ப நெருக்கடி அதிகமாயிருந்த இடம் என்பது நினைவுக்கு வந்ததும் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டார்.

பகல் வந்தது; ஆனால் டாக்டர் வரவில்லை. ஆகவே லூசியுடன் கலந்தாலோசித்தார் லாரி. அங்கேயே பாங்குக்கு சமீபத்தில் ஒரு இடத்தில் வாடகைக்கு வீடெடுத்துக்கொள்ள வேண்டுமென்று தன் தகப்பனார் பேசிக்கொண்டிருந்ததாக அவள் தெரிவித்தாள். அந்த யோசனைக்கு வர்த்தக ரீதியாக யாதொரு ஆட்சேபனையும் இல்லையென்று கண்ட லாரி பக்கத்திலேயே சந்தடியற்ற ஒரு சந்தில் ஒரு வீட்டை அமர்த்தினார்.

அங்கே லூசியையும் அவளுடைய குழந்தையையும் மிஸ் பிராஸையும் கொண்டுபோய்ச் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்துவைத்தார்: ஜெர்ரியை

அங்கே காவல் வைத்துவிட்டுத் தமது இருப்பிடத்துக்குத் திரும்பினார். அவருடைய மனம் பெரும் கவலையாலும் பீதியாலும் பீடிக்கப்பட்டுச் சோர்ந்திருந்தது.

மாலை கழிந்து இரவு வந்தது. லாரி தனியாக யோசனையில் ஆழ்ந்து தமது அறையில் உட்கார்ந்திருந்தார். அப்போது யாரோ படியில் ஏறிவரும் காலடி யோசை கேட்டது. உள்ளே வந்த ஆசாமி அவரைப் பெயரைச் சொல்லி அழைத்துக் கொண்டு வந்து எதிரில் நின்றான்.

" இதோ அடியேன் தான். என்னை உங்களுக்குத் தெரியுமா ?" என்று கேட்டார் லாரி.

அவன் ஒரு திடசரீரி. சுமார் நாற்பத்தைந்து அல்லது ஐம்பது வயதிருக்கும். அவர் கேட்ட கேள்வியையே அவனும் திருப்பிக் கேட்டான்:—

" என்னை உங்களுக்குத் தெரியுமா ?"

" எங்கேயோ உங்களைப் பார்த்திருக்கிறேன். "

" ஒரு வேளை என்னுடைய ஒயின் கடையில் இருக்கலாமோ ?"

ஆவலுடன் கேட்டார் லாரி ; " ஓகோ, டாக்டர் மானெட்டிடமிருந்து வருகிறீர்களா ?"

" ஆமாம், டாக்டர் மானெட்டிடமிருந்து தான் வருகிறேன். "

" அவர் என்ன சொல்லியனுப்பியிருக்கிறார் ?"

டிபாஜ் அவருடைய படபடக்கும் கையிலே ஒரு கடிதத்தை நீட்டினான். அதில் கீழ்க்கண்ட வார்த்தைகள் காணப்பட்டன:—

"சாலஸ் சௌக்கியமாயிருக்கிறான். நான் இன்னும் இந்த இடத்தைவிட்டுக் கிளம்ப முடியாது. என்னுடைய முயற்சியால் சாலஸ் இந்த ஆள் மூலம் மனைவிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறான். அந்த ஆளே நேரில் கொடுக்கட்டும் அதை."

அந்தக் கடிதம் லாபோர்ஸிலிருந்து எழுதப்பட்டிருந்தது.

"அப்போது என் கூட வருகிறீர்களா?" என்றார் லாரி குதூகலத்துடன்.

"வருகிறேன்" என்றான் டிபாஜ். இருவரும் இறங்கி வெளி முற்றத்தை யடைந்தனர். அங்கே இரண்டு ஸ்திரீகள் நின்று கொண்டிருந்தனர். ஒருத்தி பின்னல் வேலையில் ஈடு பட்டிருந்தாள்.

"ஸ்ரீமதி டிபாஜா!" என்றார் லாரி ஆச்சரியத்துடன்.

"ஆம், அவள் தான்" என்றான் டிபாஜ் நிதானமாக.

அவளும் கூடவே கிளம்புவதைக் கண்ட லாரி "ஸ்ரீமதியும் நம்கூட வருகிறாளா?" என்று கேட்டார்.

"ஆமாம். அவர்களை முகத்தைப்பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக. அவர்களுடைய நன்மையை உத்தேசித்துத் தான்."

டிபாஜின் நடத்தையைக் கவனித்த லாரி அவனைச் சந்தேகத்துடன் பார்த்துக்கொண்டே நடந்தார். அந்த இரண்டு ஸ்திரீகளும் கூடவே பின் தொடர்ந்தனர்.

அவர்கள் தெருவைக்கடந்து அந்த வீட்டிற்குள் நுழைந்தனர். லூசி தன் அறையில் தனியாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். லாரி தெரிவித்த செய்தியைக் கேட்டதும் அவள் ஆனந்தத்தில் மூழ்கினாள்.

"கண்ணே—தைரியமாயிரு. நான் சௌக்கியமாயிருக்கிறேன். உன் தகப்பனுருக்கு நிறைய செல்வாக்கிருக்கிறது இங்கே; எனக்காக நம் குழந்தைக்கொரு முத்தம் கொடு."

இவ்வளவு தான் அந்தக் கடிததத்தில் இருந்தது. ஆனால் அவளுக்கு அது எவ்வளவு மகத்தானது! எத்தனை ஆயிரம் வார்த்தைகள் பேசிற்று அத்துண்டுக் கடிதம்! அவள் நன்றியுடன் டிபாஜையும் அவனுடைய மனைவியையும் மாறி மாறிப் பார்த்தாள். பின்னல் வேலை செய்த அந்தக் கையில் முத்தமிட்டாள். அவளுடைய நெஞ்சிலே நிரம்பியிருந்த அன்பு முழுவதையும், நன்றியுடன் பெண்மையின் முழு ஆர்வத்துடன் அந்த செய்கையிலே அவள் வெளியிட்டாள்; ஆனால் அந்தக் கை அந்த உணர்ச்சியைப் பிரதி பலிக்கவில்லை—அப்படியே மரமாய் கீழே தொங்கிற்று.

இதைக் கண்ட லூசி பீதியுடன் அவனை நோக்கினாள்.

லாரி லூசியை நோக்கிச் சொன்னார்: "அம்மா, இப்போது தெருவெல்லாம் ஒரே கலவரமாயிருக்கிறது. ஆகையால் தப்பித்தவறி உங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிட்டால் உங்களைக் காப்பாற்றி விடுவதற்காக நன்றாக எல்லாரையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று வந்திருக்கிறாள் ஸ்ரீமதி டிபாஜ். ஆகையால் அம்மா, மிஸ் பிராஸையும் குழந்தையையும் இங்கே வரச்சொல். டிபாஜ், மிஸ் பிராஸ் இங்கிலீஷ்காரி, பிரஞ்சுத் தெரியாது."

அந்த அம்மணி தான் எந்த அன்னியநாட்டு ஸ்திரீக்கும் தாழ்ந்தவள் அல்ல என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட மிஸ் பிராஸ்—இரு கைகளையும் கட்டிக்கொண்டு உள்ளே வந்தாள். வரும்போதே அந்த இரண்டு ஸ்திரீகளையும் நோக்கி "என்ன, குரங்கு மூஞ்சிகளா! சௌக்கியமா?" என்றாள். ஆனால் அவர்கள் இவளை லட்சியம் செய்யவில்லை.

"இதுதான் அவன் குழந்தையா?" என்று கேட்டாள் தன் பின்னல் வேலையை நிறுத்திவிட்டு ஸ்ரீமதி.

"ஆம்; இதுதான் கைதியின் ஒரே குழந்தை."

"பார்த்தது போதும்; நாம் போகலாமா?" என்றாள் ஸ்ரீமதி, தன் கணவனை நோக்கி.

அவளுடைய பேச்சிலும் நடத்தையிலும் இருந்த ஏதோ ஒன்று லூசியின் மனத்திலே பெரும் பீதியையும் அச்சத்தையும் தூண்டிற்று. கெஞ்சும் குரலில் அவள் சொன்னாள்—

"என் கணவனுக்கு நீ ஒன்றும் தீங்கு செய்யமாட்டாயே. அவரைக் காப்பாற்றிவிடுவாயா?"

"உன் கணவனைப்பற்றி எனக்கு கவலையில்லை. உன்னுடைய தகப்பனாரின் மகளைப்பற்றித்தான் என் அக்கரையெல்லாம்" என்றாள் ஸ்ரீமதி சலனமற்ற நிதானமான குரலில்.

"எனக்காக, இந்த சின்னக் குழந்தைக்காக அவரிடம் இரக்கம் காட்டமாட்டாயா? உன்னைப் பார்த்தால்தான் எனக்கு பயமாயிருக்கிறது."

ஸ்ரீமதி டிபாஜ் புன்சிரிப்புடன் அலட்சியமாகக் கேட்டாள் "உன் புருஷன் என்ன சொல்லுகிறான் அந்தக் கடிதத்தில்?"

பீதி நிறைந்த பார்வையுடன் "என்னுடைய தந்தைக்கு அங்கே செல்வாக்கு இருப்பதாகச் சொல்லுகிறார்" என்றாள்.

"நிச்சயமாக அந்த செல்வாக்கில் அவன் விடுதலையடைய முடியும்!" என்றாள் ஸ்ரீமதி.

அவள் மீண்டும் தன் பின்னலைத் தொடங்கிக்கொண்டே வெளியே போனாள். மற்ற இருவரும் கூடப் போனார்கள்.

---

## அத்தியாயம் 20.

### பெரும் புயலில் கண ஓய்வு.

டாக்டர் மானெட் நாலுநாள் கழித்துத்தான் வந்தார். அந்த நாலு நாளும் அவர்கள் எல்லோரும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் இருந்தார்கள். அந்த மகா பயங்கர மான நான்கு நாட்களில் வெளியே நடந்துவந்த விவகாரங்கள் லூசிக்கு எட்டாதபடி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற் கப்புறம் ரொம்பநாள் கழித்து, அவள் பிரான்ஸை விட்டுப் போனபின் தான் அந்த நான்கு நாளைக்குள் பதினோராயிரம் கைதிகள் இரக்கமின்றிக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட னர் என்ற விஷயம் அவளுக்குத் தெரியும். அப்போது யாரோ சில ராஜீயக் கைதிகள் வெளியில் கொண்டுவரப்பட்டு கொல் லப்பட்டனர் என்பது மட்டும் தான் தெரியும்.

லாரிக்கு மட்டும் டாக்டர் அவ்வப்போது ரகஸ்யமாகத் தகவல் அனுப்பினார். தாம் ஜனக் கும்பலுடன் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதையும், அங்கே ஸ்வயமாக நிய மித்துக்கொள்ளப்பட்ட ஒரு நியாய சபை அமர்ந்து ஒவ் வொரு கைதியையும் விசாரித்துத் தீர்ப்புச் சொல்லியதை யும் பற்றி விவரமாக அப்போதைக் கப்போது தெரிவித்தார். இவர் அங்கே போனதும் தம்மை நியாய சபைக்கு அறிமுகம் செய்வித்துகொண்டார். அங்கிருந்த புஸ்தகங்களி லிருந்து சாலஸ் டார்னேயின் இருப்பிடத்தை அறிந்து அவனை விடுவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் பாஸ்டில் சிறையில் அனியாயமாய் பதினெட்டு வரு ஷங்கள் அடைக்கப்பட்டிருந்த கைதி யென்றதினால் இவ ருக்கு அதிக செல்வாக்கிருந்தது. வெகு சீக்கிரத்தில் அவன் விடுதலையடைந்து விடுவான் என்று கூடத் தோன்

றியது. ஆனால் திடீரென்று யாதுகாரணத்தாலோ அவனுடைய விடுதலை தடைப்பட்டது.

இந்த விதமான தகவல்களை யெல்லாம் படிக்கும்போது லாரியின் மனத்தில் ஒரு பெரும் பீதி எழுந்தது. இந்த சமயத்தில் இவ்வித வேலையில் கடுமையாக ஈடுபட்டிருக்கும் போது,டாக்டருக்கு பழையமாதிரி நோய் வந்துவிடாமலிருக்க வேண்டுமே யென்ற கவலை எழுந்து அவரை வாட்டத் தொடங்கியது. ஆனால் அவர் தமது நண்பரை இந்த விதமான சந்தர்ப்பத்தில் பார்த்தது கிடையாது. இப்போதுதான் முதல் முதலாக தம்முடைய கஷ்டமெல்லாம் தமக்கு ஒரு அபூர்வசக்தியையும், அளவிட முடியாத பலத்தையும் கொடுத்திருக்கிறது என்பதை டாக்டர் உணர்ந்தார். முதல் முதலாக, தம்முடைய மகளுடைய கணவனின் சிறையை உடைத்தெறியக்கூடிய, அவனை விடுதலை செய்து காப்பாற்றச் சக்திவாய்ந்த ஒரு ஆயுதத்தை அந்த நாளில் தம்மை யறியாமலே தயார் செய்திருப்பதை இப்போதுதான் அறிந்தார். “ அதெல்லாம் ஒரு நல்லதிற்குத்தான் நடந்திருக்கிறது. என்னுடைய குழந்தை என்னை உயிர்ப்பித்து விட்டது ; ஈசுவர கிருபையில் நான் அவளுடைய உயிருக்குயிரான கணவனை மீட்டுக் கொடுக்கப்போகிறேன் !” என்று டாக்டர் மானெட் தம் நண்பருக்கு அறிவித்தார்.

இதைவிட இன்னும் மகத்தான கஷ்டங்களும் பிரச்னைகளும் டாக்டருடைய தீவிர விடாமுயற்சியால் தீர்ந்துவிடும். அவர் தம்முடைய சக்தியையும் தொழில் நயத்தையும் வெகு சாமர்த்தியமாய் உபயோகித்ததனால் வெகு சீக்கிரத்தில் மூன்று சிறைச்சாலைகளுக்கு வைத்தியப் பரிசோதகர் ஆகிவிட்டார். லூசியின் கணவனை அவர் இப்போது வாரத்துக்கொருதடவை பார்க்க முடிந்தது ; அவனிடமிருந்து நேராக

செய்திகள், இன்பமான வார்த்தைகள் கொண்டுவந்தார். சில சமயம் அவனும் எழுதினுன்.

சாலஸை விடுதலை செய்வதற்கு முடிந்தவரையில் முயற்சி செய்தார்; அவனை விசாரணையாவது செய்ய வேண்டுமென்று பிரயத்தனம் செய்தார்; ஆனால் அந்த சமயத்திலிருந்த பொது ஜன உணர்ச்சிப் பிரவாகம் இவருக்கெதிராக நின்றது. புது யுகம் பிறந்துவிட்டது; ராஜா விசாரணை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். முன்னூறாயிரம் ஜனங்கள் பிரான்ஸ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும்,கொடுங்கோன்மையை அழித்து நசுக்கச் சீறியெழுந்தனர்.இந்த மகத்தான ஜீவப் பிரவாகத்தை யெதிர்த்து ஒரு தனி மனிதன் என்ன செய்ய முடியும்!

இந்த நதியின் ஓட்டத்துக்கு ஒரு தடையில்லை: ஒரு ஓய்வில்லை; வினடி சோர்வில்லை, இரக்கமில்லை; காலச்சுழலின் அறிகுறியே அற்றுப்போய்விட்டது. பகலும் இரவும் வழக்கம்போல சுழன்று கொண்டிருந்த போதிலும் வேறு ஒருவித மான கால நிர்ணயமும் கிடையாது. அந்த நிர்ணயம், காலத்தின் ஓட்டம் ஒரு தேசத்தின் ஜுர வேகத்திலே மறைந்து போய்விட்டது. நிசப்த வேளையிலே திடுதிடுப்பென்று தூக்குப் போடுவோன் ராஜாவின் தலையைத் தூக்கி ஜனங்களிடையே காண்பித்தான்; மறுபடியும் அதேமாதிரி ஒரு நாள் ராணியின் தலையைத் தூக்கிக் காண்பித்தான்.

இந்த விதமான பயங்கரங்களுக்கு நடுவே டாக்டர் தலை நிமிர்ந்து நிதானமாக அடி யெடுத்துவைத்து நடந்தார். தன்னம்பிக்கையுடன், தனது கடைசி நோக்கத்தை ஒரு கணமும் மறக்காமல், கடைசியில் எப்படியும் லூசியின் கணவனைக் காப்பாற்றிவிட முடியும் என்ற திடமான நம்பிக்கையுடன் நடந்தார் அவர். இருந்தாலும் காலம் அதிதீவிர கதியிலே பறந்

தது; டாக்டர் இவ்விதம் நம்பிக்கையுடன் நிமிர்ந்து நடந்த போது சாலஸ் சிறைசென்று ஒரு வருஷம் மூன்று மாதமாகி விட்டது. அந்த டிசம்பரிலே புரட்சி மகா பயங்கரமாக மாறி விட்டது; இரவில் கொலை செய்யப்பட்டோரின் பிரேதங்களை காலையில் நதிகள் தாங்கிச் சென்றன; கும்பல் கும்பலாக கைதிகள் சுட்டுத்தள்ளப்பட்டனர். இருந்தாலும் டாக்டர் தளரா நம்பிக்கையுடனும் சலிக்கா உறுதியுடனும் இருந்தார். அந்தசமயத்தில் அவரைவிட செல்வாக்குடைய மனிதன் பாரிஸில் இல்லை; இந்த விதமான ஒரு விநோதமான சந்தர்ப்பத்தில் மாட்டிக் கொண்டவனும் யாரும் இல்லை. மௌனமாக, கொலைகாரரிடையும் கொலை செய்யப்பட்டோரிடையும் அவர் தம் திறமையை தயையுடன் உபயோகித்து சிகிச்சை செய்தார். மற்ற மனிதரிடையே பிரித்துக் காண்பிக்கப்பட்ட ஒரு விசேஷ மனிதராக, மனிதரிடையே தேவன்போல் அவர் விளங்கினார்.

---

## அத்தியாயம் 21.

### வெற்றி

ஒவ்வொரு நாளும், பயங்கரமான ஐந்து நீதிபதிகள் அடங்கிய நியாய சபையும், சர்க்கார் வக்கீலும், தீர்மானமான ஜூரர்களும் அமர்ந்தனர். ஒவ்வொரு மாலையும் கைதிகளின் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போயிற்று. தினசரி ஜெயிலர்கள் ஒவ்வொரு பெயராகக் கூப்பிடுவது வழக்கமாய் விட்டது.

"டார்னே என்று சொல்லப்பட்ட சாலஸ் எவரிமான்!"

ஒரு பெயரைக் கூப்பிட்டவுடன் அந்த ஆசாமி அவர்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் இடத்தில் வந்து நிற்கவேண்டியது.

சாலஸ் எவரிமானுக்கும் அந்த வழக்கம் நன்றாய்த் தெரியும்.

அவன்கூட அன்று இருபத்துமூன்று பெயர்கள் வாசிக்கப்பட்டன. அவர்களெல்லோரும் அந்த விசாலமான கிடங்கில் வந்து நின்றனர். அன்றிரவுதான் அவர்களுடைய கடைசி இரவு.

மறுநாள் காலையில் அவர்கள் நியாய சபையின் முன் நிறுத்தப்பட்டனர். சாலஸின் பெயருக்கு முன்னால் பதினைந்துபேர் அழைக்கப்பட்டு வழக்கமான தண்டனை விதிக்கப்பட்டனர். கடைசியில் சாலஸ் எவரிமானின் பெயர் வந்தது.

அலங்காரமாகத் தொப்பியணிந்து அமர்ந்திருந்தனர் நீதிபதிகள். மற்றப்படி ஒரே சிவப்புக் குல்லாதான் எங்கும் நிறைந்திருந்தது. அந்த ஜூரர்களையும், மற்ற ஜனங்களையும் சுற்றிப் பார்த்தால் ஒரு கொள்ளைக் கூட்டத்தார் ஒழுங்கான

மனிதரை விசாரணை செய்து தண்டனை விதிப்பதாய்த் தோன்றியதே யன்றி ஒரு நியாய சபையாய்க் காணவில்லை.

அங்கே கூடியிருந்த ஜனங்கள் எல்லோரும் பலவிதமான ஆயுதங்களைத் தரித்திருந்தனர். சில பெண்கள் பின்னல் பின்னிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய தலைமையில் ஸ்ரீமதி டிபாஜ் உட்கார்ந்திருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் டிபாஜ். நியாய சபைத் தலைவனுக்குக் கீழே டாக்டர் மானெட்டும் லாரியும் உட்கார்ந்திருந்தனர்.

சாலஸ் எவரிமான் ஒரு 'ஓடுகாலி' என்றும் அந்தக் குற்றத்திற்காக அவனுடைய உயிர் சட்டப்படி, சர்க்காரைச் சேர்ந்ததென்றும் குற்றப் பத்திரிகை படித்தார் சர்க்கார் வக்கீல்.

"அவனுடைய தலையை வெட்டவேண்டும்! ஜனங்களின் விரோதி!" என்று கூவினர் ஜனங்கள்.

தலைவன் கையமர்த்திவிட்டு கைதியைக் கேட்டான்:—

"அநேக வருஷங்கள் நீ இங்கிலாந்திலே வசித்தது வாஸ்தவம் தானா?"

"வாஸ்தவம்."

"அப்போது நீ ஒரு 'ஓடுகாலி' தானே?"

"சட்டப்படி நியாயமாய் ஆகாது."

"ஏன்?"

"ஏனென்றால் எனக்கு வெறுப்பை யளித்த ஒரு பதவியை நானாகவே உதறித் தள்ளிவிட்டேன். பிரான்ஸ் தேசத்து ஜனங்களின் உழைப்பைக்கொண்டு ஜீவிப்பதை வெறுத்து சொந்தமாக சம்பாதித்து இங்கிலாந்தில் போய் ஜீவனம் செய்வதுமேல் என்று நினைத்தேன்."

"இதற்கென்ன ருஜு?"

இதற்கு சாட்சிகளாக அலெக்ஸாண்டர் மானெட், காபில் என்ற இரு பெயர்களேயும் தெரிவித்தான்.

"நீ இங்கிலாந்தில் கல்யாணம் செய்துண்டிருக்கிருயல்லவா?"

"ஆமாம்; ஆனல் இங்கிலீஷ்காரியல்ல."

"பிரான்ஸ் நாட்டினளா?"

"ஆமாம்; பிறப்பினல்."

"அவள் பெயர், குலம்?"

"இதோ எதிரில் அமர்ந்திருக்கும் டாக்டர் மானெட் அவர்களின் ஒரே புதல்வியான லூசி மானெட்"

இந்த பதிலைக் கேட்டதும் சபையிலிருந்தோரிடையே பெரிய ஆரவாரம் எழுந்தது. புகழ்பெற்ற டாக்டரை வாயாரப் புகழ்ந்தனர் ஜனங்கள். சற்று நேரத்துக்கு முன்னே கைதியைக் கிழித்து எறிந்துவிட வேண்டுமென்று ஆத்திரத்தோடு நோக்கின அதே கண்களில் அளவு கடந்த அனுதாபத்தினல் கண்ணீர் வடிந்தது.

"ஏன் நீ பிரான்சுக்குத் திரும்பினய்?" என்று தலைவன் கேட்டான்.

கைதி சொன்னன்:—

"இங்கே எனக்கு ஜீவனத்துக்கு வழியில்லை. அதனல் இதுவரையில் திரும்பி வரவில்லை. இப்போது ஒரு பிரஞ்சுப் பிரஜையின் உயிர் ஆபத்திலிருப்பதாக அவன் எனக்கு எழுதியிருந்ததால் நான் வரவேண்டியது அவசியமாயிற்று. ஒரு பிரஜையின் உயிரைக் காக்கவந்தேன். இது ஒரு குற்றமா! குடியரசின் முன்னிலையில் இது குற்றமாகுமா?"

“ஆகாது!” என்று உற்சாகத்துடன் கூவின ஆயிரம் குரல்கள்.

தலைவன் அந்தப் பிரஜையின் பெயரைக் கேட்டான். கைதி தெரிவித்ததும் பிரஜை காபில் தருவிக்கப்பட்டான். கைதி சொன்னதை யெல்லாம் அவன் மெய்ப்பித்தான்.

அடுத்தபடியாக டாக்டர் மானெட் விசாரிக்கப்பட்டார். அவருடைய கீர்த்தியும், கேள்விகளுக்கு அவர் அளித்த பதிலின் தெளிவும் சபையோரிடையே அவரிடத்தில் ஒரு மதிப்பை உண்டுபண்ணின. எதிரிதான் முதன் முதலாகத் தனக்கு ஏற்பட்ட நண்பனென்றும், அவன் தன்னிடத்தும் தன் மகளிடத்தும் ரொம்ப விசுவாசத்துடன் இருப்பவனென்றும் தெரிவித்தார்; மேலும் எதிரி இங்கிலாந்தில் ஆட்சி செலுத்தும் செல்வவந்தர் அரசாங்கத்துக்கு எதிராக சதி செய்ததாக விசாரிக்கப்பட்டதாகவும் தெளிவாகத் தெரிவித்ததும் சபையோரும் ஜூரர்களும் ஒன்றாக அபிப்பிராயப் பட்டனர். பிறகு தாம் சொன்ன விஷயங்களை நிரூபிக்க மூஸே லாரி என்ற ஆங்கிலக் கனவானை விசாரிக்கலாமென்று தெரிவித்தார். ஆனால் ஜூரர்கள் யாரையும் விசாரிப்பது தேவையில்லை யென்றும் தங்களுடைய தீர்ப்பு தயாராய் இருக்கிறதென்றும் தெரிவித்தார்கள்.

ஜூரர்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தபோது சபையோர் காது செவிடுபடும்படி கைதட்டிக் கூவி ஆரவாரம் செய்தனர். தலைவன் எதிரி விடுதலையடைந்து விட்டதாகத் தெரிவித்தான்.

அவ்வளவுதான்! உடனே கட்டிடம் இடிந்து விழுந்து விடுமோ என்று தோன்றும்படி ஜனங்கள் கூச்சலிட்டுக் கொண்டே தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்து எதிரியிடம்

ஓடினர். "குடியரசு நீடூழி வாழ்க!" என்ற சத்தம் வானைப் பிளந்தது.

ஒரு நாற்காலியைக் கொண்டுவந்து அதன்மேல் ஒரு சிவப்புக் கொடியை அலங்காரமாகக் கட்டி அதில் விடுதலை யடைந்த கைதியைத் தூக்கிவைத்து, டாக்டர் எவ்வளவு கேட்டுக்கொண்டும் அவர் சொன்னதைக் கேளாமல் ஜனங்கள் நாற்காலியைத் தோளின்மேல் தூக்கிக்கொண்டு கிளம்பினர். அதைச் சுற்றி ஒரே செந்தலைக் கூட்டம். இவ்விதம் அந்த வெறிபிடித்த ஊர்வலம் தெருவழியே சென்று டாக்டர் வசித்த வீட்டை யடைந்தது.

டாக்டர் முன்னடியே சென்று மகளுக்கு சமாசாரத்தை யறிவித்தார். அவன் வீட்டை யடைந்ததும் லூசி நினைவற்று அவனுடைய தோளின்மேல் சாய்ந்தாள். அவளை யெடுத்து ஆர்வத்துடன் அணைத்துக்கொண்டு நன்றியுடன் எதிரில் நின்ற கும்பலைப் பார்த்தபோது அந்த ஜனங்கள் களிவெறியில் கூத்தாடத் தொடங்கினர். பிறகு அந்த வெறிக்கும்பல் அந்த காலி நாற்காலியில் கும்பலில் இருந்து ஒரு யௌவன ஸ்திரீயைத் தூக்கிவைத்து "சுதந்திர தேவிக்கு ஜே!" என்று கூவிக்கொண்டு அதைச் சுமந்துகொண்டு வெளியேறிற்று.

அவன் நன்றியுடன், வெற்றி கர்வத்துடன் கம்பீரமாக நின்ற டாக்டரின் கையைப் பிடித்துக் குலுக்கினன். சின்னக் குழந்தை லூசியைத் தூக்கி வாரியணைத்து அவளுடைய இளம் முகத்திலே ஆர்வத்துடன் முத்தமிட்டான். பிறகு தன் மனைவியை வாரியெடுத்துச் சுமந்துகொண்டு அவர்களுடைய தனி அறையை அடைந்தான்.

"லூசி! என் கண்ணே! நான் பிழைத்து விட்டேன்!"

பிறகு அவளிடம் சொன்னன்:—

"என் கண்ணே! போய் உன் தகப்பனரைப் பார். அவர் சாதித்திருக்கும் இந்தக் காரியத்தை இந்த பிரான்ஸ் தேசத்திலேயே வேறு யாரும் செய்திருக்க முடியாது."

# அத்தியாயம் 22.

## பூசை வேளையில் கரடி.

அப்போது எங்கும் நிரம்பியிருந்த பீதியினாலும் பயத்தினாலும் சாதாரண நித்திய வாழ்க்கை முறைகள் மாறி யிருப்பது இயற்கை. டாக்டருடைய வீட்டிலும் தினசரி நடிவடிக்கைகள் மாறியிருந்தன. வீட்டுக்கு வேண்டிய பொருள்களெல்லாம் அன்றாடம் சாயங்காலம் கொஞ்சம் கொஞ்சமாக, வெவ்வேறு கடைகளில் வாங்கப்பட்டு வந்தது. அனாவசியமாக சந்தேகத்தைக் கிளப்பாமலிருக்கவும் பொறாமை முதலிய தீமைகளுக்கு இடங்கொடுக்காமலிருக் கவும் இந்த முன்னெச்சரிக்கைகள் அவசியமாயிருந்தன.

டாக்டர் வீட்டு நிர்வாகத்தை கிரஞ்சரும் மிஸ் பிரா ஸூமே கவனித்து வந்தனர். தினசரி விளக்கு வைத்ததும் அவர்களிருவரும் கிளம்பிப்போய் வீட்டுக்கு வேண்டிய வற்றை வாங்கிக்கொண்டு வருவார்கள். மிஸ் பிராஸூக்கு பிரஞ்சு தெரியாது; அவள் இஷ்டப்பட்டிருந்தால் இவ்வளவு காலத்தில் நன்றாகப் பேச அவள் கற்றுக்கொண்டிருக்கலாம்; ஆனால் அந்த (அவள் சொல்வதுபோல) "அபத்தம்" அவ ளுக்கு வேண்டியதில்லை. அவள் கடையில் சாமான் வாங்கு வது வேடிக்கையாக இருக்கும். அவளுக்கு வேண்டிய சாமானை கையால் சுட்டிக்காட்டி "என்ன விலை?" என்ற அர்த்தத்தில் விரலை மடக்கி கேள்வி கேட்பாள். கடைக்காரன் கை விரலால் விலையைக் காண்பித்தால் அந்த எண்ணிக் கைக்கு ஒன்று குறைத்து இவள் விரலைக் காட்டிக் கேட் பாள். அவன் எவ்வளவு விரல்களைக் காட்டினாலும் சரி, அதில் ஒன்று குறைந்ததுதான் நியாயமான விலை என்பது அவளுடைய தீர்மானம்.

"மிஸ்டர் கிரஞ்சர்! நீ புறப்பட்டாயானால் நானும் தயார்தான்!" என்றாள் மிஸ் பிராஸ்.

ஜொர்ரி கம்மின தொண்டையில் தயாராயிருப்பதாகத் தெரிவித்தான்.

"எவ்வளவோ சாமான்கள் வேண்டும். ஒயின் வேண்டும். வா, போகலாம்"

"சத்தம் போடாதே, அம்மா! ஜாக்கிரதையாய்ப் போ!" என்றாள் லூசி.

"ஆஹா, நான் ஜாக்கிரதையாயிருப்பேன்.—இதோ கண்ணே லூசி நான் வரும் வரையில் நீ அசையக் கூடாது உன் கணவனையும் பார்த்துக்கொள். அவன் பக்கத்திலிருந்து அசையாதே! —டாக்டர் மானெட், உங்களை ஒரு கேள்வி கேட்கலகமா?"

"தாராளமாய். இதற்குக்கூட சுதந்திரமில்லையா?" என்றார் டாக்டர் புன்சிரிப்புடன்.

"கெஞ்சிக்கெட்டுக் கொள்ளுகிறேன். இந்த சுதந்திரப் பேச்சு வேண்டாமே. நமக்கு வேண்டிய சுதந்திரம் இருக்கிறது!" என்றாள் மிஸ் பிராஸ்.

"அய்யோ, உரக்கப்பேசாதே!" என்றாள் லூசி.

"அப்போது பெண்ணே நான் சொல்லுகிறேன்" என்று தலையை ஆட்டிக் கொண்டு ஆரம்பித்தாள் மிஸ் பிராஸ். "அதாவது நான் மாட்சிமை தங்கின மன்னர்பிரான் மூன்றாவது ஜார்ஜ் அவர்களுடைய பிரஜை. ஆகையால் என்னுடைய தீர்மானமான கொள்கை என்ன வென்றால் 'அவர்கள் புதுக்கொள்கைகளும் நாசமாய்ப் போகட்டும்!' நமது நம்பிக்கை அவன் தான்! நமது மன்னர் நீடூழி வாழ்க!"

அந்தப் பெயரை உச்சரித்து விட்டுத் தலைவணங்கினாள் மிஸ் பிராஸ்.

ஜெர்ரியும் ராஜ விசுவாசத்துடன் அந்தக் கடைசி வார்த்தைகளைப் பாடினான்.

"இவ்வளாவது இங்லீஷ் ரத்தம் உன் தேகத்திலிருப்பதைக் கண்டு சந்தோஷமடைகிறேன் — உன் குரலில் அந்த ஜலதோஷம் இருந்தாலும் பரவாயில்லை!" என்றாள் அவள் அவனை ஆமோதிக்கும் தோரணையில் பிறகு சொன்னாள்; "இப்போது, இதுதான் விஷயம் டாக்டர் மானெட்—நாம் இந்த இடத்தைவிட்டுப் போவதற்கு வேண்டிய அறிகுறிகள் உண்டா?"

"அதற்குள் முடியாது. சாலஸை உத்தேசித்து அதற்குள் போக முடியாது."

"ஓஹோ! - ஹோ! - நாம் பொறுமையுடன் இருக்க வேண்டியதுதான். அவ்வளவுதான் நாம் செய்யக்கூடியது. சரி! மிஸ்டர் கிரஞ்சர்!—கண்ணே அசையாதே அம்மா!"

அவர்கள் புறப்பட்டு வெளியே போயினர். லூசி, அவள் புருஷன், தந்தை, குழந்தை எல்லோரும் கணப்புக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். லாரியை அவர்கள் எதிர்பார்த்தனர். சின்ன லூசி தன் பாட்டனாருக்குப் பக்கத்தில் அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவர் மிருதுவான குரலில் அவளுக்கு ஒரு கதை சொல்லிக்கொண்டிருந்தார். அறை அமைதியாயிருந்தது. லூசி மனதில் பரபரப்பின்றி சமாதானத்துடன் இருந்தாள்.

"அது என்ன?" என்று கூவினாள் அவள் திடீரென்று.

"இதென்ன, அம்மா, இது! ஒன்றுமில்லாததற்கெல்லாம் பயப்படுகிறாயே? தைரியமாயிரு" என்றார் டாக்டர் கதையை நிறுத்திவிட்டு.

தடுமாறும் குரலில் அவள் சொன்னாள் :—" இல்லை, அப்பா. படிக்கட்டில் யாரோ ஏறி வருவதுபோல் இருந்தது."

" துளி சத்தம்கூட இல்லையே, அம்மா."

அதே சமயத்தில் அறையின் கதவை யாரோ ஓங்கி அடித்த சத்தம் கேட்டது.

"அய்யோ, அப்பா, அப்பா! இதென்னவாயிருக்கும்! அவரை மறைத்து வையுங்களேன்! அவரைக் காப்பாற்றுங்கள் !"

எழுந்து நின்று அவளுடைய முதுகின்மேல் தட்டிக் கொண்டே அவர் சொன்னார் "குழந்தே, நானல்லவா அவனைக் காப்பாற்றியிருக்கிறேன். இதென்ன அசட்டுத்தனம்! போய்ப் பார்க்கிறேன்."

கையில் விளக்கை யெடுத்துக்கொண்டு வெளிக் கதவைத் திறந்தார் அவர். வெளியே நாலு முரடர்கள், சிவப்புக் குல்லாயுடன், ஆயுதந் தாங்கி நின்றனர். கதவு திறந்ததும் உள்ளே நுழைந்தனர்.

" டார்னே என்று சொல்லப்பட்ட பிரஜை எவரிமான் " என்றான் முதல்வன்.

" யார் தேடுகிறது?" என்றான் டார்னே.

" நான்தான் தேடுகிறேன். நாங்கள் எல்லோரும் தேடுகிறோம். எவரிமான், உன்னை எனக்குத் தெரியும். நீ மறுபடியும் குடியரசின் கைதி."

அவனைச் சூழ்ந்துகொண்டனர் நால்வரும். லூசியும் குழந்தையும் அவனுடன் ஒட்டிக்கொண்டு விட்டனர்.

" ஏன் நான் மறுபடி கைதி செய்யப்படுகிறேன் ?"

"நீ நேராக சிறைக் கூடத்துக்கு வரவேண்டியது. அங்கே நாளைக்கே உன் விசாரணை. அப்போது விவரமாக எல்லாம் தெரியும்."

எதிர் பாராத இந்த சமயத்தில் டாக்டர் ஸ்தம்பித்துப் போய் கையில் விளக்குடன் கல் சிலையைப்போல் நின்றார். பிறகு மேற் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் உணர்வு வந்தவராய் விளக்கைக் கீழே வைத்து விட்டு, முன்னால் பேசின ஆளை நிமிர்ந்துபார்த்துக் கேட்டார் :—

" அவரைத் தெரியும் என்று சொன்னாயே, என்னைத் தெரியுமா உனக்கு ?"

"டாக்டர், உங்களை அறிவேன்"

"எங்களுக்கு எல்லாருக்குமே தெரியும், டாக்டர்" என்றனர் மற்ற மூவரும்.

பிறகு அவர்களை மாறி மாறிப் பார்த்துக் கொண்டே அவர் மெதுவான குரலில் சொன்னார்:

"அவர் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் பதில் சொல்லுவாயா ? இது எப்படி வந்தது ?"

முதல்வன் சொன்னான் ; "டாக்டர் அவர்களே, அவன் செயின் அன்டோன் பிரதேசத்தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறான். இதோ இந்த பிரஜை தான் அங்கிருந்து வந்தது."

அந்த பிரஜை தலையை அசைத்து விட்டுச் சொன்னான்:

"ஸெயின் அன்டோன் பிரஜைகள் அவனைக் குற்றம் சாட்டுகின்றனர்."

"என்ன குற்றம்?" என்று கேட்டார் டாக்டர் அலட்சியத்துடன். முதல்வன் சொன்னான். "பிரஜை டாக்டர், வேறொன்றும் கேட்காதீர். குடியரசு நீங்கள் ஒரு தியாகம் செய்யவேண்டுமென்று எதிர் பார்க்குமானால் சந்தேக மின்றி தாங்கள் தயங்காமல் எதையும் செய்வீர்கள். குடியரசுக்கப் புறம் தான் எல்லாம். எவரிமான் நாங்கள் போகவேண்டும்."

"ஒரேயொரு வார்த்தை" என்று கெஞ்சினார் டாக்டர். "அவனை யார் குற்றம் சாட்டினது என்று மட்டும் சொல்வாயா?"

"அதுசட்ட விரோதம்!" என்றான் முதல்வன். டாக்டர் மற்றவனைத் திரும்பிப்பார்த்தார். அவன் ரொம்ப சிரமப் படுபவன்போல் தலையைத் தடவிக் கொண்டு நகர்ந்து நின்று, கடைசியில் சொல்லலானான் :—

"சரி! உண்மையில் அது சரியில்லை. அவன் பிரஜை டிபாஜ், அவனுடைய மனைவி இருவராலும், ரொம்பக் கடுமை யாகக் குற்றம் சாட்டப் படுகிறான்; பிறகு இன்னொருவரா லும் கூட."

"இன்னொன்று யார்?"

"நீங்கள் கேட்கிறீர்களா, டாக்டர்?"

"ஆமாம்"

"அப்பொழுது உங்களுக்கு நாளைக்கு காலையில் பதில் தெரியும். இதற்குமேல் நான் பேச மாட்டேன்!"

## அத்தியாயம் 23.

## சீட்டாட்டம்.

வீட்டிலே நடந்த இந்த புதிய கலவரத்தைப்பற்றி யாதும் அறியாதவளாய் மிஸ் பிராஸ் கையில் கூடையுடன் ஜெர்ரி பின்தொடர கும்பல் நிறைந்த தெருவழியே நடந்து கடைத்தெருவை யடைந்தாள்.

வீட்டுக்கு வேண்டிய சில்லரை பதார்த்தங்களை வாங்கினவுடன் ஒயின் வாங்க வேண்டுமென்று அவளுக்கு நினைவு வந்தது. பல கடைகளைக் கடந்து கடைசியில் ஒரு கடையண்டை வந்து நின்றாள். அங்கே கொஞ்சம் சந்தடிக் குறைவாய் இருந்தது.

கடைக்காரன் ஒயினை அளந்து ஊற்றிக்கொண்டிருக்கும் போது அங்கே மூலையில் உட்கார்ந்திருந்த இருவரில் ஒருவன் எழுந்து வெளியே வந்தான். வழியில் அவன் மிஸ் பிராஸுக்கு எதிராக வரும்போது அவள் கையைக் கொட்டிக் கொண்டு ஒரு கூச்சல் போட்டுவிட்டாள்.

"என்ன சமாசாரம்?" என்று கேட்டான் அந்த மனிதன் மெதுவாக ஆங்கிலத்தில். அவனுடைய மனதிலிருந்த சங்கடத்தை அவனுடைய குரல் தெரிவித்தது. அவனைக் கண்டதும் ஜெர்ரியும் பிரமாதமான ஆச்சரியத்தால் அடிபட்டவன் போல் திடுக்கிட்டுத் திறந்த கண் மூடாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"ஆ ஸாலமன்! அப்பா ஸாலமன்! உன்னை இத்தனை நாள் கழித்து இங்கேயா பார்க்கிறேன்!" என்று கூவினாள் மிஸ் பிராஸ் கையைக் கொட்டிக்கொண்டே.

"உஸ்! என்னை ஸாலமன் என்று கூப்பிடாதே, என்னைக் கொன்றுவிடாதே" என்றான் அந்த மனிதன் கலக்கத்துடன் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே:

“ஐயோ! தம்பி! உன்னிடம் எப்போதாவது பிரியமில்லாமல் நான் நடந்துகொண்டதுண்டா? இப்படி கடூரமாய்க் கேட்கிறாயே!” என்று கூவினாள் மிஸ் பிராஸ்.

“அப்போது உன் வாயை மூடிக்கொள். கடையில் காசைக் கொடுத்துவிட்டு வெளியில் வா. இந்த மனிதன் யார்?” என்றான் சாலமன்.

மிஸ் பிராஸ் வருத்தத்துடன் தலையை அசைத்து கண்களில் நீர் ததும்ப “மிஸ்டர் கிரஞ்சர்” என்றாள்.

“அவனும் வரட்டும் வெளியே. அவன் என்னை ஒரு பிசாசென்று நினைக்கிறானா, ஏன் அப்படிப் பார்க்கிறான்?”

ஜெர்ரி வெறித்துப்பார்த்துக் கொண்டே நின்றான். மிஸ் பிராஸ் மெதுவாக சில்லரையைத்தேடி எடுத்துக் கொடுத்துவிட்டு கிளம்பினாள்.

இருட்டியிருந்த தெருமுனையை அடைந்ததும் சாலமன் கேட்டான். “இப்போது சொல்லு. உனக்கு என்ன வேண்டும்?”

“ஆஹா! என்ன கொடுமை! இப்படித்தான் கூடப் பிறந்தவன் பேசுவதா!” என்று கூச்சலாகச் சொன்னாள் மிஸ் பிராஸ்.

“சே, சே! இந்தா!” என்று பிரியத்துடன்போல் அவளுடைய கையைப் பிடித்துக் குலுக்கினான் சாலமன்.

அப்போது ஜெர்ரி அவனுடைய தோளைத் தொட்டு அழைத்து பின்வரும் ஒரே கேள்வியைக் கேட்டான் :—

“இந்தா பாரு! உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். உன் பெயர் ஜான் சாலமனா அல்லது சாலமன் ஜானா?”

“என்ன சொல்றே?”

"என்னவோ எனக்கு என்ன சொல்கிறதென்றே தெரியவில்லை. உனக்கு அங்கே சமுத்ரத்துக்கு அந்தக் கரையில் என்ன பெயர் இருந்ததென்று எனக்கு ஞாபகமில்லை."

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

"இல்லையில்லை. அந்தப் பெயர் இரண்டு வார்த்தை யுள்ளது. எனக்கு நிச்சயமாய்த் தெரியும்."

"அப்படியா?"

"ஆமாம். உன்னை எனக்குத் தெரியும். அங்கே கோர்ட்டில் உளவாளாய் இருந்தாய் நீ. உனக்கு என்ன இழவுதான் பெயர் அங்கே?"

"பார்ஸாத்" என்றது ஒரு புதுக்குரல்.

"அதே பெயர்தான்!" என்று கூவினான் ஜெர்ரி.

புதிதாகப் பேசியது ஸிட்னி கார்ட்டன். தன் கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு அலட்சியமாக அவன் நின்றிருந்தான்.

"மிஸ் பிராஸ், திடுக்கிட்டுப்போகாதே. நேற்று சாயங்திரம்தான் லாரியின் இருப்பிடத்தில் வந்து சேர்ந்தேன். எல்லாம் முடியும் வரையில் வெளியில் எங்கேயும் வந்து யாரையும் பார்ப்பதில்லை யென்று தீர்மானித்திருந்தேன். உன்னுடைய சகோதரனைக் கண்டு இரண்டு வார்த்தை பேச வேண்டுமென்று தான் இங்கே வந்தேன். உன்னுடைய சகோதரனுக்கு வேறு நல்ல உத்தியோகம் கிடைத்திருத்தல் தேவலை. அவன் ஒரு 'ஜெயில் ஆடு'."

ஜெயிலர்களிடையே உளவாள் என்பதைக் குறிக்கும் வழக்கச் சொல்தான் 'ஆடு' என்பது. அந்த உளவாள் முகம் வெளுத்தது "என்ன தைரியமாய் —" என்று ஏதோ முனகினான்.

" இதோ சொல்லுகிறேன். பார்ஸாத், ஒருமணி நேரத்துக்கு முன்னால் சிறைச்சாலையின் சுவற்றின் உயரத்தை அண்ணாந்து பார்த்து நின்றுகொண்டிருக்கையில் நீ வெளியே வருவதைப் பார்த்தேன். உன்னுடைய முகத்தை நான் மறக்க முடியாது. முந்தி ஒரு சமயத்தில் இப்போது சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நண்பன் விஷயத்தில் நீ சம்பந்தப்பட்டிருந்தாயல்லவா? இந்த சந்தர்ப்பத்தில் உனக்கு அங்கே என்னவேலையென்று அறிய ஆவல் கொண்டு இங்கே வந்தேன். உன்பக்கத்திலேயே இந்த ஒயின் கடையில் உட்கார்ந்திருந்தேன். உன்னுடைய உத்தியோகம் என்னவென்பதை உன் நடத்தையிலிருந்தும் உன் பக்கத்திலிருந்தோரின் பேச்சிலிருந்தும் நிச்சயமாய்த் தெரிந்து கொண்டேன். ஒரு குறிப்பிட்ட திட்டமின்றி நான் செய்த ஒவ்வொன்றும் இப்போது தானாகவே உருவகப்பட்டுக் கொண்டு வருகிறது."

"என்ன உருவகம் ?" என்று கேட்டான் உளவாள்.

"தெருவிலே அதைப்பற்றிப் பேசுவது ஆபத்து.கொஞ்சம் அந்தரங்கமானது. தயவு செய்து என்கூட டெல்ஸன் பாங் வரையில் வர சௌகரியப் படுமா ?"

"என்னை பயமுறுத்துகிறாயா ?"

"நான் சொன்னேனா அப்படி ?"

"பின்பு நான் ஏன் வரவேண்டும் ?"

"வாஸ்தவத்திலேயே பார்ஸாத், நீ வரமுடியாதென்று சொன்னால் நான் என்ன சொல்ல முடியும் ?"

"அப்போது இங்கே சொல்லப்போவதில்லை யென்கிறீர்களா ?"

சகஜமாக கார்ட்டனின் பிறவிக் குணமான அலட்சிய சுபாவம் அவனுக்கு இந்த சமயத்தில், இந்த அவனுடைய

ரகஸ்ய வேலையில் உதவி செய்தது. அதைச்சரியானபடி பயன் படுத்திக் கொள்ள அவனுடைய சுறு சுறுப்பான மூளை தவறவில்லை.

தன் சகோதரியை வெறுப்புடன் நோக்கிக் கொண்டே பார்ஸாத் சொன்னான்: "அப்போதே சொன்னேனே. இதில் ஏதாவது விவகாரம் வந்தால் அது உன்னால் தான்."

"பார்ஸாத், வாப்பா, வா! நன்றிகெட்ட தனமாய்ப் பேசாதே. உன்னுடைய சகோதரியிடம் எனக்குள்ள மதிப் பினால்தான் இந்தமாதிரி பரஸ்பரம் திருப்தி யளிக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டை செய்யப் போகிறேன். பாங்குக்கு என் கூட வருகிறாயா?"

"சரி, நீ என்ன சொல்லப்போகிறாய் என்பதைத் தான் கேட்கிறேன். பாங்குக்குப் போகலாம்."

"முதலில் உன் சகோதரியை அவளுடைய இருப்பிடத் துக்கு அழைத்துக்கொண்டு போவோம். வா அம்மா, போக லாம். இந்த ஊரில், அதுவும் இப்பொழுது தனியே வெளி யில் போகக்கூடாது. உன் கூட வந்திருப்பவனுக்கும் பார்ஸா தைத் தெரியுமாதலால் அவனும் நம் கூட லாரியின் வீட்டுக்கு வரட்டும். போகலாமா?"

மிஸ் பிராஸை வீட்டில் விட்டுவிட்டு மற்ற மூவரும் லாரி யின் வீட்டை யடைந்தனர்.

லாரி சாப்பாட்டை முடித்துக்கொண்டு சாவகாசமாக உட்கார்ந்திருந்தார். அவர்கள் உள்ளே நுழைந்ததும் திரும் பினவர் புதிதாக வந்தவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

"மிஸ் பிராஸின் சகோதரர், மிஸ்டர் பார்ஸாத்" என் றான் ஸிட்னி. "பார்ஸாத்? அந்தப் பெயரை எங்கோ கேள்

விப்பட்டிருக்கிறேனே. முகம் கூட தெரிந்ததா யிருக்கிறதே?" என்றார் லாரி.

"உன்னுடைய முகம் மறக்க முடியாதது என்று நான் சொல்லவில்லையா? தயவு செய்து உட்கார்" என்றான் கார்ட்டன் பார்ஸாதை நோக்கி.

ஸிட்னி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே "அந்த வழக்கில் சாக்ஷி" என்றான். உடனே லாரிக்கு ஞாபகம் வந்து விட்டது. அவனை அறிந்துகொண்டதினால் ஏற்பட்ட வெறுப்பு அவர் முகத்தில் உடனே தெரிந்தது.

"பார்ஸாதைத் தன் சொந்த சகோதரனாக மிஸ் பிராஸ் இன்று அடையாளம் கண்டுகொண்டாள். நீங்கள் கூட அவள் தன் சகோதரனைபற்றிப் பேசுவதைக் கேள்விப்பட்டிருக்கலாமே?—அது கிடக்கு, இன்னும் பயங்கரமான சமாசாரம். டார்னே கைதி செய்யப்பட்டிருக்கிறான் மறுபடியும்."

எதிர்பாராத இந்த விபரீதச் செய்தியால் இடி விழுந்தவர்போல் விழித்த லாரி கூவி விட்டார்: "என்னது! கொஞ்சம் முன்னாடிதான் நான் அவனைப் பார்த்து விட்டு வந்தேன்! இரண்டுமணி சாவகாசம் கூட ஆகவில்லையே இன்னும்?"

"அதனாலென்ன? கைதிசெய்தாகி விட்டது. பார்ஸாத், எப்போது பிடித்தார்கள்?".

"கொஞ்சநேரத்துக்கு முந்திதான் இருக்கவேண்டும்."

ஸிட்னி சொன்னான்: "பார்ஸாத் வார்த்தை நிச்சயம். ஒயின் சாப்பிடும் போது பார்ஸாத் இந்த சேதியை தனது தோழர் ஒருவரிடம் தெரிவித்துக் கொண்டிருந்தபோது தான் நான் கேட்டேன். ஆகையால் அதைப்பற்றி சந்தேகமில்லை."

வியாபாரத்தில் தேர்ச்சியடைந்த லாரியின் கண்கள் இனியும் காலதாமதம் செய்யலாகாது என்பதை ஸிட்னியின் முகக்குறிப்பிலிருந்து தெளிவாக உணர்ந்து கொண்டன. ஒன்றும் விவரம் புரியாவிட்டாலும் அவருடைய உணர்வுகள் தீக்ஷண்ய மடைந்து எதையும் செய்யத்தயாராயிருந்தன.

"நாளைக்கும் டாக்டர் மானெட் அவர்களின் பெயரும் செல்வாக்கும் அவனுக்கு உதவி செய்யு மென்றே நினைக்கிறேன் — என்ன பார்ஸாத், விசாரணை நாளைக்கென்று தானே சொன்னுய்?"

"அப்படித்தான் தெரிகிறது."

"இருந்தாலும் எனக்கு பயமாயிருக்கிறது, மிஸ்டர் லாரி. அவருடைய செல்வாக்கைக் கொண்டு இன்று அவர்கள் கைது செய்யாமல் அவரால் தடுக்கமுடியவில்லையே."

"முன்னுடியே அவருக்குத் தெரியாமலிருந்திருக்கலாம்."

"அதுவே நம்முடைய பயத்துக்குக் காரணமில்லையா?"

"வாஸ்தவம்தான்" என்ருர் லாரி முகவாய்க்கட்டையைக் கையால் தடவிக்கொண்டே.

மேலும் ஸிட்னி சொல்லலானுன் :—"இது ரொம்ப நிராசையான சமயம். கண்ணை மூடிக்கொண்டு முயற்சி செய்யவேண்டும். எவ்வளவானுலும் பணயம் வைத்து ஆட வேண்டிய சூது. டாக்டர் கெலிக்கும்படி ஆடட்டும்; நான் வைத்து ஆடப்போகும் பணயம் ஒரு நண்பன். அவனுக்கு ஜெயிலில் உத்தியோகம். அந்த நண்பன் பார்ஸாத் தான்."

"உனக்கு ஆட நல்ல சீட்டு வேண்டாமா கையில்?" என்ருன் பார்ஸாத்.

"சரி, அதை நான் பார்த்துத் தெரிந்துகொள்ளுகிறேன். என் கையிலுள்ள சீட்டையெல்லாம் விரித்துப் பார்க்கிறேன்.

மிஸ்டர் லாரி, நான் எப்பேர்ப்பட்ட முரடன் என்பது உங்களுக்குத் தெரியும். எனக்குகொஞ்சம் பிராந்தி கொடுங்கள்."

லாரி கொண்டு வந்து வைத்த பிராந்தியில் ஒரு கிளாஸ் ஊற்றிக் குடித்தான். யோசனையுடன் பாட்டிலை எட்டி நகர்த்தி வைத்தான்.

கையிலுள்ள சீட்டுகளைப் பிரித்துப்பார்க்கும் பாவனையிலேயே சொல்லலானான் ஸிட்னி:—"பார்ஸாத்: 'ஜெயில் ஆடு', குடியரசுக் கமிட்டிகளின் தூதுவன், ஒரு சமயம் ஜெயில் காவல்காரன், சில சமயம் சிறைவாசி, ஆனால் எப்போதும் ஒற்றன், உளாவாள். தன்னுடைய மேலதிகாரிகளிடம் பொய்ப் பெயரை சொல்லியிருக்கிறான்—இது ஒரு நல்ல சீட்டு. இப்போது குடியரசு சர்க்காரின் உத்தியோகஸ்தனை பார்ஸாத், முன்பு ஒரு சமயம் பிரான்சுக்கும் சுதந்திரத்துக்கும் விரோதியான ஒரு செல்வந்தர் சர்க்காரான இங்கிலீஷ் சர்க்காரின் கீழ் உத்தியோகம் பார்த்தான் - இது ரொம்ப உயர்ந்த சீட்டு. இன்னொன்று தெளிவாய்த் தெரிகிறது; பார்ஸாத் இன்னும் இங்கிலீஷ் சர்க்காரிடம் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறான்; பிரஞ்சு நாட்டின் ஜன்ம விரோதியான இங்கிலீஷ் மந்திரி பிட்டின் கையாள்; இங்கிருந்து தவறாது ரகஸ்யச் செய்திகள் அனுப்புகிறான் - இந்த சீட்டை எதிர்க்க இடமுண்டா? பார்ஸாத் என் கைச்சீட்டுகளைக் கவனித்தாயா?"

"உன் ஆட்டம் பிடிபடவில்லை" என்று தயக்கத்துடன் பதிலளித்தான் ஒற்றன்.

"என்னுடைய துருப்பு ஆஸை அடிப்பேன். சமீபத்திலுள்ள சர்க்கார் கமிட்டியிடம் புகார் செய்து விடுவேன். உன்னுடைய கையைப் பார்த்துக்கொள். பார்ஸாத் நிதானமாக உன் சீட்டுகளைக் கவனி."

பாட்டிலை கிட்ட இழுத்து இன்னொரு கிளாஸ் பிராந்தியைக் குடித்தான். தான் குடிப்பதைக் கண்டு அந்த மயக்கத்திலேயே அவனைக் காட்டிக் கொடுத்துவிட முடியும் என்று ஒற்றன் பயப்படுவதை அவனுடைய மிரண்ட பார்வை தெரிவித்தது. அதைக் கவனித்த ஸிட்னி இன்னொரு கிளாஸையும் காலி செய்தான்.

"சாவகாசமாகப் பாரப்பா உன் கையை" என்றான் அவன் குடித்துவிட்டு.

ஆனால் அந்தக் கையில் ஒன்றுமில்லையென்பது அவனுக்குத் தெரியாது. ஸிட்னி கார்ட்டனுக்குத் தெரியாத ரொம்ப மோசமான சீட்டுக்கள் அவன் கையில் இருந்தன. அங்கே இங்கிலாந்தில் செல்வாக்கிழந்து பிழைக்க வழியின்றி பிரான்சுக்கு வந்து சேர்ந்தான் அவன். முதலில் ரகஸ்ய ஒற்றனாக பழைய ராஜ சர்க்காரிடம் வேலை பார்த்தான். டிபாஜ் ஒயின் கடையிலேயே ஒரு தடவை போய் உளவு அறிந்திருக்கிறானல்லவா? இவனுடைய பெயரை ஸ்ரீமதி டிபாஜ் அடையாளத்துடன் தன்னுடைய பின்னல் ரிஜிஸ்டரில் பதிந்து கொண்டிருப்பது இவனுக்கு நன்றாய்த் தெரியும். அவளுடைய கோபத்துக்கு ஆளானவர்கள் யாரும் உயிர்தப்ப முடியாது என்பதும் அவனுக்குத் தெரியும். எப்போதும் அவனுடைய நிலைமை ஸ்திரமில்லை, அவனுடைய வாழ்வு நிச்சயமில்லை என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். அப்படியிருக்கையில் இந்த மாதிரியாகக் காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டால் நிச்சயமாக அவனை கில்லட்டின் விழுங்கிவிடும். அவன் துண்டம் துண்டமாக வெட்டப்பட்டு விடுவான். இந்த விஷயங்களை அவன் மானஸீகமாக எண்ணிப் பார்க்கும்போது அவன் முகம் பிரேதத்தைப்போல் வெளுத்தது.

"உன்னுடைய சீட்டுகள் உனக்கே பிடிக்கவில்லை போலிருக்கிறதே. என்ன, ஆடுகிறாயா?" என்று ரொம்ப சாவதானமாகக் கேட்டான் ஸிட்னி.

லாரியைப் பார்த்து கெஞ்சும் பாவனையில் ஒற்றன் சொன்னான் :—

"ஐயா உங்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் வயதில் பெரியவர். இந்த மனுஷ்யனுக்குக் கொஞ்சம் சொல்லப்படாதா? நான் ஒரு ஒற்றன்தான், ஒப்புக்கொள்ளுகிறேன் — அந்த வேலையை யாராவது செய்துதானாக வேண்டுமானாலும் அது ரொம்ப இழிவான வேலையாகக் கருதப் படுகிறது. இவர் ஏன் எனக்கும் கேவலமாக இறங்கி என்னைக் காட்டிக் கொடுக்கவேண்டும்?"

தன் கடிகாரத்தை யெடுத்துப் பார்த்துக்கொண்டே அவனுக்குப் பதில் சொன்னான் கார்ட்டன் : "பார்ஸாத், என்னுடைய ஆளை அடிக்கப் போகிறேன். இன்னும் சில நிமிஷங்களில்."

"என்னுடைய சகோதரியிடம் உங்களுக்குள்ள மதிப்பினாலாவது நீங்கள் இருவரும்—" என்று அவன் சொல்லி முடிக்குமுன் "உன்னை அவளிடமிருந்து என்றும் பிரித்துவிட்டால் அதுவே அவளுக்கு நான் செய்யும் உபகாரமாகும் என்றான்" ஸிட்னி.

ஜெயில் ஒற்றன் இப்போது ஸிட்னியின் பக்கம் திரும்பி முடிவாகச் சொன்னான் :—"சரி ஒரு முடிவுக்கு வருவோம். எனக்கும் போகவேண்டும். ஏதோ ஏற்பாடு இருப்பதாகச் சொன்னாய். அதைத் தெரிவி. ஆனால் என்னால் ரொம்ப அதிகமாக ஒன்றும் செய்ய முடியாது. ஞாபகம் இருக்கட்டும். நிராசையுடன் முயற்சிப்பதாக நீ சொன்னாய். எல்லாரும் அப்

படித்தான். எந்தநிமிஷத்திலும் உன்மேல் புகார்செய்து உன்னை மாட்டி விட முடியும். அதற்காக எவ்வளவு சத்தியம் வேண்டுமானாலும் செய்வேன். அதே மாதிரி யாரும் செய்ய லாம். விஷயமென்ன? சீக்கிரம் சொல்"

"அப்படி ரொம்ப அதிகமில்லை. நீயொரு ஜெயிலில் காவற்காரன், இல்லையா?"

"சில சமயங்களில்."

"உனக்கு இஷ்டமிருந்தால் நீ அங்கே காவல்காரனு யிருக்கலாம் அல்லவா?"

"என் இஷ்டம்போல் உள்ளே போய் வெளியே வரலாம்."

எழுந்து நின்றுகொண்டு சொன்னான் ஸிட்னி:—"இது வரையில் நாம் இவர்கள் இருவர் முன்னிலையிலும் பேசினோம். நம்முடைய பலத்தை நாம் தனியே தெரிந்துகொள்வதைவிட இவர்களும் தெரிந்துகொள்வது நலமென்று யோசித்தேன். இப்போது இந்த பக்கத்து அறைக்குக் கொஞ்சம் வா. தனித்து முடிவாக ஒரு வார்த்தை சொல்லுகிறேன்."

அவர்கள் இருவரும் அந்த அறைக்குள்ளிருந்து வெளியே வந்ததும் ஸிட்னி ஒற்றனைப் பார்த்துச் சொன் னான். "பார்ஸாத் போய்வா, நம்முடைய ஏற்பாடு முடிந்து விட்டதால் இனி என்னிடம் நீ ஒன்றுக்குப் பயப்பட வேண்டியதில்லை."

**லா**ரிக்கு எதிரில் ஒரு நாற்காலியில் அவன் வந்து உட்கார்ந்து கொண்டான். அவனைப்பார்த்து லாரி "என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?" என்றுகேட்டார்.

"ரொம்ப அதிகமில்லை ரொம்ப மோசமாக முடியுமானால், அவனைப்போய் கடைசியாக நேரில் ஒரு தடவை பார்ப்பதற்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்."

லாரியின் முகம் ஏமாற்றத்தால் சோர்ந்தது.

கார்ட்டன் சொன்னான் :—

"இவ்வளவுதான் என்னால் முடிந்தது. இதற்குமேல் ஒன்றும் நாம் செய்வதற்கில்லை. அதிகம் செய்ய முயற்சித்தால் இந்த மனிதனை சங்கடத்துக்குள்படுத்துவதாக முடியும்."

"அவனைப்போய் ஒருதடவை பார்ப்பதனால் அவனைக் காப்பற்ற முடியுமா?" என்று கேட்டார் லாரி.

" அந்தமாதிரி நான் சொல்லவில்லையே."

ஏமாற்றமும் ஏக்கமும் அவர் முகத்திலே ததும்ப லாரி வேறு பக்கம் முகத்தைத்திருப்பிக் கொண்டார். அவர் கண்களிலே நீர்ததும்பிற்று.

அனுதாபம் நிறைந்த தாழ்ந்த குரலில் கார்ட்டன் சொல்லலானான் :—"நீங்கள் ஒரு உண்மையான நண்பர். இந்த மகத்தான நிலைமையினால், நெருக்கடியினால் நீங்கள் வெகுதூரம் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள். என்னுடைய தந்தை என்னெதிரில் உட்கார்ந்து அழுவதை என்னால் சகித்துக்கமுடியாது. நீங்கள் என்னுடைய தந்தையாயிருந்தால் உங்கள் துக்கத்துக்கு இன்னும் அதிகமான மதிப்புக் கொடுத்திருக்கமாட்டேன்."

அவனுடைய இந்த நய சுபாவத்தைக் கண்டிராத லாரி அவனுடைய வார்த்தைகளில் ஒலித்த அன்பையும் அந்தரங்க விசுவாசத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டுப்போனார்.

மேலும் சொல்லலானான் கார்ட்டன் :—" இப்போது நாம் இந்த ஒற்றனை சந்தித்த விஷயத்தைப்பற்றி அவளிடம்

சொல்லிவிடாதீர்கள். அதனால் வரப்போகும் துக்கத்தைப் பற்றி இப்போதே எண்ணி யெண்ணி அவள் கவலைப்படு வாள். இன்னும் எவ்வளவோ அவள் கல்பனை பண்ணிக் கொள்வாள். நான் முதலில் சொன்னபடி அவளை நான் பார்க்காமலிருப்பதே நல்லது. என்னாலான ஏதாவது சிறு உதவியை நான் அவளைப் பாராமலே செய்வது நல்லது. இப்போது அங்கே போகப்போகிறீர்களல்லவா?"

"ஆமாம், அங்கேதான் போகப்போகிறேன்."

"அதுதான் தேவலை.. உங்களிடம் அவளுக்கு ரொம்ப மதிப்பு, விசுவாசம். அவள் எப்படியிருக்கிறாள்?"

"ரொம்ப கவலையாயிருக்கிறாள். ஆனால் ரொம்ப அழகா யிருக்கிறாள்."

"ஆ!"

கார்ட்டனுடைய குரலிலே ஒலித்த நிராசையான சோ கத்தின் தொனி லாரியின் கவனத்தைக் கவர்ந்தது. அவனு டைய முகத்தை உடனே நிமிர்ந்து பார்த்தார். அந்த முகத் திலே ஒரு அபூர்வமான சோபை, ஒரு நிழல் லேசாகத் தாவி மறைவதைப்போல் தோன்றிற்று அவருக்கு. அவனுடைய அழகாயிருந்த முகத்திலே ஒரு மேகத்திரை மூடியிருப் பதை அவர் கவனித்தார்.

கடைசியில் அவன்பேசினான்:

"உங்கள் பாங்கு வேலை இங்கே முடிந்துவிட்டதா?"

"எல்லாம் முடிந்து விட்டது. என் பிரயாணத்துக்கு வேண்டிய 'பாஸ்போர்ட்' முதலியவைகூடத் தயாராய்விட் டன."

"உங்களுக்கு வயது ரொம்ப ஆகியிருக்கவேண்டுமல் லவா?" என்றான் கார்ட்டன்.

"எழுபத்தெட்டாவது வயது நடக்கிறது."

"உங்கள் வாழ் நாளில் நீங்கள் பிறருக்கு உபயோக மான காரியங்களையே செய்திருக்கிறீர்கள் அல்லவா?"

"ரொம்ப சின்ன வயதிலிருந்தே வர்த்தகத்துறையில் இறங்கிவிட்டேன்."

"பார்த்தீர்களா! நீங்கள் போய்விட்டால் உங்களுக்காக எத்தனை பேர் வருந்துவார்கள்!"

தலையை அசைத்துக்கொண்டே லாரி சொன்னார்:— "நான் ஒரு வெறும் பிரம்மச்சாரி, எனக்காக யார் அழப்போகி றார்கள்?"

"நீங்கள் எப்படிச் சொல்லமுடியும்? அவள் அழமாட் டாளா? அவளுடைய குழந்தை அழாதா?"

"ஆமாம் வாஸ்தவம் தான்; நான் என்னமோ சொன் னேன்."

"நீங்கள் இன்று தனிமையில் உட்கார்ந்து உங்களுக்குள் ளாகவே 'இவ்வளவு காலமாக நான் யாருக்கும் ஒரு நன்மை யும் செய்ததில்லை. அன்புடன் என்னை நினைத்துப் பார்க்கும்படி யாருக்கும் ஒரு காரியம் கூடச் செய்ததில்லை!' என்று நீங்கள் சொல்லிக் கொள்வதானால் இந்த எழுபத்தெட்டு வருஷ வாழ்க் கையும் வியர்த்தமாகத் தோன்றுமல்லவா?"

"நிச்சயமாகத்தோன்றும். ஆனால் நீ? நீயோ ரொம்ப இளம் வயது" என்று சொல்லிக் கொண்டே லாரி எழுந்தார்.

"என்னைப் பற்றிப் பேசவேண்டாம். என்னுடைய வழியே அலாதி" என்று கார்ட்டனும் எழுந்தான்.

"நீயும் வெளியே வரப்போகிறாயா?" என்று கேட் டார் லாரி.

" அவளுடைய வீட்டு வாசல் வரையில் வருகிறேன். என்னுடைய நிசாசர குணங்கள் தான் உங்களுக்குத் தெரியுமே. இப்படி தெருவில் சுற்றிக்கொண்டிருப்பேன். நாளைக்கு கோர்ட்டுக்குப் போகிறீர்களல்லவா ?"

" ஆமாம்."

" நானும் அங்கே வருவேன் ; ஆனால் கும்பலில் ஒருவனாய் இருப்பேன்."

இருவரும் புறப்பட்டு வெளியே சென்றனர், கார்ட்டன் அவரை அவளுடைய வீட்டு வாசலில் விட்டுவிட்டுத் திரும்பினான். திரும்பினவன் கதவு சாத்தப்படும் வரையில் பார்த்துக்கொண்டே நின்றான். மூடின கதவை மிருதுவாகத் தொட்டான். அவள் அடிக்கடி சிறைச்சாலைக்குப் போய் வந்ததைப்பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறான். " இந்த வழியாகத்தான் அவள் வெளியே வந்திருப்பாள். இப்படியே தான் போயிருப்பாள். அவள் சென்ற பாதையிலேயே நானும் போகிறேன் " என்று சொல்லிக்கொண்டான்.

லாபோர்ஸ் சிறைச்சாலைக்கு எதிரில் அவன் போய் நின்ற போது இரவு மணி பத்தடித்தது.

ஒரு தச்சன் தன் கடையை மூடிவிட்டு வெளியே வந்து நின்று கொண்டிருந்தான்.

" குட்-நைட் பிரஜை!" என்றான் கார்ட்டன் அவனை நெருங்கி.

" குட்நைட், பிரஜை. "

" குடியரசு எப்படியிருக்கிறது ?"

"எதை ? கில்லட்டினையா கேட்கிறீர்? நல்ல அறுவடை. இன்று அறுபத்து மூன்று ! கூடிய சீக்கிரத்தில் நூறு ஆகிவிடும். அந்தப்பயல்களைப் போய்ப்பார்க்கவேண்டுமே ! சளைத்துப்போய் விட்டார்கள் ! தூக்குப்போட்டு ஹ ! ஹா !"

அவனுடைய உற்சாகம் கார்ட்டனுக்கு அருவருப்பைத்தந்தது. உடனே அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

கொஞ்சதூரம் சென்றதும் ஸிட்னி ஒரு விளக்கடியில் நின்று ஒரு துண்டுக் கடிதத்தில் எதையோ குறித்துக் கொண்டான். பிறகு பல சந்துகளேயும் ஆபாசமான தெருக்களையும் வழிதெரிந்த ஒருவனைப்போல், அவசரமாகக் கடந்து ஒரு ரசாயனப் பொருள்கள் விற்கும் கடையண்டை வந்து நின்றான். ரொம்ப குள்ளமாயும் விகாரமாயுமிருந்த அந்த கடைக்காரன் கதவை மூடிக்கொண்டிருந்தான். ஸிட்னி அந்த துண்டுக் காகிதத்தை கடைக்காரனிடம் நீட்டினான். அதைப் படித்த கடைக்காரன் "ஆஹா! ஹ்-ஹா-ஹோ!" என்று சிரித்தான்.

அதை லட்சியம் செய்யாமல் நின்றான் ஸிட்னி.

கடைக்காரன் கேட்டான், "உங்களுக்குத்தானா?" என்று.

"ஆமாம்"

"நீங்கள் இவற்றை தனித்தனியாக ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளவேண்டும். தெரியுமா?"

"நன்றாகத் தெரியும்."

இரண்டு சின்னப் பொட்டலங்களை யெடுத்துக்கொடுத்தான் கடைக்காரன். அதை வாங்கி அவன் ஒவ்வொன்றாக உள் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்து நடக்கலானான். மேலே சந்திரனை நோக்கிக்கொண்டே "இனி நாளைவரையில் செய்வதொன்றுமில்லை. தூக்கமும் கிடையாது எனக்கு."

அவனுடைய சுபாவமான அலட்சியத் தொனியில் இல்லை அந்த வார்த்தைகள். வெகுகாலமாக வழிதப்பி

அலேந்து அலேந்து சோர்ந்துபோன ஒரு மனிதன், கடைசியில் தன்னுடைய சுபாவமான வழியைக் கண்டுபிடித்ததும் சொல்லும் ஸ்திரமான வார்த்தைகள் அவை.

ரொம்பகாலத்துக்கு முன், அவனுடைய அதிபால்யத்திலே வாழ்க்கை பசுமையுடன் அவனைக் கண்ணைக்காட்டி அழைத்த அந்த நாளில், அவன் தன்னுடைய தகப்பனருடைய பிரேத ஊர்வலத்துடன் சென்றான். அதற்கு ரொம்ப வருஷங்களுக்கு முந்தியே அவனுடைய தாயார் இறந்து விட்டாள். இப்போது, அவனுடைய தலேமேலே மேகங்களும் தேய்ந்த சந்திரனும் மிதந்து விரைய, அவன் அந்த இருண்ட தெருக்களின் வழியே நடந்து கொண்டிருக்கும்போது, அன்று அவனுடைய தந்தையின் பிரேதச் சடங்கின்போது சொல்லப்பட்ட அந்த வார்த்தைகள் அவன் மனத்தில் எழுந்து கணீரென்று ஒலித்தன! "ஆண்டவன் சொன்னார், நான்தான் வாழ்வு.நான்தான் புனர்வாழ்வு. என்னிடத்திலே நம்பிக்கை வைத்தவன் செத்தவனானுலும் என்றும் சிரஞ்சீவி யாயிருப்பான்."

வெறும்கோடாரியே கொடுங்கோன்மை அரசு செலுத்தும் அந்த நகரத்திலே, நள்ளிரவிலே தனியாக, அவன் மனத்தில் அந்த அறுபத்து மூவரின் துக்கம் இயற்கையாய் அழுத்த, இன்னும் நாளேக்கு பலியிடப்படப் போவோரின் நினைவும் சேர்ந்து வேதனையை வளர்க்க, அவன் நடந்து சென்றபோது தானுகவே அவன் நினைவிலே தோன்றின அந்த சொற்கள் அவனுக்கு அபரிமிதமான சாந்தியை அளித்தன. அந்த வார்த்தைகளே தானுக உச்சரித்துக் கொண்டு அவன் நடந்தான்.

அதிக கோச்சு வண்டிகள் இல்லே ரஸ்தாவில். கோச்சு வண்டியில் போவோரின் நிலேமை அப்போது ஆபத்து.

நாடகக் கொட்டகைகளில் மட்டும் கும்பல் அதிகமிருந்தது. இவன் போகும்போதுதான் சந்தோஷ ஆரவாரத்துடன் ஜனங்கள் வெளியே வந்தனர். ஒரு கொட்டகை வாசலில் ஒரு சின்னப் பெண்ணும் அவளுடைய தாயாரும் அந்த சகதியிலும் கும்பலிடையேயும் கடந்துபோக வழி தெரியாது நின்று கொண்டிருந்தனர். அவன் அந்தக் குழந்தையைக் கையில் வாங்கிக் கொண்டு வழி காண்பித்தான். கடைசியில் அவர்களை விட்டுப் பிரியும்போது ஒரு முத்தம் கொடுக்கும் படி அந்தக் குழந்தையை அவன் கேட்டான்.

" ஆண்டவன் சொன்னார்: நான்தான் வாழ்வு, புனர் வாழ்வு. என்னிடத்திலே நம்பிக்கை வைத்தோன் அவன் செத்தவனானாலும் சிரஞ்சீவியா யிருப்பவனாகிறான்."

நிசப்தமான அந்த நள்ளிரவிலே அந்த புனிதமான சொற்கள் அவனுடைய காதிலே ஒலி செய்துகொண்டே யிருந்தன. சூரியன் உதித்தான். பக்கத்து நதியிலே சுழன்று சுழன்று ஓடும் பிரவாகம் பளபளவென்று மின்னிற்று. கரை யோரமாக அவன் நடந்தான். அந்தக் கரையிலேயே அப் படியே படுத்து தூக்கத்திலாழ்ந்தான். அவன் தூங்கி யெழுந் ததும் சற்றுநேரம் நின்று ஆற்றில் ஒரு சுழல் சுழன்று சுழன்று கடைசியில் மூழ்கி மறைவதைப் பார்த்தான்.

அவன் லாரியின் இருப்பிடத்தை அடைந்தபோது அவர் வீட்டில் இல்லை. ரொம்ப நேரத்துக்கு முன்னாடியே வெளியே போய்விட்டார். அவர் எங்கே போயிருக்கிறார் என்பது தெரிந்தததுதானே. ஸிட்னி கார்ட்டன் கொஞ்சம் காபி மட்டும் அருந்திவிட்டு ஆடைகளை மாற்றிக் கொண்டு கோர்ட்டுக்குப்போகக் கிளம்பினான்.

கோர்ட்டில் ஏகக் களேபரமாயிருந்தது. "கச முச கச முச" வென்று ஒரே இரைச்சலாயிருந்தது. அந்த ஒற்றன் அவனை அழைத்துக் கொண்டுபோய் ஒருமூலையில் உட்கார வைத்தான். லாரி அங்கே இருந்தார். டாக்டர் மரனெட்டும் அங்கேயிருந்தார். அவளும் இருந்தாள்; தன் தந்தைக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

அவளுடைய கணவன் உள்ளே கொண்டுவரப் பட்ட போது அவள் அவனை நோக்கினாள்; அந்தப் பார்வையிலே யிருந்த நம்பிக்கையும், வியப்பு மிகுந்த அளவுகடந்த அன்பும் பரிவும் அவனுடைய முகத்திலே ஒரு புதுப்பிரகாசத்தைத் தூண்டி விட்டன; அவனுடைய சோர்ந்த நெஞ்சிலே நவ யௌவனத்தை அள்ளி ஊற்றின. அதேசமயத்தில் அவள் ஸிட்னி கார்டனை பார்த்தபார்வையினால் அவனிடத்தும் அதே விதமான மாறுதலே ஏற்பட்டது.

அந்த நியாயமற்ற நீதி சபைக்கு சட்டமோ சம்பிரதாய மோ ஒன்றும் கிடையாது. எதிரிகளுக்கு நியாயமான சந்தர்ப் பம் கொடுத்து அவன் சொல்வதையும் கேட்பது என்பது அங்கே கிடையாது.

எல்லோருடைய பார்வையும் ஜுரார்களிடம் சென்றன. மானை விசாரித்து தீர்ப்புச் சொல்லப் போகும் வேட்டை நாய்க் கும்பலைப் போலிருந்தது அந்த ஜுரார்களின் வெறி பிடித்த தோற்றம்.

'டார்னே என்று சொல்லப்பட்ட சாலஸ் எவரிமான். முதல் நாள் விடுதலை செய்யப்பட்டவன். அன்றே மறுபடி யும் கைது செய்யப்பட்டான். குடியரசின் ஜன்ம விரோதி. தலைமுறை தலைமுறையாக ஜனங்களை நசுக்கிப் பிழிந்து வந் திருக்கும் பிரபுக்களின் வம்சத்தில் பிறந்தவன். சட்டப்படி உயிரை இழக்க வேண்டியவன்.'

இதுதான் சர்க்கார் வக்கீல் பேசியதன் சாராம்சம்.

தலைவன் கேட்டான்: "எதிரி ரகஸ்யமாக குற்றம் சாட்டப்படுகிறானா?"

"இல்லை; வெளிப்படையாக."

"யாரால்?"

"மூன்றுபேர். எர்னஸ்ட் டிபாஜ், ஒயின் கடைக்காரன்."

"அப்புறம்?"

"தெரிஸ் டிபாஜ், அவனுடைய மனைவி."

"அப்புறம்?"

"அலெக்ஸாண்டர் மானெட், டாக்டர்."

உடனே ஒரு பெருத்த ஆரவாரம் எழுந்தது சபையில். டாக்டர் மானெட், வெளுத்த முகத்துடன் கைகால்கள் நடுங்க நிற்க முடியாமல் எழுந்து நின்றார்.

"தலைவரே, இது ஒருபெரிய மோசம், ஏமாற்று என்று நான் அழுத்தமாகச் சொல்லுகிறேன். என்னுடைய மகளுடைய புருஷன்தான் எதிரி என்பது உங்களுக்குத் தெரியும். என்னுடைய மகளும் அவளைச் சேர்ந்தவர்களும் எனக்கு என்னுடைய உயிரைவிட மேலானவர்கள். என் குழந்தையின் புருஷனை நான் குற்றம் சாட்டுவதாகச்சொல்லும் அந்தப் பொய்யன் யார்? எங்கேயிருக்கிறான்?"

"பிரஜை மானெட், ஆத்திரப்படாதேயும். அனாவசியமாய் சங்கடத்தில் அகப்பட்டுக்கொள்ளாதேயும். ஒரு உண்மையான பிரஜைக்கு குடியரசைவிட உயர்ந்தது வேறொன்றுமில்லை. உங்கள் அருமைக் குழந்தையையே தியாகம் செய்ய வேண்டும் என்று குடியரசு விரும்புமானால் நீங்கள் செய்துதானாக வேண்டும்!"

சபையில் ஒரு பெருத்த கரகோஷம். டாக்டர் மானெட் உட்கார்ந்துகொண்டார். அவருடைய உதடுகள் துடித்தன. மகள் தந்தையிடம் நெருங்கி உட்கார்ந்துகொண்டாள்.

டிபாஜ் சபை முன் கொண்டுவரப்பட்டான். அவன் தான் டாக்டரிடம் ஆதியில் வேலைக்கு இருந்ததையும் டாக்டர் கைதி செய்யப் பட்டதையும் பற்றி சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

தலைவன் கேட்டான் அவனை: "பிரஜையே! நீர் பாஸ்டில் சிறை பிடிபட்டபோது நன்றாக உற்சாகத்துடன் வேலை செய்தீரல்லவா?"

"ஆமாம்."

"அன்று நீர் சிறைக்குள்ளே என்ன செய்தீர் என்பதை சபைக்குத் தெரிவியும்."

கீழே உட்கார்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய மனைவியை ஒரு தடவை பார்த்துவிட்டு டிபாஜ் சொல்லலானான் :—

"இந்த கைதி நூற்றைந்து வடகோட்டை என்ற தனியறையில் அடைப்பட்டுக் கிடந்தார் என்பது எனக்கு நன்றாய்த்தெரியும். அவரேதான் அதை எனக்குத் தெரிவித்தார். அன்று துப்பாக்கியுடன் நான் கிளம்பினபோது சிறைச் சாலையைப் பிடித்ததும், அந்த அறையைப் பரிசோதிக்க வேண்டுமென்று நான் தீர்மானித்தேன்.

"இதோ ஜூரர்களில் ஒருவராக அமர்ந்திருக்கும் பிரஜையுடன் நான் அந்த அறைக்குப்போனேன். அங்கே புகைபோக்கிக் கடியில் ஒரு பொந்தில் இந்த காகிதம் வைக்கப்பட்டிருந்தது. டாக்டர் மானெட்டின் கையெழுத்து எனக்குத் தெரியும். இது அவர் எழுதினதுதான். தலைவனிடம் டாக்டர் மானெட்டால் எழுதப்பட்ட இந்த காகிதத்தை ஒப்புவிக்கிறேன்."

"அதைப்படிக்கலாம்"

அந்த நிசப்தமான சபையிலே—எதிரிதன் மனைவியை அன்புடன் நோக்க, அவள் தன் தந்தையையே உற்றுப் பார்க்க, அவர் வாசிப்போனையே பார்த்துக் கொண்டிருக்க,— அந்த காகிதம் பின்வருமாறு படிக்கப்பட்டது.

---

# அத்தியாயம் 24.

## பேரிடி

அதிருஷ்டஹீனனுன, பூவேகாரத்து வைத்தியன் அலெக்ஸாண்டர் மானெட்டாகிய நான், பாஸ்டில் சிறையில் இருந்து 1767-ம் வருஷம் கடைசி மாதத்தில் இதை எழுதுகிறேன். ரொம்ப கஷ்டத்துடன் அவ்வப்போது கிடைத்த சமயங்களில் திருட்டுத்தனமாக இதை எழுதுகிறேன். இதை, நானும் என்னுடைய சோகவாழ்வும் மடிந்து மண்ணுன பின் தயாளமுள்ள யாராவது இதைப்பார்க்கலாமென்று நம்பி புகைபோக்கிக் கடியில் மறைத்து வைக்கிறேன்.

என்னுடைய சிறை வாழ்வின் பத்தாவது ஆண்டுக் கடைசியில், துருப்பிடித்த ஒரு ஆணியை புகைக்கரியுடன் எனது ரத்தம் கலந்த மசியில் தோய்த்து இந்த வார்த்தைகளை எழுதுகிறேன். இதை எழுதும்போது என்னுடைய சுய அறிவுடன் சற்றும் ஞாபகம் மங்காமல் தான் இருக்கிறேன் என்பதை உறுதி கூறுகிறேன். மனிதர்கள் இதை வாசிக்கப்போகின்றனரோ இல்லையோ, நிச்சயமாக ஆண்டவனெதிரிலே ஒரு நாளைக்கு என் செய்கைகளுக்கு நான் ஜவாப் சொல்லியாகவேண்டும் என்பது எனக்குத் தெரியும்.

1757-ம் வருஷத்திலே டிசம்பர் மாதக் கடைசியிலே (22ம் தேதியென்று ஞாபகம்.) ஒரு இரவு என்னுடைய இருப்பிடத்தைவிட்டு கொஞ்சதூரம் ஸீன் நதிக்கரையோரமாக உலாவச் சென்றேன். அப்போது எனக்குப் பின்னுல் வேகமாக ஒரு வண்டி வந்தது. என்னையணுகியதும் அந்த வண்டி நின்றது. உள்ளிருந்து ஒரு குரல் என்னைப் பெயர் சொல்லி அழைத்தது. நான் கிட்ட நெருங்கினேன். உள்ளிருந்து இரண்டு கனவான்கள் இறங்கி என்னிடம் வந்தனர்.

அவர்களிருவரும் மேல் சட்டையால் தேகத்தை மூடிக்கொண்டிருந்தனர். இருவரும் என்னையொத்த வயதினராயிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. அவர்களிருவருக்கும் நடையுடை பாவனையிலும், குரலிலும் முகச்சாயலில்கூட ஒற்றுமை யிருந்ததைக் கவனித்தேன்.

"நீங்கள்தான் டாக்டர் மானெட்டா?" என்று ஒருவர் கேட்டார்.

"ஆமாம்."

"பூவேயிலிருந்தவர். பாரிஸுக்கு சமீப காலத்தில் வந்து நல்ல பெயரும் புகழும் சம்பாதித்துக்கொண்டவர்."

"ஐயன்மீர் அடியேன்தான் தாங்கள் இவ்வளவு புகழ்ச்சியாகப் பேசும் அந்த டாக்டர்."

முதல்வர் சொன்னார்: "உங்களை வீட்டில் போய்ப்பார்த்தோம். தாங்கள் இந்தப்பக்கமாக வந்திருக்கக்கூடும் என்று கேட்டு இங்கே வந்தோம். வண்டியில் தயவு செய்து ஏறிக்கொள்வீர்களா?"

அவர்களுடைய தோரணை ரொம்ப ராஜாங்கமாய் இருந்தது. அவர்கள் ஆயுதம் தரித்திருந்தனர். என்னிடம் ஒன்றுமில்லை.

"ஐயன்மீர் என்னை மன்னிக்க வேண்டும். முதலில் என்னைத்தேடுவோரின் பெயரையும் எந்தவிதமான கேஸில் என்னுடைய உதவியை நாடுகிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்வது என்னுடைய வழக்கம்" என்றேன் நான்.

இரண்டாவது பேசினவன் இதற்குப்பதில் சொன்னான். "டாக்டர் உங்களைத் தேடிவந்திருப்போர் செல்வாக்குள்ளவர்கள். கேஸைப்பற்றி நாங்கள் சொல்வதைவிட நீங்களே நேரில் பார்த்தால் நன்றாகத்தெரிந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக் கிருக்கிறது. போதும். வண்டியில் ஏறுகிறீர்களா?"

நான் சொல்வதற்கு ஒன்றுமில்லாமல் பேசாமல் வண்டியில் ஏறிக்கொண்டேன். அவர்களிருவரும் எனக்குப்பின் ஏறிக்கொண்டனர். வண்டி பழைய வேகத்திலே கிளம்பிற்று.

சம்பாஷணையை யெல்லாம் நான் நடந்தபடியே எழுதுகிறேன். நான் ஒன்றையும் விட்டுவிடவில்லை. கீழே காணப்படும் குறியிட்ட இடங்களிளெல்லாம் நிறுத்திவிட்டுக் கொஞ்ச காலம் கழிந்து மறுபடியும் சாவகாசம் கிடைத்தவுடன் தொடங்கியிருக்கிறேன்.

* * * *

வண்டி வடக்கு நோக்கிப் போயிற்று. நகரத்தின் வட எல்லையைக் கடந்து சுமார் ஐந்து அல்லது ஆறுமைல் சென்றதும் ஒரு தனி வீட்டின் எதிரில்வந்து நின்றது. நாங்கள் மூவரும் இறங்கி ஒரு ஒற்றையடிப் பாதை வழியே நடந்து வீட்டின் வாசற்படியை அடைந்தோம். கதவு திறப்பதற்குக் கொஞ்சம் தாமதமாயிற்று. கதவு திறந்ததும் அந்த வேலையாளை இருவரில் ஒருவன் ஓங்கி முகத்தில் அடித்தான்.

இதில் எனக்கு ஒன்றும் அசாதாரணமாய்ப் படவில்லை. ஏனென்றால் சாமான்ய ஜனங்கள் நாய்களைவிடக் கேவலமாய் நடத்தப்படுவதை நான் பார்த்திருக்கிறேன்.

நான் வெளிவாசலில் இறங்கினது முதல் மேல் மாடியிலிருந்து வந்த ஒரு கூச்சல் கேட்டுக்கொண்டே யிருந்தது. நான் அந்த மேல் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். மூளைக் கொதிப்படைந்து வேதனைப்பட்டுகொண்டு கிடந்த ஒரு நோயாளியைக்கண்டேன்.

நோயாளி ஒரு இளம்பெண்; ரொம்ப அழகாயிருந்தாள். அவளுடைய தலைமயிர் பிரிந்து முறுக்கிக்கிடந்தது. அவளுடைய இரு கைகளும் பக்கத்தில் படுக்கையோடு சேர்த்து

துணியால் கட்டப்பட்டிருந்தன. அந்தக் கட்டுகள் ஒரு கன வானுடைய ஆடைக் கிழிசல்களால் கட்டப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றின்மேல் ஒரு பிரபுவின் சினங்களுடன் எ என்ற எழுத்தும் தைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன்.

அவளை மிருதுவாக அசைத்து அவளுடைய மார்பின் மேல் கையை வைத்து அவளைக் கொஞ்சம் சாந்தப்படுத் தினேன். அவளுடைய விழிகள் விரிந்து பயங்கரமாய் விழித் தன. அவள் ஓயாமல் கூச்சலிட்டுக் கீசிக்கொண்டேயிருந் தாள். இடையே இடையே, "என் புருஷன், என் தந்தை, என் சகோதரன்!" என்று கூவினாள். கொஞ்சம் ஒரு விநாடி ஓய்வாள். மறுபடியும் கூவ ஆரம்பித்துவிடுவாள்.

"எவ்வளவு நாளாய் இப்படி இருக்கிறாள்?" என்று நான் கேட்டேன்.

அந்த சகோதரர்களை இளையவன் என்றும் மூத்தவன் என்றும் நான் குறிப்பிடுகிறேன். மூத்தவன் என்று நான் சொல்பவன்தான் அதிக முன்கோபியாயிருந்தான். "நேற்று இரவு இந்த நேரம் முதல்" என்று மூத்தவன் பதில் சொன்னான்.

"அவளுக்கு ஒருபுருஷன், தந்தை, ஒரு சகோதரன் ஆகியோர் இருக்கின்றனரா?"

"ஒரு சகோதரன் மட்டும் உண்டு."

"அவனுடைய சகோதரன் தாங்கள்—"

"சீ, சீ இல்லை" என்று வெறுப்புடன் அவன் சொன் னான்.

அவளுடைய மார்பின்மேல் என்னுடைய கையை வைத்து அவளை சாந்தப்படுத்திக் கொண்டே நான் சொன்

னேன்: "அன்பரே பாருங்கள். இப்போது எவ்வளவு உபயோகமின்றி நான் இருக்கிறேன்! என்னிடத்தில் கைவசம் மருந்து ஒன்றுமில்லை. இதைப்பற்றி முன்னாடியே சொல்லியிருந்தீர்களானால் எவ்வளவு உபயோகமாயிருந்திருக்கும்?"

மூத்தவன் இளையவனைப் பார்த்தான். அவன் வெடுக்கென்று சொன்னான்: "இங்கே ஒரு மருந்துப்பெட்டி இருக்கிறது." அதைக் கொண்டுவந்து மேஜைமேல் வைத்தான்.

* * *

பெட்டியைத்திறந்து ஒவ்வொன்றாக எடுத்து சீசாக்களைத்திறந்து முகர்ந்து பரீட்சித்துப் பார்த்தேன்: கடைசியில் ஒரு டோஸ் மருந்தை எடுத்து ரொம்ப சிரமப்பட்டு நோயாளியின் வாயில் புகட்டினேன். பக்கத்திலேயே அவளைக் கவனித்துக் கொண்டு படுக்கையின்மேல் உட்கார்ந்து கொண்டேன். அந்த வீட்டில் சாமன்கள் தற்காலீக உபயோகத்துக்காகப் போடப்பட்டவை போல் தோன்றின.

அவளுடைய கூச்சல் ஓயவேயில்லை. ஒரேமாதிரி அளவுடன் குறைவின்றி வந்துகொண்டேயிருந்தது. என்னுடைய துளி நம்பிக்கைக்கு இடமிருந்தது. நான் மார்பின் மேல் மிருதுவாகக் கையை வைக்கும்போது அந்த சரீரம் கொஞ்சம் சாந்தமடையும். இந்த மாதிரியாக நான் அரை மணி நேரம் உட்கார்ந்துகொண்டிருந்தேன். இவ்வளவு நேரம் அந்த சகோதரர்களும் எதிரிலேயே நின்றுகொண்டு கவனித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது மூத்தவன் "இன்னொரு நோயாளியையும் பார்க்கவேண்டும்" என்றான்.

நான் திடுக்கிட்டுப்போனேன். "ரொம்ப அவசர கேஸோ?" என்றேன்.

"நீங்கள் வந்து பாருங்களேன்" என்ருன் அவன் அலட்சியமாக. பிறகு விளக்கை கையில் தூக்கிக்கொண் டான், எனக்கு வழிகாட்ட.

* * *

பின்புறத்தில் வேருெரு படிக்கட்டு வழியாய் நாங்கள் அந்த இன்னெரு நோயாளி படுத்திருந்த அறையை அடைந் தோம். வழியில் வைக்கோலும் புழுதியும் நிறைந்த அறை களைக் கடந்துபோக வேண்டியிருந்தது. அதெல்லாம் இப் போதும் எனக்குத் தெளிவாக ஞாபகம் இருக்கிறது.

வைக்கோலின்மேல் ஒரு குடியானவப் பையன் கிடந் தான். அவனும் பார்வைக்கு நன்ருக இருந்தான். அவனுக்கு வயது பதினேழுக்குமேல் இருக்காது. அவன் பல்லைக்கடித் துக்கொண்டு முஷ்டியை மடித்து மார்பின்மேல் வைத்துக் கொண்டு மல்லாந்து படுத்திருந்தான். அவனுடைய காயம் எங்கேயிருந்தது என்று குனிந்து பார்த்ததும் தெரிந்து கொண்டேன்.

"நான் ஒரு வைத்தியன். உன் காயத்தைப் பார்க் கிறேன்" என்றேன் நான் அவனை நோக்கி.

"அதைப் பார்க்கவேண்டாம். அப்படியே இருக்கட் டும்" என்ருன் அவன்.

அவனுடைய கையில் இருந்தது அந்தக் காயம்; கூரிய வாளினுல் குத்தப்பட்ட காயம். காயம் பட்டு இருபத்து நான்கு மணிநேரமேதான் ஆகியிருந்தபோதிலும் அதைச் சொஸ்தப்படுத்தி அவனைப் பிழைக்கவைப்பதென்பது முடி யாத காரியம். அவ்வளவு கடுமையான காயம். அவன் உயிர் போய்க்கொண்டிருந்தது.

எதிரில் நின்று அவனுடைய முகத்தையே கவனித்துக் கொண்டிருந்த மூத்தவனை "மூஸே, இது எப்படி வந்தது?" என்று நான் கேட்டேன்.

"ஒரு வெறி பிடித்த நாய்க் குட்டி! அடிமை! என் சகோதரனைக் கோபமூட்டி அவனுடைய வாளுக்கு இரையானான்."

அவனுடைய குரலில் துளி இரக்கமோ அனுதாபமோ, வெறும் மனித உணர்ச்சியோ இல்லை.

மெதுவாக என்னை நோக்கினான் அந்தப் பையன்.

"டாக்டர் இந்த பிரபுக்கள் ரொம்பவும் அகம்பாவம் படைத்தவர்கள்; நாங்கள் வீதி நாய்கள், எங்களுக்கும் சில சமயம் அகம்பாவம் வருகிறது. எங்களை அவர்கள் கொள்ளையடிக்கின்றனர், மானத்தை உடைக்கின்றனர், அடிக்கின்றனர், கொலை செய்கின்றனர்; இருந்தாலும் சில சமயத்தில் எங்களுக்கும் அகம்பாவம் வருகிறது. அவள்—அவளைப் பார்த்தீர்களா?"

சற்று மெதுவாக இருந்தாலும் அவளுடைய கீசல் அங்கேயும் கேட்டது.

நான் "அவளைப் பார்த்தேன்" என்றேன்.

"அவள் என்னுடைய சகோதரி டாக்டர். ரொம்ப வருஷங்களாக இவர்கள், இந்த பிரபுக்கள் எங்கள் சகோதரிகளின் மானத்தில், கற்பில், வெட்கக் கேடான உரிமை கொண்டாடிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய பெண்கள் பரிசுத்தமானவர்கள். இவளும் ரொம்ப நல்ல பெண். நாங்களெல்லாம் இவனுடைய குடியானவர்கள்."

அவன் ரொம்ப சிரமப்பட்டுப் பேசினான். அவனுடைய நெஞ்சுக் கொதிப்பு அவனுடைய வார்த்தைகளிலே ஒலித்தது.

"இதோ எதிரில் நிற்கிறானே, இந்த மனிதன் எங்களை எப்படிக் கொள்ளையிட்டான் என்று சொல்ல முடியாது. ஈவு இரக்கமின்றி எங்களிடம் வரி வசூலிப்பான்; இவனுக்காக

நாங்கள் சம்பளமின்றி உழைத்துச் சாகவேண்டும். எப்போதாவது துளி ஆகாரம் எங்களுக்குக் கிடைத்தால் அதை கத்வை அடைத்துக்கொண்டு நிரந்தர பயத்துடன் சாப்பிடவேண்டும்; அறுபது நாழிகையும் எங்கே இவர்களின் ஆட்கள் வந்துவிடுவார்களோ என்ற பயம்தான். இதனால்தான் என் தகப்பனார் சொல்வார்: எங்களில் குழந்தையே பிறக்கக் கூடாதென்று. எங்கள் வம்சம் அடியோடு நசித்து விட்டாலும் நல்லது என்று சொல்லுவார்!"

இவ்விதம் நிரந்தர அடிமைத் தனத்தினால் ஏற்பட்ட நெஞ்சுக் கொதிப்பு நெருப்பைப்போல் சீறிக்கொண்டு கிளம்பியதை இதற்கு முன்னால் நான் பார்த்ததில்லை.

"இருந்தபோதிலும் என் சகோதரிக்கு கல்யாணம் ஆயிற்று. அவள் புருஷனுக்கு அப்போது சீக்கு. அதனால் அவனைத் திருப்தியுடன் எங்கள் வீட்டிலேயே வைத்துப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று அவள் நினைத்தாள். அவளுக்கு கல்யாணம் ஆகி சில வாரங்களுக்கெல்லாம் இந்த மனிதனுடைய சகோதரன் அவளைப் பார்த்தான். உடனே அவளை அடைய வேண்டுமென்று தீர்மானித்தான். இவனிடம் அதைத் தெரிவித்தான். உடனே இருவரும் சேர்ந்து அவளுடைய கணவனை வற்புறுத்தி அவன் மூலம் அவளை இணங்கச் செய்ய நினைத்தனர்."

அந்த சமயத்தில் அந்தப் பையனுடைய பார்வை எதிரில் நின்றவனின் மேல் விழுந்தது. நானும் திரும்பிப் பார்த்தேன். அவனுடைய முகபாவத்திலிருந்து அந்தப் பையன் சொல்வதெல்லாம் உண்மைதானென்று உணர்ந்து கொண்டேன்.

"டாக்டர், தெருவில் ஓடும் நாய்களான எங்களை இந்தப் பெரிய மனிதர்கள் வண்டியில் பூட்டி ஓட்டுவதென்பது சர்வ

சகஜமான வழக்கம் என்று உங்களுக்குத் தெரியும். அதே மாதிரி அவளுடைய புருஷனையும் வண்டியில் கட்டினர். அவனைச் சித்திரவதை செய்தனர். அவளுடைய மார்பின்மேல் சாய்ந்து கொண்டே அவன் அன்ன ஆகாரமின்றி பிராணனை விட்டான்!

" கடைசியில் இளையவன் இவனுடைய உதவியால் அவளைத் தூக்கிக்கொண்டு போய் விட்டான். போகும் வழியில் எதிரில் நான் அவளைப் பார்த்துவிட்டேன். இதை நான் வீட்டுக்குப் போனதும் என் தகப்பனாரிடம் தெரிவித்ததும் அவர் நெஞ்சு உடைந்துபோனார்; ஒன்றும் பேசவில்லை. உடனே என்னுடைய இளைய சகோதரியை (இன்னொருத்தி இருக்கிறாள்) இந்தப் பிரதேசத்தை விட்டு எட்டி, இக்கொடியவனின் கைக் கெட்டாதபடி கொண்டுபோய் விட்டு வந்தேன். பிறகு அவனைத் தொடர்ந்து இங்கே வந்தேன். கையில் உருவின கத்தியுடன் ஜன்னல் வழியாக இந்த வீட்டிற்குள் ஏறிக்குதித்தேன்.

" நான் வந்த சத்தம் கேட்டு என் சகோதரி என்னிடம் ஓடிவந்தாள். அவனை வேலை தீர்க்கும் வரையில் என் கிட்ட நெருங்க வேண்டாமென்று சொன்னேன். என்னைக் கண்டதும் அவன் முதலில் கொஞ்சம் பணத்தை யெடுத்து வீசியெறிந்தான். பிறகு ஒரு சவுக்கெடுத்து என்னை அடித்தான். நானும் கத்தியை வீசினேன். கடைசியில் தன் முழு பலத்தையும் சாமர்த்தியத்தையும் கொண்டு என்னைக் குத்தினான். டாக்டர் என்னைத் தூக்குங்கள். அவன் எங்கே? அவனை நான் பார்க்கட்டும்...."

" அவன் இங்கேயில்லை" என்றேன் நான். அவன் இளையவனைத்தான் குறிப்பிடுகிறான் என்பதைத் தெரிந்து கொண்டு.

" இந்த பிரபுக்களுக்கு அதிக கர்வம் இருந்தாலும் என்னைப்பார்க்க அவன் பயப்படுகிறான்! இன்னொருத்தன் இங்கிருந்தானே, அவன் எங்கே?"

நான் அவனுடைய தலையைத் தாங்கித் திருப்பிக் காண்பித்தேன்.

அவனுடைய வலது கையைத் தூக்கி அந்த மனிதனை நோக்கி ஆட்டிக் கொண்டே அந்தப் பையன் சொல்லலானான்: "ஏ பிரபுவே! இந்த உன்னுடைய அக்கிரமத்துக்கெல்லாம் நீ ஒரு நாள் ஜவாப் சொல்லவேண்டி வரும். அப்போது உன் குலமே நசித்துப்போய் விடவேண்டுமென்று நான் சபிக்கிறேன். உன்னுடைய தம்பி தனியாக நசித்துப் போவான்! இது சத்தியம்"

ஒரு வினாடி தன் விரலை நீட்டிக் கொண்டு அவன் உட்கார்ந்திருந்தான். அந்த விரல் சாய்ந்தது; அவனும் சாய்ந்தான். அவனுடைய உயிர் பிரிந்தது.

*　　*　　*　　*

நான் மறுபடியும் அந்த ஸ்திரீயை அணுகிய போது அவள் முன் போலவே கூச்சலிட்டுக் கொண்டிருந்தாள்.

இந்த மாதிரியே அவள் இருபத்தாறு மணி நேரம் பிதற்றிக்கொண்டு கிடந்தாள். நான் மறுபடியும் அதே மருந்தைக் கொடுத்துக் கொண்டே வந்தேன். இரண்டு தடவை வெளியே போய்விட்டு வந்து அவள் படுக்கையண்டையிலேயே உட்கார்ந்திருந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அவளுடைய வார்த்தைகள் தடுமாறின. கடைசியில் அவள் ஒரு நீண்ட தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

புயலடித்து ஓய்ந்தது மாதிரியிருந்தது அவள் சத்தத்தை நிறுத்தியது. பிறகு வேலைக்காரியை அழைத்து கிழிந்து

சிதறிக்கிடந்த அவளுடைய ஆடையை எடுத்து ஒழுங்கு படுத்தச் சொன்னேன். அப்போதுதான் அறிந்தேன்: அவள் கர்ப்பம் தரித்திருக்கிறாள் என்று. உடனே என்னுடைய நம்பிக்கை தளர்ந்துவிட்டது.

அப்போது மூத்த பிரபு வந்தான். "அவள் செத்து விட்டாளா?" என்று கேட்டான் என்னை நோக்கி.

"இல்லை" என்றேன் நான்.

பிறகு ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தணிவான குரலில் சொல்லலானான்:—

"டாக்டர், என்னுடைய தம்பி இந்த நாய்களுடன் இப்படி சிரமத்தில் சிக்கிக் கொண்டு விட்டதை யறிந்து தான் உங்களைக் கூப்பிட்டேன். உங்களுக்கு இளவயது; இன்னும் பெயரும் புகழும் பணமும் சம்பாதித்தாக வேண்டும். இங்கே நீங்கள் காண்பதை யெல்லாம் வெளியில் விடக்கூடாது."

நான் அவன் பேசியதைக் கவனிக்காததுபோல் இருந்தேன்.

"டாக்டர் நான் சொல்லுவது கேட்கிறதா?" என்றான்.

"மூஸே என்னுடைய நோயாளிகளின் ரகஸ்யங்களைக் காப்பாற்றுவது என் தொழில் முறைக் கடமை." என்றேன் நான். நான் ஜாக்கிரதையாகத்தான் பதில் சொன்னேன்.

அவளுடைய சுவாசம் மெதுவாக வந்தது. உயிர் இருந்தது; அவ்வளவுதான். என்னைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே இரு சகோதரர்களும் நின்றனர்.

* * * *

நான் ரொம்ப சிரமப்பட்டு எழுதுகிறேன். குளிர் தாங்க முடியவில்லை. அன்றியும் கண்டு பிடித்து விடுவார்களோ என்ற பயம் வேறு. ஆகையால் சுருக்கமாக எழுதுகிறேன்.

அவள் ஒரு வாரம் ஊசலாடிக்கொண்டு கிடந்தாள். கடைசி சமயத்தில் அவளிடமிருந்து ஒவ்வொரு வார்த்தைகள் என் காதில் விழுந்தன. தான் எங்கிருக்கிறதாகக் கேட்டாள்; சொன்னேன். நான் யாரென்று கேட்டாள்; சொன்னேன். அவளுடைய குடும்பப் பெயரைக் கேட்டேன். சொல்ல மறுத்து விட்டாள்.

அவளை வேறு கேள்விகள் கேட்கவே எனக்கு சந்தர்ப்பமில்லை. எப்போதும் நான் அவள் பக்கத்தில் இருந்த போதெல்லாம் சகோதரர்களில் ஒருவன் தவருமல் சமீபத்திலேயே உட்கார்ந்திருந்தான். ஆனால் அவள் இன்னும் இரண்டொருநாளைக்கு மேல் இருக்கமாட்டாள் என்று நான் தெரிவித்ததும் அவர்கள் அதைப்பற்றி ஒன்றும் லட்சியம் செய்யவில்லை.

நோயாளி இரவு பத்துமணி சுமாருக்கு உயிர் நீத்தாள். அவளுடைய நாதியற்ற இளம்தலை சாய்ந்தபோது நான் மட்டும்தான் அங்கேயிருந்தேன்.

நான் உள்ளே போனதும் "கடைசியில் செத்தாளா?" என்றான் மூத்தவன்.

"இறந்துவிட்டாள்" என்றேன் நான்.

இதற்கு முன்னல் அவன் எனக்குப் பணம் கொடுக்க வந்தான். நான் பின்னுடி வாங்கிக் கொள்வதாகச் சொல்லியிருந்தேன். இப்பொழுது ஒரு தங்க சவரனை என்னிடம் நீட்டினன். நான் அதை வாங்கி மேஜைமேல் வைத்தேன்.

"மன்னிக்க வேண்டும். இந்த சமயத்தில் வாங்கிக் கொள்ள முடியாது."

இருவரும் ஒருவரை யொருவர் குறிப்பாகப் பார்த்துக் கொண்டனர். பிறகு நான் வந்தனம் செய்துவிட்டு வெளி யேறினேன்.

* * *

என்னால் எழுத முடியவில்லை; மீளாத் துக்கத்தினால் நான் சோர்ந்து போய்விட்டேன்.

மறுநாள் காலையில் என்னுடைய வீட்டில் அந்த சவ ரனை ஒரு பெட்டியில் வைத்து ஒரு வேலையாள் கொண்டு வந்து கொடுத்து விட்டுப்போனான். இந்த இரண்டு கேஸ்க ளைப்பற்றி என்ன செய்வதென்று நான் முன்னாடியே தீர் மானித்து விட்டேன். மந்திரிக்கு நான் பார்த்ததை யெல் லாம் ஒன்று விடாமல் எழுதுவதென்று முடிவு செய்தேன். இதனால் எனக்கு ஆபத்துவரலாம் என்பதைப் பற்றி நான் யோசிக்கவில்லை. முதலில் என் மனப்பாரத்தைக் குறைத் துக் கொள்ளவேண்டும் என்பது தான் என்னுடைய நோக் கம்.

மறுநாள் அதிகாலையில் எழுந்ததும் முதல் காரியம் அந்தக் கடிதத்தை எழுதி முடித்தேன். நான் அதை முடித்து மேஜைமேல் வைத்தேன். அப்போது யாரோ ஒரு சீமாட்டி என்னைக்காண வந்திருப்பதாகச் சொன்னான் வேலைக்காரன்.

அந்த சீமாட்டி இளவயதினள்; நல்ல அழகு; சாமர்த்தி யமாகப் பேசும் திறமை இருந்தது. ஆனால், அவளிடத்திலே ஒரு பரபரப்புத் தோன்றியது. தான் மார்க்விஸ் எவரிமான் மனைவியென்று அவள் அறிமுகப்படுத்திக் கொண்டாள். பெயர் சொல்லி அந்தக் குடியானவப் பையன் அழைத்ததை யும், அந்தக் கிழிந்த ஆடையில் எழுதியிருந்த எழுத்தையும் ஒன்று சேர்த்தேன். உடனே நான் சிகித்சைக்குப் போன

இடம் அந்த பிரபுவின் வீடுதான் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டேன். அவளாக இந்தப் பெண்ணைப்பற்றிய விவகாரத்தையெல்லாம் சந்தேகித்துக் கண்டு பிடித்திருக்கிறுள். உடனே நான் உதவிக்கு வந்ததையும் தெரிந்து கொண்டிருக்கிறுள். ஆனுல் அந்தப் பெண் இறந்து போனது அவளுக்குத் தெரியாது.

நான் விஷயத்தைத் தெரிவித்ததும் அவள் அந்தப் பெண்ணுக்கு ஒரு சகோதரி யிருப்பதாயும் அவளுடைய இருப்பிடத்தை யறியவேண்டுமென்றும் சொன்னுள், அவளுக்காவது ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று. ஆனுல் இந்த விஷயத்தில் நான் ஒன்றும் உதவி செய்வதற்கில்லை என்று தெரிவித்தேன்.

* * * *

இந்த எழுதும் வேலை என்னுல் முடியவில்லை. அதிகாரிகள் என் திருட்டுத் தனத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள். இன்றைக்குள் கதையை முடித்து விடவேண்டும்.

அவள் ரொம்ப நயமான சுபாவமுள்ளவள். மணவாழ்க்கையில் அவளுக்கு சந்தோஷம் கிடையாது; எப்படி யிருக்க முடியும்? இளைய சகோதரன் அவளை வெறுத்து வந்தான். அவனிடம் அவளுக்கு எப்போதும் பயமாயிருந்தது. அவளை நான் வாசலில் வண்டிவரையில் கொண்டுபோய்விட்டேன். வண்டியில் இரண்டு மூன்று வயதுள்ள ஒரு பையன் இருந்தான்.

கண்ணில் நீர் ததும்ப அந்தக் குழந்தையைக் காண்பித்து “இவனுக்காகத்தான் டாக்டர். இத்தனை பாபமும் இவனுடைய தலையிலேதான் விடியும். அதைத் தொலைக்க நான் என்ன வேண்டுமானுலும் செய்வேன்! உனக்காகத் தானடா கண்ணே, சாலஸ்!” என்று அவள் குழந்தையைத்

தழுவி முத்தமிட்டுக்கொண்டாள். வண்டி கிளம்பிற்று. அதற்குப் பின் அவளை நான் பார்க்கவேயில்லை.

அன்றைய தினமே நான் மந்திரிக்கு எழுதின கடிதத்தை நேரில் கொண்டுபோய் நானே கொடுத்தேன்.

அன்றிரவு ஒன்பது மணியிருக்கும். கருப்பு உடையணிந்த ஒரு மனிதன் என்னைப்பார்க்க வந்தான். என்னுடைய வேலைக்காரன் எர்னஸ்ட் டிபாஜ் கூட அவனும் வந்து எதிரில் நின்றான். நான் என் மனைவியுடன் உட்கார்ந்திருந்தேன்— ஆ! என் பிரிய மனைவி !—

அவசரமாக ஒரு கேஸைப்பார்க்கவேண்டு மென்றும் வெளியில் வண்டி காத்திருப்பதாகவும் அவன் சொன்னான்.

அந்த வண்டியில்தான், என்னுடைய முடிவைநோக்கி வந்தேன். நான் வீட்டு வாசலை விட்டு இறங்கியதும் என்முகத்தில் ஒருதுணி போட்டு மூடப்பட்டது; என் கால் கைகள்கட்டப்பட்டன. இரண்டுசகோதரர்களும்ஒரு மூலையிலிருந்துமுன்னாடி வந்து என்னைப் பார்த்தனர். மூத்தவன் நான் மந்திரிக்கு எழுதின கடிதத்தை யெடுத்து என் கண் எதிரே காட்டிவிட்டு உடனே பக்கத்திலிருந்த விளக்கில் அதைக் காட்டி எரித்து சாம்பலாக்கினான். யாரும் பேசவில்லை. நான் இங்கே கொண்டு வரப்பட்டேன் ; இந்த உயிருடன் வைத்துக் கொல்லும் என்னுடைய சவக்குழிக்கு கொண்டு வரப்பட்டேன்.

இத்தனை காலமாக என் அருமை மனைவியைப் பற்றி ஒரு வார்த்தையாவது எனக்குக் கிடைக்காதா என்று ஏங்குகிறேன். அவள் இருக்கிறாளா, போய் விட்டாளா என்று கூடத் தெரியவில்லை. ஆனால் இந்தக் கொலைகாரர்களுடைய நாசகாலம்நெருங்கி விட்டதென்று நான் நம்புகிறேன். 1767-ம் வருஷம் கடைசி இரவில் அதிஷ்ட ஹீனனாகிய கைதி, அலெக்ஸாண்டர் மானெட்டாகிய நான் அந்த மகா பாதகர்

களாகிய பிரபுக்களேயும் அவர்களுடைய வம்சத்தாரையும் அவர்கள் குலத்துக் கடைசிப் புழுவரையில் மனப்பூர்வமாகச் சபிக்கிறேன். இந்த மகா பாதகச் செயல்களுக்கெல்லாம் அவர்கள் நிச்சயமாக ஜவாப் சொல்லியாகவேண்டும். ஆண்டவனெதிரில் மட்டுமன்றி இந்த உலகத்திலேயே அவர்கள் தக்க தண்டனையை அடைவார்கள்.

இந்த தஸ்தாவேஜி படிக்கப்பட்டு முடிந்ததும் மகாபயங்கரமான சத்தம் எழுந்தது சபையோரிடையே. வெறும் ரத்தத்தை வேண்டிக் கர்ஜிக்கும் சிங்கத்தினுடையதைப் போன்ற சத்தம். அந்தக் கதையில் சொல்லப்பட்டுள்ள வஞ்சத்தைத் தீர்க்க தேச முழுவதுமே துடித்து எழுந்தது.

பாஸ்டில் சிறை பிடிபட்டபோது இந்தக் காகிதத்தை மட்டும் ரகஸ்யமாகக் காப்பாற்றி வைத்திருக்கின்றனர் டிபாஜ் தம்பதிகள். அதற்குரிய காலம் வந்ததும் அதை வெளிக்கொண்டு வந்தனர்.

இந்த பிரமாதமான குற்றச் சாட்டைக் கண்டு ஜனங்கள் கொதித்தெழுந்தனர். இந்தக் குற்றச் சாட்டை செய்பவர் ஒரு பிரபலமான பிரஜை, குற்றவாளியின் நெருங்கின உறவினர் என்றதனுல் அதற்கு மதிப்பு அதிகமாயிற்று.

"ரொம்ப செல்வாக்குண்டா? டாக்டர் இப்போது காப்பாற்றும் அவனே!" என்றுள் ஸ்ரீமதி டிபாஜ் மெதுவாக.

ஜூரர்கள் ஓட்டுப் போடும்போது சபையில் ஒரே கூக்குரலாயிருந்தது. ஏகமனதான தீர்மானம். ஏழைகளே துன்புறுத்தின குடும்ப வார்சு! குடியரசின் விரோதி. அவனுக்கு இருபத்துநாலு மணி நேரத்துக்குள் சாவு!

# அத்தியாயம் 25.

## இருள்

தீர்ப்புச் சொன்னதும் அதைக் கேட்ட அவனுடைய மனைவி இடியால் தாக்குண்டவள்போல் சாய்ந்தாள். வாய் திறந்து அவள் ஒன்றும் பேசவில்லை; ஆனால் இந்த நெருக்கடியான சமயத்தில் தனது துக்கத்துக்கு இடம் தந்து அவனுடைய கொடிய தண்டனையை இன்னும் அதிகரிக்கச் செய்யக்கூடாது என்ற நினைப்பில் அந்த அதிர்ச்சிலிருந்து அவள் உடனே சமாளித்தெழுந்தாள்.

கோர்ட்டுக் கலைந்து ஆரவாரத்துடன் ஜனங்கள் வெளியேறினர். லூசி மட்டும் கூண்டில் நின்ற தன் கணவனை நோக்கிக் கையை நீட்டிக் கொண்டு பரிதாபகரமாக நின்றாள். அவளுடைய முகத்திலே அளவற்ற அன்பும் அனுதாபமும் நிறைந்திருந்தது.

" ஒரே ஒரு தடவை நான் அவரைத் தொடமுடியாதா! ஒரே ஒரு தடவை! ஓ, பிரஜைகளே! எங்களிடம் உங்களுக்கு இரக்கம் வராதா?"

அங்கே ஒரு ஜெயிலரும் அவனைக்கொண்டுவந்தஇரண்டு காவற்காரர்களும் பார்ஸாதும் தான் இருந்தனர். மற்றவர்களை நோக்கி பார்ஸாத் சொன்னான்: " அவள் அவனிடம் நெருங்கி கடைசித் தடவையாகத் தழுவிக் கொள்ளட்டும்; ஒரு விநாடி தானே." அவன் சொன்னபடியே அவர்கள் அவளை அனுமதித்தனர். அவள் ஒரு உயரமான ஆஸனத்தில் ஏறி நின்றாள். அவன் குனிந்து அவளை ஆர்வத்துடன தழுவிக் கொண்டான்.

" என் அன்பே, போய் வருகிறேன். என் கடைசி ஆசீர்வாதம்! "

இவ்வளவு தான் அவன் சொன்னது.

"நான் அதைத் தாங்கிக் கொள்ள முடியும். சாலஸ்! என்னைத்தெய்வம் காக்கிறது. நம் குழந்தை—."

"உன் மூலம் குழந்தைக்கு என் ஆசீர்வாதத்தை அனுப்புகிறேன்! ஒரு முத்தம்!"

அவளுடைய தந்தையும் கூடவே வந்திருந்தார். அப்படியே அவர்கள் முன்னிலையில் தாள்பணியக் குனிந்தார். டார்னே அவரைத் தடுத்துச் சொன்னான்:—

"வேண்டாம்! நீங்கள் என்ன செய்ய முடியும்? இதுவரையில் நீங்கள் அந்த நாளில் என்ன கஷ்டப்பட்டீர்கள் என்பது எங்களுக்குத் தெரியாமலிருந்தது. இப்போதுதான் எல்லாம் தெரிகிறது. அன்று விவாகத்தன்று உங்கள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! உங்களுடைய தியாகத்தை எங்களால் மறக்கவே முடியாது."

கைதி இழுத்துச் செல்லப்பட்டான். அவள் தன் இரு கைகளையும் கூப்பிக்கொண்டே நின்றாள். அவளுடைய முகத்திலே ஒரு சாந்தி யளிக்கும் புன்னகை. அவன் சென்றதும் அவள் தன் தந்தையின்மேல் சாய்ந்தாள்; ஸ்மரணையற்று நழுவிக் கீழே விழுந்தாள்.

அப்போது இவ்வளவு நேரம் ஒரு மூலையில் மறைந்திருந்த ஸிட்னி கார்ட்டன் முன் வந்து அவளைத் தூக்கினான். அவளுடைய தகப்பனாரும் லாரியும்தான் அங்கே யிருந்தனர். அவளைத் தூக்கும்போது அவனுடைய கைகள் நடுங்கின. அவனுடைய தோற்றத்திலே ஒரு கம்பீரம் பிரகாசிக்கக் கேட்டான்,

"அவளைக் கோச்சு வண்டிக்குத் தூக்கிச் செல்லவா?"

வெளியே தூக்கிச்சென்று அவளை வண்டியில் மிருதுவாக வைத்தான். அவளுடைய தந்தையும் லாரியும் உள்ளே ஏறி உட்கார்ந்தனர். அவன் வண்டியோட்டிக்குப் பக்கத்தில் அமர்ந்தான்.

வீட்டு வாசலை யடைந்ததும் அவன் அவளை மெத்தை மேல் தூக்கிச்சென்று அவளுடைய அறையில் படுக்கையில் விட்டான். மிஸ் பிராஸும் குழந்தையும் அவளைக் கண்டதும் அழத்தொடங்கினர்.

"அவளை எழுப்பி விடாதே. இப்படி அவள் மயக்கமாய் இருப்பதே நல்லது" என்றான் மெதுவாக.

கடைசியில் வெளியே போகுமுன் சின்ன லூசியை அணைத்து முத்தமிட்டான். பிறகு சுரணையற்றுக் கிடந்த தாயை நெருங்கி ஒருமுத்தம் கொடுத்தான்.

பிறகு ரொம்ப காலம் கழித்து குழந்தை லூசி பெரியவளான பிறகு, அன்று அவன் குனிந்து முத்தமிடும்போது அவளுடைய காதில் மிருதுவாக "உனக்கு உயிரான ஒரு ஜீவனுக்காக" என்று சொன்னதாக எல்லோரிடமும் தெரிவித்தாள்.

அந்த அறையை விட்டு வெளியே வந்ததும் லாரியும் டாக்டரும் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்தான். டாக்டரை நெருங்கி அவன் சொன்னான்: "டாக்டர் இன்னும் நீங்கள் முயற்சி செய்து பார்ப்பது நல்லது. தாமதிக்க நேரமில்லை; உடனே போங்கள்!"

"இதோ போகப்போகிறேன். தலைவனையும் ஜூரர்களையும் பார்க்கப்போகிறேன். கடைசி வரையில் பார்க்கப்போகிறேன்."

"சரி, செய்யுங்கள். நான் இரவு ஒன்பது மணிக்கு லாரியின் வீட்டுக்கு வருவேன். அப்போது விஷயம் தெரியுமல்லவா?"

"தெரியும்"

"உங்களுக்கு கடவுள் துணை செய்வார்!"

ஸிட்னியைத் தொடர்ந்து லாரி வெளி வாசல் வரையில் வந்தார். அவனை மெதுவாகத் தோளில் தொட்டார். அவன் திரும்பினான்.

துக்கம்ததும்பின தணிந்த குரலில் "எனக்கு நம்பிக்கையில்லை" என்றார் அவனிடம்.

"எனக்கும் இல்லை"

லாரி யோசனையிலாழ்ந்தார்.

"கவலைப் படாதீர்கள். நான் டாக்டர் மானெட்டை நம்பிக்கை இழக்க வேண்டாமென்று தைரியப்படுத்தினது ஏனென்றால், ஒரு காலத்தில், அவள், அவனைக் கவனிக்காமல் விட்டுவிட்டதாக நினைக்கக் கூடாதென்பதற்குத் தான். இதனால் அவள் வருத்தம் அதிகரிக்கும்" என்றான் ஸிட்னி.

"வாஸ்தவம்தான்" என்றார் லாரி.

ஸிட்னி விடைபெற்றுக்கொண்டு வெளியேறினான். அவனுடைய காலடிகள் ஒரு தீர்மானத்துடன் ஸ்திரமாகப் பதிந்தன. தெருவில் வந்ததும் "எங்கே போவது" என்று அவன் யோசித்தான். "இந்தப் பிரதேசத்திலுள்ளவர்கள் என்னைப்போன்ற ஒருவன் இருக்கிறான் என்பதைத்தெரிந்து கொள்வதும் நல்லதுதான்; அது அவசியமானதும் கூட" என்று தீர்மானித்து டிபாஜின் ஒயின் கடையை நோக்கி நடக்கலானான்.

சரியாக ஒன்பது மணிக்கு அவன் லாரியின் அறையை அடைந்தான். அவர் கவலையுடன் அங்கு மிங்கும் அறைக்குள்ளே நடமாடிக்கொண்டிருந்தார். அப்போதுதான் லூசியிடம் போய்விட்டு வந்ததாயும், டாக்டர் இன்னும் வரவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

மணி பத்தாயிற்று. அவர் எங்கே போயிருக்கக் கூடும் என்று அவர்கள் யோசனை செய்துகொண்டிருக்கை

யில் அவர் உள்ளே நுழைந்தார். அவருடைய முகத்தைப் பார்த்த உடனேயே அவர்களுடைய நம்பிக்கையெல்லாம் மறைந்துவிட்டது. இவர்களை விழித்துப் பார்த்துக்கொண்டே அவர் நின்றார்.

"எங்கே அது? எங்கும் காணவில்லையே அதை?" என்றார் அவர். தம்முடைய கோட்டைக் கழற்றிக் கீழே போட்டார்.

"என்னுடைய பலகை எங்கே? எல்லா இடத்திலும் தேடி விட்டேன்; காணவில்லையே என் பலகையை? அந்த செருப்புகளை நான் முடித்தாக வேண்டும்."

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுடைய ஹிருதயம் நின்றுவிட்டது போலிருந்தது.

அவர் தம் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு காலை ஓங்கி ஓங்கி பூமியில் உதைத்தார், கோபம்கொண்ட குழந்தையைப் போல.

"அய்யோ, என் வேலையைக் கொடுக்க மாட்டீர்களா எனக்கு? இன்றைக்குள் அந்த செருப்பை நான் முடிக்க வேண்டாமா?" என்று அவர் பரிதாபகரமாக அழத் தொடங்கினார்.

குடி முழுகிப்போய்விட்டது!

அவருடன் வாதாடி சுயநினைவுக்குக் கொண்டுவருவது எவ்வளவு கடினம் என்பதை நன்றாய் தெரிந்துகொண்ட அவர்கள் இருவரும், ஏககாலத்தில் அவருடைய தோளின் மேல் மிருதுவாகக் கையைவைத்து, அவருக்கு வேலையளிப்பதாகச் சொல்லி அவரைச் சாந்தப்படுத்தினர். அவர் கணப்பருகில் அமர்ந்து யோசனையில் ஆழ்ந்தார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பிரவகித்தது.

சற்றுநேர மௌனத்தின் பின்னர் கார்ட்டன் பேசலானான்:—

"நம்முடைய கடைசி நம்பிக்கையும் போய்விட்டது. அவரை அவளிடம் சேர்ப்பித்து விடுங்கள். நீங்கள் புறப்படு

முன் நான் சொல்லப்போவதைக் கவனமாய்க் கேட்கவேண்டும். நான் இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன், உங்களிடம் இந்த வாக்குறுதியெல்லாம் ஏன் கேட்கிறேன் என்று நீங்கள் கேட்கக்கூடாது. ஒரு முக்கியமான காரணத்தை உத்தேசித்துத்தான் இதெல்லாம் செய்யும்படி கேட்கப் போகிறேன்.''

"நான் உன் நல்லெண்ணத்தை சந்தேகிக்கவில்லை. சொல்லு '' என்றார் லாரி.

கணப்பண்டை உட்கார்ந்திருந்த உருவம் முனகிக் கொண்டு நாற்காலியை முன்னும் பின்னும் ஆட்டிக்கொண்டேயிருந்தது. அவர்கள் ரொம்பவும் தணிவான குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கார்ட்டன் கீழே கிடந்த டாக்டரின் கோட்டைக் குனிந்து எடுத்தான். அதிலிருந்து ஒரு காகிதம் கீழே விழுந்தது. அதையெடுத்துப் பார்த்ததும் "நல்ல வேளை!'' என்று பெருமூச்சுவிட்டான்.

"என்ன ?'' என்றார் லாரி ஆவலுடன்.

"இதோ சொல்லுகிறேன்'' என்று தன் சட்டைப்பையிலிருந்து வேறொரு காகிதத்தை எடுத்து அவரிடம் காட்டி "இதோ பாருங்கள். இதுதான் நான் நகரத்தைவிட்டு வெளியேறுவதற்கு வேண்டிய அனுமதிச் சீட்டு. பார்த்தீர்களா ?— ஸிட்னி கார்டன், இங்லீஷ்காரன் ?'' என்றான்.

அதை வாங்கி உற்றுப்பார்த்தார் லாரி.

"நாளை வரையில் எனக்காக இதை வைத்திருங்கள்— இதோ இந்த டாக்டருடைய காகிதத்தைப் பாருங்கள்: இதுவும் அதே மாதிரி டாக்டர், அவருடைய மகள், குழந்தை ஆகியோர் வெளியேறுவதற்கு வேண்டிய சீட்டு! பார்த்தீர்களா ?''

" ஆமாம் !''

" அவருடைய கடைசி நம்பிக்கையாக நேற்று இதை வாங்கியிருக்கிறார். இருக்கட்டும். இதை இரண்டையும் ஜாக்

கிரதையாக வைத்துக்கொள்ளுங்கள். இந்தமாதிரி ஒரு அனு மதிச்சீட்டு அவரிடம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் அது மறுபடியும் ரத்துசெய்யப்படுவதற்குள் நாம் வெளியேறிவிட வேண்டும்."

"ஆனால் இவர்களுக்குக் கூடவா ஆபத்து வரும்?"

"ஆமாம்; எந்த நேரத்திலும் டாக்டர் உள்பட எல் லாரையும் அவர்கள் பிடித்துவிடலாம். டிபாஜ் ஒயின் கடைக்கு சாயந்திரம் போயிருந்தேன். அங்கே இதைப் பற் றிக் கேள்விப்பட்டேன். உடனே என்னுடைய நண்பன் ஒற்றனையும் கண்டு பேசினதில் என் சந்தேகம் ஊர்ஜிதமாகி றது—ஏன் அப்படிப் பயப்படுகிறீர்கள்? நீங்கள் எல்லாரை யும் காப்பாற்றிவிட வழியிருக்கிறது."

"எப்படி?"

"அதைத்தான் சொல்லப் போகிறேன். அது உங்களி டம் தான் இருக்கிறது. இவர்களுடைய விவகாரம் இன்னும் இரண்டு மூன்று நாளைக்குள் வராது; ஒருவாரமும் ஆகலாம். கேளுங்கள்: உங்களிடம் பணமிருக்கிறது. அதனால் எவ் வளவு துரிதமாகப் பிரயாணம் செய்யவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் நீங்கள் கடற்கரையை அடைய முடியும். உங்களு டைய ஏற்பாடெல்லாம் ஏற்கனவே முடிந்து விட்டதால் நாளைக்கு அதிகாலையிலேயே நீங்கள் வண்டியைத் தயாராய் வைத்திருக்க முடியும். அவர்கள் பிற்பகல் இரண்டு மணிக் குப் புறப்படவேண்டும்."

"நிச்சயமாகத் தயாராயிருப்பேன்!"

"இன்றிரவு அவளிடம் தெரிவியுங்கள்—இந்தப் புதிய ஆபத்தைப்பற்றி. அதைப்பற்றி அழுத்தமாகச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவளும் தன் புருஷனுடன் பிராணனை விட்டுவிடுவாள்." அவனுடைய குரல் ஒரு வினாடி தடுமாறிற்று, பிறகு சொன்னான்: "அவளுடைய தந்தையி னுடையவும் குழந்தையினுடையவும் உயிரைக் காக்க அவர் கள் உடனே புறப்பட்டாக வேண்டும் என்று சொல்லுங்கள். அவளுடைய புருஷனுடைய கடைசி ஏற்பாடு இது என்றும்

சொல்லுங்கள். இதையெல்லாம் நிதானமாக சத்தமின்றி செய்து முடியுங்கள். நீங்களும் வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள். நான் வந்து ஏறிக்கொண்ட உடனே வண்டி புறப்பட்டு விடவேண்டும்."

"அதாவது, என்ன ஆனாலும் உனக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டியது. இல்லையா?"

"உங்களிடம் என்னுடைய அனுமதிச் சீட்டும் இருக்கிறதல்லவா? என் இடம் வண்டியில் காலியா யிருக்கட்டும். அந்த இடம் நிரம்பியதும் உடனே கிளம்பவேண்டியது! இங்கிலாந்தில் போய்த்தான் நிற்கவேண்டும்!"

"எல்லாம் ஒரு கிழவனுலா நடக்கிறது? உன்னைப் போன்ற ஒரு வாலிபனுலல்லவா நடக்கிறது!" என்று லாரி அவனுடைய கையை நன்றியுடன் பற்றினுர்.

"வாஸ்தவம்தான். இந்த ஏற்பாட்டில் துளிக்கூட மாற்றுவதில்லை யென்று வாக்குக் கொடுக்கவேண்டும்!"

"நிச்சயமாய் உறுதி கொடுக்கிறேன்!"

"இதை நாளைக்கு ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்: இந்த ஏற்பாட்டை மாற்றவோ அல்லது கால தாமதப்படுத்தவோ செய்தீர்களானுல் எல்லாரும் மடியவேண்டும்."

"நான் ஞாபகம் வைத்துக்கொள்ளுவேன். என்னுடைய கடமையைச் செய்து முடிப்பேன்."

"நானும் என்னுடையதைச் செய்து முடிப்பேன்—போய்வருகிறேன்!"

அவன் உடனே வெளியில் போகவில்லை. லாரியுடன் கூடச் சேர்ந்து, அழுது ஓலமிட்டுக்கொண்டே சரிந்துகிடந்த டாக்டரைத் தூக்கிக்கொண்டு அவருடைய வீட்டு வரையில் சென்றுன். அங்கேயே மேலே அவளுடைய அறையின் ஜன்னல்வழியாகத் தெரிந்த வெளிச்சத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு சில விநாடிகள் நின்றுன். போகுமுன் தனது ஹிருதய பூர்வமான ஆசீர்வாதத்தை தன் மூச்சுக் காற்றுடன் கலந்து மேல்நோக்கி வீசிவிட்டுப் பிரிந்தான்.

# அத்தியாயம் 26.

## ஐம்பத்திரண்டு

கடுஞ்சிறையிலே அன்றைய அறுவடையான ஐம்பத்திரண்டு கைதிகள் தங்கள் விதியை எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருந்தனர். ஐம்பத்திரண்டு தலைகளும் அன்றைய தினம் உருள வேண்டியவை. இதற்கு முன் கொட்டின ரத்த வெள்ளத்துடன் ஐம்பத்திரண்டு பேரின் ரத்தமும் கலந்து சேரவேண்டியது.

தனி யறையில் அடைபட்டுக் கிடந்த சாலஸ் டார்னேக்கு அவனுடைய முடிவு என்ன என்பதைப்பற்றிச் சந்தேகமே யில்லை. அந்த நீதி சபையில் அவன் கேட்ட கதையின் ஒவ்வொரு வரியும் அவனைக் குற்றம் சாட்டிற்று. இனி தன்னை யாரும் காப்பாற்ற முடியாது என்பதை அவன் நன்றாக உணர்ந்து கொண்டான்.

இருந்தபோதிலும் அவனுடைய இள மனைவியின் அன்பு சுரக்கும் முகம் ஒவ்வொரு விநாடியும் அவன் கண்ணெதிரே தோன்றி நிற்க, தன் முடிவை நிம்மதியான மனத்துடன் ஏற்றுக்கொள்வது அவனுக்குச் சாத்தியமாகவில்லை.

எழுபது வயதான பணக்காரக் குடியானவன் முதல் இருபது வயதான ஏழைத் தையல்காரி வரையில் அந்த ஐம்பத்திரண்டில் கலந்திருந்தனர். மனுஷ்ய அஜாக்கிரதையினாலும் துர்நடத்தையினாலும் உற்பத்தியாகும் சரீர வியாதிகள் எப்படி மனிதருக்குள்ளே தாரதம்மியம் பார்ப்பதில்லையோ, அதே போல, ஈவு இரக்கமற்ற அலட்சியத்தினாலும், பொறுக்க முடியாத கொடுங் கோன்மையினாலும் ஏற்படும் சகிக்கமுடியாத கஷ்டத்தில் உற்பத்தியாகும் பயங்கரமான அநீதியும் மனிதரிடையே ஏற்றத் தாழ்வுபார்ப்பதில்லை.

தன்னைப் போலவே பலபேர் நியாயமின்றி கொல்லப் படுகின்றனர் என்பதைக் கண்ட பின் டார்னேயின் மனத்தில் சற்று சாந்தி பிறந்தது.

தீர்ப்புச் சொன்ன அன்றைய இரவு கஷ்டப்பட்டு காகிதமும் எழுது கோலும் சம்பாதித்துக்கொண்டான்.

லூசிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான். அதில் தனக்கு அவளுடைய தந்தையின் நீண்ட சிறைவாசத்தைப் பற்றி அவளாகச் சொன்னதற்கு முன் ஒன்றும் தெரியாதென்றும், அவனுடைய தந்தையைப் பற்றியோ சிறிய தந்தையைப் பற்றியோ அவனுக்கு இந்த தண்டனை சம்பந்தமாக ஒன்றுமே தெரியாதென்றும், இனி அவள் தந்தையிடம் இதைப் பற்றி அதிகம் பேசி அவருடைய மனதைப் புண்படுத்தக் கூடாதென்றும் விஸ்தாரமாக எழுதி யிருந்தான். பிறகு அவள் அதிகம் வருத்தப்படாமல் தேறி யிருப்பதோடு குழந்தையை ஜாக்கிரதையாய் கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும் எழுதி யிருந்தான்.

அவளுடைய தந்தைக்கும் இதே மாதிரி அந்தரங்கமாக எழுதி யிருந்தான். குழந்தையையும் மனைவியையும் அவர் தான் காப்பாற்ற வேண்டும் என்று எழுதி யிருந்தான்.

லாரிக்கு அவர்கள் எல்லோரையும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று எழுதியதோடு, தன்னுடைய பண சம்பந்தமான விவகாரங்களைப் பற்றி எழுதி யிருந்தான். அவ்வளவு தான். எல்லாம் முடிந்தது. அவன் கார்ட்டனைப்பற்றி ஒரு தடவைகூட நினைக்கவில்லை.

இந்த உலகத்து விவகாரங்கள் எல்லாம் முடிந்துவிட்டதென்று அன்றிரவு படுக்கைக்குப் போனான்.

அன்று இன்பக் கனவுகள் கண்டான். மறுநாள் காலையில்தான் "இன்றுதான் என் முடிவு" என்ற நினைவு அவனுக்கு வந்தது.

தன்முடிவை எதிர்நோக்கி அறைக்குள்ளேயே பரபரப்பின்றி அவன் உலாவிக்கொண் டிருந்தான்.

மணி பன்னிரண்டு அடித்தது. அவன் மனம் நிம்மதியா யிருந்தது. தனது கடைசிப் பிரார்த்தனையை முடித்தான்.

மணி ஒன்று அடித்தது. மூன்று மணிக்குத்தான் இவன் போகவேண்டிய முறை.

அப்போது அறைக்கு வெளியே காலடி ஓசை கேட்டது. நின்று கவனித்தான். பூட்டில் சாவி திரும்பும் ஓசை கேட்டது.

கதவு திறந்தது. அவன் எதிரே நின்முன் ஸிட்னி கார்ட்டன், நிதானமாக அவனைப்பார்த்துக் கொண்டு. அவனுடைய முழுத்தோற்றத்திலும் அவன் முகத்திலே உருவெடுத்த புன்னகையின் புதுப்பிரகாசம் பரவியிருந்தது; தன் விரலை உதட்டின்மேல் வைத்து முன்னெச்சரிக்கையாக நின்முன்.

"இந்த சமயத்தில் என்னை நீ எதிர்பார்க்கவில்லை யல்லவா?" என்முன் அவன்.

"என்னல் நம்பமுடியவில்லை. நீயும்—கைதியில்லையே?"

"இல்லை; இங்குள்ள ஒரு காவற்காரனை என்னிஷ்டப்படி செய்யும்படி தூண்ட எனக்கு சக்தி கிடைத்தது. அதன் மூலம் இங்கே வந்தேன். டார்னே, அவளிடமிருந்து—உன் மனைவியிடமிருந்து வருகிறேன்"

கைதி கையைப் பிசைந்து கொண்டான்.

"அவளிடமிருந்து உனக்கு ஒரு வேண்டுகோள் கொண்டுவந்திருக்கிறேன்."

"என்ன அது?"

"அவள் ரொம்பக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்கிமுள். நீ இதைக் கண்டிப்பாய் செய்யவேண்டும். என்னை நீ கேள்வி கேட்கக்கூடாது. பதில் பேசாமல் உடனே செய்ய வேண்டும். உன்னுடைய ஜோடுகளை எடுத்து விடு. என்னுடையதை அணிந்து கொள்."

பக்கத்திலிருந்த நாற்காலியின் மேல் அவனை உட்கார்த்தி வைத்து வெறும் காலுடன் நின்முன் ஸிட்னி.

"எங்கே, சீக்கிரம்! எடு!"

"கார்ட்டன் இந்த இடத்திலிருந்து தப்ப முடியாது. நீயும் என்னுடன் சாவாய்; பைத்தியக்காரத்தனம்."

"உன்னைத் தப்பியோடச் சொன்னல் அது பைத்தியக்காரத் தனம். நான் அப்படிச் சொன்னேன?—உன்

சட்டையைக் கழற்றிவிட்டு என்னுடைய சட்டையை அணிந்துகொள். நீ அதை மாற்றுவதற்குள் உன் தலைமயிரை அவிழ்த்து நான் என் தலையைப்போல் விரித்து விடுகிறேன்.”

அற்புதமான ஒரு சுறுசுறுப்புடன் மனிதனுக்கு சாத்திய மில்லாத ஒரு புது வேகத்துடன் அவன் கைதியின் தோற்றத்தை இந்த மாதிரியாக மாற்றினான்.

“ கார்ட்டன்! அன்பா! இது வெறும் பைத்தியம். இது நடக்காது! நான் சாவது போதும்; நீயும் சாக வேண்டாம் ”.

“ டார்னே, உன்னை இந்த வழியாக வெளியில்போகச் சொன்னால் நீ மறுக்கலாம்—இந்த மேஜையின் மேல் காகிதம் பேனா, மை எல்லாம் இருக்கிறது. உன்னால் எழுத முடியுமா ?”

“ சிரமப்படும்.”

“ பரவாயில்லை. இழுத்துப் பிடித்துக்கொண்டு நான் சொல்லப்போவதை எழுது. சீக்கிரம் அப்பா !”

தலையைத் தடவிக்கொண்டே உட்கார்ந்தான் டார்னே. கார்ட்டன் அவனுக்குப் பின்புறமாக அவனுடைய மார்பின் மேல் வலது கையை வைத்துக்கொண்டு நின்றான்.

“ நான் சொல்வதை யெழுது.”

கைதி மேலே நிமிர்ந்து பார்த்தான். கார்ட்டன் குனிந்துகொண்டே சொல்லலானான்:—

“ ‘நமக்குள்ளே ரொம்ப காலத்துக்கு முன்னே நடந்த சம்பாஷணையை நினைவுக்குக் கொண்டுவந்தாயானால், இதைப் பார்த்ததும் உனக்குத் தெரியும். நீ அந்த வார்த்தைகளை மறந்திருக்க முடியாது. அவற்றை உன்னால் மறக்க முடியாது. ”

இந்த சமயத்தில் அவன் தன் கையை மார்புக்குள் விட்டு எதையோ எடுத்தான். யதேச்சையாக மேலே நிமிர்ந்த டார்னே இதைப்பார்த்து விட்டான்.

“ உன் கையில் என்ன ?”

“ ஒன்றுமில்லை ; எழுது. கொஞ்சம்தான் பாக்கி.”

மறுபடியும் சொல்லலானான்:—" 'அந்த வார்த்தைகளை ருஜூப்பிப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி நான் சந்தோஷிக்கிறேன். அதைப்பற்றி வருத்தப்படுவதோ துக்கப்படுவதோ அனாவசியம்!'"

இதைச் சொல்லிக்கொண்டிருந்தபோதே அவனுடைய கை மேலே வந்தது.

பேனாவை மேஜை மேல் போட்டுவிட்டு மேலே நிமிர்ந்தான் டார்னே.

" அதென்ன வாசனை ?" என்றான்.

" வாசனையா ?"

" ஆமாம் ; என் மூக்கில் அடித்ததே நெடி ?"

" எனக்கொன்றும் தெரியவில்லை ; எங்கே எழுது, எழுது. முடித்து விடுவோம். எங்கே, சீக்கிரம் !"

மறுபடியும் அன்னுடைய கை கைதியின் முகத்தை திருட்டுத்தனமாய் நெருங்கிற்று. டார்னேயால் எழுத முடியவில்லை. கை நடுங்கிற்று.

அவன் சடக்கென்று எழுந்து திரும்பினான். ஆனால் அதற்குள் கார்ட்டனுடைய விரல்கள் அவனுடைய நாசியை அழுத்திக்கொண்டன. அவனுடைய இடது கை கீழே சாய்ந்த அவனுடைய இடுப்பைப்பற்றித் தாங்கிக்கொண்டது. சில வினாடிகள் அவன், அவனை மீட்கத் தன்னுயிரையே கொடுக்க வந்துள்ளவனுடன் போராடினான். பிறகு ஸ்மரணையற்று பூமியில் சாய்ந்தான்.

அதிதீவிர சுறுசுறுப்புடன் கார்ட்டன் அந்தக் கைதி விட்டிருந்த ஆடைகளை அணிந்துகொண்டான். அவனுடைய தலையைப்போலவே தலைமயிரைச் சுற்றிக் கட்டிக்கொண்டான். மிருதுவாக "உள்ளே வரலாம் !" என்றான். ஒற்றன் உள்ளே வந்தான்.

கார்ட்டன் உணர்வற்ற சரீரத்தினிடம் நெருங்கி கீழே மண்டியிட்டு உட்கார்ந்து அதனுடைய சட்டைப் பைக்குள் காகிதத்தை திணித்துக்கொண்டே " இதோ பார்த்தாயா, பார்ஸாத். உனக்கு இதில் ஆபத்துண்டா ?" என்றான்.

"என் பயம் இதுவில்லை. நீ முழுவதும் உன் வார்த்தையைக் காப்பாற்ற வேண்டுமென்பதுதான் என் பயம்" என்ருன் ஒற்றன்.

"என்னைப் பற்றி பயப்படாதே. நான் கடைசிவரையில் நிற்பேன். சரி, போய் உதவிக்கு ஆள் கொண்டுவா. என்னை வண்டியில் ஏற்றிவிடு."

"உன்னையா?" என்ருன் ஒற்றன் பீதியுடன்.

"இவனையடா! இவனுடன் நான் உருவம் மாற்றிக் கொண்டிருக்கிறேனே. நான் உள்ளே வரும்போது ரொம்ப பலஹீனமா யிருந்தேன். இங்கே வந்து கைதியைக் கண்டதும் இன்னும் மோசமாய் மூர்ச்சை போட்டுவிட்டது. என்னை வெளியில் இட்டுக்கொண்டு போகிருய். இந்த மாதிரி இங்கு நடப்பதில்லையா? போ சீக்கிரம்?"

"நிச்சயமாய் என்னைக் காட்டிக்கொடுக்கமாட்டாயே?"

"அடே முட்டாள்! உனக்கு இன்னும் எப்படிச் சொல்ல வேண்டும்! நீயே அவனை வண்டியில் வைத்துக்கொண்டு போ. லாரியிடம் கொண்டுபோய் சேர்ப்பி. மருந்தொன்றும் கொடுக்கவேண்டாம் என்று சொல்லு. போ, போ! நிற்காதே!"

ஒற்றன் வெளியே போய் க்ஷண நேரத்தில் இரண்டு ஆட்களுடன் திரும்பி வந்தான்.

அவர்கள் ஸ்மரணையற்ற அந்த உடலைத் தூக்கினூர்கள்.

எச்சரிக்கை செய்யும் தோரணையில் "எவரிமான், சமயம் நெருங்கி விட்டது" என்ருன் ஒற்றன்.

"எனக்கு நன்ருய்த் தெரியும். என் நண்பனை ஜாக்கிரதையாய்க் கொண்டு போ" என்ருன் கார்ட்டன்.

"அப்போ வாருங்கள். இவனைத்தூக்குங்கள், போவோம்" என்ருன் பார்ஸாத்.

கதவு சாத்தப்பட்டது. கார்ட்டன் தனியே விடப்பட்டான். காதைத் தீட்டிக்கொண்டு வெளியே ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று அவன் கவனித்தான். நல்ல வேளை ஒன்றுமில்லை!

கொஞ்சநேரம் கழித்து பல கதவுகள் திறக்கப்படும் சத்தம் கேட்டது. கடைசியில் இவனுடைய கதவும் திறக்கப்பட்டது. ஜெயிலர் உள்ளே நுழைந்து "எவரிமான், என்கூட வா" என்ருன். எழுந்து கூடப்போனுன் கார்ட்டன்.

அவன் ஒரு இருண்ட விசாலமான அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கே இவனைப்போல் விதி முடிந்த அநேகம் பேர் நின்றிருந்தனர். இருட்டில் அவர்களுடைய முகங்கள் தெளிவாய்த் தெரியவில்லை.

இவன் ஒரு மூலையில் நின்றுகொண்டிருக்கையில் இவனை நோக்கி ஒரு யுவதி வந்தாள். அவள் முகம் வெளுத்திருந்தது.

"பிரஜை எவரிமான், நான்தான் உன்கூட லாபோர்ஸ் சிறையில் இருந்த தையல்காரி" என்ருள் அவள் அவனுடைய கையைத்தொட்டு.

"ஆமாம், நான் மறந்துவிட்டேன்" என்ருன் அவன்.

"ஆண்டவனறிய ஒரு குற்றமும் நான் பண்ணவில்லை. என்னை அன்னியாயமாய் சதிகாரி என்கிருர்கள்" என்று அவள் தேம்பினுள்.

அவளுடைய பரிதாபகரமான முகத்தைக்கண்ட இவனுடைய கண்களில் நீர் தளும்பிற்று.

"நான் சாகப் பயப்படவில்லை. ஆனுல் நான் ஒண்ணும் செய்யவில்லை. என்னைப்போல் ஒரு அனுதை! ஏழை!—என்ன குற்றம் செய்யமுடியும்?"

அவனுடைய ஹிருதயம் இளகித் தளர்ந்தது.

"எவரிமான். நீ விடுதலையடைந்ததாகக் கேள்விப்பட்டேனே?"

"ஆமாம், மறுபடியும் பிடித்துவிட்டார்கள்."

அவளுடைய கண்கள் அவனை நோக்கினபோது திடீரென்று அவற்றில் உதித்த ஆச்சரியத்தைக் கண்டான். வேலையினுலும் பசியினுலும் உலர்ந்துபோன அவளுடைய கைகளை இறுகப்பிடித்து விட்டு தன் விரலை உதட்டில் வைத்து சமிக்ஞை செய்தான்.

"அவனுக்காக நீ சாகிருயா?" என்ருள் அவள் தணிவாக.

"ஆமாம்; அவனுடையமனைவிக்கும்மகளுக்காகவும்கூட!"

"அன்பரே! உமது கையை நான் பிடித்துக் கொள்ளுகிறேன்."

"பிடித்துக்கொள், தங்காய்! தைரியமாயிரு; சத்தம் போடாதே."

அதே சமயத்தில் பாரிஸைவிட்டு வெளியே போகும் ஒரு கோச்சு வண்டி எல்லைச் சாவடியில் நிறுத்தப்பட்டு பரீட்சிக்கப்படுகின்றது.

"யாரது! உள்ளே எத்தனை பேர்? பேப்பர்கள் எங்கே?"

அனுமதிச் சீட்டுகள் பரீட்சிக்கப்படுகின்றன.

"அலெக்ஸான்டர் மானெட். டாக்டர், பிரெஞ்சுக்காரர். அது யார்?"

இவர்தான் அது; சுய நினைவின்றி பிதற்றிக்கொண்டு கிடக்கிறாரே இவர்தான். காண்பிக்கப்படுகிறார்.

"ஆஹா! டாக்டருக்கு உடம்பு சுகமில்லைபோலிருக்கிறது. லூசி அவருடைய பெண். பிரெஞ்சுக்காரி. எங்கே?"

"ஓஹோ! எவரிமான் மனைவியா?—லூசி, அவளுடைய பெண்; இங்கிலீஷ்காரி, எங்கே? சரிதான்—ஸிட்னி கார்ட்டன். வக்கீல். இங்கிலீஷ்காரன். எங்கே அவன்?"

இதுதான் அவன். அவனும் காண்பிக்கப்படுகிறான்.

"ஓஹோ; வக்கீல் மூர்ச்சை போட்டுக்கிடக்கிறாரோ? பரவாயில்லை. ஜார்விஸ் லாரி. பாங்கர். இங்கிலீஷ்காரன். அது யார்?"

"நான்தான், கடைசி."

இவ்வளவு நேரம் கேள்விகளுக்கெல்லாம் ஜார்விஸ் லாரிதான் பதில் கொடுத்தார். மெதுவாக வண்டியில் ஏறிக்கொண்டார்.

"ஜார்விஸ் லாரி, உங்கள் சீட்டெல்லாம் சரியாய் கையெழுத்துச் செய்யப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்ளுங்கள்."

"பிரஜை, போகலாமா?"

"போகலாம். வண்டிக்காரா, குதிரைகளைத் தட்டிவிடு!"

"முதல் கண்டம் தப்பியாய் விட்டது" என்று லாரி உள்ளே திரும்புகிறார்.

" நாம் மெதுவாகத்தானே போகிறோம்? இன்னும் வேகமாகப்போக முடியாதா ?" என்று கேட்கிறாள் லூசி.

" இல்லை ; வேகமாகப்போனால் சந்தேகத்துக்கிடம் உண்டாகும் அம்மா "

" பின்னால் பாருங்கள், நம்மை யாரேனும் தொடர்கிறார்களா என்று !"

" அம்மா கண்ணுக்குத் தெரியும் வரையில் ஒருவரும் இல்லை."

இரண்டும் மூன்றுமாக, வீடுகள், தோட்டங்கள், இடிந்த பாழ்கள், மைதானம் எல்லாம் நம்மைக் கடந்து துரிதமாகப் பின்னிடைகின்றன. மைதானங்கள் தெரிகின்றன.

திடுதிடுப்பென்று குதிரைகள் நிற்கின்றன. வண்டியோட்டிகள் பேசுகின்றனர். நம்மைத் தொடர்கிறார்களா !

" ஹோ ! வண்டிக்குள் யார் ?"

வெளியே எட்டிப்பார்த்து "யாரது ?" என்கிறார் லாரி.

" எவ்வளவு ஐயா ?"

" என்ன ?"

" போன சுங்கத்தில் இன்று கில்லட்டினுக்கு எத்தனை சாப்பாடு என்று சொன்னார்கள் ?"

" ஐம்பத்திரண்டு "

" நான் அப்படித்தான் சொன்னேன்! நல்ல வேட்டை தான் ! ஊம் ! விடு வண்டியை !"

இரவு வருகிறது; அவன் அசைகிறான்; ஞாபகம் வருகிறது; ஏதோ பேசுகிறான்; இன்னும் கார்ட்டனுடன் இருப்பதாகவே அவன் நினைக்கிறான் ; அவனுடைய கையில் என்ன இருக்கிறதென்று கேட்கிறான். தெய்வம்தான் துணை செய்யவேண்டும் நம்மை! எட்டிப் பார், நம்மை யாரேனும் தொடரப் போகிறார்கள் !

காற்று நம் மேல் வீசி விரட்டுகிறது; மேகங்கள் மேலே பறந்து தொடர்கின்றன ; சந்திரன் தாவித்தாவி நம் பின்னே ஓடி வருகிறான்; அந்த இரவு முழுவதுமே நம்மைத் துரத்தி வருகிறது : இது வரையில் வேறு யாரும் நம்மைத் துரத்தவில்லை.

---

# அத்தியாயம் 27.

## பின்னலின் ஓய்வு

ஐம்பத்திதிரண்டு ஜீவன்கள் தம் முடிவை எதிர்நோக்கிக் காத்திருந்த அதே சமயத்தில் ஸ்ரீமதி டிபாஜ் தன் தோழியுடனும் மூன்றும் ஜாக்குடனும் கூடி குடியைக் கெடுக்கும் பயங்கர மந்திராலோசனை செய்து கொண்டிருந்தாள்.

" இதோ பார், ஜாக். எனக்கு இந்த டாக்டரைப்பற்றி ஒன்றும் கவலையில்லை. என் புருஷன் தான் அவரையாவது மிச்சம் வைக்கவேண்டுமென்கிறார். எனக்கு அது இஷ்டமில்லை. எவரிமான் வம்சம் அடியோடு நசிய வேண்டும். அவர்களைச் சேர்ந்த எல்லோரும் மடிய வேண்டும். அதற்கான வழியை இன்றே செய்யப்போகிறேன்—ஓஹோ! இன்றைக்கு மூன்றுமணிக் கல்லவா போகவேண்டும்! அதற்குள் அவனுடைய மனைவியைப் போய் பார்த்துவிட்டு வருகிறேன். இதுதான் சமயம்! நீங்கள் போங்கள். நான் சரியான சமயத்தில் வந்து சேருகிறேன். "

" நிச்சயமாக சீக்கிரம் வந்துவிடவேண்டும்!" என்றனர் மற்ற இருவரும்.

ஸ்ரீமதி தன் கையை ஆட்டிக்கொண்டே கிளம்பினாள்.

இப்போது, முதல் நாள் இரவு பிரயாணத்துக்காக வண்டி தயாரிக்கும்போது லாரி மிஸ் பிராஸையும் ஜெர்ரியையும் மூன்று மணிக்குப் புறப்பட்டுத் தனியாக வேறு வண்டியில் வரும்படி ஏற்பாடு செய்தார். ஏனென்றால் ஒரே வண்டியில் அதிகக் கும்பல் சேர்த்தால் அனாவசியமான சந்தேகத்துக்கிடமாவதோடு சோதனை செய்யும் இடங்களில் காலதாமதமுமாகும். வேறு மூட்டைகளொன்றுமில்லாத அவர்கள் சீக்கிரத்திலே இவர்களுடைய கோச்சு வண்டியைப் பிடித்துவிட முடியும். இந்த ஏற்பாட்டினால் எவ்

வளவு நன்மை உண்டாகிறது என்பதை உணர்ந்த மிஸ் பிராஸ் இதை உடனே ஏற்றுக்கொண்டாள். வண்டி புறப் படும் சமயத்தில் ஜெர்ரியும் அவளும் வழியனுப்பினர். சால மன் கொண்டு வந்த ஆசாமி யாரென்பதும் அவளுக்குத் தெரியும். இப்போது, ஸ்ரீமதி டிபாஜ் அந்த வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் அதே சமயத்தில், அவர் கள் இருவரும் தங்கள் பிரயாணத்துக்குத் தயாராய் இருந் தனர்.

"மிஸ்டர் கிரஞ்சர், நீ முன்னடியே போய் ஒரு இடத்தில் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பது நல்லதில் லையா? நான் அங்கே வந்து உன்னுடன் சேர்ந்து கொள்ளு கிறேன்."

கிரஞ்சர் அதை ஒத்துக்கொண்டான்.

"அப்போது மாதா கோயிலண்டை போய் காத்துக் கொண்டிரு. நான் வருகிறேன். வண்டிக்காரனிடம் போய்த் தெரிவித்துவிடு."

கிரஞ்சர் அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு வெளியே போனன்.

மிஸ் பிராஸ் மணியைப்பார்த்தாள். 2-20 ஆகிவிட்டது. உடனே புறப்படவேண்டும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து தன் முகத்தைக் கழுவிக்கொண்டாள். அப்பொழுது தலையை நிமிர்ந்தவள் திடீரென்று பாத்திரத்தி தைக் கீழே நழுவ விட்டுவிட்டாள். அவள் எதிரே நின்றுள் ஸ்ரீமதி டிபாஜ்.

கடூரமாக மிஸ் பிராஸைப்பார்த்து அவள் கேட்டாள்: "எவரிமானின் மனைவி: அவள் எங்கே?"

திடீரென்று மிஸ் பிராஸுக்குத் தோன்றிற்று: திறந்து கிடக்கும் கதவுகளைப் பார்த்ததும் எல்லாரும் தப்பியோடி விட்டது தெரிந்து விடலாமென்று. உடனே நான்கு கதவுகளை யும் சாத்தினுள். லூசி இருந்த அறைக்கு முன்னல் போய் நின்று கொண்டாள்.

ஸ்ரீமதி டிபாஜ் அவளைக் கவனித்துப் பார்த்தாள். மிஸ் பிராஸும் ஒரு திடமான வலுவுள்ள ஸ்திரீதான். அவளும் ஸ்ரீமதியை கண்களால் அளப்பதைப் போல் பார்த்தாள்.

" நீ குட்டிச்சாத்தான் பெண்டாட்டியாய்த்தான் இருக்க வேண்டும்" என்றாள் மிஸ் பிராஸ் தனக்குள்ளாக.

வெறுப்புடன் அவளைப் பார்த்தாள் ஸ்ரீமதி. மிஸ் பிராஸ் குடும்பத்தின் விசுவாசமான வேலைக்காரி என்பது அவளுக்குத் தெரியும்; ஸ்ரீமதி டிபாஜ் குடும்பத்தின் ஜன்ம விரோதி என்பதும் மிஸ் பிராஸுக்குத் தெரியும்.

" அங்கே தூக்குமேடைக்கு என்னுடைய வேடிக்கை பார்க்கும் ஸ்தானத்துக்குப் போகும் வழியில் அவளைப் பார்த்துவிட்டுப் போக வந்தேன் " என்றாள் ஸ்ரீமதி.

" உன்னுடைய கெடுபுத்தியெல்லாம் எனக்குத் தெரியும். உனக்கு இடங்கொடுக்கமாட்டேன்" என்றாள் பிராஸ்.

இருவரும் அவரவர்கள் பாஷையிலேயே பேசினார்கள்; ஒருவரின் வார்த்தைகள் மற்றவருக்குப் புரியவில்லை. இருந்தாலும் ஒருவரையொருவர் உற்றுப்பார்த்துக் கொண்டு முகக் குறிப்பிலிருந்து விஷயத்தைக் கிரஹித்துக் கொண்டனர்.

" போய் அவளை வரச்சொல்லு. இல்லாவிட்டால் அவளுக்குத்தான் ஆபத்து."

" என்னை உன்னால் அசைக்க முடியாது. வேற்றூர் பிடாரி உனக்கு நான் மிஞ்சினவளில்லை; நான் இங்கிலீஷ் காரியாக்கும் !"

ஸ்ரீமதி டிபாஜ் " வழியைவிடு !" என்று ஒரு அடி முன்னால் வந்தாள்.

" நான் ஒரு பிரிட்டிஷ்காரி ! இங்கே வந்தயானால் உன் தலை பத்திரம் !"

அவளைக்கண்டு அலட்சியமாகச் சிரித்துவிட்டு ஸ்ரீமதி டிபாஜ் கூவினாள்:—

"டாக்டர்! எவரிமானின் மனைவி! யாருமில்லையா! நான் ஸ்ரீமதி டிபாஜ்!"

பதில் ஒன்றும் கிடைக்காததினால் ஸ்ரீமதிக்கு சந்தேகம் தோன்றிற்று. பாக்கியுள்ள அறைகளை அவசரம் அவசரமாகத் திறந்தாள். எல்லாம் காலி!

"ஏ பன்றியே! இந்தப்பக்கம் வருகிறாயா இல்லையா? நான் தெருவில் நாய்போல் அலைந்தவள். உன்னைக் கிழித்து எறிந்து விடுவேன்" என்றாள் ஸ்ரீமதி.

"நாம் இங்கே தனியாயிருக்கிறோம். என்ன கத்தினாலும் யாருக்கும் கேட்காது" என்றாள் மிஸ் பிராஸ்.

ஸ்ரீமதி கதவை நோக்கிப் பாய்ந்தாள். மிஸ் பிராஸ் அவளை அப்படியே இடுப்பில் வளைத்துப் பிடித்துக்கொண்டாள். ஸ்ரீமதியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கையால் ஓங்கிக் குத்தினாள். பிராஸின் பிடி இறுகிற்று. ஸ்ரீமதி கையை இடுப்பில் விட்டு தன் கத்தியைத் தேடினாள். "அது என் கைக் கடியில் இருக்கிறது. நம்மில் ஒருவர் ஒழியும் வரை விடமாட்டேன்" என்றாள் பிராஸ்.

ஸ்ரீமதியின் கைகள் மார்பை யடைந்தன. அங்கேயிருந்த துப்பாக்கியைப் பிராஸ் பார்த்துவிட்டாள். உடனே அதை அழுத்தினாள். படார்!—

இதெல்லாம் ஒரே விநாடியில் நடந்தேறியது. முதலில் உயிரற்றுக்கிடந்த அந்தக் கொடிய ஸ்திரீயின் சரீரத்துக்கு சமீபத்தில் நிற்பது மிஸ் பிராஸுக்குப் பயமாயிருந்தது. பிறகு தன் ஆடைகளை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளிக் கிளம்பினாள். வெளியே வரும்போது வீட்டுக் கதவை நன்றாகப் பூட்டிக் கொண்டாள். அவளுடைய ஆடைகள் கிழிந்து தொங்கினதும், அவள் முகம் காயம்பட்டு ரத்தக் கறையாயிருந்ததும்அப்போது தெருவில் அவளை விசேஷமாக எடுத்துக் காட்டவில்லை. ஏனைய பாரிஸ் ஜனங்களைப் போலவே அவளும் இருந்தாள்.

மாதா கோயிலண்டைபோய் ஜெர்ரிக்காக அவள் காத்திருந்தாள். அந்த சில நிமிஷங்களுக்குள் அவளுடைய மனத்திலே ஆயிரம் பயங்கள் உதித்தன. ஒருவேளை யாராவது வீட்டுக் கதவைத்திறந்து உண்மையை அறிந்துகொண்டு இவளைத் துரத்தி வந்து விட்டால்—?

ஜெர்ரி வந்ததும் "தெருவில் ஏதாவது சத்தம் கேட்கிறதோ?" என்று கேட்டாள்.

"வழக்கமான சத்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை" என்றான் அவன்.

"நீ என்ன சொல்கிறாய்? எனக்கு சரியாய்க் கேட்கவில்லை" என்றாள் மிஸ் பிராஸ்.

திரும்பவும் ஜெர்ரி அதே பதிலைச் சொன்னான்.

"நீ என்ன சொல்கிறாய்? எனக்குக் கேட்கவில்லை" என்றாள் பிராஸ் மறுபடியும்.

"என்ன, ஒரு மணிக்குள் காது செவிடாய்ப் போய்விட்டதா?" வியப்புடன் அவளைப் பார்த்தான்.

"என்னவோ பளிச்சென்றது. படாரென்று கேட்டது! அவ்வளவுதான். அதற்கப்புறம் எனக்கு ஒன்றுமே கேட்கவில்லை" என்றாள் அவள்.

வாஸ்தவத்தில் அவளுக்கு அதன் பின்னர் ஒன்றுமே கேட்கவில்லை. காது முழுச் செவிடாய்விட்டது.

# அத்தியாயம் 28.

## காலடியோசை ஓய்கிறது

அன்றையதினம் கில்லட்டினின் ஆகாரமான ஜீவன்களைச் சுமந்து வண்டி தெரு வழியே சென்றது.

கடிகாரம் மூன்று அடிக்கிறது. ஜனக் கூட்டத்திடையே வழி பிளக்கிறது. வண்டி நிற்கிறது. கில்லட்டின் தேவதைக்கு எதிரில் ஒரு பெஞ்சியில் ஸ்திரீகள் பின்னல் வேலை செய்துகொண்டு உட்கார்ந்திருக்கின்றனர். முதல் வரிசையில் ஸ்ரீமதி டிபாஜின் தோழி அவளுக்காகக் காத்திருக்கிருள்.

"தெரிஸ்! ஸ்ரீமதி டிபாஜ்! அவளெங்கே? இதற்குமுன் இப்படி வராமலிருந்ததில்லையே! தெரிஸ் டிபாஜ்!"

அவள் உரக்க உரக்கக் கூவுகிருள். பதிலில்லை. என்ன தான் உரத்துக் கூப்பிட்டாலும் அவளால் இனி வரமுடியுமா!

கில்லட்டின் தெய்வம் வேலை தொடங்கிவிட்டது.—'சதக்! ஒன்று' என்று எண்ணுகின்றனர் அந்த ஸ்திரீகள்.

எவரிமான் என்று சொல்லப்பட்டவன் கீழே இறங்குகிருன். அவனுக்குப்பின் அந்த தையல்காரப் பெண் இறங்குகிருள். அவளை மிருதுவாகக் கீழே விடுகிருன்.

"அன்பரே, நீர் இல்லாதபோனல் நான் ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பேன். உம்மைக் கடவுள்தான் எனக்காக அனுப்பியிருக்கிருர்."

"உன்னையும் எனக்காகத்தான் அனுப்பியிருக்கிருர். என்னையே பார்த்துக்கொண்டிரு குழந்தாய், பயப்படாதே."

பலிக்குத் தயாராய் நிற்கும் ஆடுகளுக்கிடையே அவர்கள் இருவரும் நின்று பேசினர்.

"உமது முகத்தைப் பார்த்தால் எனக்கு சமாதானமாயிருக்கிறது. இப்போது நான் போக வேண்டுமா? எனக்கு ஒரு முத்தம் கொடுப்பீரா?"

அவள் அவனுக்கு முத்தம் கொடுக்கிறாள். அவனும் அவளைமுத்தமிடுகிறான். அவள் தைரியமாய்ப் போகிறாள். அவனுக்கு முந்தி அவள்—போய்விட்டாள்! பெண்கள் இருபத்திரண்டு என்கின்றனர்.

"ஆண்டவன் சொன்னான்: நான்தான் வாழ்வும் புனர் வாழ்வும். என்னிடத்தே நம்பிக்கை வைத்தோன் இறந்தவனானலும் சிரஞ்சீவியா யிருப்பான்."

இருபத்துமூன்று.

அவனைப் பற்றி அன்றிரவு நகரத்திலே பேசிக் கொண்டார்கள்: அதைப் போன்ற நிம்மதியான, ஒளி மிகுந்த முகம் அங்கே வந்ததில்லையென்று. அந்த முகத்திலே ஒரு தெய்வீகச் சோபை ஒளிவிட்டது என்றுகூடச் சொல்லிக் கொண்டார்கள்.

அவனை அப்போது அவனுடைய எண்ணங்களை அப்படி அப்படியே எழுதும்படி சொல்லி யிருந்தால் கீழ்க்கண்ட வார்த்தைகள் வெளி வந்திருக்கும் :—

"என்னெதிரிலே, பழைய கொடுங் கோன்மை அழிந்து அதன் அழிவிலே தோன்றியுள்ள புதிய கொடுங்கோன்மையின் பிரதிநிதிகளான பார்ஸாத்; டிபாஜ், ஜூரர்கள், நீதிபதி முதலியோரைப் பார்க்கிறேன். என்னெதிரில் ஒரு அழகிய நகரம் தெரிகிறது; இந்த சகதியிலிருந்து சோபை மிகுந்த புதிய ஜனங்கள் உற்பத்தியாவதைப் பார்க்கிறேன்.

"நான் யாருக்காக உயிரை விட்டேனோ அந்த ஜீவன்களை இதோ பார்க்கிறேன்; நான் இனிமேல் தரிசிக்க முடியாத அந்த இங்கிலாந்து தேசத்திலே அவர்கள் சுகமாக, சந்தோஷமாக சகல பாக்கியங்களுடன் வாழ்கின்றனர். அவளிடம் ஒரு குழந்தையைப் பார்க்கிறேன்; அது என் பெயரைத் தாங்குகிறது. அவளுடைய தந்தை அன்புடன் தள்ளாடித் தள்ளாடி நடக்கிறார்; தம்மால் இயன்ற வரையில்

மனுஷ்ய நோய்களைத் தீர்க்கிறார். அந்த வயோதிகர், அந்தக் குடும்பத்துக்காக எவ்வளவோ செய்த உத்தம நண்பர், அவரைப் பார்க்கிறேன்.

"அவர்களுடைய ஹிருதயத்திலே, அவர்களுடைய வம்சத்தினரின் ஹிருதயத்திலே எனக்கு ரொம்ப புனிதமான ஸ்தானம் கிடைத்துவிட்டது: எனக்குத் தெரிகிறது. அவள் தன் வயோதிகத்தில் இந்த நாளை நினைத்து அதோ அழுகிறாள். அவளும் அவளுடைய புருஷனும் தங்கள் கடைசித் தூக்கத்திலாழ்கின்றனர்: அவர்களிருவருக்கும் மாசுமறுவற்ற ஹிருதயம்; பரஸ்பரம் அவர்கள் ஆத்மசுத்தத்துடன் கௌரவித்துக்கொள்கின்றனர். அவர்களிருவருடைய ஜீவனிலும் நான் நிரம்பியிருக்கிறேன்.

"என்னுடைய பெயரைத் தாங்கின அந்தக் குழந்தை பெரிய ஆளாகிவிட்டான்; வாழ்க்கை ஏணியின் படியிலே ஏறுவதைப் பார்க்கிறேன். அவனுடைய புகழின், குணசீலத்தின் ஜோதியிலே, என்னுடைய பெயர் புனிதமடைகிறது. அந்தப் பெயரின்மேலே என்னால் தெளிக்கப்பட்ட அழுக்குக் கறைகள் மறைந்து மாயமாய்ப் போய்விட்டதைப் பார்க்கிறேன். மனிதருள்ளே உயர்ந்தவனாக அவனைக் காண்கிறேன். தன் பிள்ளைக்கு என் பெயரை இடுகிறான்: அந்தக் குழந்தைக்கு என்னுடைய கதையை அவன் சொல்லுவது இதோ கேட்கிறது; அவனுடைய பரிவு மிகுந்த குரல் தடுமாறுகிறது.

"என்னுடைய வாழ்க்கையிலேயே இதுவரையில் நான் செய்தவற்றைவிட இதுவே சிறந்த செய்கை: நான் அறிந்தவரையில் நான் போகப்போகும் இடமே நிம்மதியான ஓய்விடம்".

4108

முற்றிற்று.